வெளியீடு : 28-1-2017 Issued : 28-1-2017

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

புதன்கிழமை, ஆகஸ்ட் 31, 2016—தொகுதி 15—எண் 1

Wednesday, the 31st August 2016-Volume 15-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

31–8–2016

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
Governor and Council of Ministers	xi-xvi
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxxi
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-34
2. தகவல் கோரல்—	
திருவள்ளூர் மாவட்டம், டெங்கு காய்ச்சல் வராமல் தடுத்தல்	35-38
திரு. வி.ஜி. ராஜேந்திரன்	35, 37-38
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	35-38
3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி	
(அ) கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (ஆ) கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	39-69
மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி	39-55
மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி	56-68

பக்கங்கள்

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் *46*– தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) (ஈ) கோரிக்கை எண் *47*–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	113-262
*மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்	113-114,120, 133-134,178-180, 200,203-204,214,217-218,229-261
திரு. கே.ஆர். பெரியகருப்பன்	134-136,138-143, 145,148-154, 158-159
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	136-139,152-153
மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்	140-143-146, 149,181-182, 210-212
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	142, 187
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	146-148,150, 156-157,159
திரு. கரி. இராமசாமி	153
திரு. அர. சக்கரபாணி	155-156, 206
*திரு. வே.பொ. சிவசுப்பிரமணி	154,160-167
*திரு. வி. பன்னீர்செல்வம்	167-176
திரு. எச். வசந்தகுமார்	176-181, 184-189, 193
*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு	177-178, 205-210
மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்	182
மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி	182-184
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	184
மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்	189-191

பக்கங்கள்

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 46– தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)
(ஈ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) –தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் 192-193
திருமதி ம. கீதா 193-200
*திரு. கு. இராதாமணி 200-205,213-226
*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 226-228
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 228
*மாண்புமிகு திரு. இரா. காமராஜ் 228-229
திரு. எஸ். ஆஸ்டின் 260

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—

(அ) சென்னை தரமணியில் உயிரி தொழில்நுட்ப அபிவிருத்தி மையம், திருப்பெரும்புதூர் வானூர்திப் பூங்காவில் பொது ஆய்வு மற்றும் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தில் அபிவிருத்தித் திட்டங்கள், தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு நவீன இயந்திரங்கள் வாங்குதல், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்மூலம் அரியலூரில் மேம்பாட்டுப் பணிகள், தொழில் பூங்காக்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 70-74

(ஆ) கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்ட விரிவாக்கம், ராணிப்பேட்டை, கால்நடை அடைப்பான் நோய் தடுப்பூசி ஆய்வகத்தை தரமுயர்த்துதல், கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள், சாத்தூர் ஆட்டுப் பண்ணை தீவன விதை உற்பத்தி அலகு, செட்டிநாடு, நடுவூர் மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் தீவன கட்டி உருவாக்கும் அலகுகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 74-76

பக்கங்கள்

4. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(இ) வணிகர் நல வாரிய தொகுப்பு நிதியை ரூ.10 கோடியாக உயர்த்துதல், வணிக வரி அலுவலகங்களில் உதவி மையங்கள் அமைத்தல், கிருஷ்ணகிரி, நாமக்கல், பழனியில் ஒருங்கிணைந்த வணிக வரிக் கட்டடங்கள், ஆவணப் பதிவு நடைமுறைகளை கணினிமயமாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 76-78

(ஈ) விவசாய சூரிய சக்தி மோட்டார் பம்ப்செட்டுகளுக்கு மானியம், வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்குதல், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்ட விரிவாக்கம், பூச்சி மேலாண்மை உத்திகளுக்குப் புதிய திட்டம், தோட்டக்கலைப் பண்ணைகள் நவீனமயமாக்கல், வேளாண்மைக் கல்லூரிகளில் வகுப்பறைகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 79-83

5. தொழில் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வணிக வரி மற்றும் பதிவுத் துறை மற்றும் வேளாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 83-113

*திரு. எம். தமிமுன் அன்சாரி 83-86

திரு. உ. தனியரசு 86-90

திரு. சே. கருணாஸ் 90-93

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 93-95

*டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் 96

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு 96-99

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி 99

*மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி 99-101

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 101-107

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 263-264

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – முனைவர் கோ. ரோசய்யா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர்	..	**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை*
2. நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)*
3. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *வனம்*
4. பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்

7. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்

8. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

9. சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்

10. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

11.	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்	.. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத்திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*
12.	தொழில் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*
13.	சுற்றுச்சூழல் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*
14.	உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*
15.	கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *கைத்தறி மற்றும் துணிநூல்*
16.	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*

17. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**
	மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்
18. வேளாண்மைத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:**
	வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு
19. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:**
	செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்
20. வருவாய்த் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**
	வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு
21. சுற்றுலாத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:**
	சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்

23. பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:**

பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

24. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

25. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்

26. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்

27. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

28. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:**

தகவல் தொழில்நுட்பம்

29. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

30. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:**

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்

31. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள் மற்றும் தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்

33. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:**

கால்நடை பராமரிப்பு

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR –– DR. K. ROSAIAH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister	..	**The Hon. Selvi J Jayalalithaa:** Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home
2. Minister for Finance, Personnel & Administrative Reforms	..	**The Hon. Thiru O. Panneerselvam:** Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training)
3. Minister for Forests	..	**The Hon. Thiru Dindigul C. Sreenivasan:** Forests
4. Minister for Public Works, Highways and Minor Ports	..	**The Hon. Thiru Edappadi K. Palaniswami:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports
5. Minister for Co-operation	..	**The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics, Ex-Servicemen Welfare

6. Minister for Electricity, Prohibition & Excise	..	**The Hon. Thiru P. Thangamani:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act
7. Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme	..	**The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme
8. Minister for Fisheries	..	**The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation
9. Minister for Law, Courts & Prisons	..	**The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons
10. Minister for Higher Education	..	**The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology

11. Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme	..	**The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme
12. Minister for Industries	..	**The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives
13. Minister for Environment	..	**The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control
14. Minister for Food, & Civil Supplies	..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
15. Minister for Handlooms & Textiles	..	**The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles
16. Minister for Housing & Urban Development	..	**The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

17. Minister for Health & Family Welfare .. **The Hon. Dr. C. Vijaya Baskar:**

Health, Medical Education and Family Welfare

18. Minister for Agriculture .. **The Hon. Thiru R. Doraikkannu:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

19. Minister for Information & Publicity .. **The Hon. Thiru Kadambur Raju:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press

20. Minister for Revenue .. **The Hon. Thiru R.B. Udhayakumar:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

21. Minister for Tourism .. **The Hon. Thiru Vellamandi N. Natarajan:**

Tourism, Tourism Development Corporation

22. Minister for Commercial Taxes ..	**The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act
23. Minister for School Education & Sports and Youth Welfare ..	**The Hon. Thiru K. Pandiarajan:** School Education, Archaeology, Youth Welfare and Sports Development Department
24. Minister for Milk & Dairy Development ..	**The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development
25. Minister for Rural Industries ..	**The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries
26. Minister for Labour ..	**The Hon. Dr. (Tmt.) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board
27. Minister for Transport ..	**The Hon. Thiru M.R. Vijayabaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
28. Minister for Information Technology ..	**The Hon. Dr. M. Manikandan:** Information Technology

29. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	**The Hon. Tmt. V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
30. Minister for Khadi & Village Industries Board	..	**The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan
31. Minister for Hindu Religious & Charitable Endowments	..	**The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments and Tamil Official Language & Tamil Culture
32. Minister for Backward Classes & Minorities Welfare	..	**The Hon. Tmt. S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare
33. Minister for Animal Husbandry	..	**The Hon. Thiru P. Balakrishna Reddy:** Animal Husbandry

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. ஓ.கே. சின்னராஜ்

திரு. பி.எம். நரசிம்மன்

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

திரு. S. செம்மலை

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. P. வெற்றிவேல்

செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

20-6-2016 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. ம.ச. சந்திரமௌலி, . எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர்
திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	..	பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்.சி., பி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ச. ஆண்டாள், . பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	..	துணைச் செயலாளர்
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மு. ஆதிசேஷன், . எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. துணைச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கோ. ரமேஷ், .. சார்புச் செயலாளர்
பி.எஸ்சி., பி.எல்

திரு. க. லோ. சிவக்குமரன், .. சார்புச் செயலாளர்
பி.எஸ்சி.

திரு. ஜி. பாண்டுரங்கன், .. சார்புச் செயலாளர்
பி.ஏ., பி.ஜி.எல்.

திருமதி பெர்லின் ரூப்குமார், .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

திரு. ஜி. கணேஷ், .. சார்புச் செயலாளர்
பி.எஸ்சி., பி.எல்.

திரு. சு. பாலகிருஷ்ணன், .. சார்புச் செயலாளர்
பி.ஏ., பி.எல்.

திருமதி சீ. உஷா, பி.காம். .. சார்புச் செயலாளர்

திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. த. ரகுபதி, .. தலைமை நிருபர்
எம்.காம்., பி.ஜி.எல்.

திரு. சி. ஸ்ரீதரன், .. தலைமை நிருபர்
எம்.காம்., பி.எட்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அம்பேத்குமார், திரு. எஸ்.	..	வந்தவாசி (செ.வ.)
2.	அம்மன் கே. அர்ச்சுணன் திரு.	..	கோயம்புத்தூர் தெற்கு
3.	அரசு, டாக்டர் ஆர்.டி.	..	செய்யூர் (செ.வ.)
4.	அரவிந்த் ரமேஷ், திரு. எஸ்.	..	சோழிங்கநல்லூர்
5.	அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி.	..	கோயம்புத்தூர் வடக்கு
6.	அலெக்சாண்டர், திரு. வீ.	..	அம்பத்தூர்
7.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	..	திருச்செந்தூர்
8.	அன்பரசன், திரு. தா.மோ.	..	ஆலந்தூர்
9.	அன்பழகன், திரு. க.	..	கும்பகோணம்
10.	அன்பழகன், திரு. கே.பி.	..	பாலக்கோடு
11.	அன்பழகன், திரு. ஜெ.	..	சேப்பாக்கம்— திருவல்லிக்கேணி
12.	அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.	..	திருவெறும்பூர்
13.	ஆடலரசன், திரு. ப.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
14.	ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ.	..	நத்தம்
15.	ஆறுக்குட்டி, திரு. வி.சி.	..	கவுண்டம்பாளையம்
16.	ஆறுமுகம், திரு. பா.	..	கந்தர்வகோட்டை (செ.வ.)
17.	ஆஸ்டின், திரு. எஸ்.	..	கன்னியாகுமரி
18.	இரத்தினசபாபதி, திரு. ஏ.	..	அறந்தாங்கி
19.	இரவிச்சந்திரன், திரு. கே.எஸ்.	..	எழும்பூர் (செ.வ.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

20.	இராதாமணி, திரு. கு.	..	விக்கிரவாண்டி
21.	இராமசாமி, திரு. கரி.	..	காரைக்குடி
22.	இராமச்சந்திரன், திரு. ஆர்.டி.	..	குன்னம்
23.	இராமச்சந்திரன், திரு. எம்.	..	ஒரத்தநாடு
24.	இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	..	அருப்புக்கோட்டை
25.	இராமலிங்கம், திரு. கே.வி.	..	ஈரோடு மேற்கு
26.	இராஜன் செல்லப்பா, திரு.விவி.	..	மதுரை வடக்கு
27.	இராஜா, திரு. எஸ்.ஆர்.	..	தாம்பரம்
28.	இராஜேந்திரன், திரு. இரா.	..	சேலம் வடக்கு
29.	இராஜேந்திரன், திரு. சி.வி.	..	பர்கூர்
30.	இன்பசேகரன், திரு. பி.என்.பி.	..	பெண்ணாகரம்
31.	இன்பதுரை, திரு. ஐ.எஸ்.	..	ராதாபுரம்
32.	ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல்.	..	ஆற்காடு
33.	ஈஸ்வரன், திரு. எஸ்.	..	பவானிசாகர் (செ.வ.)
34.	உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	..	உடுமலைப்பேட்டை
35.	உதயகுமார், திரு. ஆர்.பி.	..	திருமங்கலம்
36.	உதயசூரியன், திரு. தா.	..	சங்கராபுரம்
37.	உமா மகேஸ்வரி, திருமதி கு.	..	விளாத்திகுளம்
38.	எடப்பாடி கே. பழனிசாமி, திரு.	..	எடப்பாடி
39.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	..	காஞ்சிபுரம்
40.	ஏழுமலை, திரு. டி.எ.	..	பூந்தமல்லி (செ.வ.)
41.	கடம்பூர் ராஜூ, திரு.	..	கோவில்பட்டி
42.	கணேசன், திரு. வெ.	..	திட்டக்குடி (செ.வ.)

43.	கணேஷ், திரு. ஆர்.	..	உதகமண்டலம்
44.	கதிர்காமு, டாக்டர் கா.	..	பெரியகுளம் (செ.வ.)
45.	கருணாநிதி, கலைஞர் மு.	..	திருவாரூர்
46.	கருணாநிதி, திரு. இ.	..	பல்லாவரம்
47.	கருணாஸ், திரு. சே.	..	திருவாடனை
48.	கருப்பணன், திரு. கே.சி.	..	பவானி
49.	கலைச்செல்வன், திரு. V.T.	..	விருத்தாசலம்
50.	கனகராஜ், திரு. ஆர்.	..	சூலூர்
51.	கஸ்தூரி வாசு, திருமதி வி.	..	வால்பாறை (செ.வ.)
52.	காந்தி, திரு. ஆர்.	..	ராணிப்பேட்டை
53.	காமராஜ், திரு. இரா.	..	நன்னிலம்
54.	கார்த்திகேயன், திரு. க.	..	ரிஷிவந்தியம்
55.	கார்த்திகேயன், திரு. ப.	..	வேலூர்
56.	கார்த்திக், திரு. நா.	..	சிங்காநல்லூர்
57.	காளிமுத்து, திரு. வி.எஸ்.	..	தாராபுரம் (செ.வ.)
58.	கிரி, திரு. மு.பெ.	..	செங்கம் (செ.வ.)
59.	கீதா, திருமதி, ம.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
60.	கீதா ஜீவன், திருமதி பி.	..	தூத்துக்குடி
61.	குணசேகரன், திரு. சு.	..	திருப்பூர் தெற்கு
62.	குமரகுரு, திரு. இரா.	..	உளுந்தூர்பேட்டை
63.	கோதண்டபாணி, திரு. மு.	..	திருப்போரூர்
64.	கோவிந்தராசு, திரு. மா.	..	பேராவூரணி
65.	சக்கரபாணி, திரு. அர.	..	ஒட்டன்சத்திரம்
66.	சக்திவேல், திரு. எ.பி.	..	சேலம் தெற்கு

67.	சக்ரபாணி, திரு. மு.	..	வானூர் (செ.வ.)
68.	சண்முகநாதன், திரு. எஸ்.பி.	..	ஸ்ரீவைகுண்டம்
69.	சண்முகம், திரு. அ.	..	கிணத்துக்கடவு
70.	சண்முகம், திரு. சி.வி.	..	விழுப்புரம்
71.	சத்திய நாராயணன், திரு. ப.	..	தியாகராய நகர்
72.	சத்யா, திருமதி ப.	..	பண்ருட்டி
73.	சந்திரசேகரன், திரு. சி.	..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
74.	சந்திரசேகரன், திரு. துரை.	..	திருவையாறு
75.	சந்திரசேகர், திரு. இரா.	..	மணப்பாறை
76.	சந்திரபிரபா, திருமதி மு.	..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
77.	சம்பத், திரு. எம்.சி.	..	கடலூர்
78.	சரவணன், திரு. எஸ்.எஸ்.	..	மதுரை தெற்கு
79.	சரஸ்வதி, திருமதி பொன்.	..	திருச்செங்கோடு
80.	சரோஜா, டாக்டர் வி.	..	ராசிபுரம் (செ.வ.)
81.	சாமி, திரு. கே.பி.பி.	..	திருவொற்றியூர்
82.	சித்ரா, திருமதி கு.	..	ஏற்காடு (ஆ.வா.)
83.	சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	..	திரு.வி.க. நகர் (செ.வ.)
84.	சிவசுப்பிரமணி, திரு. வே.பொ.	..	மொடக்குறிச்சி
85.	சின்னதம்பி, திரு. ஆர்.எம்.	..	ஆத்தூர் (செ.வ.)
86.	சின்னராஜ், திரு. ஓ.கே.	..	மேட்டுப்பாளையம்
87.	சீத்தாபதி, திருமதி பெ.	..	திண்டிவனம் (செ.வ.)
88.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	..	விருதுநகர்
89.	சுதர்சனம், திரு. எஸ்.	..	மாதவரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

90.	சுந்தரராஜ், திரு. ஆர்.	..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
91.	சுந்தர், திரு. க.	..	உத்திரமேரூர்
92.	சுப்பிரமணியன், திரு. எஸ்.ஜி.	..	சாத்தூர்
93.	சுப்பிரமணியன், திரு. மா.	..	சைதாப்பேட்டை
94.	சுப்ரமணி, திரு. பெ.	..	தருமபுரி
95.	சுரேஷ் ராஜன், திரு. என்.	..	நாகர்கோவில்
96.	செங்குட்டுவன், திரு. டி.	..	கிருஷ்ணகிரி
97.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	..	கோபிசெட்டிபாளையம்
98.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	..	பழனி
99.	செம்மலை, திரு. S.	..	மேட்டூர்
100.	செல்லூர் கா. ராஜூ, திரு.	..	மதுரை மேற்கு
101.	செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ்.	..	தென்காசி
102.	செல்வம், திரு. கு.க.	..	ஆயிரம் விளக்கு
103.	செல்வராசு, திரு. எம்.	..	முசிறி
104.	செழியன், முனைவர் கோவி.	..	திருவிடைமருதூர் (செ.வ.)
105.	சேகரன், திரு. கே.வி.	..	போளூர்
106.	சேகர், திரு. C.V.	..	பட்டுக்கோட்டை
107.	சேகர்பாபு, திரு. பி.கே.	..	துறைமுகம்
108.	சேவூர் ராமச்சந்திரன், திரு. எஸ்.	..	ஆரணி
109.	சௌந்தரபாண்டியன், திரு. அ.	..	லால்குடி
110.	தங்கதுரை, திரு. ஆர்.	..	நிலக்கோட்டை (செ.வ.)
111.	தங்கப்பாண்டியன், திரு. சௌ.	..	ராஜபாளையம்
112.	தங்கமணி, திரு. பி.	..	குமாரபாளையம்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

113. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி

114. தமிமுன் அன்சாரி, திரு. எம். .. நாகப்பட்டினம்

115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி

116. தமிழ்ச்செல்வன், திரு. ரா. .. பெரம்பலூர் (செ.வ.)

117. தனபால், திரு. ப. .. அவினாசி (செ.வ.)

118. தனியரசு, திரு. உ. .. காங்கேயம்

119. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்

120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)

121. துரை. கி. சரவணன், திரு. .. புவனகிரி

122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

123. துரைமுருகன், திரு. .. காட்பாடி

124. தூசி கே. மோகன், திரு. .. செய்யாறு

125. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு கிழக்கு

126. நடராஜன், திரு. அ. .. பல்லடம்

127. நடராஜ், திரு. ஆர். .. மயிலாப்பூர்

128. நந்தகுமார், திரு. ஏ.பி. .. அணைக்கட்டு

129. நரசிம்மன், திரு. பி.எம். .. திருத்தணி

130. நல்லதம்பி, திரு. அ. .. திருப்பத்தூர்

131. நிலோபர் கபில், டாக்டர் (திருமதி) .. வாணியம்பாடி

132. நீதிபதி, திரு. பா. .. உசிலம்பட்டி

133. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி மேற்கு

134. பரமசிவம், டாக்டர் வெபபா. .. வேடசந்தூர்

135. பரமேஸ்வரி, திருமதி மு. .. மணச்சநல்லூர்

136.	பலராமன், திரு. ப.	..	பொன்னேரி (செ.வ.)
137.	பவுன்ராஜ், திரு. எஸ்.	..	பூம்புகார்
138.	பழனி, திரு. கே.	..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
139.	பழனியப்பன், திரு. பெ.	..	பாப்பிரெட்டிப்பட்டி
140.	பழனிவேல் தியாக ராஜன், திரு.	..	மதுரை மத்தி
141.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	..	குறிஞ்சிப்பாடி
142.	பன்னீர்செல்வம், திரு. ஓ.	..	போடிநாயக்கனூர்
143.	பன்னீர்செல்வம், திரு. வி.	..	கலசப்பாக்கம்
144.	பாண்டி, திரு. ச.	..	முதுகுளத்தூர்
145.	பாண்டியராஜன், திரு. க.	..	ஆவடி
146.	பாண்டியன், திரு. கே.ஏ.	..	சிதம்பரம்
147.	பாரதி, திரு. பி.வி.	..	சீர்காழி (செ.வ.)
148.	பார்த்திபன், திரு. என்.ஜி.	..	சோளிங்கர்
149.	பாலகிருஷ்ணா ரெட்டி, திரு. பா.	..	ஒசூர்
150.	பாலசுப்பிரமணி, திரு. ஆர்.	..	ஆம்பூர்
151.	பாஸ்கரன், திரு. க.	..	சிவகங்கை
152.	பாஸ்கர், திரு. கே.பி.பி.	..	நாமக்கல்
153.	பிச்சாண்டி, திரு. கு.	..	கீழ்பெண்ணாத்தூர்
154.	பிரகாஷ், திரு. ஒய்.	..	தளி
155.	பிரபு, திரு. அ.	..	கள்ளக்குறிச்சி (செ.வ.)
156.	பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	..	குளச்சல்
157.	புகழேந்தி, திரு. சு.	..	மதுராந்தகம் (செ.வ.)
158.	பூங்கோதை, டாக்டர் (திருமதி)	..	ஆலங்குளம்

159.	பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	..	திருப்பத்தூர்
160.	பெரியசாமி, திரு. இ.	..	ஆத்தூர்
161.	பெரியண்ணன் அரசு, திரு.	..	புதுக்கோட்டை
162.	பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	..	மேலூர்
163.	பென்ஜமின், திரு. பா.	..	மதுரவாயல்
164.	பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	..	பொள்ளாச்சி
165.	பொன்முடி, முனைவர் க.	..	திருக்கோவிலூர்
166.	மணிகண்டன், டாக்டர் எம்.	..	இராமநாதபுரம்
167.	மணியன், திரு. ஓ.எஸ்.	..	வேதாரண்யம்
168.	மதிவாணன், திரு. உ.	..	கீழ்வேளூர் (செ.வ.)
169.	மருதமுத்து, திரு. அ.	..	கெங்கவல்லி (செ.வ.)
170.	மனோகரன், திரு. அ.	..	வாசுதேவநல்லூர் (செ.வ.)
171.	மனோ தங்கராஜ், திரு. த.	..	பத்மநாபபுரம்
172.	மனோரஞ்சிதம், திருமதி நா.	..	ஊத்தங்கரை (செ.வ.)
173.	மனோன்மணி, திருமதி ப.	..	வீரபாண்டி
174.	மஸ்தான், திரு. கே.எஸ்.	..	செஞ்சி
175.	மாசிலாமணி, டாக்டர் இரா.	..	மயிலம்
176.	மாணிக்கம், திரு. கி.	..	சோழவந்தான் (செ.வ.)
177.	மாரியப்பன் கென்னடி, திரு. சோ.	..	மானாமதுரை (செ.வ.)
178.	முத்தையா, திரு. எஸ்.	..	பரமக்குடி (செ.வ.)
179.	முருகன், திரு. ஆர்.	..	அரூர் (செ.வ.)
180.	முருகன், திரு. பி.	..	வேப்பனஹள்ளி

181.	முருகுமாறன், திரு. என்.	..	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
182.	முருகையா பாண்டியன், திரு. ஆர்.	..	அம்பாசமுத்திரம்
183.	முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம்.	..	கடையநல்லூர்
184.	மூர்த்தி, திரு. கே.எஸ்.	..	பரமத்தி-வேலூர்
185.	மூர்த்தி, திரு. பி.	..	மதுரை கிழக்கு
186.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	..	ஆலங்குடி
187.	மைதீன்கான், திரு. டி.பி.எம்.	..	பாளையங்கோட்டை
188.	மோகன், திரு. எம்.கே.	..	அண்ணா நகர்
189.	ரகுபதி, திரு. எஸ்.	..	திருமயம்
190.	ரங்கநாதன், திரு. ப.	..	வில்லிவாக்கம்
191.	ரவி, திரு. சு.	..	அரக்கோணம் (செ.வ.)
192.	ராசேந்திரன், திரு. சபா.	..	நெய்வேலி
193.	ராதாகிருஷ்ணன், திரு. வி.	..	மயிலாடுதுறை
194.	ராமர், திரு. எ.	..	குளித்தலை
195.	ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என்.	..	ஜெயங்கொண்டம்
196.	ராமு, திரு. அ.	..	குன்னூர்
197.	ராஜலெட்சுமி, திருமதி வி.எம்.	..	சங்கரன்கோவில் (செ.வ.)
198.	ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம்.ஆர்.	..	அந்தியூர்
199.	ராஜா, திரு. சி.	..	சங்கரி
200.	ராஜா, திரு. டி.ஆர்.பி.	..	மன்னார்குடி

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி.	..	சிவகாசி
202. ராஜேந்திரன், திரு. சு.	..	அரியலூர்
203. ராஜேந்திரன், திரு. வி.ஜி.	..	திருவள்ளூர்
204. ராஜேஷ் குமார், திரு. செ.	..	கிள்ளியூர்
205. லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ்.	..	திருநெல்வேலி
206. லோகநாதன், திரு. கோ.	..	கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)
207. வசந்தகுமார், திரு. எச்.	..	நாங்குநேரி
208. வரலட்சுமி, திருமதி ம.	..	செங்கல்பட்டு
209. வளர்மதி, திருமதி சீ.	..	ஸ்ரீரங்கம்
210. வாகை சந்திரசேகர், திரு.	..	வேளச்சேரி
211. விருகை V.N. ரவி, திரு.	..	விருகம்பாக்கம்
212. விஜயகுமார், திரு. க.நா.	..	திருப்பூர் வடக்கு
213. விஜயதரணி, திருமதி எஸ்.	..	விளவங்கோடு
214. விஜய பாஸ்கர், டாக்டர் சி.	..	விராலிமலை
215. விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர்.	..	கரூர்
216. விஜியகுமார், திரு. கே.எஸ்.	..	கும்மிடிப்பூண்டி
217. வீரமணி, திரு. கே.சி.	..	ஜோலார்பேட்டை
218. வெங்கடாச்சலம், திரு. என்.டி.	..	பெருந்துறை
219. வெங்கடாஜலம், திரு. கோ.	..	சேலம் மேற்கு
220. வெல்லமண்டி ந. நடராஜன், திரு.	..	திருச்சிராப்பள்ளி கிழக்கு
221. வெற்றிவேல், திரு. ச.	..	ஓமலூர்

222. வெற்றிவேல், திரு. P.	..	பெரம்பூர்
223. வேலு, திரு. எ.வ.	..	திருவண்ணாமலை
224. வேலுமணி, திரு. எஸ்.பி.	..	தொண்டாமுத்தூர்
225. ஜக்கையன், திரு. எஸ்.டி.கே.	..	கம்பம்
226. ஜெயக்குமார், திரு. டி.	..	இராயபுரம்
227. ஜெயந்தி பத்மநாபன், திருமதி சி.	..	குடியாத்தம் (செ.வ.)
228. ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா.	..	மடத்துக்குளம்
229. ஜெயலலிதா, செல்வி ஜெ	..	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
230. ஸ்டாலின் குமார், திரு. செ.	..	துறையூர் (செ.வ.)
231. ஸ்டாலின், திரு. மு.க.	..	கொளத்தூர்
232. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி)	..	நியமனம்
233. வெற்றிடம்	..	திருப்பரங்குன்றம்

(தஞ்சாவூர் மற்றும் அரவக்குறிச்சி தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறவில்லை.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். முத்துக்குமாரசாமி	..	மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 15, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஆகஸ்ட் 31, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

அன்பர்களின் அகமாகிய மலரில் அமர்ந்திருக்கும் கடவுளின் பெருமைமிக்க திருப்பாதங்களைத் தொடர்ந்து வணங்குகிறவர்கள் இந்த நிலவுலகில் நீண்ட நாள் வாழும் தகுதியைப் பெறுவர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

இரயில்வே மேம்பாலம்

*399—**திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 ஆண்டுகளுக்குப்பின் ஆளுகின்ற கட்சி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக ஆட்சி அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆறாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று (மேசையைத் தட்டும் ஒலி) 100-வது நாள் நிறைவுபெறும் இன்றைய தினத்தில் சரித்திர சாதனை படைத்திடும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்க முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, செங்கம் மற்றும் கலசப்பாக்கம் தொகுதிகளில் உள்ளவர்கள் புகழ்பெற்ற வேலூர் C.M.C. மருத்துவமனைக்குச் செல்வதாக இருந்தாலும், விவசாயிகள் தரணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் செல்வதாக இருந்தாலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் செல்வதாக இருந்தாலும் அந்த இரயில்வே பாலத்தைத் தாண்டித்தான் செல்லவேண்டியிருக்கிறது. எனவே, அந்த இரயில்வே பாலத்தைப் பொறுத்த அளவிற்கு இராமேஸ்வரம்-திருப்பதி, விழுப்புரம்-திருப்பதி, மன்னார்குடி-திருப்பதி, விழுப்புரம்-கரக்பூர், புதுச்சேரி-தாதர் போன்ற பல சரக்கு இரயில்களும், பயணிகள் இரயில்களும் போய்க்கொண்டிருக்கின்றன. அரைமணி நேரத்திற்கு ஒருமுறை இரயில்வே கேட் மூடுகிற காரணத்தினால் அங்கு வாகன நெரிசல் ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே இந்த மேம்பாலத்தைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் நான் அறிய விரும்புகிறேன்.*

2016 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்கக்கோரும் இடம் கடலூர்-சித்தூர் சாலையில் கிலோ மீட்டர் 141/4 இல் உள்ள இரயில்வே கடவு எண் 80-க்கு மாற்றாக போளூர்-ஆரணி ஆகிய இரயில் நிலையங்களுக்கிடையே அமைந்துள்ள பகுதியாகும். இந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்கு முதற்கட்டப் பணியான நிலம் எடுப்பு, பயன்பாட்டுச் சாதனங்கள் மாற்றியமைத்தல் மற்றும் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள 5.23 கோடி ரூபாய் செலவில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது. மேலும், பாலத்திற்கான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி முழுவதும் முடிந்தபின் பாலப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை புகழ்பெற்ற ஓர் ஆன்மீகத் தலம். அங்கே ஒரு நாளைக்கு திருவண்ணாமலை இரயில்வே கேட் வழியாக, அதை ஒட்டியிருக்கிற பள்ளி கல்லூரிகளுக்குப் போகிற வண்டிகள் 100, நகரப் பேருந்துகள் 50, உள்ளூர் லாரிகள் போன்றவை 1000, வெளியூர் கார்கள் மற்றும் லாரிகள் 1000, இதுதவிர மாதத்திற்கு மூன்று நாட்கள் கிரிவலம் என்ற பெயரிலே கிட்டத்தட்ட வெளிமாவட்டங்கள், வெளிமாநிலங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆக சுமார் 5000 வாகனங்கள் அங்கே வந்துபோகின்றன. அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இன்னொன்றையும் கொண்டுவருகிறேன். 1-4-2013 அன்று இதே மாமன்றத்தில் 11 மாவட்டங்களில் 18 மேம்பாலங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டதில் திருவண்ணாமலை மேம்பாலமும், போளூர் மேம்பாலமும் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 2013 ஆம் ஆண்டு என்பதையும்*

நினைவூட்டுகிறேன். மேம்பாலம் கட்டும் பணி செயல்படுவதன் காரணமாக அங்கு வருகிற வாகனப் போக்குவரத்தில் நெரிசல்கள் அதிகமாக ஏற்படுகிற காரணத்தினால், ஆன்மீகப் பெருமக்களும் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். பெரும்பாலும் தென்மாவட்டத்தில் இருக்கிற மக்கள் எல்லாம் திருப்பதிக்குச் செல்லவேண்டுமென்றால், திருவண்ணாமலை-வேலூர் வழியாகத்தான் செல்லவேண்டும். எனவே திருப்பதிக்குச் செல்லுகின்ற ஆன்மீகப் பெருமக்கள் மற்றும் திருவண்ணாமலை கிரிவலத்திற்குச் செல்லும் ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் இந்த இரு இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படாத காரணத்தினால், அதிருப்திக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, 2013 ஆம் ஆண்டில் அரசால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட்டு, இந்த ஆண்டிலேயே அந்தப் பாலம் கட்டப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரத்தில் தண்டரை-திருவண்ணாமலை இரயில் நிலையத்திற்கிடையே கடவு எண் 55-க்கு மாறாக, சாலை மேம்பாலப் பணிகளின் முதற்கட்டப் பணிகளான நில எடுப்பு, பயன்பாட்டுச் சாதனங்கள் மாற்றியமைத்தல் மற்றும் ஆய்வுப் பணிகள் ரூ.3.29 கோடி செலவில் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை நகரத்தில் 3,852 சதுர மீட்டருக்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் கிட்டத்தட்ட 54 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை 32 தான். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டதன் காரணத்தினால்தான், 54 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டி

2016 ஆகஸ்ட் 31]

முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இன்றைக்கு இத்திட்டம் நிறைவேற்றப்பட எடுத்துக்கொள்ளப்பட்ட கால அளவு 6 ஆண்டுகள் மட்டுமே. கடந்த கால தி.மு.க. ஆட்சியில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தின் அளவு 7 ஆண்டுகள் 10 மாதங்கள் ஆகும். ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில்தான் அனைத்துப் பாலப் பணிகளும் விரைந்து முடிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பாலங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு பாலப் பணிகளிலும் நிலம் எடுக்கின்ற பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிவோடு வணங்குகிறேன். இந்த இனிமையான சிறப்புமிக்க நாளில் எங்களையெல்லாம் இந்த மாமன்றத்தில் அமர்ந்து பேசுவதற்கு வாய்ப்பளித்து தமிழக மக்களை வாழ்விக்கின்ற தெய்வமாக, (மேசையைத் தட்டும் ஒலி) $1\frac{1}{2}$ கோடி தொண்டர்களின் ஒளிவிளக்காக விளங்குகின்ற எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

என்னுடைய சீர்காழி தொகுதியில் கடற்கரை கிராமங்களை இணைக்கின்றவிதத்தில், சுனாமி சிறப்புத் திட்டத்தின்கீழ் பாலங்கள், சாலைகள் போடப்பட்டு வந்த நிலையில், திருமுல்லைவாசல், கீழமூவர்கரை கிராமத்தை இணைக்கின்ற உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டி முடிக்கப்பட்டு, ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. ஆனால், இணைப்புச் சாலை போடப்படாமல் உள்ளது. அதற்குக் காரணம் என்ன என்பதையும் அந்த இணைப்புச் சாலையினை, உடனடியாக அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, பல ஆண்டுகள் ஆகியும், அதற்கு இணைப்புச் சாலைப் பணி நிறைவேறாத காரணத்தினால், அங்கு போக்குவரத்து செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதற்கான காரணம் என்ன என்பதை ஆய்வு செய்து, விரைந்து அந்த இணைப்புச் சாலையை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இணைப்புச் சாலையைப் பொறுத்தவரையில், நிலப் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினால்தான், இன்றைக்கு காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலப் பிரச்சினை நீதிமன்ற வழக்கில் இருக்கின்ற காரணத்தினால் காலதாமதம் ஏற்பட்டது. இருந்தாலும், அந்த வழக்கினை விரைந்து முடித்து, அந்த இணைப்புச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மயிலம் சட்டமன்றத் தொகுதி, மயிலம் ஒன்றியத்தில் நெடுஞ்சாலையை ஒட்டியிருக்கிற கூட்டேரிப்பட்டு கிராமத்தில் இருக்கின்ற கூட்டுப் பாதையில் ஒரு மேம்பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று 10 ஆண்டுகளுக்கும் மேலாக பொது மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அப்பகுதியில் விபத்துகள் நடப்பது அன்றாட நிகழ்வாக மாறி இருக்கிறது. 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான ஆறு ஆண்டுகளில் மட்டும் இதுவரை 60 பேர் அங்கு நடந்த விபத்தில் மரணம் அடைந்துள்ளனர். 72 பேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இடது புறம் மற்றும் வலது புறங்களில் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் கடக்கின்றபோது, தேசிய நெடுஞ்சாலையில் நேராக வேகமாக வருகின்ற வாகனங்கள் மோதி, தினமும் அங்கு விபத்து நடந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம்,*

போராட்டம், சாலை மறியல் என்று பல்வேறு போராட்டங்கள் நடத்தி, அதிகாரிகள் அவ்வப்போது அங்கு வந்து, உரிய நடவடிக்கை எடுக்கிறேன் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார்களே தவிர, இதுவரை எந்த நடவடிக்கையும் யாரும் எடுக்கப்படவில்லை. எனவே, அந்தப் பகுதியில் இனியும் விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கின்ற வகையில், உடனடியாக அங்கே ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கே விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்ற காரணத்தினாலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அறிவிப்பு செய்திருக்கின்றார்கள். இப்பொழுது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அங்கே ஆறு வழிச்சாலை அமைக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, அங்கே பாலம் அமைக்கின்ற நடவடிக்கையை அரசு விரைந்து எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நூறாண்டு காலம் வாழ்க, நோய்நொடி இல்லாமல் வளர்க.' (மேசையைத் தட்டும் ஒலி) 100 ஆண்டு சாதனை படைத்து, தமிழ்நாட்டில் ஏழைகளே இல்லாத நிலையை உருவாக்குவேன் என்று சூளுரை ஏற்று, தமிழகத்தை வளர்த்து, தமிழகத்தின் தர்ம தேவதையாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.*

ஈரோடு-நீலகிரி வரையிலும் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி துவங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முதல்கட்ட பணியாக ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வரையில் நான்கு வழிச்சாலை அமைக்கப்பட இருக்கிறது. கோபிசெட்டிப்பாளையத்தின் மையப் பகுதியில் வணிக வளாகம், அரசு அலுவலகம், பள்ளிக் கட்டடங்கள், நீதிமன்றங்கள் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், புறவழிச் சாலை அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்வது தொடர்பாக 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்த கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசு நிறைவேற்றித் தருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே புறவழிச் சாலை அமைப்பது குறித்து அவையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்ற நகரங்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே புறவழிச் சாலை அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கின்றார்கள். அரசு ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட அளவு புறவழிச் சாலைகள் அமைக்கின்ற பணிகளை மேற்கொண்டு, அவற்றை அமைத்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோபிசெட்டிப்பாளையத்திலே புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 31]

123—

மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

*__297__—**திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தண்டலம் ஊராட்சி, தண்டலம் மேட்டுக் காலனியில் வீடுகளுக்கு மேல் செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நாள், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 100-வது நாள். வாக்களித்த வாக்காளப் பெருமக்களின் விரல்களிலுள்ள மை அழிவதற்கு முன்பாக (மேசையைத் தட்டும் ஒலி) தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்த தலைவர், எங்களது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தேர்தல் நேரத்திலே, எத்தனையோ ஊடகங்கள் என்னென்னவோ செய்திகளை வெளியிட்டாலும்கூட, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற தாரக மந்திரத்தின்மூலம், இன்றையதினம் 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து ஆறாவது முறையாக முதல்வராகப் பதவியேற்று, இன்று 100 நாட்களை கடக்கின்ற சூழ்நிலையில், எங்களது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்த வயதில்லை என்றாலும், வணங்குகிறேன். இந்த சட்டமன்றப் பேரவையில் மூன்று முறை எனக்கும் வாய்ப்பளித்து, இரண்டாவது முறையாக என்னை அமைச்சராக்கிய எங்களது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்டலம் ஊராட்சி, தண்டலம் மேட்டுக்காலனியில் வீடுகளுக்கு மேல் செல்லும் மின் கம்பிகளை மாற்றி அமைத்துத்தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். பொதுவாக, அந்தந்த

ஊராட்சியிலே இருக்கின்ற ஊராட்சி மன்றங்கள் அதற்குண்டான தொகையை மின்சார வாரியத்திற்குக் கட்ட வேண்டும். இல்லையென்றால், நுகர்வோர் அந்தத் தொகையைக் கட்ட வேண்டும். அப்பொழுதுதான் மின்சார வாரியத்திலிருந்து அந்த மின் கம்பிகளை மாற்றித் தர முடியும். ஆக, உள்ளாட்சித் துறையின் சார்பாகவோ அல்லது நுகர்வோர் சார்பாகவோ, அதற்குண்டான பணத்தைக் கட்ட தயாராக இருக்கிறார்கள் என்றால், உடனடியாக மின் கம்பிகளை மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமையை ஒழிப்பதே தன்னுடைய வாழ்நாள் கனவு என்று, ஆதி திராவிட மக்கள் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத்திலே உயர வேண்டுமென்று அடுக்கடுக்கான திட்டங்கள் தந்து, இந்தியத் தேசத் தலைவர்களின் இலட்சியங்களை மட்டுமல்ல, உலகத் தலைவர்களின் இலட்சியங்களையும் நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாவது முறையாக அரியணையில் அமர்ந்து, நூறாண்டு சாதனைகள் செய்து, 100-வது நாளைக் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட, தண்டலம் ஊராட்சியிலே, ஆதி திராவிடர் வாழ்கின்ற மேட்டுக் காலனியில் அவர்களுடைய குடிசைகளுக்கும் மற்றும் அரசு வழங்கிய தொகுப்பு வீடுகளுக்கும் மேலே விவசாய pumpset-களுக்கு செல்கின்ற மின் கம்பிகள் செல்வதால், அந்தக் குடிசைகளில் வாழ்கின்ற மக்களெல்லாம் தினந்தோறும் அச்சத்தோடு வாழ்ந்து வருகிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி நிருவாகமோ அல்லது நுகர்வோரோ பணம் செலுத்துகின்றபட்சத்திலே, அந்த மின்

2016 ஆகஸ்ட் 31]

கம்பிகளை மாற்றியமைக்க வழிவகை உள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மின் கம்பிகளை மாற்றியமைப்பதற்கு மின் துறை அதிகாரிகளிடத்திலே கேட்டதற்கு 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மின் துறைக்கு பணம் செலுத்த வேண்டும் என்கிறார்கள். அந்த ஓலைக் குடிசையிலே, அரசு தொகுப்பு வீடுகளிலே வாழ்கின்ற ஆதி திராவிட மக்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் அந்தப் பணத்தைச் செலுத்தக்கூடிய சூழ்நிலையில் இல்லை. உள்ளாட்சியிலே கேட்கின்றபொழுது நிதியில்லை என்று சொல்கிறார்கள். கேட்கின்ற திட்டங்களை மட்டுமல்ல, கேட்காத திட்டங்களையெல்லாம் ஆதி திராவிட மக்களுக்கு அள்ளி தருகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் மாண்புமிகு அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று உள்ளாட்சியிலே அதற்கான ஒரு நிதி ஆதாரத்தை ஏற்படுத்தி, சிறப்பு அனுமதி பெற்று, அந்த மின் கம்பிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதியில் ஏற்கெனவே 20 ஆண்டுக் காலமாக அந்த மின் கம்பி செல்கின்றது. அதற்குப் பின்னால்தான் அவர்கள் அங்கே வீட்டைக் கட்டி குடியிருந்து வருகின்றார்கள். பொதுவாக ஒரு பகுதியிலே வீடு கட்டுகின்றபோது, மேலே, உயர் அழுத்த மின் கம்பி சென்றாலும் சரி, தாழ்வழுத்த மின் கம்பி சென்றாலும் சரி, அந்தப் பகுதியிலே வீடு கட்டுகின்றபொழுது அவர்கள் அந்தக் கம்பி செல்கின்ற பகுதியை விட்டு விட்டு, மற்ற இடத்தில் கட்ட வேண்டும். அப்படியில்லாமல் கட்டிவிட்டு, மீண்டும் எங்களிடத்திலே வந்து நீங்கள் உடனே மாற்றிக் கொடுங்கள் என்று சொல்கின்றபொழுது மின்சார வாரியத்தினுடைய நிலைமை தர்மசங்கடமாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், அவர் சொல்லியதுபோல ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதி. அவர்கள் கட்டுகின்றபொழுதே, அந்த*

இடத்தை விட்டுக் கட்டியிருந்தால் இந்தப் பிரச்சினை இருந்திருக்காது. இருந்தாலும், 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் கட்டணம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இன்றைய தினம் காலையில் அதிகாரிகளிடம் பேசி, அதை 5 ஆயிரம் ரூபாயாகக் குறைப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்திலும் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உள்ளாட்சித் துறை மூலமாக அந்தப் பணத்தைச் செலுத்தி, அதை மாற்றித் தருவதற்குண்டான நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்கள் மூலமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி, அந்தக் குடிசையிலே, தொகுப்பு வீடுகளில் வாழ்கின்ற மக்களுக்கு மின் இணைப்பு கோருகின்றபொழுது, மேலே செல்கின்ற அந்த மின் கம்பிகளைக் காரணம் காட்டி, இதுவரை அந்தக் குடிசை வீடுகளுக்கும் அரசு தொகுப்பு வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படாமல் இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த தொகுப்பு வீடுகளுக்கும், குடிசை வீடுகளுக்கும் ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து தெரிவது என்னவென்றால், மின் கம்பிகள் மேலே செல்கின்ற அந்த இடத்திலே புதியதாக connection கொடுக்கின்றபொழுது அந்தக் குடிசைகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினால் மறுக்கப்பட்டிருக்கும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு*

2016 ஆகஸ்ட் 31]

அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உள்ளாட்சித் துறையின் வாயிலாக அந்தப் பணத்தைக் கட்டியதற்குப் பின்னால், மின் கம்பிகளை உடனடியாக மாற்றி, தொகுப்பு வீடுகளுக்கும், குடிசை வீடுகளுக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

சமுதாயக் கூடம்

***189—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வடுவூர் வடபாதி ஊராட்சி, கொண்டையூரில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்தத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் 100 ஆவது நாள். 32 ஆண்டுகளுக்குப் பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கத்தின் தொடர் ஆட்சியாக அமைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின் 100 ஆவது நாள். 6 ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று எண்ணற்ற திட்டங்களை நாட்டு மக்களுக்காகத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின்*

100 ஆவது நாள். உலக வரலாற்றில், இந்திய வரலாற்றில் எண்ணில்லா திட்டங்களைத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியின் 100-வது நாள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஒருவரது உழைப்பினால்தான் நாங்கள் எல்லோரும் இன்றைக்கு அமைச்சர்களாக பதவிகளில் அமர்ந்திருக்கிறோம் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) 6-வது முறை மட்டுமல்ல, 100-வது முறையும் அமையப்போவது எங்களது அம்மா அவர்களின் ஆட்சிதான் என்பதையும் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-20

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வடுவூர் வடபாதி ஊராட்சி, கொண்டையூரில் செல்லாயி அம்மன் கோவில் அருகில், 2015-2016 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதிய சமுதாயக்கூடம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைவாய்ந்த எங்கள் மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடுவூர்-வடபாதி ஊராட்சியில், கொண்டையூர் மக்கள் பல ஆண்டுக்காலமாக ஒரு சமுதாயக் கூடம் கட்டப்பட வேண்டும் என்று கோரி வந்தார்கள். தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பாக, பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், தேர்தலுக்குப் பிறகும், பல நாட்களாக, எந்தப் பணியும் அங்கு துவங்கப்படவில்லை. ஜூன் மாதம் நான் இந்தக் கேள்வியை அவைக்கு அனுப்பிய பிறகு, உடனடியாக அங்கு வேலைகள் துவங்கியுள்ளன. ஆகவே, கேள்வியின் நோக்கம் நிறைவேறியுள்ளது. இதேபோல் எங்கள் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து நான்*

2016 ஆகஸ்ட் 31]

மகாதேவபட்டினத்திற்குப் பெற்று தந்த நிதி அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. இன்னும் ஏன் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

நீடாமங்கலம் ஒன்றியம், மேலதளிக்கோட்டை, செட்டிச்சத்திரம், அய்யம்பேட்டை, குடிதாங்கிச்சேரி, கோவில்வெண்ணி தர்காஸ், காளச்சேரி ஆதி திராவிடர் தெரு, தென்கரவாயல், காரக்கோட்டை, சோனாப்பேட்டை மேற்கு, ஆதனூர், மூவர்கோட்டை, மன்னார்குடி ஒன்றியம், துளசேந்திரபுரம், 29-மேலநெம்மேலி, கோட்டூர் ஒன்றியம், மேலநத்தம் ஆகிய பகுதிகளில் சமுதாயக் கூடம் கட்டித் தர வேண்டும் என்று மக்கள் கோரி வருகின்றார்கள். அதனை இந்த அரசு கட்டித் தர முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களால் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து நிதியினைப் பெற்று, இன்றைக்கு அவருடைய தொகுதியில் சமுதாயக் கூடம் கட்டும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு வருகின்றது என்பதைக்கூட பாராட்டாமல், அவர் சுற்றி வளைத்துப் பேசுகிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், ஐந்து ஆண்டுக்காலத்தில், தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளிலே, 329 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,277 சமுதாய நலக் கூடங்கள் கட்டப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான சாதனைகள் படைக்கப்பட்டுள்ளது.*

கடந்த, தி.மு.க.-வின் ஐந்தாண்டுக்கால ஆட்சியில் 1,880 சமுதாய நலக் கூடங்களுக்கு, 180 கோடியே 74 இலட்சம் ரூபாய்தான் நீங்கள் ஒதுக்கியிருந்தீர்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 168 கோடியே

47 இலட்சம் ரூபாய் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றைக்கு சமுதாய நலக் கூடங்கள் கட்டடப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வடுவூர்-வடபாதி ஊராட்சி, கொண்டையூரில் செல்லாயி அம்மன் கோவில் அருகில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கு. பரசுராமன் அவர்களின் பரிந்துரையின் பேரில், 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இன்றைக்கு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 31-10-2016-க்குள் சமுதாயக் கூடத்தை கட்டி முடிக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள், கண்டிப்பாக அதற்குள் அந்த வேலைகள் முடிந்துவிடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் வேறு சில இடங்களில் சமுதாய நலக் கூடங்களை கட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அங்கு ஆய்வு செய்து கட்டித் தரப்படும். அதேபோல், உங்களுடைய சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்தும் தொகையை கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. நீங்களும் நிதியைத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டையூர் கிராம மக்கள் வேறு ஒரு இடத்தில் சமுதாயக் கூடத்தை கேட்டிருந்தார்கள். இருந்தாலும் செல்லாயி அம்மன் கோவில் அருகில் அதைக் கொடுத்திருக்கிறீர்கள்; பரவாயில்லை. என்னுடைய உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து தொடர்ந்து நான் நிதியை ஒதுக்கிக் கொண்டுதான் வருகிறேன். மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி நகரை ஒட்டியுள்ள வாஞ்சியூர் கிராமத்தில் பொதுக் கழிப்பிடம் இல்லாமல், அங்குள்ள தாய்மார்களும், சகோதரிகளும் மிகவும்

சிரமப்பட்டு வருகிறார்கள். ஆகவே, அங்கு ஒரு பொதுக் கழிப்பிடத்தை, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் சமுதாயக் கூடத்திலிருந்து வேறு பொருளுக்கு போய் விட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்காது. (குறுக்கீடு) சம்பந்தப்பட்ட ஒரு துணைக் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) மூலக் கேள்விக்கு தொடர்புடையதாகக் கேளுங்கள்.

முற்பகல் 10-25

திரு. டி.ஆர்.பி. ராஜா: மூலக் கேள்வியை ஒட்டித்தான் நான் கேட்கிறேன். சமுதாயக் கூடமும், பொதுக் கழிப்பிடமும் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ்தானே வருகின்றன. ஆகவே, அங்குள்ள மக்கள் பொதுக் கழிப்பிடம் இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுக் கழிப்பிடம் கட்டுவதற்கு நான் நிதி ஒதுக்க தயாராகத்தான் இருக்கிறேன். ஆனால், அந்த இடம் அறநிலையத் துறைக்குச் சொந்தமானதாகும். ஆகவே, இந்த அரசு வாஞ்சூர் கிராமத்திற்கு அந்த இடத்தைப் பெற்றுத் தர வேண்டும்.

மன்னார்குடி ஒன்றியம் 54 நெம்மேலியில் இடையால்நத்தம் ஊராட்சி, கல்யாணசுந்தரம் தெரு, மகாதேவப்பட்டிணம் ஊராட்சி, செபஸ்தியர் கோவில் தெரு, நீடாமங்கலம் ஒன்றியம், காரக்கோட்டை ஊராட்சி, மேலக்காடு ஏரிக்கரை, இடைக்கழியூர் முத்தமிழ் தெரு, கோட்டூர் ஒன்றியம், ராதா நரசிம்மபுரம் ஊராட்சி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் பொதுக் கழிப்பிடம் இல்லாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, நான் குறிப்பிட்ட இடங்களிலும் பொதுக் கழிப்பிடங்களைக் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுக் கழிப்பிடம் கட்டித் தர வேண்டும் என்று மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்டிருக்கின்றார். மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கிராமங்கள் உட்பட, 12,524 ஊராட்சிகளில், 12,794 சுகாதார வளாகங்களை 2001-2006 ஆம் ஆண்டுகளில் அமைத்தார்கள். அந்தச் சுகாதார வளாகங்களில், குளியலறை வசதி, துவைக்கும் வசதி போன்ற வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு, 2006-2011 ஆம் ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சி அமைந்தபோது, அதைப் பராமரிக்காமல் விட்டுவிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 170 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தச் சுகாதார வளாகங்கள் புனரமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. அதேபோல, திறந்தவெளியில் மலம் கழிக்கக் கூடாது என்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஆண்டு 15 இலட்சம் தனி நபர் கழிப்பிடங்கள் கட்ட உத்தரவிட்டார்கள்; பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, இந்த ஆண்டிலும், 16 இலட்சம் கழிப்பிடங்கள் கட்ட உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன இடங்களிலும் தனி நபர் கழிப்பிடம் கட்ட வேண்டுமென்றாலும்சரி, பொதுக் கழிப்பிடம் கட்ட வேண்டுமென்றாலும்சரி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கித் தருவார்கள்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இடத்தைப் பற்றி பேசினார்கள். இடம் நத்தம் புறம்போக்கு போன்ற நிலமாக இருந்தால் பிரச்சினை இருக்காது. அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் என்றால், அதை எடுப்பதற்கென சில norms இருக்கிறது. அதன்படிதான் நிலத்தை எடுக்க முடியும். ஆகவே, சமுதாய நலக் கூடம் கட்டுவதாக இருந்தாலும் சரி, வேறு எந்த அரசுக் கட்டடம் கட்டுவதாக இருந்தாலும் சரி, அரசுப் புறம்போக்கு நிலம் என்றால் உடனே கட்டி முடித்துவிடலாம். ஆனால், அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் என்றால், அத்துறைக்கு பணம் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் அவ்வளவு பணம் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்காது. ஆகவே, ஆய்வுகள் செய்யப்பட்டு, வாய்ப்பு இருந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

நீதிமன்றக் கட்டடம்

***2221—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என தவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 6-வது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இன்றைக்கு 100-வது நாளில் அடியெடுத்து வைத்து, வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆளுகிற கட்சியே மீண்டும்*

ஆட்சி அதிகாரத்தில் அமையப் பெற்றிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) 100-வது நாளில் அடியெடுத்து வைத்திருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு, வரலாற்றில் இடம்பெறத்தக்க பல வெற்றிகளைக் குவித்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், நீதிமன்றங்கள் சீராகவும், செம்மையாகவும் செயல்படுவதற்காக நீதிமன்றக் கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில், 223 புதிய நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு, 486.26 கோடி ரூபாய் செலவில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், அந்த நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட பள்ளிப்பட்டில் இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், பொது மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் நலன் கருதி, எனது கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது பள்ளிப்பட்டில் அமையப் பெற்றிருக்கின்ற நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தில் ஒரு திருத்தம். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியிலே புதிய நீதிமன்றங்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு 511.66 கோடி ரூபாய் செலவு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே புதிய நீதிமன்றக்

2016 ஆகஸ்ட் 31]

கட்டடங்கள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கவில்லை என்று சொல்லவில்லை. எந்த நீதிமன்றத்தை அமைப்பதாக இருந்தாலும் சரி, கட்டடங்கள் கட்டுவதாக இருந்தாலும் சரி, உயர் நீதிமன்றத்திலிருந்து நமக்கு கோரிக்கைகள் வரப்பெறவேண்டும். அப்படி கோரிக்கை வரும்பட்சத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நீதித் துறையில் வழக்கறிஞர்கள் சேம நல நிதியை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 5.25 இலட்சமாக உயர்த்திக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். இப்படி எண்ணற்ற சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு படைத்துவருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டில் இதற்கு உயர் நீதிமன்றத்திலிருந்து கருத்துரு வருமேயானால் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டில் விரைந்து முடிக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற திருவள்ளூர் மாவட்டத்திலே, இதுவரை அங்கு இயங்கிக்கொண்டிருக்கின்ற 37 நீதிமன்றங்களிலே 21 நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அனைத்து நீதிமன்றங்களுமே சொந்தக் கட்டடங்களிலே இயங்க*

வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நீதிமன்றங்களில் 89.6 சதவீத நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற திருவள்ளூர் மாவட்டத்தில்கூட, மாவட்டத் தலைநகரமான திருவள்ளூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு, 7 நீதிமன்றங்கள் உட்பட 8 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்ட, இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் 23.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து கருத்துரு பெறப்பட்டால் கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Supplementary question கேட்க வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்பது கட்டாயம் இல்லை. சொல்வதைக் கேளுங்கள். நான் நேரத்தின் அருமை கருதி, நேரத்திற்குத் தகுந்த மாதிரி கேள்வி நேரத்தில் வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்புக் கேட்டால் உடனே தரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) Supplementary question கேட்க வாய்ப்பு கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று கேட்பதாலே அவருக்கு வாய்ப்பு கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமில்லை. நேரத்தின் அருமை கருதி எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்பு வரும்போது கண்டிப்பாகக் கொடுக்கிறேன். (குறுக்கீடு)

2016 ஆகஸ்ட் 31]

126—

கலைக் கல்லூரி

***1835—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 100-வது நாளில் அடியெடுத்து வைக்கின்ற இந்த நாளிலே, அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

முற்பகல் 10-35

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதியில் 30-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், அதாவது அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், சுய நிதிப் பள்ளிகள் அமையப்பெற்றுள்ளன. ஆண்டுக்கு சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள்*

உயர் கல்வி பயில விண்ணப்பிக்கிறார்கள். தற்போது மாணவ, மாணவியர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டம் பெற விரும்புவதால், கலை மற்றும் அறிவியல் கல்லூரி இடத்திற்காக அலைமோதும் நிலை உருவாகியுள்ளது. இந்த ஆண்டு 1200-க்கு 1050 மதிப்பெண் பெற்ற மாணவிக்குக்கூட B.Com. பிரிவில் பயில வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏழையெளிய மாணவ, மாணவியர்களுக்கு அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இடம் கிடைக்காவிட்டால், சுய நிதிப் பிரிவு கல்லூரியில் கட்டணம் செலுத்த முடியாத ஒரு நிலை ஏற்படுவதனால், அவர்கள் உயர் கல்வி பயில இயலாத நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாமல், சுற்றுவட்டார கிராமப் பகுதியிலிருந்தும் உயர் கல்வி பயில தூத்துக்குடிக்கு வருகிறார்கள். தூத்துக்குடி தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி, அரசு மருத்துவக் கல்லூரி, கடல்சார் பயிற்சிக் கழகம் ஆகியவை தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலேதான் அமைக்கப்பட்டது. தற்போது, அரசு கலைக் கல்லூரி அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் இரு பாலர் கல்லூரி, 9 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 2 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 8 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஆக மொத்தம் 20 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதிலே 2013-2014 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், துவக்கி வைக்கப்பட்ட அந்தக் கல்லூரிக்குக் கட்டடத்தையும் வழங்கி, அந்தக் கட்டடத்தை 14-2-2016 அன்று திறந்து வைத்த பெருமையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 31]

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் மகளிருக்கென்று மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2003 ஆம் ஆண்டிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது துவக்கி வைக்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் 2011-2012 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தூத்துக்குடி தொகுதியிலே 4 அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதிலே 3 இருபாலர் கலைக் கல்லூரிகள். ஒன்று மகளிர் கல்லூரி. ஆக, இப்படி நான்கு கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற அவருடைய தொகுதியிலே மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்றாற்போல் அங்கே கல்லூரிகளின் எண்ணிக்கை சரியாக இருக்கிறது. மேலும், அதற்கு மேலாக மாணவர்களுடைய எண்ணிக்கை கூடுதலாக வருகின்றபட்சத்திலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகிதம் மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கும், அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளிலே 15 சதவிகித மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கும், அதேநேரத்தில் சுய நிதிக் கல்லூரிகளிலே 10 சதவிகிதம் மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கின்ற வாய்ப்பையும் உருவாக்கித் தந்து, இன்றைக்கு மாணவர்கள் உயர் கல்வி படிப்பதற்குண்டான வழிவகைகள் அத்தனையும் செய்து கொடுத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் யாரும் உயர் கல்வி மேற்கொள்வதற்காக எங்கேயும் அலையவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

எந்தெந்த மாவட்டத்தில் கூடுதலாக கல்லூரிகள் தேவையோ, அந்தந்தப் பகுதியிலே புதியதாக கல்லூரிகளைத் தொடங்குகின்ற

பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மட்டுமே சாரும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2011-2016 ஐந்தாண்டுக் காலத்திலே பார்க்கின்றபொழுது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், ஓர் உறுப்புக் கல்லூரியும், ஆக இரண்டு கல்லூரிகளை அறிவிக்கப்பட்ட அந்த 67 கல்லூரிகளில் தொடங்கி வைத்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கல்லூரி அமையப்பெற்றுள்ளது என்று அமைச்சர் கூறுகிறார்கள். ஆனால் அப்படி அல்ல. அதை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், மாணவர்கள் இடத்திற்காக அலைமோதும் நிலைதான் இருக்கிறது. நாங்கள் தனியாரிடமும் கலைக் கல்லூரி தொடங்குங்கள் என்று இதே வேண்டுகோளை வைத்துள்ளோம். ஆனால், ஏழையெளிய மாணவர்களுக்காகத்தான் நாங்கள் அரசை வலியுறுத்த விரும்புகிறோம். B.Com., B.Sc. (Maths), B.Sc. (Chemistry), B.A. (English) போன்ற பிரிவுகளுக்கு மட்டும் கிட்டத்தட்ட 50 இடங்களுக்கு 10 மடங்குக்கு அதிகமாக மாணவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். அதேபோல ஏழையெளிய மாணவர்களின் உயர் கல்வியைக் கருத்தில் கொண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குக்கூட பயிற்சிக் கட்டணம், அதாவது tuition fees-ஐ அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற திட்டத்தை அறிவித்து, செயல்படுத்தினார்கள். ஆகவே, இந்தக் கல்லூரி தொடங்குவதற்கு அரசுக்கு ஒன்றும் அதிக நிதி தேவைப்படாது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஏழையெளிய மக்களின், குறிப்பாக பெண்களின் நலனுக்காக இந்தக் கல்லூரி அமைத்துத் தர பரிசீலிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக வலியுறுத்தி, அமர்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY

2016 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய தூத்துக்குடி மாவட்டத்திலே 2015-2016 ஆம் கல்வி ஆண்டிலே பார்க்கின்றபோது மாணவர்களுக்கு ஒட்டுமொத்தச் சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள இடம் 5,460. அதில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 5,167. பூர்த்தி செய்யப்படாத இடங்கள் 299. 2016-2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய தூத்துக்குடி மாவட்டத்தில் மாணவர் சேர்க்கைக்காக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்கள் 6,590. ஆனால், அங்கு மொத்த மாணவர் சேர்க்கை 5,615 மட்டுமே. 975 இடங்கள் பூர்த்தியாகவில்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் மாணவர்களுடைய எண்ணிக்கை கூடுதலாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.*

முற்பகல் 10-40

ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென்றால், அது மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தால் 2 ஏக்கர் நிலமும், நகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தால் 3 ஏக்கர் நிலமும், கிராமப் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலமும் தேவைப்படுகின்றன. 15 ஆசிரியர் பணியிடங்களும், 17 ஆசிரியரல்லா பணியிடங்களும் தேவைப்படும். தொடராச் செலவினமாக கட்டடம் கட்டுவதற்குத் தேவைப்படும் செலவுத் தொகை ரூ.7 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், தொடரும் செலவினமாக ரூ.93 இலட்சத்து 36 ஆயிரம் மற்றும் தேவைப்படும் தளவாட சாமான்கள் வாங்குவதற்காக ரூ.31 இலட்சத்து 13 ஆயிரமும், ஆக மொத்தம் ரூ.9 கோடியே 21 இலட்சத்து 99 ஆயிரம் தேவைப்படுகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தூத்துக்குடி தொகுதியில் ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கான தேவை குறித்து ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1323—திரு. என்.ஜி. பார்த்திபன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், காவேரிப்பாக்கம் பேரூராட்சியிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னாளாம், பொன்னாளாம், பொலிவு தரும் இந்நாள் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் புகழும் நாள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் 100-வது நாள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். 100 நாள் சாதனைகள்; அது 100 ஆண்டு சரித்திரங்கள். ஆம்; அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய வெற்றிச் சரித்திரங்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றிச் சரித்திரங்கள் இன்னும் பல நூறு நாட்கள், 100 ஆண்டுகள் தொடரும், நிலைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நன்னாளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், சமீபத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதிய தாலுகாவாக உருவாக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய கொள்கை முடிவுக்கேற்ப, நெமிலி வட்டத்திலுள்ள ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தாலுகா மருத்துவமனையாக

2016 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சார்பில் தரம் உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.*

திரு. என்.ஜி. பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையை இந்தியாவிற்கே வழிகாட்டும் துறையாக மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவருக்கெல்லாம் மருத்துவராக, அன்பின் இருப்பிடமாய், அறிவின் உறைவிடமாய், ஆற்றலின் அமைவிடமாய், அஞ்சாமையின் முகவரியாய், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய், மகத்தான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்த மகத்துவம், (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமைகள் நிறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது 4 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாகச் செயல்பட்டுவருகிறது. இந்தப் பேரூராட்சி சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. இந்தப் பகுதியில் பெருமளவில் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, இந்தப் பகுதியில் ஓர் அரசு மருத்துவமனையை ஏற்படுத்தினால், பொது மக்களும், அந்தப் பகுதியில் இருக்கின்ற பெரும்பான்மையான கிராமங்களைச் சேர்ந்த மக்களும் பயன்பெறுவார்கள் என்பதால், இந்தப் பகுதியில் ஓர் அரசு மருத்துவமனையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதிய தாலுகாக்கள்*

உருவாக்கப்படுகின்றபோது, அந்த தாலுகாவிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது வட்டம் சாரா மருத்துவமனையோ தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில், நெமிலி புதிய தாலுகாவாக மாண்புமிகு அம்மா அவர்களால் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பில் கடந்த 5 ஆண்டுகளில் 14 புதிய தாலுகா மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து இப்பொழுது 39 புதிய தாலுகா மருத்துவமனைகள் தொடங்க உரிய கருத்துருக்கள் பெறப்பட்டு, அரசின் நடவடிக்கையில் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கூடுதலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.

முற்பகல் 10-45

திரு. என்.ஜி. பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் நெமிலி தாலுகாவிற்குரிய தாலுகா மருத்துவமனையை அங்கே ஏற்படுத்தித் தருவேன் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி, காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அதை அந்தப் பேரூராட்சியின் சார்பில் வழங்குவதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்து, நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 31]

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மல்லிநாயனபள்ளி ஊராட்சி, மல்லிநாயனபள்ளியிலே ஒரு தாய், சேய் நல விடுதி 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை தாய், சேய் நல விடுதியாகவே இருக்கிறது. மல்லிநாயனபள்ளியைச் சுற்றி சுமார் 20 கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அங்கிருந்து ஏதாவது அவசர சிகிக்சைக்காக செல்ல வேண்டும் என்று சொன்னால், 20 கி.மீ. தொலைவிலுள்ள கிருஷ்ணகிரிக்குத்தான் வந்தாக வேண்டும். இல்லையென்று சொன்னால், 15 கி.மீ. தொலைவிலுள்ள மேச்சகாளாச்சின்னம்பள்ளிக்குப் போக வேண்டும். அது, கிருஷ்ணகிரி-குப்பம் மெயின் ரோடில் இருக்கிறது. ஆகவே, அந்த தாய் சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவாரா என தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாய், சேய் நல விடுதிகளை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துகின்ற கொள்கை இல்லை. உரிய விதிமுறைகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் செய்வதாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடங்களிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குவது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

சிற்றுந்து

3781—திரு. ப. சத்திய நாராயணன்:***

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2016 ஆகஸ்ட் 31

(அ) சென்னையிலுள்ள மேற்கு மாம்பலம் லேக் வியூ சாலையிலிருந்து கோயம்பேடு மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திற்கு சிற்றுந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு நேரம் இல்லை. இன்றைக்கு 3 மந்திரிகள் மானியக் கோரிக்கையில் பதில் சொல்ல வேண்டும். உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்வான இலட்சியம் கொண்டு, தெளிவான பார்வை கொண்டு, நேர்மையான வெற்றி கொண்டு ஆட்சி நடத்தும் அற்புதத் தலைவி, அதிசயத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அகிலமே நாளும் வியக்கும் தலைவி, அரசியல் அரங்கின் பாசத் தலைவி, நேசத் தலைவி, எங்கள் அம்மா, அம்மா, அம்மா. கட்சியையும், ஆட்சியையும் இரண்டு கண்ணாய் காணும் நேர்மை, தந்தை பெரியார், தன்மானம் காத்த அண்ணா, ஈகை நாயகன் எம்.ஜி.ஆர் அவர்கள் காட்டிய பாதையில் தடம் புரளாமல் நடத்தும் தர்மத் தாயின் வாக்கே மக்களுக்கு கீதை, அம்மாவின் 100 நாள் சாதனைகள் அகிலத்திற்கே சொல்லும் போதனை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம் அசோக் பில்லர் பகுதியிலிருந்து மாம்பலம் இரயில் நிலையம், லேக் வியூ சாலை, லிபர்ட்டி வழியாக மகாலிங்கபுரம் வரை இரண்டு சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, மேற்கு மாம்பலம் லேக் வியூ சாலை பகுதிவாழ் மக்கள் மேற்குறிப்பிட்ட வழித்தடத்தில் இயக்கப்படும் இரண்டு சிற்றுந்துகளைப் பயன்படுத்தி லிபர்ட்டி பேருந்து நிறுத்தம் வந்தடைந்தால், அந்நிறுத்தம் வழியாக இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்தி கோயம்பேடு மற்றும் எழும்பூர் இரயில் நிலையம் சென்றடையலாம் என்பதை தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 31]

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தனது அறிவாற்றலைப் பயன்படுத்தி அறிவுப் பேரொளியான எங்கள் அன்னையே, தங்களின் தியாகப் பயணத்தில் கல்லையும், முள்ளையும் கண்டு அஞ்சாமல். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு 3 மந்திரிகள் பதில் சொல்ல வேண்டும். உட்காருங்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: உங்களால் நான், உங்களுக்காகவே நான் என (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலனை தனது நலன் என கருதி, மக்களுக்காகவே பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வேண்டி வணங்குகிறேன்.

தி. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேற்கு மாம்பலத்திலுள்ள லேக் வியூ சந்திப்பிலிருந்து அயோத்தியா மண்டபம் வழியாக கோயம்பேடு செல்ல ஒரு தனி சிற்றுந்தும் மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திற்குச் செல்ல ஒரு சிற்றுந்து இயக்கவும், தமிழ்நாட்டிலே மாண்புமிகு அம்மாவின்மீது அதிக பற்றும், பாசமும் நிறைந்த மேற்கு மாம்பலம் பகுதி பொது மக்களின் வேண்டுதலுக்கு இணங்க, இந்த இரு வழித்தடங்களில் சிற்றுந்து இயக்கவும் மேற்கு மாம்பலம் பொது மக்களின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வேண்டி வணங்குகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மாம்பலம், லேக் வியூ சாலை பகுதிவாழ் பயணிகள் தடம் எண் S30 என்ற சிற்றுந்தின்மூலம் லிபர்ட்டி பேருந்து நிலையம் வந்தடைந்தால், பயணிகள் அந்நிறுத்தம் வழியாக மாநகரப் போக்குவரத்துக் கழக தடம் எண் 27C, அதாவது தியாகராய நகர் முதல் திருவேற்காடு வரை இயக்கப்படும் 29 பேருந்துகள், தடம் எண் M27 தியாகராய

நகரிலிருந்து சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரை இயக்கப்படும் 6 பேருந்துகள் மற்றும் தடம் எண் 12B சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து பட்டினப்பாக்கம் வரை இயக்கப்படும் 11 பேருந்துகள் என மொத்தம் 46 பேருந்துகளைப் பயன்படுத்தி கோயம்பேடு சென்றடையலாம்.

அதேபோல, மேற்கு மாம்பலம், லேக் வியூ சாலை பகுதிவாழ் பயணிகள் தடம் எண் S30 என்ற சிற்றுந்தின்மூலம் லிபர்ட்டி பேருந்து நிறுத்தம் வந்தடைந்தால், பயணிகள் அப்பேருந்து நிறுத்தம் வழியாகச் செல்லும் தடம் எண் 17D, கே.கே. நகரிலிருந்து பிராட்வே வரை 27 பேருந்துகள், தடம் எண் 17E சாலிகிராமத்திலிருந்து பிராட்வே வரை 14 பேருந்துகள், தடம் எண் 17K தசரதபுரத்திலிருந்து பிராட்வே வரை 2 பேருந்துகள், தடம் எண் 17C ஐயப்பன்தாங்கல் முதல் பிராட்வே வரை ஒரு பேருந்து என ஆக மொத்தம் 44 பேருந்துகளைப் பயன்படுத்தி எழும்பூர் இரயில் நிலையம் சென்றடையலாம். எனவே, மேற்கு மாம்பலம், லேக் வியூ சாலைப் பகுதியிலிருந்து கோயம்பேடு மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திற்கு பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதிகள் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி. தியாகராய நகர் பொது மக்கள் பயன்பெறும்வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 100 ஆம் நாள் பரிசாக தியாகராய நகர் பகுதி மக்களுக்கு மினி பஸ் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

திருவள்ளூர் மாவட்டம், டெங்கு காய்ச்சல் வராமல் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜி. ராஜேந்திரன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. விஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் அறிகுறியால் கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட நோயாளிகள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 7 பேர் உயிரிழப்பு ஏற்பட்டு, இன்றைக்கு டெங்கு காய்ச்சலால் மிகப் பெரிய பீதி ஏற்பட்டு, குறிப்பாக திருவள்ளூர் தொகுதியிலே உள்ள திருவாலங்காட்டில் மட்டும் காவேரிராஜபுரத்தில் 4 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஆகவே, இது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அம்மா அவர்களுடைய அரசு டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்களை முற்றிலுமாகத் தடுப்பதற்கு, நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கைகளை, தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை, நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மிகச் சிறப்பாக எடுத்து வருகின்ற காரணத்தினால், தாங்கள் குறிப்பிடுகின்ற திருவள்ளூர் மாவட்டத்திலே டெங்கு காய்ச்சல் போன்ற அனைத்து காய்ச்சல்களும் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காவேரிராஜபுரம் பகுதியிலே மொத்தம் 58 பேர் காய்ச்சல் காரணமாக அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, அதிலே 8 பேர் மட்டும்தான் அரசு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். அவர்களும் நல்ல முறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். மீதி அத்தனை பேரும் குணமடைந்து நல்லபடியாக திரும்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா

அவர்களுடைய அரசு தொடர் நடவடிக்கைகளை, கண்காணிப்பு நடவடிக்கைகளை உள்ளாட்சித் துறை, மாவட்ட நிருவாகத்தோடு இணைந்து மிக வேகமாக, துரிதமாக, சிறப்பாக எடுத்து வருகிறது. நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாவட்ட அமைச்சர் அவர்களும் அனைவருமே திருவள்ளூர் மாவட்டத்திற்கு தொடர்ந்து ஆய்வுக்குச் சென்று, ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, மாவட்ட ஆட்சியரோடு கலந்து, பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர், எங்களுடைய அரசு செயலாளர் உள்ளிட்ட அத்தனை பேருமே அங்கேயே முழுமையாகத் தங்கி, முழு வீச்சிலே, போர்க்கால அடிப்படையிலே அங்கே பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே தற்போது காய்ச்சல் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், அனைத்து காய்ச்சல்களும் டெங்கு காய்ச்சல் அல்ல. மர்மக் காய்ச்சல் என்ற வார்த்தைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலே இடம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 23 வகையான வைரஸ் காய்ச்சல்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன். 23 வகையான வைரஸ் காய்ச்சலில், அது என்ன காய்ச்சல் என்பதைக் கண்டறிந்து, குணப்படுத்தக்கூடிய அத்தனை வசதிகளும், மருந்து, மாத்திரைகள், இரத்தக்கூறுகள், இரத்தம் போன்ற தேவையான அத்தனை வசதிகளும் அரசு மருத்துவமனைகளிலே தயாராக இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-55

தாங்கள் குறிப்பிட்ட பகுதியிலே 4 பேருக்கு மட்டும்தான் பரிசோதனையிலே டெங்கு காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 58 பேருக்கு காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் உள்ளது. அந்த 58 பேரிலே டெங்கு காய்ச்சல் 4 பேருக்கு மட்டும்தான் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. உள்ளாட்சித் துறை மூலமாக 526 கிராம ஊராட்சிகளிலே, 10 பேரூராட்சிகளிலே,

2016 ஆகஸ்ட் 31] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

5 நகராட்சிகளிலே நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் Mass Screening Programme *போன்ற அனைத்துப் பணிகளும் வேகமாக, துரிதமாக நடைபெற்று வருகின்றன. தற்பொழுது களத்திலே, நேற்றைக்குக்கூட நானும் திருவள்ளூரிலே இருந்தேன். அதற்கு முன்தினம் இருந்தேன். வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை உள்ளிட்ட அனைத்து தினங்களிலும் நேரடியாக தொடர்ந்து ஆய்வுக்குச் சென்று கொண்டிருக்கின்றோம். இப்பொழுது அங்கு பதட்டம் இல்லை; பீதி இல்லை. உறுப்பினர் அவர்களும் பதட்டத்தையும், பீதியையும் கிளப்ப வேண்டியதில்லை. பொது மக்களுடைய நலன் காக்கக்கூடிய அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேந்திரன், உட்காருங்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *திருவள்ளூர் மாவட்டத்திலே கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முழுவீச்சிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சிறப்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட அனைத்து தொற்று நோய்களும் கட்டுக்குள்ளே இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதைக் கேளுங்கள். தகவல் கோரல் என்ற முறையில் கேட்கிறேன் என்று சொன்னீர்கள். அதனால் நான் அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடுகள்) சரி, பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-8-2016 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித்*

[திரு. வி.ஜி. ராஜேந்திரன்] [2016 ஆகஸ்ட் 31

தலைவர் தளபதி அவர்கள் நேரடியாக திருவள்ளூர் தொகுதிக்கு வந்து, மாவட்ட மருத்துவமனை மற்றும் திருவாலங்காடு பகுதியிலே ஆய்வு செய்து, இறந்துபோன அந்தக் குழந்தைகள் குடும்பத்திற்கு நிதியுதவி அளித்து, அன்றைக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்தார். பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர் குடும்பத்திற்கு அரசின் வாயிலாக அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படுமா? இன்றுவரை 7 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்ற ஆதாரம் என்னிடம் இருக்கிறது. யுவராஜ், மோகன், மோகன்குமார் உள்ளிட்ட அனைத்து குழந்தைகளும் உயிரிழந்திருக்கிறார்கள். அங்கு டெங்கு உள்ளது என்று அமைச்சரே ஒத்துக்கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இங்கே பாருங்கள். இதெல்லாம் தேவையில்லாதது. ஆதாரம் இல்லாமல் நீங்கள் இதுமாதிரியெல்லாம் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, அப்படியெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) முழு விவரத்தோடு சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் நிதி கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிராஜபுரம் பகுதியிலே, திருவாலங்காடு ஒன்றியத்திலே நானே நேரடியாகச் சென்றேன். சுகாதாரத் துறை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அத்தனைபேர்களும் அங்கே சென்றோம். அதிலே, இறந்தவர்களிலே மோகன் என்பவருக்கு மட்டும் டெங்கு காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் சொல்லுகின்ற அந்தப் பட்டியல் என்னிடத்திலும் இருக்கின்றது. ஒருவர் மஞ்சள்காமாலையிலே இறந்திருக்கிறார். இன்னொருவர் lepto virus என்ற அந்தத் தொற்று நோயினால் இறந்திருக்கிறார். என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையிலே எந்தத் தொற்று நோயாக இருந்தாலும், அதைக் கட்டுப்படுத்தக்கூடிய ஸ்திரத் தன்மையோடு மக்கள் நல்வாழ்வுத் துறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இருந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) டெங்கு காய்ச்சல் கட்டுக்குள்ளே இருக்கிறது. அரசும் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதனை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

2016 ஆகஸ்ட் 31]

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 30-8-2016 ஆம் நாளன்று மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் ஆகியோரால் முன்மொழியப்பெற்ற, 2016-2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதுவும் பேசுவதற்கு அனுமதியில்லை, நேரமில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்கு பார்க்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்குப் பார்க்கலாம். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *அகிலமெல்லாம் போற்றும் மாண்புமிகு அம்மா அவர்களே! அகிலாண்ட நாயகியே! அன்பு வடிவான உமையே! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

சிவகாமி அம்மையே! கண்ணுக்குள் ஒளியாக, நெஞ்சுக்குள் சுடராக, மண்ணுக்குள் மழையாக, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை தொடங்கிவிட்டது, உட்காருங்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *விண்ணுக்குள் நிலவாக விளங்கும் எங்கள் அன்னையே! 100 ஆவது நாள் வாழ்த்துக்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களில் சமர்ப்பித்து... (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சர் பதிலுரை சொல்கிறார். அவர் பதிலுரை முடிந்த பிறகு நான் அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பின்னர் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உட்காருங்கள். அமைச்சர் பதிலுரை முடியட்டும், வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *அன்னைத் தமிழகத்தின் ஆற்றல்மிகு ஆளுமையே! கொடுவேல் முனைகளில் வெற்றிகளைப் பெருக்கும் கொற்றவைத் தாயே! சிந்தித்துச் சிந்தித்து கூரிய அறிவில் குறிக்கோள் முடிக்கும் கொடுந்தவப் பொறுப்பே! பெரும்பகை மிரட்டலை துரும்பென உதறி, குறுநகை புரியும் எங்கள் அம்மாவே! தொட்ட துறைகளில் துல்லிய முடிவெடுத்து சிரிக்கும் தூய்மையே, அளவிலா சாதனைகளின் அற்புத சிகரமே, அன்புத் திருமேனியே, அகமலரே, (மேசையைத் தட்டும் ஒலி) அருள் மனமே, புண்பட்டு உழலுகின்ற புவியைத் திருத்த அவதரித்த அரும்பொருளே, மாந்தர் தம் இதய ஒலியாக எழுந்த புத்தமுதே, புவியிலே சொர்க்கத்தைச் சமைக்கப் போராடும் புரட்சித் தலைவியே, தன்னலமில்லா தவமே, தமிழ் கலையின் முழு வடிவே, எண்திசைக்கும் தாயான ஈஸ்வரியே, பண்ணுமுறை வேத பரம்பொருளே, பேதங்களைத் தீர்த்து பெருமையை உயர்த்தி, நீதியைக் காத்து நேர்மையைக் கூட்டி, பொய்மையை மாற்றி, பொறுப்புகள் ஏற்று, மக்கள் பணியாற்றும் எங்கள் மாண்புமிகு அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி)*

'தாயினும் சிறந்த தமரில்லை' எனும் நான்மணிக்கடிகையின் நயன்மிகு உரையாய் விளங்கும் நற்றமிழ் அன்னையே, 'கோடி நாள் வாழ்வதல்ல வாழ்க்கை, கோடி உள்ளங்களில் வாழ்வதே வாழ்க்கை' (மேசையைத் தட்டும் ஒலி) என வாழும் எங்கள் மாண்புமிகு அம்மாவே!

மேகத்தைக் கிழித்து மின்னல்கொண்டு தைக்கும் ஆற்றல்கொண்ட எங்கள் அன்னையே, முடங்கிக் கிடந்தால் சிலந்தியும் சிறைபிடிக்கும் என்று, எழுந்து நடந்தால் எரிமலையும் வழிகொடுக்கும் என்பதையறிந்த எங்கள் மாண்புமிகு அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி)

பார் முழுவதும் மனிதர்குல பண்புதனை விதைத்து, பாமரர்கள் நெஞ்சத்திலே பகுத்தறிவினை வளர்த்து, போர்முறையைக் கொண்டவர்க்கு நேர்முறையை விதைத்துவரும் எங்கள் மாண்புமிகு அம்மாவே! நெஞ்சுநிறை மகிழ்வோடு பணிவு மனம்கொண்டு, வளமான தமிழ் மொழியால் உளமாற வணங்கிப் போற்றி, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைமீதான பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை 1994 ஆம் ஆண்டு திருச்சி சட்டக் கல்லூரியின் மாணவர் அணிச் செயலாளராக நியமித்தும், தொடர்ந்து 58-வது வட்ட இணைச் செயலாளராகவும், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளராகவும், மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளராகவும், பொதுக் குழு உறுப்பினராகவும், மாவட்டக் கழக இணைச் செயலாளராகவும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் 58-வது வார்டு மாமன்ற உறுப்பினராகவும், நகரமைப்புக் குழுத் தலைவராகவும், பொறுப்புகள் பல வழங்கி கழகப் பணியாற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். கழகப் பணி ஆற்றிக்கொண்டிருந்த எளியவளான என்னை நடந்து முடிந்த ஸ்ரீரங்கம் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக்கியும், கழக அமைப்புச் செயலாளர் என்ற உயரிய பொறுப்பினை வழங்கியும் அரவணைத்தார்கள். மீண்டும் 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினராக்கியும், நான் எண்ணிப்பார்க்காத நிலையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சராக்கி இம்மாமன்றத்திலே மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்து, பதிலுரை நிகழ்த்துகின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

எனது வெற்றிக்குப் பாடுபட்ட கழக நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும்,

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே"

என்று தொண்டரடிப் பொடியாழ்வார் போற்றிப் பாடிய ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமை என்பது ஒரு தகுதியல்ல, அது ஒரு தன்மை. It is not a qualification, but a quality. 'One good leader is worth a thousand priests' என்றார் Ingersoll. அதாவது, ஒரு தலைவர் ஆயிரம் குருமார்களுக்குச் சமம். எங்கள் அம்மா அவர்கள், ஆயிரம், ஆயிரம் குருமார்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சோப இலட்ச அறிவுசால் நூல்களுக்கும் இணையானவர். 'வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்' என்றார் அப்பர். அப்பர் சொன்ன அப்பிறவியை எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று மதிக்கிறார். அதனால்தான் அவரை இந்த உலகம் போற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

'உச்சி மலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியில் கலக்குது;
ஒற்றுமையில்லா மனிதகுலம் உயர்வும் தாழ்வும் வளர்க்குது;
உடைஞ்சுபோன நமது இனம் ஒண்ணா வந்து பொருந்தணும்.'

என்றார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள். மனிதனின் உடைந்துபோன சமுதாயத்தைப்பற்றி மனம் உடைந்து பாடுகிறார்.

நமது சமுதாயம் உடையக் காரணம், நமது சாதிப் பாகுபாடுகளும், நமது பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுமே என்பதை அறிந்த நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், 69 சதவிகித இட ஒதுக்கீடு சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதலில் நிறைவேற்றச் செய்து, இட ஒதுக்கீட்டினைச் சட்டவடிவமாக்கி, அதை உறுதி செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'சாதிகள் இல்லையடி பாப்பா!-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி உயர்ந்த மதி, கல்வி-அன்பு
நிறைய உடையோர் மேலோர்'

என்றார் பாரதி. சாதி, மத, பேதமின்றி தமிழக மக்கள் அனைவரையும் சமமாக நடத்தும் மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்ந்த மதியோடு இட ஒதுக்கீட்டில் உள்ள எந்த ஒரு பிரிவினரையும் நீக்கம் செய்யத் தேவையில்லையென மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2011 இல் ஆணை பிறப்பித்து, சாதனை சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றார் எங்கள் தங்கத்தாரகை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை வகுப்பில் பயிலும் ஆதி திராவிட மாணவிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள், விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தை முதன்முதலில் 2001 இல் துவக்கி வைத்தார்கள். 2004 ஆம் ஆண்டு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மிதிவண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக, கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.1,057.08 கோடி செலவு செய்து, 31 இலட்சத்து 71 ஆயிரத்து 164 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. 2016-2017 ஆம் ஆண்டு, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், விலையில்லா மிதிவண்டி வழங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், ஏழைகளின் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.168.04 கோடி ஒதுக்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்காக, 1,338 தங்கும் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 1,195 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 82 விடுதிக் கட்டடங்களின் பணிகள் நிறைவுபெறும் நிலையிலும், 25 விடுதிக் கட்டடங்களின் பணிகள் நிறைவுபெற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் விரைவில் திறக்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டில், ரூ.76.96 கோடி மதிப்பீட்டில் அனைத்து விடுதிகளும் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்குவது உறுதி செய்யப்படும்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20-9-2011 அன்று விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக அரசால் வழங்கப்படும் உணவுக் கட்டணம் ரூ.450/--லிருந்து ரூ.650/- ஆக உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.550/-லிருந்து ரூ.750/- ஆக உயர்த்தப்பட்டது. தொடர்ந்து இத்தொகை உயர்த்தப்பட்டு, தற்போது பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.755/- ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.875/- ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஐந்து ஆண்டு பொற்கால ஆட்சியில்தான் இந்த உணவுத் தொகை இரண்டுமுறை உயர்த்தப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் இந்த அவையில் பதியவைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விடுதிகளில் மாணவ, மாணவிகளுக்கு அனுமதிக்கப்பட்டதைவிட 10 சதவிகிதம்வரை கூடுதலாகச் சேர்த்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இதனால் 8,400 மாணவ, மாணவிகள் கூடுதலாகப் பயன்பெறுகின்றனர். விடுதி மாணவர்களின் ஆங்கிலப் பேச்சாற்றலை வளர்ப்பதற்காக 1 கோடியே 83 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், 1 கோடியே 2 இலட்சம் ரூபாய்க்கு பொது அறிவுத்திறன் புத்தகங்கள் வழங்கப்பட்டன. மேலும், கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.3 கோடியே 7 இலட்சம் செலவில் இரண்டடுக்குக் கட்டில்கள் வழங்கப்பட்டன. அனைத்து விடுதிகளிலும் விளையாட்டுப் பொருட்கள், மாவரைக்கும் இயந்திரங்கள், குடிநீர் சுத்திகரிக்கும்

இயந்திரங்கள், இட்லி வேகவைப்பான்கள், தடையின்றி கல்வி பயில Inverter-கள், சூரிய ஒளிமூலம் நீரைச் சூடுபடுத்தும் கருவிகள் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகின்றன. 2013 ஆம் ஆண்டு முதல் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இரண்டு இணை சீருடைகள் கொடுக்கப்பட்டு வந்தன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பாரதி சொன்னதைப்போல, 'கல்வி வளரும்; பல காரியம் கையுறும்; வீரியம் ஓங்கிடும்; அல்லல் ஒழியும்; வல்லமை தோன்றும்'. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் விடுதிகளில் 1,009 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 51 தமிழாசிரியர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர். பண்டிகை நாட்களில் பள்ளி விடுதிக்கு ரூ.2/-, கல்லூரி விடுதிக்கு ரூ.3/- என்று இருந்த சிறப்பு உணவுக்கான தொகைகள் முறையே ரூ.20/- மற்றும் ரூ.40/- என உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.3,000/-, ரூ.2,000/-, ரூ.1,000/- என்று இருந்ததை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உயர்த்தி முறையே ரூ.10,000/-, ரூ.7,000/-, ரூ.5,000/- என பரிசுகள் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ரூ.500/- முதல் ரூ.1,500/- வரையிலும், 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ரூ.1,000/- முதல் ரூ.3,000/- வரை பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் 3,250 மாணவ, மாணவிகளுக்கு ரூ.58.02 இலட்சம் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தொகை தற்போது 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ரூ.1,000/- முதல் ரூ.3,000/- வரையிலும், 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ரூ.2,000/- முதல் ரூ.3,000/- வரையிலும் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 5,687 மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகையாக 192.45 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளன. கள்ளர்

சீரமைப்புத் துறை கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக வழங்கப்பட்ட 4 இலட்சம் ரூபாயானது மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில் ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு, ஐந்து ஆண்டுகளில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இப்பேரவையில் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் புதியதாக 15 ஆங்கில வழி மழலையர் பள்ளிகள்-L.K.G. தொடங்கப்பட்டு, 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் நடைபெற்று வருகின்றன.

தியாகத்தின் திருவுருவம், அறிவின் சிகரம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், நான்கு அரசு கள்ளர் சீரமைப்புத் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 9 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 8 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் மொத்தம் 21 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

6 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.161.30 இலட்சம் செலவில் ஆய்வக உபகரணங்களுடன் ஆய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது. 15 மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.75.75 இலட்சம் செலவில் Smart Class Room என்ற புதிய கல்வி முறையில் கல்வி கற்க அறிவுத் திருவுளம் அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

“நல்லதோர் வீணை செய்தே
அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி, சிவசக்தி
எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ
இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே”

என்று சொன்னான் பாரதி. அறிவுடைய குழந்தைகள் படிப்பதற்கு வசதியில்லாமல், கல்வி கற்க முடியாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு, கருணைத்தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் உதவித் தொகை வழங்கி வந்தார்கள். இந்த உதவித் தொகை பெறுவதற்கான

வருமான வரம்பு ஒரு இலட்சம் ரூபாயாக இருந்ததை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், ஆண்டுக்குக் கூடுதலாக ஒரு இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுகிறார்கள். கல்விக்கு முதலிடம் கொடுக்கும் வாழும் கலைமகள் மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த பொற்கால ஆட்சியில் ரூ.863.92 கோடி உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தடம் பார்த்து நடப்பவன் மனிதன், தடம் பதித்து நடப்பவரோ மாமனிதர்" என்பதற்கேற்ப ஒவ்வொரு சாதனையிலும் தனது தடத்தைப் பதித்து வருபவர்தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!
தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை, தன்னலந்தான் தீர்ந்த தாலே"

என்றார் பாரதிதாசனார். இக்கவிதைக்கேற்ப தன்னலம் கருதாது வாழ்கின்ற தாயான மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில அளவில் 12 ஆம் வகுப்புத் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெறும் 500 மாணவர் மற்றும் 500 மாணவியருக்கு, அவர்கள் பட்டப் படிப்பு படித்து முடிக்கும் வரை ஆண்டொன்றுக்கு ரூ.3,000 பரிசுத் தொகை வழங்கும் திட்டத்தை 2013 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டம், முதலமைச்சர் தகுதிப் பரிசுத் திட்டம் என்ற பெயரில் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும், 10 ஆம் வகுப்பில் உயர் மதிப்பெண் பெற்று, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு

தந்தை பெரியார் பெயரில் வழங்கப்பட்ட விருதின் தொகை ரூ.5,000-லிருந்து 2013 ஆம் ஆண்டு ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 3,911 மாணவர்களுக்கு கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.352.75 இலட்சம் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

12 ஆம் வகுப்பில் உயர் மதிப்பெண் பெற்று, தொழில் பட்டயப் படிப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.5,000-லிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் ரூ.10,000 ஆக இரு மடங்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதுவரை 5,864 மாணவ, மாணவியர்களுக்கு மொத்தம் ரூபாய் 532.50 இலட்சம் பரிசாக வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ, மாணவியர்கள் கல்வி உதவித் தொகையை உடனடியாகப் பெற மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக மின்னணு பரிமாற்றம்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பு பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும்வகையிலே, விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 13,440 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த ஆட்சியில் செலவிட்ட தொகை ரூபாய் 479.40 இலட்சமாகும். கடந்த ஐந்து ஆண்டுக்கால மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் ரூபாய் 424.94 இலட்சம் செலவில் 10,034 பயனாளிகளுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மலைமகளாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் 2,889

பிற்படுத்தப்பட்டோருக்கும், 2,401 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் ரூபாய் 1,007.97 இலட்சத்தில் 5,290 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த ஐந்து ஆண்டுக்கால பொற்கால ஆட்சியில் 6,308 உறுப்பினர்களுக்கு ரூபாய் 427.24 இலட்சம் மானியமாகவும், நலத் திட்ட உதவிகளாகவும் வழங்கப்பட்டுள்ளன.

சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கு ஆண்டுதோறும் 1994 ஆம் ஆண்டு முதல் தந்தை பெரியார் விருதும், விருதுடன் 1 சவரன் தங்கப் பதக்கமும், 1 இலட்சம் பொற்கிழியும் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மாணவ, மாணவியர்களின் சமூக கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கல்வித் தொகையாக கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் ரூபாய் 471.33 கோடி வழங்கியுள்ளது. இதனால் 21 இலட்சத்து 84 ஆயிரத்து 16 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் உருது மொழியினை முதல் அல்லது இரண்டாவது மொழிப் பாடமாகப் பயின்று, மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவ, மாணவியருக்கு ரூபாய் 3,000, ரூபாய் 2,000, ரூபாய் 1,000 என வழங்கப்பட்ட பரிசுத் தொகைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உயர்த்தப்பட்டு, முறையே ரூபாய் 15,000, ரூபாய் 10,000, ரூபாய் 5,000 என வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

10 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 2,000, ரூபாய் 1,500, ரூபாய் 1,000 என்று இருந்தது ரூபாய் 10,000, ரூபாய் 5,000, ரூபாய் 3,000 என மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

10 மற்றும் 12 ஆம் வகுப்பில் தமிழை முதல் பாடமாகப் பயின்று முதல் மூன்று நிலையில் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான பரிசுத் தொகைகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 79.42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன. இதில், 2,427 சிறுபான்மையின மாணவ, மாணவிகள்

பயன்பெற்றனர் என்பதை இப்பேரவையிலே பதிய வைக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாவின் திருவருளால் உலகம் அமைதியாய் இருக்கட்டும் என்று பள்ளிவாசல்களில் தொழுகை நடத்துகின்ற இஸ்லாமியப் பெருமக்கள் உள்ளம் குளிரும்வகையிலே, ரமலான் மாதத்தில் பள்ளிவாசல்களில் நோன்பு கஞ்சி தயாரிக்க 3,000-க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களுக்கு 4,600 மெட்ரிக் டன் அரிசியை நோன்பு காலம் துவங்கும் முன்பாகவே வழங்கி, *(மேசையைத் தட்டும் ஒலி)* சிறுபான்மையின மக்களின் பாதுகாவலராக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். இச்செய்தி உலகம் முழுமையும் உள்ள இஸ்லாமிய மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும், இத்திட்டத்தினை இஸ்லாமிய நாடுகளில் வாழும் மக்கள் தங்கள் அரசுகளிடமும் செயல்படுத்த வலியுறுத்தி வருகிறார்கள். இந்தக் கோரிக்கையானது, மாண்புமிகு அம்மா அவர்களின் உயர் சாதனைக்குக் கிடைத்த உயரிய பரிசாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-25

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 20 ஆண்டுகளாக நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, சிறுபான்மையின மக்களின் பாதுகாவலராக உள்ளார்கள். உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின்மூலம் ரூ.750 ஆக இருந்த ஓய்வூதியத்தை, ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தவாறு, உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1,000-லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்கப்படும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்னும் மகிழ்ச்சியான செய்தியை 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் தெரிவித்துள்ளார்கள். இது அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

வக்ஃபு வாரியத்திற்கு கீழ்நிலை பணியாளர்களான, இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர், ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் 47 பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். விவாகரத்து பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு, வாழ்க்கை பொருளுதவி மானியத் தொகையாக

2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.93,277 வழங்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல், தர்கா மற்றும் மதரஸா ஆகியவற்றின் பழுது பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நிதி மானியமாக ரூ.60 இலட்சம், மத பேதம் காட்டாத மாணிக்கத் தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்கு அனைத்து வசதிகளையும் சிறப்பாக செய்து கொடுத்து, ஹஜ் நிருவாக மானியத்தை ரூ.10 இலட்சம் என்று இருந்ததை, 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து ரூ.20 இலட்சமாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து ரூ.30 இலட்சமாகவும் உயர்த்தி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கி வருகிறது.

பரலோகத்தில் இருக்கும் எங்கள் பரம பிதாவே, எங்களை காத்து இரட்சிப்பாயாக என்று தேவாலயத்தில் மண்டியிட்டு பிரார்த்தனை செய்கின்ற கிறிஸ்தவ பெருமக்கள் நற்பலன் பெறுவதற்காக ஜெருசலேம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம், 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கப்பட்டு, ஆண்டிற்கு 500 பயனாளிகளுக்கு தலா இருபதாயிரம் ரூபாய் வீதம், (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், மாண்புமிகு அம்மா அவர்களின் 5 ஆண்டுக்கால பொற்கால ஆட்சியில், 2,340 கிறிஸ்துவர்கள் ரூ.4.68 கோடி செலவில் புனித பயணம் மேற்கொண்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சிறுபான்மையின பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் கறவை மாடுகள், ஆட்டோக்கள் வாங்குதல் போன்ற தனி நபர் கடன்கள், மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கல்விக் கடன்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் சிறுபான்மையினர் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டு வருகின்றன.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

எண்ணியவர் உறுதி உடையவராக இருக்கப்பெற்றால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர் என்கிறார் வள்ளுவப்

பெருந்தகை. எண்ணியதை எண்ணியவாறு செய்து, வெற்றி பெறுபவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கெல்லாம் இப்போதுள்ள ஒரே ஆசை, டார்வின், நியூட்டன், எடிசன், சர்.சி.வி. ராமன் போன்ற அறிவியல் மேதைகளாகவோ, ரூஸோ, வால்டேர், கார்ல் மார்க்ஸ், எங்கல்ஸ் போன்ற பேரறிஞர்களாகவோ, பிஸ்மார்க், மாஜினி, சர்ச்சில், கோகலே போன்ற அரசியல் மேதைகளாகவோ, ஹென்றி போர்ட், டாட்டா, கார்னஜி, ராக்பெல்லர், லிப்டன் போன்ற வணிகப் பேரரசர்களாகவோ, ஹெச்.ஜி. வெல்ஸ், டால்ஸ்டாய், பேர்ல் பெக், பெர்னாட்ஷா போன்ற எழுத்தாளர்களாகவோ, சாக்ரடீஸ், கன்பூசியஸ், புத்தர் போன்ற அரும்பெரும் மகான்களாகவோ ஆக வேண்டும் என அவர்கள் ஆசைப்படவில்லை. அவர்களின் ஆசையெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தங்கள் தலைமையில் இயங்கும் கழகத்தில் ஒரு தொண்டனாய் இருக்க வேண்டும் என்பதே. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

ஏழைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவதே மாண்புமிகு அம்மா அவர்களின் நோக்கம் என்பதை விடுதலை திருநாளில் அறிவித்தார்கள். மக்கள் மகிழ்ந்தார்கள். தமிழகம் மகிழ்ந்தது. தங்களது ஆட்சிக் காலத்தில் அந்த இலக்கை தமிழகம் அடையும். காரணம், மக்கள் என்றும் அவர்கள் பக்கமே, அவர்கள் என்றும் மக்கள் பக்கமே. (மேசையைத் தட்டும் ஒலி) மனிதன் உணவின்றி 40 நாட்களும், நீரின்றி 3 நாட்களும், காற்று இன்றி 3 நிமிடங்களும் உயிர் வாழலாம், ஆனால், நம்பிக்கையின்றி ஒரு நொடிகூட வாழ முடியாது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனைத்து வசதிகளோடும் மக்கள் அமைதியாக, நம்பிக்கையோடு வாழ்கிறார்கள். அந்த நம்பிக்கைதான் உள்ளாட்சியிலும் தங்களின் நல்லாட்சி அமையத் தூண்டுகோலாக இருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியைக் கொடுக்கும். அந்த வெற்றியை வரலாறு சொல்லிக்கொண்டே இருக்கும். வாழும் வரலாறே! பேரவையில் தாங்கள் இருந்தால், இங்கே இருள் வர அஞ்சுகிறது. தீமைகள் வெளியே செல்கின்றன. நன்மையும், நம்பிக்கையும் மட்டுமே அவைக்குள் இருக்கின்றன. எப்போதும் அருவிகளை வரவேற்று, நதிகள் ஏற்கும்; சிந்திவிழும் மழைத் துளியை பூமி ஏற்கும்; சிந்திக்கத் தெரிந்தவரை வெற்றி ஏற்கும்; செந்தமிழை வரவேற்று, செஞ்சொல்

ஏற்கும்; செழித்து நிற்கும் தமிழ்நாடோ, எம் தாயை எப்போதும் ஏற்கும் என்று சொல்லி, எனது பதிலை நிறைவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி வேதம் போல அகிலம் போற்றும் ஞானமே! நீதியை மண்ணிலே நிலைக்கச் செய்த தெய்வமே! இரக்கத்தை மண்ணிலே தவழவிட்ட ஈகையே! நூறை நூறால் பெருக்கி, அதனினும் நீர் வாழ வேண்டும் என ஆண்டவனை வேண்டி, இந்தியத் தலைவியின் இணையில்லா ஆட்சியில் விந்தியச் சாதனை விரித்திடும் வேளையில் அருமைத் தலைவியின் அருள்மிகு ஆட்சியில் நெஞ்சோடு, நெகிழ்வோடு, நிறைமதியின் இனிமையோடு, மானியக் கோரிக்கையின்மீதான எனது பதிலுரையை நிறைவு செய்யும் முன்னர் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்துதல்

பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்த மக்களின் நலனுக்காக மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர், அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே தங்களின் உயர் வகுப்புகளைத் தொடரும்பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக மொத்தம் 4 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. விடுதி மாணவ, மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி நடத்துதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக 1,338 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 1,112, பள்ளி விடுதிகளாகும். 226, கல்லூரி விடுதிகளாகும். இவ்விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளிலும் மற்றும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) *8 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

3. கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி அளித்தல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக 226 கல்லூரி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இக்கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் அவர்களது தனித்திறனை வளர்க்கும்பொருட்டு 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

4. கல்லூரி விடுதிகளில் புதிதாக சேர்க்கப்படும் மாணவ, மாணவியருக்குப் பாய்களுக்குப் பதிலாக ஜமுக்காளம் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் பாய்களுக்குப் பதிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 25 இலட்சம் ரூபாய் செலவில் ஜமுக்காளம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விடுதி மாணவ, மாணவியருக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியரின் நலனுக்காக 1,112 பள்ளி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில்

பாடப் பிரிவில் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் தலா 1,000 ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

முற்பகல் 11-35

6. கல்லூரி விடுதிகளுக்கு நவீன மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்குதல்

226 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 66 இலட்சம் ரூபாய் செலவில் நவீன மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளை அவைமுன் எடுத்து வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் வேண்டிய விளக்கங்களை நான் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் நான் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அம்மா அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்று, அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலனியில் பிறந்த என்னை, காலணி இல்லாமல் வாழ்ந்த என்னை, காலனியில் பிறந்த என்னை, காலணி இல்லாமல் வாழ்ந்த என்னை இன்று எங்கள் இல்லத்திற்கு இரண்டு காவலர்களை நியமித்த காவல் தெய்வம், என் அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களை, சிறியவளான நான் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களை வளங்குடி மக்களாக மாற்றியவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்களை, ஜோதி திராவிட மக்களாக மாற்றியவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட மக்களை, உயர்த்தப்பட்ட மக்களாக மாற்றியவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மலைவாழ் மக்களை, நிலைவாழ் மக்களாக மாற்றியவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சியை நோக்கி மக்களையும், மக்களை நோக்கி வளர்ச்சியையும் இட்டுச் செல்லும் மகத்தான முதலமைச்சர், மாண்புமிகு அம்மா, அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கடவுளுக்கு பன்னீரால் அபிஷேகம் செய்ய பலர் உண்டு. ஆனால், நானும், என் குடும்பமும் நாளும் ஆனந்த கண்ணீரால் அபிஷேகம் செய்யும் ஒரே கடவுள், நம் அம்மா, அம்மா, அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

மாண்புமிகு அம்மா, உங்கள் பெயரை உச்சரித்தால் உமிழ்நீர் கூட எங்களுக்கு தமிழ் நீராய் சுரக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா நீங்கள், சமூகப் பணியில் சாதனை முத்திரை! சளைக்காமல் உழைப்பதில் சரித்திர முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) காலத்தை வென்றதில் காவிய முத்திரை! கருணை கொள்வதில் அன்பு முத்திரை! வாரிக் கொடுப்பதில் வள்ளல் முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் களத்தில் வெற்றி முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தில் இரும்பு முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) சாதிப்பதில் ராஜ முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் எழுச்சி முத்திரை!

(மேசையைத் தட்டும் ஒலி) வானம் போற்றிடும் வசந்த முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் கையெழுத்தே தமிழகத்தின் நிரந்தர முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமையோடு மீண்டும் சொல்கிறேன், அம்மா அவர்களின் கையெழுத்தே தமிழகத்தின் நிரந்தர முத்திரை! (மேசையைத் தட்டும் ஒலி) சில தலைவர்களால் ஆதி திராவிட மக்களுக்கு அடையாளம் கிடைத்தது; ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களால்தான் ஆதி திராவிட மக்களுக்கு அங்கீகாரம் கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாய சிற்பி என பொய்-நா வாழ்த்தாமல் போகலாம்; ஆனால் ஐ.நா. வாழ்த்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலில் இன்று சில தலைவர்கள் அடைப்புக்குறி, சில தலைவர்கள் கேள்விக்குறி, ஆனால் மாண்புமிகு அம்மா மட்டும் என்றும் ஆச்சரியக்குறி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா உங்களுக்கு எல்லோரும் வார்த்தையால் வசந்த மாளிகை கட்டுகிறார்கள், சின்னவள் நான், தமிழ்ச் சொல்லால் பாச மலர் கட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த சபையில், தங்கள் கருத்துகளை தொடங்கும்போது, சாதாரணமாக இருந்த என்னை என்று தொடங்குவார்கள். ஆனால், நான் அப்படித் தொடங்கப்போவது இல்லை. ஏனென்றால், மிக சாதாரணமாக இருந்தவள் நான். மிக சாதாரணமாக இருந்த எனக்கு அங்கீகாரம் கொடுத்து, கழகத்தில் உறுப்பினராக்கி, இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலர் ஆக்கி, அதன் தொடர்ச்சியாக சங்கரன்கோவில் நகர கழக இணைச் செயலர் ஆக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் மேன்மைமிகு கருணையால், சங்கரன்கோவில் நகர்மன்றத் தலைவர் ஆக்கி, எல்லாவற்றிற்கும் மேல், தாயாய், தந்தையாய், அறிவு தந்த ஆசானாய், என்னையும், (மேசையைத் தட்டும் ஒலி) என் குடும்பத்தையும் என்றும் காக்கும் கடவுளாய், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினராக்கி, பாரம்பரிய சிறப்பும், பண்பாட்டுப் பெருமையும் கொண்ட, இந்த சபையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சராக்கி, அழகு பார்த்த அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி)

தங்களுக்கு, என் உடல், உயிர், உள்ளம் இவற்றோடு, எனது மற்றும் என்னுடைய குடும்ப ஆயுளையும் சேர்த்து, தங்கள் திருவடியில், நெஞ்சார, மனம்குளிர, உள்ளத்து உணர்வோடு பணிந்து சமர்ப்பிக்கிறேன். தாயே! இந்தத் தமிழ்நாடு வல்லமையோடு இருக்க, தாங்கள், இன்றிலிருந்து, இன்னும் ஒரு 100 ஆண்டு காலம் வாழ இறைவன் திருவடியைப் பணிந்து வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாயே! தங்களின் சொல்லை மந்திரச் சொல்லாக ஏற்று, தேர்தல் களத்தில், கை மையால், வெற்றி மையைத் தந்து, வாய்மை, தூய்மை, விசுவாசம் மிக்கவர்கள் சங்கரன்கோவில் மக்கள் என்பதை நிரூபித்த, அனைத்து நல்லுள்ளங்களுக்கும், பாடும் வானம்பாடி போல, தேர்தல் களத்தில், சுற்றிச் சுழன்று பணியாற்றிய, கழகத்தின் அனைத்து சகோதர, சகோதரிகளுக்கும் பாசமிகுந்த நன்றியினை, நேசத்தோடு பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவா! குணமுள்ள மனிதர்களால் இவ்வுலகு அலங்கரிக்கப்படுகிறது என்பதை மெய்ப்பித்து ஆதி திராவிட மக்களின் கண்மணியாய், கருணைப் பெண்மணியாய் திகழ்பவர் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட இன மக்களை சமுதாயத்தில், இதர இன மக்களுக்கு நிகராக நிலை உயர்த்துவதே, இந்தத் துறையின் முக்கிய நோக்கமாகும்.

முற்பகல் 11-45

சமூகத்தில் "எல்லோரும், எல்லாமும் பெற வேண்டும். இங்கு, இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற உயர்ந்த நோக்கத்தோடு, சமூக முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, அனைவருக்கும் கல்வி மற்றும் மனிதவள மேம்பாடு இவற்றை நல்லமுறையில் வழங்கும் வண்ணம் கொள்கைகளை வகுத்து, திட்டமிட்டு, உயர்ந்த இலக்கோடு செயல்படுவதே, இத்துறையின் நோக்கமாகும்.

அனைத்து வசதிகளையும், அனைத்து துறைகளில் இருந்தும் பெறப்பட வேண்டும் என்ற நோக்கில், 2016-2017 ஆம் ஆண்டிற்கு ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ், 34 துறைகளை உள்ளடக்கி, ரூ.12,462/- கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீடு, மொத்த ஆண்டு திட்ட ஒதுக்கீடான ரூ.60,610/- கோடியில் 20.56 சதவிகிதமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 31] [திருமதி வி.எம். ராஜலெட்சுமி]

தமிழ்நாட்டில் உள்ள ஆதி திராவிடர் மக்களின் விகிதாச்சாரம் 20.01 சதவிகிதத்தைவிட அதிகமாகும். 2016-2017 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ரூ.2,971.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் அதில், 89.05 விழுக்காடு நிதியானது கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டுமே செலவிடப்படுகிறது என்பதையும் மகிழ்வோடு பதிவு செய்கிறேன்.

கல்வி உதவித் தொகை. மனிதனை மனிதனாக்குவது, மேம்படுத்துவது, கல்வி மட்டுமே! "கல்வியே, மனிதனின் உள்ளத்தில், ஒளிபெறச் செய்கிறது" என்ற வரிகளுக்கு உயிர் கொடுத்து, ஆதி திராவிட மக்களின் உணர்வோடும், உள்ளத்தோடும் கலந்த ஒரே தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில், எல்லா மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக, எதுமாதிரியும் இல்லாத, புது மாதிரியான கல்வி உதவித் தொகை திட்டங்கள் பல கொண்டு வந்து, மாணவர்களின் வாழ்வில் எழுச்சியையும், மகிழ்ச்சியையும் தந்த, கலைமகளின் மறுவடிவம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ், எண்ணற்ற கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றில், முத்தானது முதன்மையானது, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டமாகும். இத்திட்டம் மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இந்திய வரலாற்றில், முதன்முறையாக 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து சுயநிதிக் கல்லூரியில் பயிலும் இந்து ஆதி திராவிட மாணாக்கருக்கு, சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு நிர்ணயித்த கல்விக் கட்டணத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முழுமையாக வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2015-2016 ஆம் ஆண்டுவரை மைய அரசு, தமிழக அரசிற்கு ரூ.1,126.28 கோடி வரை வழங்க வேண்டியிருந்த நிலையில், ஆதி திராவிடர் மக்களின் கல்வி வளர்ச்சிக்காக அம்மாவின் அரசு அத்தொகையினை மாநில நிதியிலிருந்து வழங்கியது. மாண்புமிகு அம்மா அவர்களின் தொடர் முயற்சியால், மைய அரசிடமிருந்து 12-7-2016 அன்று ரூ.466.86/- கோடி கிடைக்கப் பெற்றது. மீதம் ரூ.659.42/- கோடி மைய அரசிடமிருந்து பெறப்பட வேண்டும். மீண்டும் கூறிக்கொள்கிறேன், மைய அரசின் நிதியினை எதிர்நோக்கி மாநில அரசு தனது நிதியினை விடுவித்து, ஆதி திராவிடர் மாணாக்கர்களின் கல்வி நலனைப் பேணிக் காத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “முயற்சியை எரிபொருளாக்கி, இலட்சியம் என்னும் நெருப்பை பற்றவைத்தால், இலக்கை எளிதில் அடையலாம்” என்ற உயர்ந்த சொற்களுக்கு அடையாளமாய் இருப்பவர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தூய்மைப் பணி மற்றும் ஆபத்தான பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கு, சாதி, மதம் மற்றும் பெற்றோரின் வருமான வரம்பின்றி உதவித் தொகை மற்றும் தனி மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2016-2017 ஆம் நிதியாண்டில் ரூ.945.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று, ஒன்பது மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குள் இருந்தால், விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் வருடம் ரூ.4,500/-ம், விடுதியில் தங்காத மாணவராக இருப்பின் வருடம் ரூ.2,250/-ம் வழங்கப்படுகிறது.

முற்பகல் 11-50

உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை. ஈகை என்பது நட்சத்திரங்களுக்கிடையே தோன்றும் நிலாவைப் போன்றது. கல்விக்குச் செய்யப்படும் உதவிதான் ஒருவருக்கு வாழ்கையின் வசந்தவாசலை திறப்பதன் அடையாளம் என்பதை மனதில் கொண்டு, உயர் கல்வி பயில்வோருக்கு சிறப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ.2,026.47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில், வெளிநாடு சென்று மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கென உயர் கல்வி பயில உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம் நான்கு வருடங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மாணவ சமூகத்திற்கு உதவித் தொகைகளை அள்ளித் தந்து, அவர்களது அறிவுப் பசியைப் போக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

இன்றைய தினம் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் கனவு கண்ட கல்வியாளராகத் திகழ்கிறார்கள் என்பதை இரட்டிப்பு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம். சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு சான்றாய் அமைந்த மந்திரச் சொல் நம் புரட்சித் தலைவி அம்மா. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும், பள்ளிச் சேர்க்கையை 100 விழுக்காடாக உறுதிப்படுத்திடவும், இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைத் தவிர்க்கவும் "பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டத்திற்கென ரூ.1,700/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பரிசுத்தொகை. பரிசும், பாராட்டும் வாழ்க்கையில் நம்மை போராட்டம் இல்லாமல் செய்யும். அந்த வகையில், தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ / மாணவியருக்குப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இவை தவிர, மாநில அளவிலான பரிசுத் தொகை, மாவட்ட அளவிலான பரிசுத் தொகை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கென தனி பரிசுத் தொகை, முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள், அண்ணல் காந்தி நினைவுப் பரிசுத் தொகை, தகுதி வழிவகைப் பரிசுத் தொகை, அறிவுக் கூர்மைப் பரிசுத் தொகை போன்ற பல்வேறு பரிசுத் தொகைத் திட்டங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பிள்ளைகளின் வெற்றியைப் பாராட்டும் வகையிலும், போற்றும் வகையிலும் அமைகின்றன என்றால் அது மிகையாகாது.

பள்ளிகள். இன்று பள்ளிப் பிள்ளைகளின் உந்து சக்தி அம்மாதான்; பிள்ளைகளுக்கு முகம் தந்து, முகவரி தந்து, அவையத்து முந்தி இருக்க வாழ்வு தந்தவர் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) "ஆயுதத்தால் கலகம் செய்வதைவிட, அறிவால் புரட்சி செய்" என்றார் அம்பேத்கர்.

ஆயுதம், கேடயம் இல்லை,
எனக்கு அவற்றின் - தேவையும் இல்லை!
தீயென, சூழ்ந்திடும் போது!
எந்தன் சிந்தனை பாசறையாகும்!

என்றார் தமிழ் கவிஞன். அந்த வகையில், அம்பேத்கரின் மறு வடிவமும், பாரதிதாசனின் பெண் வடிவமும், பாரதியின் புரட்சி வடிவமும் நம் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) இத்துறையின்கீழ், 1,134 பள்ளிகளும், 306 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் நேர்த்தியோடு செயல்பட்டு வருகின்றன. பொதுப் பள்ளிகள், தனியார் பள்ளிகளுக்கு இணையாக இன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தேர்ச்சி விகிதத்தைப் பெற்றுள்ளனர். இதற்குக் காரணம் இப்பள்ளிகளில் ஏற்படுத்தித் தந்துள்ள வசதி வாய்ப்புகள் என்றால், அது மிகையன்று. பொற்குடத்திற்குப் பொட்டு வைத்ததைப் போல, கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்வில், R. ராஜதுரை என்ற மாணவர் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் கல்விக் கட்டணம் பெற்று, மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 1,180 மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவில் 3-வது இடத்தை அடைந்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடப் பள்ளிகளுக்குப் பெருமை சேர்த்ததோடு, கண்ணீர் மல்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றி சொன்னதை இந்த நல்ல நேரத்தில் மிகுந்த மகிழ்வோடு பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், சீருடைகள், பொது அறிவுப் புத்தகங்கள், குறிப்பேடுகள், புத்தகப் பை, காலணி, ரெயின் கோட், வரைபடம், மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, மடிக்கணினி, கணித உபகரணப் பெட்டி என்று கை நிறைய, பை நிறைய மன மகிழ்வோடு பிள்ளைகளுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. இன்று, ஆதி திராவிடர் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சோம்பலை சாம்பலாக்கி, சிறகை விரித்து, சிகரத்தைத் தொட்டுள்ளார்கள் என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

முற்பகல் 11-55

விடுதிகள். தெய்வம் சக மனிதர்கள்மூலம் நமக்கு சகாயம் செய்யும். உதவிகளும், வசதிகளும் மட்டுமே மனித வாழ்வில் வசந்தம் பிறக்கச் செய்கிறது. ஆதி திராவிட மக்களின்

விடிவெள்ளியாய், தன்மானம் காத்து, தரணியை உயர்த்திய, (மேசையைத் தட்டும் ஒலி) தனிப்பெரும் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலில், விடுதிகள் இயங்கி வருகின்றன.

இத்துறையின்கீழ் இயங்கி வரும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள், தங்கள் வாழ்வில், வறுமையைக் கண்டு அஞ்சாமல், கல்வியைப் பெற்றிட, பெரிதும் உதவுவதே இந்த விடுதிகள். 1,314 ஆதி திராவிடர் நல விடுதிகள், 42 பழங்குடியினர் நல விடுதிகள், 306 உண்டி உறைவிடப் பள்ளிகள், மிகச் சிறப்போடு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் செயல்பட்டு வருகின்றன. இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள், சுத்தமான குடிநீர், சுவையான உணவு, நீராவி கொதிகலன்கள், பெண்கள் விடுதிகளுக்கு நாப்கின் பர்னர், நூலக வசதி, பாய் மற்றும் போர்வைகள், உறையுடன் கூடிய தலையணைகள் மற்றும் துணி துவைக்கும் இயந்திரம் என பல்வேறு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், அடிப்படை வசதிகள் முழுமையாக பராமரிக்கப்பட்டு, பாதுகாப்பான முறையில், இன்று விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இன்று, தனியார் விடுதிகளுக்கு இணையாக ஆதி திராவிடர் நல விடுதிகள் செயல்படுகின்றன என்றால் அது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆளுமைக்குக் கிடைத்த வெற்றி என்பதை மிக்க மகிழ்வோடு பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டுமனைப் பட்டா: வண்ணத்துப் பூச்சிகளுக்கு, வாழ்க்கை கொடுத்த தலைவர்கள் உண்டு. ஆனால், தட்டாம்பூச்சிகளை, தடவிக் கொடுத்து, தட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வாழ வழிசெய்த, ஒரே மனித தெய்வம், எங்கள் அம்மா தான். (மேசையைத் தட்டும் ஒலி)

செல்வந்தர்களின் மாளிகைகளைவிட, ஏழைக் குடிசைகளில்தான், அன்பு வாசம் செய்கிறது என்பதை தன் செயலால் உணர்த்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான

நிலங்கள் தனியார் பேச்சுவார்த்தை மூலமாகவோ அல்லது நில எடுப்புச் சட்டம் 1978-ன் படியோ, நில எடுப்பு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில், இவ்வாண்டிற்கு ரூபாய் 75.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஈமச்சடங்கு உதவித்தொகை. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூபாய் 2,500/- வழங்கப்படுகிறது.

சாதிச் சான்றிதழ்கள் வழங்குதல். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மக்கள் தங்களுக்குரிய சாதிச் சான்றிதழ்களை உரிய நேரத்தில் பெறுவதற்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்களின் மெய்தன்மையை அறிய மாநில அளவிலான கூர்நோக்குக் குழுவும், ஆதி திராவிடரின் சாதிச் சான்றிதழ்களின் மெய்தன்மையை அறிய, மாவட்ட அளவிலான விழிப்புணர்வு குழுவும் செயல்பட்டு வருகின்றன.

தீண்டாமை ஒழிப்பு. அம்மா! தீயவருக்கு நெருப்பு, கொள்கையில் பொறுப்பு, திராவிட வளர்ப்பு! ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இச்சட்டத்தை அமல்படுத்துவற்கு என கூடுதல் காவல் துறைத் தலைவரின் தலைமையின்கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது என்கிற விவரத்தினையும் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மகிழ்ச்சியான, நெகிழ்ச்சியான சம்பவம் நடக்கும். அந்த வகையில், எனக்கு வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய வாய்ப்பை வழங்கிய முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைப் பதிவு செய்வதற்கு முன்பு, (மேசையைத்

தட்டும் ஒலி) இந்த நேரத்திலே, இந்தப் புனித அவையில், வரலாற்றுச் சிறப்புமிக்க, ஒரு நிகழ்வை பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார், சென்னைக்கு ஒரு முறை வந்தபோது, தனது உதவியாளரிடம் இரண்டு நல்ல புடவைகள் வாங்கி வரச் சொன்னார். உதவியாளருக்கோ, குழப்பமோ குழப்பம். தேவர் ஐயாவின் கார், சென்னை-மயிலாப்பூரில் ஒரு குறுகலான இடத்தில் நிற்கிறது. சிறிய வீடு, தேவர் அய்யா உள்ளே செல்கிறார். அங்கே ஒரு வயதான பெண்மணி அமர்ந்திருக்கிறார். தட்டு நிறைய பழம், புடவை, கொஞ்சம் பணம் வைத்து, பெண்மணியின் கரங்களில் கொடுத்து, தேவர் ஐயா கண்ணீர் மல்க வணங்குகிறார். மேலும், அப்பெண்மணியைப் பார்த்து, உங்களுக்கு எப்போதெல்லாம் உதவி தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் என்னிடம் தாராளமாக கேட்கலாம் என்றார். தேவர் ஐயா புறப்படுகிறார். காருக்குள் மௌனம், உதவியாளர் கேட்கிறார், ஐயா, அந்த பெண்மணி யார்? தேவர் ஐயா சொல்கிறார், அவர்தான் என் தாய், உதவியாளர் மீண்டும் கேட்கிறார், ஐயா, உண்மையாகச் சொல்லுங்கள், யார் அந்தப் பெண்மணி? தேவர் ஐயா, மீண்டும் சொல்கிறார், அவர்தான், என்னைப் பெற்றெடுக்காத தாய். வீரத்தின் விளைநிலமாக இருந்த வாஞ்சிநாதனின் மனைவி என்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

அடுத்த வரி சொல்கிறார், தேசியக் கொடி ஏற்றும்போது அதிலிருந்து பறக்கும் பூக்கள் என்ன தெரியுமா, வாஞ்சிநாதன், திருப்பூர் குமரன் ஆகியோரின் மனைவிகள் உதிர்த்த பூக்கள் என்றார். உதவியாளர் கண் கலங்கி நின்றார். அப்படி தேசியமும், தெய்வீகமும் இரு கண்கள் என போற்றிய தேவர் ஐயா நெஞ்சத்து நெகிழ்வோடு வாழ்த்திய (மேசையைத் தட்டும் ஒலி) புகழ்வாய்ந்த வாஞ்சிநாதனின் பிறந்த நாள் அன்று அரசு சார்பில் மரியாதை செய்து மலர் மாலை அணியச் செய்யும் மிகச் சிறந்த நல்ல வாய்ப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எனக்கு வழங்கினார்கள். இந்த வாய்ப்பிற்கு என் உடலில் உயிர் உள்ளவரை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவிற்கு உண்மையாகவும், நம்பிக்கையாகவும் என்றும் இருப்பேன் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் மிகுந்த

மகிழ்ச்சியோடும், பெருமையோடும், கண்ணியத்தோடும், கண் கலங்கி நன்றி சொல்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கம். கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் நோக்கத்தோடு, ஒவ்வோர் ஆண்டும் 10 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ எழுத்தாளர்கள் மற்றும் இவ்வின மக்கள் அல்லாத ஓர் எழுத்தாளர், ஆக மொத்தம் 11 எழுத்தாளர்கள் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காக தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு நூல்களை வெளியிட ரூ.40,000 பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இவ்வின மக்களுக்கு அம்மாவின் அரும்பணிகள் ஆயிரம் காலங்கள் சொல்லும் பெரும்பணிகள் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆதி திராவிட மக்களின் சுவாசம் அம்மா. ஆதி திராவிட மக்களின் நேசம் அம்மா. ஏன், இன்று ஆதி திராவிட மக்களின் அடையாள அட்டை, PAN அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய எல்லாவற்றிலும் வீற்றிருக்கும் ஒரே தெய்வம், அம்மா, அம்மா, அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் அலை அடிப்பது போல என் கண்களில் நீர் வடிகிறது. இருப்பினும், ஒன்றே சொல்வேன், நன்றே சொல்வேன், அதுவும் இன்றே சொல்வேன், இப்போதே சொல்வேன், ஆதி திராவிட மக்களே, எல்லோரும் வாழ்க்கை முழுவதும் நன்றி சொல்லுங்கள், நம் தலைமுறையைக் காத்த கடவுள் அம்மா என்று. (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதி காத்து, மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும், மகிழ்ச்சி பெற செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி தங்கத்தாரகை தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு 8 கோடி தமிழர்கள் சார்பாக 100 கோடி நன்றிகள் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான அனுமதியோடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கான அறிவிப்புகளைப் பதிவு செய்கிறேன்.

1. ஓட்டுநர் உரிமம் பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஓட்டுநர்களுக்கு மோட்டார் வாகனப் பயிற்சி அளித்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியினர் மக்கள் சுயமாக வேலைவாய்ப்பினைப் பெற்றிடவும், அவர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும், தங்களது திறன்களை வளர்த்துக்கொள்ளவும், ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள இவ்வினத்தை சேர்ந்தவர்களுக்கு வாகனப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சிக்கு என 1.11 கோடி ரூபாய் தாட்கோ சிறப்பு மைய திட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கப்படும். இப்பயிற்சியில் சுமார் 960 நபர்கள் பயன்பெறுவார்கள் என்பதைப் பதிவு செய்கிறேன்.

2. நீலகிரி மாவட்டத்தில் கோழித்துறை கிராமத்தில் இயற்கை பசுந்தேயிலை உற்பத்தி செய்வதற்கான இயந்திர அலகு நிறுவுதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நீலகிரி மாவட்டத்தில் வாழும் பண்டைய பழங்குடியினர் பாரம்பரிய வேளாண்மைத் தொழிலைத் தொடர அவர்கள் உற்பத்தி செய்த தேயிலையினைப் பதப்படுத்துவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்யவும், கோத்தகிரி வட்டாரத்தில் உள்ள கோழித்துறையில் பசுந்தேயிலை தயாரிக்கும் இயந்திர அலகு அமைக்கப்படும் என்பதை பதிவு செய்கிறேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.80 இலட்சம் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் (Spoken English) பயிற்சி அளித்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் அறிவுத் திறன், பேச்சாற்றல், ஆளுமைத் திறன் ஆகியவற்றை இளம் வயது முதலே வளர்த்துக்கொள்ள ஆங்கிலப் பயிற்சி அத்தியாவசியமாக உள்ளது. மாணாக்கர்கள் சரளமாக ஆங்கிலத்தில் பேசுவதற்கும், எழுதுவதற்கும், தங்களை தகுதிப்படுத்திக்கொள்ளும் விதமாக 10,299 மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சிக்கு ஒரு நபருக்கு மாதம் ரூ.30 வீதம் 11 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.34 இலட்சம் மத்திய சிறப்பு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திருமதி வி.எம். ராஜலெட்சுமி] [2016 ஆகஸ்ட் 31

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன் நான் இந்த மாமன்றத்தில் வைத்த கருத்துகள் மன்ற உறுப்பினர்களுக்கு மனமகிழ்வையும், நிறைவையும் அளித்திருக்கும் என நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, எனது உரையை நன்றியோடு முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. 30-8-2016 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,701,91,96,000/-, மூலதனக் கணக்கில் ரூ.261,13,09,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.14,25,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 9- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. 30-8-2016 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.940,65,97,000/-, மூலதனக் கணக்கில் ரூ.105,74,77,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

4. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) சென்னை தரமணியில் உயிரி தொழில்நுட்ப அபிவிருத்தி மையம், திருப்பெரும்புதூர் வானூர்திப் பூங்காவில் பொது ஆய்வு மற்றும் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தில் அபிவிருத்தித் திட்டங்கள், தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு நவீன இயந்திரங்கள் வாங்குதல், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்மூலம் அரியலூரில் மேம்பாட்டுப் பணிகள், தொழில் பூங்காக்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் சிறப்பான இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. எனது தலைமையிலான அரசு மேற்கொண்ட முன் முயற்சிகளின் காரணமாக முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க நாடி வரும் இடமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்மூலம் 2,42,160 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இதுவரை 64 நிறுவனங்கள் 87,062 கோடி ரூபாய் முதலீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் தொடங்குவதற்கான பணிகளைத் தொடங்கிவிட்டன. அவை, இதுவரை 25,020 கோடியே 48 இலட்சம் ரூபாய் அளவிற்கு முதலீடு செய்துள்ளன. ஏனைய நிறுவனங்கள் தேவையான முன் ஆயத்தப் பணிகளை மேற்கொண்டுள்ளன.*

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு மேலும் மேன்மை அடையும்வகையில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

1. உயிரி தொழில்நுட்பத் துறையில் ஆரம்ப நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்வகையில், உயிரி தொழில்நுட்ப அபிவிருத்தி மையம் Bio-technology Incubation Centre ஒன்று 20 கோடி ரூபாய் செலவில் சென்னை தரமணியில் உள்ள டைசல் பயோபார்க் நிறுவனத்தில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

இந்த மையமானது, உயிரி தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள், விஞ்ஞானிகள் மற்றும் தனி நபர்கள் தங்களது புதிய கண்டுபிடிப்புகளைத் திட்டமிடவும், உருவாக்கவும் மற்றும் செயல்படுத்தவும் வழிவகை செய்து, உயிரி தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். இந்த மையமானது உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட ஆய்வகங்கள், வணிகப் பகுதிகள் மற்றும் அலுவலகப் பகுதிகள் ஆகியவைகளைக் கொண்டதாக 12,000 சதுர அடியில் அமையும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் சிப்காட் வல்லம்-வடகால் தொழில் பூங்காவில், 245 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள வானூர்திப் பூங்காவில் Aerospace Park-ல் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், (மேசையைத் தட்டும் ஒலி) அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உலகத் தரத்தில் அமைக்கப்படும். மேலும், இப்பூங்காவில், தொழில்களுக்கான பொது ஆய்வு மற்றும் தொழில்நுட்ப மையம் ஒன்றும் அமைக்கப்படும்.

3. 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாக உபயோகப்படுத்துவதில் உலகிலேயே முதலிடத்தையும், (மேசையைத் தட்டும் ஒலி) அச்சு மற்றும் எழுது காகித உற்பத்தியில் இந்தியாவில் இரண்டாவது இடத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) வகிக்கிறது. கரூர் மாவட்டம், காகிதபுரம் ஆலையில் உள்ள காகித ஆலையின் செயல்திறன் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்த, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவில் மின்னியல் துகள்படிவு அமைப்பினை Electro Static Precipitator Chamber-ஐ விரிவாக்கம் செய்தல் மற்றும் கொதிகலன் பிரிவில் நிலக்கரி சேமிப்புக் கிடங்கினை விரிவாக்கம் செய்தல், மின் உற்பத்திப் பிரிவில் பழைய

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 31

மின்மாற்றிகள் மற்றும் மின் கடத்திகளைப் புதுப்பித்தல், காகிதம் மற்றும் காகிதக் கூழ் பிரிவில் தேய்ந்த அழுத்த உருளைகளைச் சீரமைத்தல் ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள் 25 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தால் ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் டன் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட, அடுக்கு காகித அட்டை ஆலை ஒன்று நிறுவப்பட்டு, என்னால் 29-1-2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தியில் இந்திய அளவில் இந்நிறுவனம் மூன்றாம் இடத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அடைந்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அடுக்கு காகித ஆலையின் தேவையினைக் கருத்தில் கொண்டு தேய்ந்த உருளை செப்பனிடும் இயந்திரம், சுருள் குழாய்களைத் தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை நிறுவப்படும். மேலும், அடுக்கு காகித அட்டை வைப்பதற்கான கிடங்கு விரிவாக்கம் செய்யப்படும். இவை 35 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும், நவீன இயந்திரங்களைக் கொண்டு குவாரி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், 10 மண்வாரி இயந்திரங்கள், 12 சுரங்க லாரிகள், டிப்பர்கள், 10 காற்றழுத்தி இயந்திரங்கள் மற்றும் 4 ஹைட்ராலிக் டிரில்லர்ஸ் ஆகியவை 20 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

6. அரியலூரில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் 675 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரியலூரில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அரியலூர் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து பின்வரும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:

(i) அரியலூர் மாவட்ட மருத்துவமனைக்கு 36,000 சதுர அடி பரப்பளவு கொண்ட புதிய கட்டடம், பார்வையாளர்கள்

2016 ஆகஸ்ட் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காத்திருப்போர் அறை, நவீன சலவையகம் மற்றும் உள் மற்றும் வெளி நோயாளி பிரிவுகள் அமைக்கப்படும். ஆய்வகம் புதுப்பிக்கப்பட்டு, மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கப்படும். இவை 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ii) அரியலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஆனந்தவாடி, மணக்குடி, சீனிவாசபுரம், தாமரைகுளம், உசேனாபாத், ராஜீவ் நகர், வாலாஜாநகரம், கிருஷ்ணாபுரம் மற்றும் ராவுத்தன்பட்டி ஆகிய கிராமங்களிலிருக்கும் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள், ஆழ்துளைக் கிணறுகள், *(மேசையைத் தட்டும் ஒலி)* சுற்றுச்சுவர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் சிறுவர், சிறுமியருக்கான தனித்தனி கழிப்பறைகள் ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

(iii) அரியலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மரக் கன்றுகள் நடுதல், *(மேசையைத் தட்டும் ஒலி)* கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், மழை நீர் சேகரிப்பு செய்தல் போன்ற பசுமை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மொத்தத்தில் அரியலூர் பகுதியில் 13 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் மூலமாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

7. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியினை மேம்படுத்தும்வகையில், தொழில் பூங்காக்களை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகிறது. மேலும், தொழில் பூங்காக்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் சுமார் 2,300 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டு வரும் சிப்காட் செய்யாறு தொழில் வளாகத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முதற்கட்டமாக 1,300 ஏக்கர் நிலப்பரப்பில், *(மேசையைத் தட்டும் ஒலி)* சுமார் 2,300 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டு வரும் சிப்காட் செய்யாறு தொழில் வளாகத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முதற்கட்டமாக 1,300 ஏக்கர் நிலப்பரப்பில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள், மழை நீர் வடிகால் வசதி, சாலையோர மரங்கள், தெரு விளக்குகள் மற்றும் இதர வசதிகள்

உலகத் தரத்தில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பணிகள் 2 ஆண்டுகளில் முடிக்கப்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள அறிவிப்புகளின் வாயிலாக தொழில் வளர்ச்சி மேலும் மேம்பட வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்ட விரிவாக்கம், ராணிப்பேட்டை, கால்நடை அடைப்பான் நோய் தடுப்பூசி ஆய்வகத்தை தரமுயர்த்துதல், கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள், சாத்தூர் ஆட்டுப் பண்ணை தீவன விதை உற்பத்தி அலகு, செட்டிநாடு, நடுவூர் மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் தீவன கட்டி உருவாக்கும் அலகுகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவேதான், கால்நடை மேம்பாட்டிற்கு எனது தலைமையிலான அரசால் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில், 830 புதிய கால்நடை மருந்தகங்கள், 200 கிளை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1,615 புதிய கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1,163 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடை பராமரிப்புத் துறை சம்பந்தமான பின்வரும் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

1. ஊரகப் பகுதிகளில் இயங்கி வரும் நகரும் கால்நடை மருத்துவ அலகுகள் வழக்கமான கால்நடை மருத்துவச் சேவைகளை மட்டுமே விவசாயிகளின் இருப்பிடங்களில் வழங்கி வருகின்றன. சில நேரங்களில் கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை தேவைப்படும். அவ்வாறு சிகிச்சை அளிக்கப்பட்டால் அவை

2016 ஆகஸ்ட் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காப்பாற்றப்படும். எனவேதான், 2015-2016 ஆம் ஆண்டு நகரும் கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவை திட்டம் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், மேலும் 27 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் 37 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை அவசர ஊர்தி உள்ள நிலை எய்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசி போடுவது இன்றியமையாததாகும். ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் அடைப்பான் நோய் தடுப்பூசி ஆய்வகம் ஒன்று இயங்கி வருகிறது. இந்த ஆய்வகம் நல் உற்பத்தித் தரம் அதாவது, Good Manufacturing Practices தரத்திற்கு உயர்த்தப்படும். இப்பணிகள் 36 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சிறந்த கால்நடை மருத்துவச் சேவையினை வழங்குவதற்கு உகந்த கட்டமைப்பு வசதி அவசியமாகும். எனவேதான், எனது தலைமையிலான அரசு சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த ஆண்டு 113 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் என 115 கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் 28 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கால்நடைகளின் உற்பத்தியும், உற்பத்தித் திறனும் தீவனத்தினை மையமாகக் கொண்டே அமைகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் 181 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 1.62 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பசுந்தீவன சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தரமான பசுந்தீவனம் கிடைத்திட ஏதுவாக, விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஆட்டுப் பண்ணையில் தீவன விதை உற்பத்தி அலகு, செட்டிநாடு, நடுவூர் மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் தீவன கட்டி உருவாக்கும் அலகுகள் 3 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 31

தற்போது என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் வாயிலாக கால்நடைகள் உடனடி சிகிச்சை பெறவும், உட்கட்டமைப்பு மேம்படவும் மற்றும் தீவன அபிவிருத்திக்கும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) வணிகர் நல வாரிய தொகுப்பு நிதியை ரூ.10 கோடியாக உயர்த்துதல், வணிக வரி அலுவலகங்களில் உதவி மையங்கள் அமைத்தல், கிருஷ்ணகிரி, நாமக்கல், பழனியில் ஒருங்கிணைந்த வணிக வரிக் கட்டடங்கள், ஆவணப் பதிவு நடைமுறைகளை கணினிமயமாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வதற்குத் தேவையான நிதியாதாரங்களைத் திரட்டுவதில் வணிக வரித் துறையும், பதிவுத் துறையும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் இந்தத் துறைகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் எனது தலைமையிலான அரசு பல்வேறு முன்னோடி திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்துறை சார்ந்த புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. வணிகர்களின் நலனுக்காக குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் தமிழ்நாடு வணிகர் நல வாரியம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெறாமல், உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்று வணிகம் செய்யும் சிறு வணிகர்களும் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த வாரியத்தின் தொகுப்பு நிதி 2012 ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதன்மூலம் கிடைக்கும் வட்டித் தொகைமூலம் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பிற்பகல் 12-25

எங்களது தேர்தல் அறிக்கையில் 'வணிகர் நலனுக்கு அரசு வழங்கும் தொகுப்பு நிதி 5 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்' என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனை நடைமுறைப்படுத்தும் வகையில், வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதி 5 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இவ்வாரியத்தில் உறுப்பினராக உள்ள வணிகர்கள் பயன்பெறுவர்.

2. வணிக வரித் துறையின் அனைத்து சேவைகளும் கணினிமயமாக்கப்பட்டு, "e-C Tax" என்ற புதிய மென்பொருள் தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. கணினி வசதி இல்லாத சிறு வணிகர்கள் மற்றும் சரக்கு எடுத்துச் செல்வோர் தங்களது மாதாந்திர நமூனாக்களைப் பதிவேற்றம் செய்வதிலும், எடுத்துச் செல்லும் பொருட்களுக்கான படிவங்களை கணினிமூலம் பூர்த்தி செய்து அளிப்பதிலும் உள்ள சிரமங்களைக் களையும்வகையில், வணிகர்கள் தங்களது மாதாந்திர நமூனாக்களை கணினியில் பதிவேற்றம் செய்ய உதவியாக, 228 வணிக வரி அலுவலகங்களில் உதவி மையம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சேவைக்கு என வணிகர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் வணிக வரித் துறையின் புதிய இணையதள சேவைக்குப் பதிவு செய்தல், புதிய பதிவுச் சான்று பெறுதல், வங்கிகளில் வரி செலுத்துவதற்குரிய மின் செலுத்துகைச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்தல் மற்றும் துறையின் படிவங்களைப் பதிவிறக்கம் செய்தல் போன்ற சேவைகளை தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனத்தால் நிருவகிக்கப்பட்டு வருகின்ற 486 அரசு மின் சேவை e-seva மையங்கள்மூலம் உரிய கட்டணங்கள் செலுத்தி பெறுவதற்கு வழிவகை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும், பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிடவும், சொந்தக் கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு, கடந்த 5 ஆண்டுகளில் 64 அலுவலகங்களை

உள்ளடக்கிய 33 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆண்டு கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் பழனி ஆகிய 3 இடங்களிலும் 6 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் 9 வணிக வரி அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிக வரிக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பதிவுத் துறையில் ஆவணப் பதிவு தொடர்பான நடைமுறைகள் அனைத்தும் முற்றிலும் கணினிமயமாக்கப்படும். இதற்கான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, தற்போது சோதனை முறையில் 20 அலுவலகங்களில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து பதிவுத் துறை அலுவலகங்களிலும் இந்த மென்பொருள் விரைவில் அமல்படுத்தப்பட்டு இதன் மூலமே ஆவணப் பதிவுகள் நடைபெற வழிவகை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் Template வசதியைப் பயன்படுத்தி பொது மக்கள் ஆவணங்களைத் தாங்களே தயாரித்து, அதனை உரிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இணையதளம்மூலம் அனுப்பி வைக்க இயலும். ஆவணதாரர்களின் விரல் ரேகைப் பதிவுகள்மூலம் அத்தாட்சி செய்தல் மற்றும் அவர்களின் அலைபேசி எண்கள் மற்றும் ஆதார் எண்கள் ஆகியவற்றைப் பெற்று குறுஞ்செய்தி SMS அனுப்பப்படும். இதனால் போலி ஆவணப் பதிவு மற்றும் ஆள்மாறாட்டம் தடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை இணையதளம் வழியாக உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பித்தால் இணையதளம் மூலமாகவே அவற்றை வழங்க வகை ஏற்படும். சொத்துரிமை தொடர்பாக வருவாய்த் துறையால் பராமரிக்கப்படும் விவரங்களை இணையதளம் மூலமாக சரிபார்க்கும் வசதி ஏற்படும். ஆவணப் பதிவு தொடர்பான விவரங்களை இணையதளம் மூலமே வருவாய்த் துறை பார்க்க இயலும் என்பதால், விரைந்து பட்டா மாறுதல் செய்ய இயலும். என்னால் அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்புகள் வணிகர்கள், பொது மக்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் என அனைவரும் பெரிதும் பயனுற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 31]

பிற்பகல் 12-30

(ஈ) விவசாய சூரிய சக்தி மோட்டார் பம்ப்செட்டுகளுக்கு மானியம், வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்குதல், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்ட விரிவாக்கம், பூச்சி மேலாண்மை உத்திகளுக்குப் புதிய திட்டம், தோட்டக்கலைப் பண்ணைகள் நவீனமயமாக்கல், வேளாண்மைக் கல்லூரிகளில் வகுப்பறைகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், விவசாயப் பெருமக்களின் வளமான வாழ்வுக்கு இன்றியமையாததாகவும் விளங்கும் வேளாண்மைத் துறைக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. வேளாண் துறைக்கும், விவசாயிகளின் வருவாய் அதிகரிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்ததன் காரணமாகவே, 2015-2016 ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி, 1 கோடியே 30 இலட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் என உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

விவசாயக் கடன் பெற்ற விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும்வகையில், எங்களது தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதியின்படி, கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண்மைக் கடன் மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன் ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயத் துறை சார்ந்த பின்வரும் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1. வேளாண்மையில் சூரிய சக்தியின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் 5 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்புசெட்டுகளை அமைத்திட, விவசாயிகளுக்கு 80 சதவிகித மானியம் வழங்கும் திட்டம், 2013-2014 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம், 2,130 விவசாயிகள்

பயனடைந்துள்ளனர். இதன் விளைவாக, 10,500 ஏக்கர் பாசன வசதியைப் பெற்றுள்ளது. நிலத்தடி நீர் அதிக ஆழத்தில் உள்ள இடங்களில் 5 குதிரைத் திறன் கொண்ட மோட்டர் பம்புசெட்டுகள் இயக்க இயலாது. எனவேதான், எங்களது தேர்தல் அறிக்கையில், "சூரிய சக்தியால் இயங்கும் விவசாய மோட்டார் பம்புசெட்டுகளுக்கு 80 சதவிகித மானியம் தொடர்ந்து வழங்கப்படும். 10 குதிரைத் திறன் வரையிலான மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மானியம் வழங்கப்படும்" என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, இந்த ஆண்டு 10 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்புசெட்டுகளுக்கு 80 சதவிகித மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 500 விவசாயிகள் பயனடையும் வகையில், 21 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. வேளாண் பணிகளுக்கான இயந்திரங்களை அதிக விலை கொடுத்து வாங்க இயலாத விவசாயிகள், சாகுபடி காலங்களில் காலத்தே விவசாயப் பணிகளை மேற்கொள்ளவும், பாசன நீர் ஆதாரத்தினைப் பெருக்கிட, குழாய்க் கிணறுகள் அமைத்திடவும், இயந்திரங்களையும், கருவிகளையும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்க எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், 22 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் வேளாண் பொறியியல் துறைமூலம் வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 60 முதல் 70 குதிரைத் திறன் கொண்ட 50 டிராக்டர்கள், அதற்கான இணைப்புக் கருவிகள், 20 பலவகை கதிரடிக்கும் இயந்திரங்கள் (Multi Crop threshers), 10 சுழல் விசை துளைக் கருவிகள் (Rotary Drill) ஆகிய வேளாண் இயந்திரங்கள் 21 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

3. வேளாண் பணியில் விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறையினைக் களையும் வகையில் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தினை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் வேளாண் இயந்திரங்கள் வாங்க விவசாயிகளுக்கு 299 கோடியே 83 இலட்சம்

2016 ஆகஸ்ட் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நெல் நடவு இயந்திரங்கள், பவர் டில்லர், சுழற் கலப்பை, களையெடுக்கும் கருவிகள், டிராக்டர் மற்றும் பவர் டில்லரால் இயக்கப்படும் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாங்க நடப்பாண்டில், 31 கோடியே 6 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மானாவாரிப் பயிர்கள் பருவமழையை நம்பியே இருப்பதாலும், உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதாலும், மானாவாரி விவசாயிகளின் வருமானம் குறைவாகவே உள்ளது. எனவே, மானாவாரிப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்காகவும், பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வளர்ப்புடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணைய முறை மானாவாரி பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. எங்களது தேர்தல் அறிக்கையில், 'மானாவாரிப் பயிர் சாகுபடியில் கறவை மாடுகள், ஆடுகள் வளர்ப்பு ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மேலும் விரிவாக்கப்படும்' என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். அதனைச் செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு 21 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், (மேசையைத் தட்டும் ஒலி) 20 ஆயிரத்து 55 ஏக்கர் மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணைய முறை பரவலாக்கப்படும்.

5. தமிழகம், பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் தேசிய அளவில் முக்கிய இடம் வகிக்கிறது. பூச்சிக்கொல்லியின் நச்சு இல்லாத பழங்கள் மற்றும் காய்கறிகள் உடல் நலனுக்கு உகந்ததாகும். எனவே, வேளாண் சுற்றுச்சூழல் சார்ந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகளை விவசாயிகள் பின்பற்றும் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் 1,27,500 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 10 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. உயர் மதிப்புள்ள குடைமிளகாய், வெள்ளரி, தக்காளி இவற்றுடன் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கொய் மலர்களான ஜெர்பரா, ரோஜா, கார்னேஷன் மற்றும் லில்லியம் போன்ற

தோட்டக்கலைப் பயிர்கள் பசுமைக் குடில்களில் பயிரிடப்படுகின்றன. நடப்பாண்டில் இத்திட்டம் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் சதுர மீட்டர் பரப்பளவில், 16 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் விவசாயிகளுக்குத் தரமான, இனத் தூய்மையான நடவுச் செடிகள் வழங்குவதை உறுதிசெய்யும் வகையிலும் அந்தந்த பகுதிகளில் தொழில்நுட்பங்களை விளக்கும் வகையிலும் தோட்டக்கலை பண்ணைகள் விளங்குகின்றன. இந்தப் பணிகளைச் சிறப்புற செய்யும் வகையில், கடலூர் மாவட்டம்-விருத்தாசலம், காஞ்சிபுரம் மாவட்டம்-மேல்கதிர்பூர், திருச்சி மாவட்டம்-முதலைப்பட்டி, நாமக்கல் மாவட்டம்-படச்சோலை, வேலூர் மாவட்டம்-நவ்லாக் மற்றும் திண்டுக்கல் மாவட்டம்-சந்தையூர் ஆகிய ஆறு அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

8. விவசாயிகளுக்குத் தரமான, இனத்தூய்மையான நடவுச் செடிகள் நியாயமான விலையில் கிடைத்திட தோட்டக்கலைப் பண்ணைகள் வழிவகை செய்கின்றன. விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தோட்டக்கலை நடவுச் செடிகளை தங்களது சொந்த மாவட்டங்களிலேயே பெற்றுக்கொள்ள வகை செய்யும் விதமாக, ஐந்து மாவட்டங்களில் புதிய பண்ணைகளை அமைக்க எனது தலைமையிலான அரசு உத்தரவிட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில், திருப்பூர், அரியலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 2 கோடி ரூபாய் செலவில் புதிய தோட்டக்கலை பண்ணைகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. அதிகரித்துவரும் வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, எனது தலைமையிலான அரசால் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் வாழவச்சனூர் ஆகிய மூன்று

2016 ஆகஸ்ட் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இடங்களில் புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த மூன்று கல்லூரிகள் மற்றும் மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் 49 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் மற்றும் தேர்வு மையங்கள் ஆகியவை கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் அறிவித்துள்ள இந்தத் திட்டங்களால் விவசாயிகளின் வாழ்வாதாரம் செழிக்க மேலும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தொழில் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வணிக வரி மற்றும் பதிவுத் துறை மற்றும் வேளாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தொழில் துறை தொடர்பாக 7 அறிவிப்புகளையும், கால்நடைத் துறை தொடர்பாக 4 அறிவிப்புகளையும், வணிக வரித் துறை தொடர்பாக 4 அறிவிப்புகளையும், வேளாண்மைத் துறை தொடர்பாக 9 அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கிறார்கள்.*

முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து, அதன்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதன்மூலம் முதலீட்டாளர்கள், அரசு, குடிமக்கள் என முத்தரப்பினரின் நலனையும் பேணும் வகையில், தொழில் துறை குறித்து சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டுள்ளதைப் பாராட்டி, வரவேற்று மகிழ்கிறேன்.

நியூசிலாந்து அரசு, கால்நடைகளின் நலம் பேணுவதில் உலக அளவிலே சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேபோல, அம்மா அவர்கள் அரிய பல திட்டங்களை வாயில்லா

பிராணிகளான கால்நடைகளின் நலன் காக்கும் வகையில் அறிவித்திருக்கிறார்கள்.

வணிகர்கள்தான் அன்றாட வளர்ச்சியில் மக்களுக்கும், நாட்டுக்கும் பெரும் சேவைகளை ஆற்றுகிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்புகளை புதிய அறிவிப்புகள்மூலம் அம்மா அவர்கள் இன்று நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம் என்று காந்தியடிகள் கூறினார்கள். அந்த காந்தியடிகளுடைய கருத்தை வழிமொழியும் வகையில் இன்றைய தினம் வேளாண்மைத் துறை தொடர்பாக பல அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு விவசாயத்தின்மீது நம்பிக்கை ஏற்படுத்தி, அதிலே கூடுதல் கவனம் செலுத்தவும், அவர்களை விவசாயத் துறையிலே செல்வந்தர்களாக ஆக்கவும், வெவ்வேறு துறைகளில் உள்ளவர்களையும் விவசாயத்தை நோக்கித் திருப்பும் வகையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அறிவிப்புகள் இன்றைய தினம் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நறுமணம் வீசும் அழகிய பூக்களால் இந்தப் பேரவை இன்று அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட, அம்மா அவர்களின் அறிவிப்புகள் சந்தனம்போல் மணக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய அனைத்து அறிவிப்புகளையும், திட்டங்களையும் மீண்டும் மனதாரப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆறாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இன்று நூறாவது நாளில் வெற்றிகரமான சாதனையாளராக வீற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம் மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் ஆற்றல்மிகு முதல்வராக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

அரசியல் என்பது எழுச்சி, வீழ்ச்சி ஆகியவை கலந்த சம்பவங்களின் தொகுப்பாகும். அதில், நீங்கள் அய்யா பெரியாரைப்போல துணிச்சலாக முடிவுகளை எடுக்கிறீர்கள்.

2016 ஆகஸ்ட் 31] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

பேரறிஞர் அண்ணாவைப்போல நம்பி வந்தவர்களை அரவணைக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஐயா காமராஜர் அவர்களைப்போல தூரநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்துகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களைப்போல, மனித நேயப் பணிகளை முன்னெடுக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள், திசைகளைத் தேடுவது இல்லை, திசைகளை உருவாக்கிப் பயணிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாறைகளை உடைத்து, புதிய பாதைகளை அமைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓடும் நதியின்மீது பாசிகள் படர்வது இல்லை. அதனால்தான் செயல்படும் உங்கள் அரசின்மீது விமர்சனங்கள் இருப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவின் திருமகன், ஏவுகணை நாயகன் அப்துல் கலாம் அவர்கள் 'கனவு காணுங்கள்' என்றார். 'உறங்கும்போது வருவதல்ல கனவு; உங்களை உறங்கவிடாமல் செய்வதே கனவு' என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது கனவுகளைச் செயல்படுத்தும்வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'VISION 2023' என்ற இலக்கோடு 110 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'அமைதி, வளம், வளர்ச்சி' என தமிழ்நாட்டின் மேன்மைக்காக கனவு காண்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தருணத்தில் நவீன மலேசியாவின் தந்தை Tun Mahathir Mohamad அவர்களைப் பற்றி ஒன்றைக் கூறி, எனது உரையை நான் நிறைவு செய்ய விரும்புகின்றேன். அவர் 1982-ல் மலேசியாவின் பிரதமராகப் பதவியேற்ற பிறகு, 'மலேசியா 2020' என்ற தூரநோக்குத் திட்டத்தை அறிவித்து, தனது UMNO கட்சியை தொடர்ச்சியாக ஆளும் கட்சியாக வெற்றிபெற வைத்து, வெற்றிகரமாக தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்தினார். இன்று மலேசியா, ஆசியாவின் வளம் மிக்க நாடாக உயர்ந்து, 'மலேசியா 2020' என்ற இலக்கை வெற்றிகரமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதுபோல, 'அம்மா' அவர்கள் தொடர்ச்சியாக வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் முன்னெடுத்திருக்கக்கூடிய 'VISION 2023'-ஐ வெற்றிகரமாக அமல்படுத்த வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2016 ஆகஸ்ட் 31

மாண்புமிகு அம்மா அவர்கள், எதற்கும் கவலைப்பட வேண்டாம். தார் குச்சிகளால் நீல வானத்தைப் பிடித்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) நீலிக் கண்ணீரால் எரிமலையை அணைத்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) துணிச்சலாக முடிவெடுத்து, இறைவனின் அருளாலே துணிச்சலாக உங்களது பயணத்தைத் தொடருங்கள். அருவியின் சாரல் உங்கள் உள்ளங்களை நனைக்கவும், காட்டுப் பூக்களின் வாசம் உங்கள் பொது வாழ்வில் வீசவும், நீண்ட புகழோடும், நிறைந்த வளங்களோடும் வாழவும், எல்லாம் வல்ல அல்லாவிடம் இந்த நேரத்திலே உங்களுக்காகப் பிரார்த்திக்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளை நாளும் நிகழ்த்திக் காட்டி, சரித்திரத்தைப் புரட்டிப் போட்டு, தமிழ்நாட்டு அரசியலில், தமிழ்நாட்டு அரசு நிருவாகத்தில் மக்கள் நலத் திட்டங்களை நாள்தோறும் தந்து, தானும் மகிழ்ந்து, மக்களையும் மகிழ்ந்தே வாழும் நிலைக்கு உயர்த்திட்ட புதிய சாதனை சரித்திரத்தைப் படைத்திட்ட தலைவி நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

15 ஆவது சட்டமன்றப் பொதுத் தேர்தலில், 234 தொகுதிகளிலும் தனித்தே நின்று, நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்று, பேராதரவைப் பெற்று, மகத்தான வெற்றியைப் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுகளுக்குப் பிறகு 'ஆண்ட ஒரு கட்சி மீண்டும் ஆளும் கட்சியாக வந்தது' என்ற புதிய நவீன வரலாற்றைப் படைத்து, ஆறாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று, இன்று 100 ஆவது நாளில் தன் பொற்பாதத்தை அடியெடுத்து வைக்கின்ற பொன்மனத் தலைவி நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டு வரலாற்றில் வேறு எவர் ஒருவரும் செய்துவிட முடியாத அளவிற்கு துறை எல்லாம்

2016 ஆகஸ்ட் 31] [திரு. உ. தனியரசு]

மறுமலர்ச்சிக்கான திட்டங்களையும், இந்தியாவும், உலகமும் வியந்து பார்க்கிற மக்கள் நலத் திட்டங்களையும் தந்த தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். உலக வரலாற்றில் ஏழை எளிய சாமானிய மக்கள் வாழ்கிற,

வாழ்க நீ அம்மான்
நீ வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறி கெட்டு பாழ்பட்டு போனதாம்
ஓர் பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா வாழ்க!

என்று பாரதி சொன்னாரே, (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி வாழ்விக்க வந்த காந்தியின் வடிவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அன்னை தாய்த் தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய வாழ்வு செழிக்க அறியாமையை நீக்கி, வறுமையை நீக்கி, கண்ணீரில் துன்பம் என்றும், துயரம் என்றும், பசி என்றும் இல்லை என்பதை நிரூபித்திருக்கிறார்கள். 'இல்லை' என்கின்ற வார்த்தை தமிழ் அகராதியிலும், (மேசையைத் தட்டும் ஒலி) 'முடியாது' என்கிற வார்த்தை தன் வாழ்நாளிலும் இல்லை என்பதற்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்தனை திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு, தொழில் துறையில் ஏராளமான திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். நேற்று பறவைகளுக்குக் கூட, உள்நாட்டு பறவைகள், தமிழ்நாட்டுப் பறவைகள், வெளிமாநிலத்து பறவைகள், வெளிநாட்டு பறவைகளுக்காக சரணாலயங்களை மேம்படுத்தியிருக்கிறார்கள். இங்கே சட்டம்-ஒழுங்கு மிகச் சிறப்பாக பராமரிக்கப்படுவதனால், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்குத்தான் அதிகமாக வருகின்றார்கள் என்பது வரலாறு. தமிழ்நாட்டுக்குத்தான் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் இருக்கிற பறவைகளைக்கூட தமிழ்நாட்டினுடைய நீர்நிலைகளில், சரணாலயங்களில் கூடு கட்டி, பாதுகாப்பாக வாழ வைக்க முடியும் என்று நினைத்த அம்மா அவர்கள், பறவைகள் பாதுகாப்பிற்காக ஏரிகளை வளப்படுத்தி, சரணாலயங்களை புதிது புதிதாக மேம்படுத்திய தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

[திரு. உ. தனியரசு] [2016 ஆகஸ்ட் 31

இன்று, கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்காக நடமாடும் மருத்துவமனையைத் தந்து, நடமாடும் காக்கும் கரங்களாக விளங்குபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மனிதர்களுக்குத் தந்து, பறவைகளுக்குத் தந்து, கால்நடைகளுக்கும் நகரும் அவசர சிகிச்சை ஊர்திகளை அறிவித்திருக்கின்றார்கள். முன்பெல்லாம் ஆடு, மாடுகளுக்கு கோமாரி நோய் போன்றவை வரும். ஒவ்வொரு மாதமும் அந்த season-க்குத் தகுந்தமாதிரி நோய்கள் வரும். ஆடு மாடுகள் கொத்து கொத்தாக, பட்டி பட்டியாக வாய் சப்பை நோய், கோமாரி போன்ற நோய்களால் பாதிக்கப்படும். இப்போதெல்லாம் ஒரு சிறிய எலி, நாய்க்குட்டியிலிருந்து ஆடு, மாடுகள் வரை எல்லாம் ஆரோக்கியமாக, பனிக் காலத்தில்கூட சளி பிடிக்காமல் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்டுக் குட்டிக்குக்கூட தடுப்பூசி போட்டு அவ்வளவு பாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மனிதர்களுக்கு நாம் எப்படி போலியோ, தட்டம்மை போன்ற நோய்களுக்கு தடுப்பூசி போடுகின்றோமோ, அதைப்போன்று கால்நடைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும், பிறந்த ஆட்டுக்குட்டி, எருமை கன்று, மாட்டுக் கன்றுகளுக்கெல்லாம் ஊசி போட்டு, அவை நோய்களால் பாதிக்கப்படாமல் மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டம் தந்திருக்கின்றார்கள். மனிதர்களுக்கு 20 கிலோ விலையில்லா அரிசி வழங்குவதைப்போன்று, கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனத்திற்கு அதற்கான பரப்பளவை அதிகப்படுத்தி, மாட்டுத் தீவனக் கட்டிக்கு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல கோடி ரூபாயை அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆடு, மாடு, கோழி இவையெல்லாம் இப்போது மிகவும் அழகாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கின்றன. நம்மைச் சார்ந்திருக்கிற அனைத்து மரம், செடி, கொடி போன்றவற்றிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக இலட்சக்கணக்கான மரக் கன்றுகளை நட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஈ மற்றும் எறும்புகளுக்கு மட்டும்தான் சர்க்கரை போடாமல் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் நாம் யாரும் கோரிக்கை வைக்கவில்லை. கோரிக்கை வைக்காமலேயே இத்தனை உயிரினங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்

2016 ஆகஸ்ட் 31] [திரு. உ. தனியரசு]

நல்லது செய்கின்றார்கள். அந்த அளவிற்கு, ஈவு இரக்கத்தோடு, மனிதாபிமானத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லாட்சி செய்கின்றார்கள்.

இன்றைக்கு காங்கிரஸ் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும் அவையில் இருக்கின்றார்கள். நீங்களும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை, நல்ல நிருவாகத்தை பாராட்டியாக வேண்டும். பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, இந்த மகிழ்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டதற்கு முதலில் காங்கிரஸ் கட்சிக்கும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில பேருக்கு மக்கள் அந்த வாய்ப்பைத் தராமல், மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர். இப்போதாவது அவர்கள் இங்கு வந்து, இந்த காதுக்கு இனிய மக்கள் நலத் திட்டங்களையெல்லாம் கேட்டு மகிழ வேண்டும். ஆனால், எதிர்க் கட்சிகளுக்கு, குறிப்பாக ஒரு கட்சிக்கு மனம் இல்லாமல் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நறுமணம் கமழ்கிற, நம்முடைய அருமை சகோதரர் திரு. தமிமுன் அன்சாரி சொன்னதைப்போல், சந்தனம் மணக்கின்ற இந்த 100 நாள் சாதனைத் திட்டங்களுக்காக வழி நெடுகிலும், கோட்டை முழுவதையும் மலர்களால் அலங்கரித்து, இன்று மணமாக, மகிழ்ச்சியாக இருக்கின்றோம்.

பிற்பகல் 12-55

தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற ஒட்டுமொத்த தமிழ் கூறும் நல்லுலகம், ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் மகிழ்ச்சியை, பேரன்பை தன்னுடைய வாழ்நாளெல்லாம் யாராலும் பறித்திட முடியாத அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நீக்கமற நிறைந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தடையில்லா மின்சாரம், விவசாயி, நெசவாளர், அரசுப் பணியாளர் மற்றும் மீனவர் என்று அனைத்துப் பிரிவினருக்கும், துறைகளுக்கும் பார்த்துப் பார்த்து திட்டங்கள் தந்திருக்கிறார்கள். அவை செழித்து வளரத் திறம்பட திட்டங்களைத் தந்த தலைவி, இந்த 100-வது நாளில், மகிழ்ந்து மக்கள் நலத் திட்டங்களைத் தந்து, இன்றும் இந்த சரித்திர திட்டங்களை ஓங்கி முழங்கியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சி தொடர்ந்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு நாட்டு

மக்கள் எப்பொழுதும் கரம் கோர்த்து, வலிமையாக அணி சேர்ந்து, பின் தொடர்ந்து வருவார்கள் என்று சொல்லி, இந்த 100-வது நாள் சாதனைமீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை விதி 110-ன்கீழ் இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த மக்கள் நலத் திட்டங்களையும் நான் மனமார பாராட்டி, நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களே, நான் உண்மையிலேயே இன்றைக்கு மிகவும் சந்தோஷமாக மகிழ்ச்சியாக இருக்கிறேன். 200 சதவீதம் சந்தோஷமாக இருக்கிறேன். 125 படங்களில் நடித்திருக்கிறேன். எப்படியும் 200, 300 மேடைகளில் பாடியிருப்பேன். ஆனால், அன்றைக்கெல்லாம் கிடைக்காத ஒரு புகழும் மரியாதையும் இந்த சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அம்மா அவர்களின் பேரவை விதி 110-ன்கீழ் 'அம்மா என்றால் அன்பு', என்னும் ஒரு பாட்டும், 'நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற' என்று பாடிய பாட்டும் இன்றுவரை நான் அடையாத ஒரு புகழ் உச்சத்தில் என்னைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், நான் செல்லும் ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வோர் இடத்திலும் அதனை நான் காண்கிறேன். முதலில், அதற்காக நான் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், இந்த ஓர் அற்புதமான தருணம், இது தொடர்கின்ற ஒரு கூட்டத் தொடர் மட்டுமல்லாது, தொடர்ந்து 100-வது நாளில் வெற்றிகரமாக நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கிட்டத்தட்ட, 100-க்கு 100 மார்க்தான் போட வேண்டும் என்று வைத்தால்கூட, ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த 100 நாட்களில், இவர்கள் மக்களுக்காக அறிவித்த அனைத்துத் துறைகள் சார்ந்த திட்டங்களைப் பார்க்கும்போது, 100-க்கு 199 மார்க் போட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் வாத்தியாராக இருந்தால் இதைத்தான் செய்ய முடியும். ஆக கடந்த ஐந்து ஆண்டுகளில், இதற்கு முந்தைய ஐந்து ஆண்டுகளில் சரியாக

1,825 நாட்கள் ஆட்சி செய்ததன் பயனாக, அன்றைய காலக்கட்டங்களில் நமது தமிழக மக்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அள்ளி வழங்கிய நலத் திட்டங்களின் பயனாக, ஒட்டு மொத்தத் தமிழக மக்களும் உண்மையோடு, பாசத்தோடு மீண்டும் தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வர வேண்டும் என்ற எண்ணத்திற்காக 32 வருடங்கள் கழித்து, ஆட்சி செய்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியே மீண்டும் தமிழகத்தில் வரவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு, இன்றைக்கு, அதே 1,825 நாட்கள் இந்த ஆட்சிப் பணிக்காலம் இருக்கின்ற தருணத்தில், நூறே நாட்களில் 199 திட்டங்களுக்கு மேலாக செயல்படுத்திவிட்டாரே! மாண்புமிகு அம்மா அவர்கள், இன்னும் இருக்கக்கூடிய 1,725 நாட்களில் தமிழகத்தில் என்னென்ன திட்டங்களெல்லாம் வரப்போகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற ஒரு மிக அகமகிழ்ச்சியில் ஒட்டுமொத்தத் தமிழக மக்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் நான் பார்க்கின்ற உண்மை.

"நாணிச் சிவந்தன மாதரார் கண்கள்
நாடுதோறும் நடந்து சிவந்தன பாவலர் கால்கள்
நற்பொருளை தேடிச் சிவந்தன ஞானியர் நெஞ்சம்
தினம் கொடுத்துக் கொடுத்துத் தேய்ந்து
கொண்டிருக்கின்றன தேவியின் திருக்கரங்கள்"

என்பதை சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பாண்டவர்களில் அர்ச்சுனனை அனைவருக்கும் தெரியும். அந்த அர்ச்சுனன், கிருஷ்ணரிடத்தில் சென்று, 'தருமரும், கர்ணனும் கேட்டதைக் கொடுக்கக்கூடியவர்கள்தான், நல்ல குணம் படைத்தவர்கள்தான். ஆனால், கர்ணனை மட்டும் ஏன் வள்ளல் என்று சொல்கிறார்கள்' என்று கேட்கிறார். உடனே கிருஷ்ணன், 'நான் உன்னை ஒரு சராசரி குடிமகனாக ஆக்குகிறேன். நீ உடனே நேராக இருவரிடத்திலும் சென்று, "வீட்டில் அடுப்பில் சமைக்க வேண்டும், எனக்கு தேக்கு மரங்கள் வேண்டும்" என்று கேள்' என்று சொல்கிறார். உடனே, அவர் நேராக தருமரிடத்தில் சென்று வீட்டில் அடுப்பு எரிப்பதற்கு தேக்கு மரங்கள் வேண்டும் என்று கேட்கிறார். அதற்கு தருமரும் உடனேயே ஒரு காவலாளியை அழைத்து, 'உடனே ஒரு தேக்கு மரத்தை வெட்டிக் கொடுங்கள்' என்று சொன்னார். காவலாளிகள் வெட்டச் செல்கிறார்கள், மழை பெய்ததால், மரங்கள் நனைந்து ஈரமாக இருக்கின்றன. அவர்கள்

[திரு. சே. கருணாஸ்] [2016 ஆகஸ்ட் 31

தருமரிடத்தில் சென்று, 'ஐயா, மழை பெய்திருக்கிறது, காய்வதற்கு இரண்டு நாட்கள் ஆகும்' என்று சொன்னார், அதற்கு அவர் சொல்கிறார், 'அவ்வாறாயின் இரண்டு நாட்கள் கழித்து மரங்களை வெட்டியெடுத்து அவர்கள் வீட்டில் கொண்டு போய்க் கொடுத்துவிடுங்கள்' என்று சொன்னார். அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். அடுத்தது, நேராக கர்ணனிடத்தில் செல்கிறார். சென்று, மேற்கூறியவாறே, வீட்டில் அடுப்பு எரிப்பதற்கு தேக்கு மரங்கள் வேண்டும் என்று கேட்கும்போது கர்ணன் உடனே காவலாளியை அழைத்து, இவர்களுக்கு மரங்களை வெட்டிக் கொடுங்கள் என்கிறார். காவலாளிகள் சென்று திரும்பி வந்து, அவர்களும், 'மழை பெய்திருக்கிறது, காய்வதற்கு இரண்டு நாட்கள் ஆகும்' என்று சொல்கிறார்கள். உடனே சற்றும் யோசிக்காமல் அந்த உளியை எடுத்து, தன்னுடைய கோட்டையிலே இருக்கக்கூடிய தேக்குத் தூணை வெட்டி, அதை உடைத்து அவருக்கு விறகாகக் கொடுக்கிறார். மீண்டும் இப்பொழுது அர்ச்சுனன் இடத்திலே கிருஷ்ணன் கேட்கிறார், 'அர்ச்சுனா, இப்பொழுது உனக்குப் புரிகிறதா? தர்மர் கேட்டவுடன் இரண்டு நாட்கள் கழித்துக் கொடுத்தார். ஆனால், கர்ணன் கேட்டதும் கொடுத்தான்; அதனால்தான் அவன் வள்ளல்' என்று சொன்னார். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்று சொன்னால், ஒட்டுமொத்த உலகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மக்களும், இன்றைக்குக் கேட்டதும் கொடுக்கக்கூடிய ஒரு முதல்வர் இந்தியாவிலேயே யார் என்று கேட்டால், எங்கள் அம்மா, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றுதான் சொல்வார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதிலே மற்ற மாநில மக்களைப் பார்த்தீர்கள் என்றால், அவர்களுக்கெல்லாம் ஒரு மனக்குறை உண்டு. எங்கள் மாநிலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்போல் ஒரு முதல்வர் இல்லையே என்று ஏங்குகின்ற ஒரு நிலையிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1-00

இன்றைக்கு விவசாயத் துறையைப் பற்றி நாம் நன்றாக சிந்தித்துப் பார்த்தோம் என்றால், மூன்று மாநிலங்களும் நம்முடைய நீராதார உரிமைகளைப் பறிப்பதிலே முனைப்போடு செயல்பட்டு தீய திட்டங்களைத் தீட்டினாலும்கூட, அதை தன்னுடைய கூரிய அறிவின் சிந்தனையாலும், சக்கரவர்த்தி திறமையாலும்

2016 ஆகஸ்ட் 31] [*திரு. சே. கருணாஸ்*]

நீதிமன்றங்களை நாடி, அந்த உரிமைகளை நானிருக்கும் வரை யாராலும் பெற முடியாது என்கின்ற உத்தரவாதத்தை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இதே சட்டமன்றக் கூட்டத் தொடரில் விவசாய மக்களுக்காக 64 கோடியே 30 இலட்சம் ரூபாய் மானிய தொகுப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக எந்த ஒரு நிலையிலும், எந்தவொரு காலகட்டத்திலும் தமிழர்களுடைய வாழ்விலும், அவர்களின் உணர்வுகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைந்திருக்கிறார்கள். 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது வல்லவன் வகுத்ததம்மா', (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வல்லவன் வகுத்த அந்த உள்ளம் உங்களிடத்திலே இருக்கும் வரை என்றைக்கும் தமிழகத்திலே உங்களுடைய நிலையான ஆட்சி நடக்கும். என்றைக்கும் அதற்கு ஒட்டுமொத்த தமிழக மக்களும், உலகத் தமிழர்களும் உங்களுக்கு நன்றியோடு இருப்பார்கள் என்று தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, இந்த 100-வது நாளிலே மட்டற்ற மகிழ்ச்சியோடு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை ஒளியால் கழகத் தொண்டர்களை காக்கும் தெய்வம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், நீங்கள் அந்தப் புலிப் படையை மறந்து விட்டீர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்த திருவாடனை தொகுதி மக்கள் சார்பாகவும், முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும் இந்தத் திட்டங்களை வரவேற்று அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை ஒளியால் கழகத் தொண்டர்களை காக்கும் தெய்வம்; ஒட்டுமொத்த தமிழக மக்களின் நம்பிக்கை தெய்வம்; அம்மா அவர்களே தமிழகத்தின் குலதெய்வம்; எங்கள் அனைவரின் இஷ்ட தெய்வம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய*

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 100 நாள் விழாவுடன் ஓராயிரம் நூறு நாள் விழா தமிழக சட்டமன்றப் பேரவையில் கொண்டாட வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 ஆண்டு காலம் நீண்ட அரசியல் வரலாற்றுக்குப் பிறகு, ஆளும் கட்சியை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் என்பதை நாங்கள் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 'திட்டங்களுக்காக மக்களல்ல, மக்களுக்காகவே திட்டங்கள்' என்று தலைசிறந்த திட்டங்களை தமிழக மக்களுக்கு நாள்தோறும் அள்ளித் தந்து, ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று 100-வது நாள் விழா கொண்டாடும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லை கலையாக்கி, களிமண்ணை சிலையாக்கி, கனிமத்தை வைரமாக்கிய ஒரே காலம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம். ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம் என்று உலகத் தொழில்கள் அனைத்தையும் உவந்து செய்வோம் என்ற கவிஞரின் வாக்கிற்கேற்ப, தமிழகத்தை தொழில் துறையில் வசந்த பூமியாக தமது ஏற்றமிகு திட்டங்களால் மெருகேற்றி வரக்கூடியவர் நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், முதற்கட்டமாக 1992 ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கையை கொண்டுவந்து, வாகன உற்பத்தியில் தொழில் புரட்சிக்கு அடித்தளம் அமைத்துத் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

2003 ஆம் ஆண்டு மின்னணுவியல் தொழிற்கொள்கை கொண்டு வந்து, மின்னணுவியலில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தித்

2016 ஆகஸ்ட் 31] [*திரு. எம்.சி. சம்பத்*]

தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2014 ஆம் ஆண்டில் உயரிய தொழில் கொள்கை, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள், மோட்டார் வாகனங்கள் உதிரி பாகங்கள் கொள்கை மற்றும் உயிரி தொழில்நுட்பக் கொள்கை ஆகியவற்றைக் கொண்டு வந்து, உயர்தரமான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்துத் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தமிழ்நாட்டில் வாகன உற்பத்தியில், 3 நிமிடங்களுக்கு ஒரு வாகனம் என்ற நிலையில், ஆண்டிற்கு 14 இலட்சம் வாகனங்கள் என்ற அடிப்படையில் இந்திய துணைக் கண்டத்திலே வாகன உற்பத்தியில் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை வாகன உற்பத்தி கேந்திரம் என்ற நிலைக்குக் கொண்டு வந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முதன்முதலாக உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட முதலீட்டை இரட்டிப்பு மடங்கிற்கு மேல் உயர்த்தி, வெற்றியோடு நடத்திக் காட்டியவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் மென்மேலும் உயர்த்தப்பட வேண்டும், ஒட்டுமொத்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிட வேண்டும், அதன்மூலம் தமிழ்நாடு தலைச்சிறந்த பொருளாதாரம் உயர்ந்த மாநிலமாக உயர்ந்திட வேண்டும் என்ற நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழில் துறைக்கு அறிவித்த அறிவிப்புகளால், தொழில் துறையின் வரலாற்றில் இன்றைய தினம் ஒரு மைல் கல்லான நாள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், உலகத் தரத்திற்கு ஒப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயிரி தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட 7 திட்டங்களை அறிவித்து, நிதி ஒதுக்கீடு அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்கி, தொழில் துறையின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.*

***DR. (TMT.) NANCY ANN CYNTHIA FRANCIS:** Hon'ble Speaker and my most beloved Amma, today is a very special day. It is the hundredth day of the sixth term (Thumping of desks) of your Government, Amma. It is not just hundred days but every day was towards building a resurgent Tamil Nadu. This hall, where deliberations regarding this State take place, is so beautifully adorned with fragrant flowers, urges me to recite the following verses about someone who has adorned our lives:

Gentle woman, powerful light,
Morning star so strong and bright, (Thumping of desks)
Gentle mother, peaceful dove,
Teach us wisdom, teach us love. (Thumping of desks)
You were chosen by the people;
You were chosen to rule the State.
You have promised to all who trust you

To lead us to that golden date-2023. (Thumping of desks)

Thank you, Amma for all the announcements under Rule 110 towards further development of industries and agriculture in the State and what is remarkable is that they are not just announcements but every announcement is implemented without delay (Thumping of desks) taking into account even the most minute detail. Amma, your tireless efforts are moving Tamil Nadu towards your Vision 2023 at the speed of light.

You are the eighth wonder of the world. (Thumping of desks) The difference between you and the other seven being, the others were built but you were created. (Thumping of desks) Thank you, Hon'ble Speaker and my most beloved Amma, for this opportunity. God be with you and bless you all your days, Amma. Thank you. (Thumping of desks)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1-10

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் காவல் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மா,*

2016 ஆகஸ்ட் 31] [திரு. இரா. துரைக்கண்ணு]

"தர்மம் தலைகாக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும் (மேசையைத் தட்டும் ஒலி)

கூட இருந்தே குழி பறித்தாலும், கொடுத்தது காத்து நிற்கும்

நீங்கள் செய்த தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும் (மேசையைத் தட்டும் ஒலி)

அள்ளிக் கொடுத்து வாழுபவன் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு

வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு-என்றும்

தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும்." (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா நீங்கள்தான் அம்மா, இந்தத் தமிழகத்தினுடைய கண்கண்ட தெய்வம்! நடமாடும் தெய்வம்! அம்மா நூறு ஆண்டுக்கால ஆட்சியில் செய்ய வேண்டிய சாதனையை நூறு நாட்களில் செய்து முடித்த சாதனை தலைவியே! சரித்திரத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன் இருந்தவர்கள் எல்லாம் தங்கள் குடும்பத்திற்காகவும், தங்களுடைய வாரிசுகளுக்காகவும் திட்டங்களைத் தீட்டினார்கள். ஆனால், நீங்கள் மட்டும்தான் அம்மா, உங்களை நம்பியுள்ள மக்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைத் தாயாக நம்பியிருக்கின்ற மக்களுக்கு, வாழ்வு அளித்தீர்கள் அம்மா! அந்த அடிப்படையில், இன்றைக்கு 100-வது நாள் கண்டிருக்கும் அம்மா! நூறு ஆண்டுக்கால ஆட்சியை நீங்கள் காண வேண்டும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இறைவனை நாங்கள் வேண்டி வணங்குகிறோம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) கருணையுள்ளம் கொண்ட தெய்வத் தாயே நீங்கள்தான் அம்மா! எங்களின் கண் கண்ட தெய்வம்! மக்களிடம் பாசமும், நேசமும், அன்பும் கொண்டு, கருணையே வடிவமாய் கோயில் கொண்டிருக்கும் நீங்கள்தான் அம்மா, விவசாயிகளின் கண்கண்ட தெய்வம்! விவசாயிகளின் வாழ்வு சிறக்க, வேளாண்மை தழைக்க, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதையே தங்களின் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு, தவ வாழ்க்கை வாழ்ந்து வரும் தாய் உள்ளமே! தானிய லட்சுமியே! மகாலட்சுமியே! ஏர்பிடிக்கும் உழவனின் ஏற்றமிகு வாழ்விற்கு ஏற்றமிகு பல திட்டங்களைத் தந்த விவசாயிகளின் காவல் தெய்வமே! கலங்கரை விளக்கமே! உலக அதிசயமே எங்கள் அம்மா! இரு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் என்ற தாரகமந்திரத்தைத் தந்து, பரந்து விரிந்த பாரத நாட்டின் உணவு தானிய உற்பத்தியில்

[திரு. இரா. துரைக்கண்ணு] [2016 ஆகஸ்ட் 31

தங்களின் சிறப்பான வழிக்காட்டுதலால், திட்டங்களால், ஐந்தாண்டுகளில் 4 கோடியே 20 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கு மேலாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து, தரணி போற்றும் புகழைத் தனதாக்கி கொண்ட தங்கத்தாரகையே, எங்கள் அம்மா! 140 இலட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானிய உற்பத்தியில் இலக்கிட்டு, அதனை நிறைவேற்ற இன்றைக்கு விதி 110-ன்கீழ் முத்தான 9 திட்டங்களை அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாய மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றிய எங்கள் அம்மா! இன்றைக்கு உங்களால் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டங்களுக்கு, 188 கோடியே 62 இலட்சம் நிதியைத் தந்து, உழவர் வாழ்வில் ஒளியேற்றிய ஒளி விளக்கே, குல விளக்கே, நவரத்தினமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளைப் பாதுகாத்திடவும், அவர்களுக்கு வாழ்வளிக்கவும், விவசாயத்தைக் காப்பாற்றவும், எத்தனை இடர்ப்பாடுகள் வந்தாலும் தாயாக இருந்து இதுவரையில் நீங்கள், 110 விதியின்கீழ் அறிவித்த திட்டங்களின்மூலம் ரூ.178 கோடியே 69 இலட்சம் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி ரூ.5,780 கோடியே 92 இலட்சம், பயிர்க் காப்பீடு திட்டத்திற்கு ரூ.487 கோடியே 31 இலட்சம், குறுவை தொகுப்புத் திட்டத்திற்கு ரூ.54 கோடியே 65 இலட்சம் மற்றும் சம்பா தொகுப்பு திட்டத்திற்கு விதி 110-ன்கீழ் ரூ.64 கோடியே 30 இலட்சம், ஆக மொத்தம், சுமார் ரூ. 6,565 கோடியே 87 இலட்சத்தை வாரி வழங்கிய வள்ளல்களுக்கு எல்லாம் வள்ளலே! வேளாண்மையின் காவலரே! (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் பெருமக்கள் சார்பாகவும், என் சார்பாகவும், தங்கள் மலர்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன் அம்மா!

"நூறாண்டு காலம் வாழ்க! (மேசையைத் தட்டும் ஒலி)
நோய் நொடி இல்லாமல் வளர்க! (மேசையைத் தட்டும் ஒலி)
ஊராண்ட மன்னர் புகழ் போலே!
உலகாண்ட புலவர் தமிழ் போலே!
அம்மா, நூறாண்டு காலம் வாழ்க
நோய் நொடியில்லாமல் வளர்க!"

அம்மா, நீங்கள் 100 ஆண்டுக்காலம் நோய் நொடியில்லாமல் நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன். இந்தத் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் நீங்கள்தான் அம்மா, நீங்கள்தான் அம்மா, என்று இறைவனை மீண்டும் வணங்கி, அம்மா உங்களின்

மலர் பாதங்களை வணங்கி, விடைபெறுகிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் திருவுருவாய், ஆற்றலின் பிறப்பிடமாய், வீரத்தின் விளைநிலமாய், வெற்றியின் விலாசமாய், (மேசையைத் தட்டும் ஒலி) அன்பு, அறிவு, துணிவு, (மேசையைத் தட்டும் ஒலி) இவை யாவையும் ஒருங்கே பெற்றெடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பிற்பகல் 1-15

6-வது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்த 100-வது நாளில் வணிக வரித் துறைக்கு முத்தான மூன்று அறிவிப்புகளை அறிவித்து, பதிவுத் துறைக்கு புதிய மின்னணு சேவையையும் வழங்கியுள்ளார்கள். இன்றைக்கு மாநிலத்திற்கு 87 சதவிகித வருவாயை ஈட்டித் தரும் வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறைகளை மேலும் மெருகேற்றிடக்கூடிய வகையில், புதியதாக அறிவிக்கப்பட்டிருக்கும் இந்த அறிவிப்புகளுக்காக, துறையின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து, வணங்கி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரது துணிவையும், பேரறிஞர் அண்ணாவின் கனவையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வள்ளல் குணத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கே பெற்று, தமிழக மக்களைப் பற்றியே எப்போதும் சிந்தித்து வரும் தமிழகத்தின் திருவிளக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மனிதர்களைக் காப்பாற்றும் மகத்தான இதயத்தைப் பெற்றது மட்டுமல்லாது, கால்நடைகளையும் காப்பாற்றும் கருணை இதயத்தைப் பெற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாசத்

தாய்க்கு கால்நடைகளின்மீது இருக்கும் பரிவு, பாசத்தின் அடையாளம்தான், இந்தத் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் தீட்டியிருக்கும் ஏராளமான திட்டங்களும், ஒதுக்கியிருக்கும் தாராளமான நிதியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலுள்ள மாநிலங்களில் எந்த முதலமைச்சரும் இதுவரை செய்யாத முன்னோடித் திட்டங்களில் ஒன்றான விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் திட்டத்தின்மூலம் கிராமப்புற ஏழைப் பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றமடையச் செய்ததோடு மட்டுமல்லாமல், மாநிலத்தின் பொருளாதாரம் முதலிடத்தை நோக்கிச் செல்ல வழிவகை செய்திருக்கிறார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு நாட்டினுடைய பெருமை மற்றும் உண்மையான வளர்ச்சி ஆகியவற்றை அந்த நாட்டிலுள்ள கால்நடைகள் (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வாறு போற்றப்படுகின்றன என்பதைக் கொண்டுதான் அளவிட முடியும்" என்று தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கால்நடை பராமரிப்புத் துறைக்கு பல்வேறு திட்டங்களை வாரி வழங்கி, செயல்படுத்தி வருகின்றது என்பதை இந்தப் பேரவையில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா நடமாடும் கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்டத்தை எஞ்சியுள்ள 27 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த 37 கோடியே 88 இலட்சம் ரூபாயும்; ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திலுள்ள அடைப்பான் நோய் தடுப்பூசி ஆய்வகத்தை நல் உற்பத்தி தரத்திற்கு மேம்படுத்தும் நோக்கத்தோடு, 36 கோடியே 66 இலட்சம் ரூபாயும்; இரண்டு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் உட்பட, 115 கால்நடை கிளை

2016 ஆகஸ்ட் 31] [திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி]

நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 28 கோடியே 92 இலட்சம் ரூபாயும்; விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஆட்டுப் பண்ணையில் தீவன விதை உற்பத்தி அலகு அமைக்க மற்றும் செட்டிநாடு, நடுவூர், ஈச்சங்கோட்டை ஆகிய அரசுப் பண்ணையில் தீவனக் கட்டிகள் உருவாக்கும் அலகுகள் அமைக்க 3 கோடியே 68 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 107 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவினத்தில் திட்டங்களை விதி 110-ன்கீழ் அறிவிப்பு செய்த, (மேசையைத் தட்டும் ஒலி) கால்நடை பராமரிப்புத் துறைக்கு மேலும், மேலும் சிறப்புச் சேர்த்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை, உழைப்பு, உயர்வு, முயற்சி, இதுவே வாழ்வின் வெற்றி என்று எங்களுக்கு நாளும் நாளும் வேதவாக்கு சொல்லும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிச் சொல்ல முடியாத எத்தனையோ துயரங்களை நித்தம் தாங்கி, இந்தியாவில் தமிழகம் முதன்மை பெற, கண் துஞ்சாது கடமையாற்றும் தனிப்பெரும் கருணையே! (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் சிகரமே, அன்பின் அகரமே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தெரசாவின் கருணையைப் பெற்றிருக்கும் செயல் வடிவமே! கர்ணனின் குணத்தை கரங்களாய் கொண்ட கண்ணியத்தின் உறைவிடமே! கரிகால் சோழனின் வீரத்தை செயலில் வகுக்கும் புனிதத்தின் புகலிடமே! தர்மத்தின் தாயகமாய், தாய்மையின் ஓவியமாய், அன்னமிடும் அட்சயமாய் விளங்கும் ஒன்பதாவது வள்ளலே! (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் மண் ஆளப் பிறந்தவராம், மதிநுட்பம் நிறைந்தவராம், எந்நாளும் மக்கள் இதயத்தில் நிறைந்தவராம், பேரறிவு, பேராற்றல், பேராண்மை, பெருந்துணிவு இவற்றின் மொத்த வடிவமாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை முதற்கண் பணிந்து வணங்குகிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஆகஸ்ட் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் வளர வேண்டும், வேளாண்மை தழைக்க வேண்டும், கால்நடைகள் வளம்பெற வேண்டும். அரசுக்கு நிதி ஈட்டித்தரக்கூடிய வணிக வரித் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும். அரசின் நிதி வருமானம் மேலும் பெருகவேண்டும். பொருளாதாரத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழவேண்டுமென்ற இலட்சியத்தை அடையும் வகையில், தனது தொலைநோக்குப் பார்வை, இயற்கையான மதிநுட்பம், சீரான திட்டமிடல், அறிவாற்றல், ஆற்றல்மிகு செயல்பாடு ஆகியவற்றின்மூலம் உலகமே வியக்கும் வண்ணம் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க சாதனை செய்து (மேசையைத் தட்டும் ஒலி) வளமான தமிழகத்தை உருவாக்கிடும் வகையில், பொருளாதார மேதை, சிந்தனைச் சிற்பி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இன்றைய அறிவிப்புகள் அமைந்துள்ளன. தமிழகம் பொருளாதாரத்தில் மேன்மையடைந்து, அதன்மூலம் இந்திய பொருளாதாரத்திலும் மிகப்பெரிய மாற்றத்தை, மறுமலர்ச்சியை, ஏற்றத்தை ஏற்படுத்த வழிவகுக்கும்வண்ணம் சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தொழிற்சாலைகள் அதிகம் என்கின்ற பெருமைமிக்க புள்ளிவிவரம் வெளியிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டிலுள்ள 2,24,000 தொழிற்சாலைகளில், தமிழகத்தில் மட்டும் 37,378 தொழிற்சாலைகள் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையான ஒரு கோடியில் 16 இலட்சம் பேர், அதாவது 16 சதவீதம் பேர் தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய பெருமையையும் தமிழகமே எட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் காரணம் மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வை, திட்டமிடல், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகம் பொருளாதாரத்தில் மிகப் பெரிய வளர்ச்சி கண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினைந்தாவது சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல், இந்த ஆண்டு மே திங்கள் 16 ஆம் நாள் நடைபெற்றது. அந்தச் சட்டமன்றத் தேர்தலில் ஆர்ப்பரித்து எழுந்த தமிழக மக்கள், உலைக்கு அரிசி தந்த

2016 ஆகஸ்ட் 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இலைக்கே ஓட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ஊண் உறக்கம் மறந்து உழைக்கும் தாய்க்கே ஓட்டு, உரிமைகளை வென்றுவந்த பெருமைக்கே ஓட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) உலக முதலீட்டை ஈர்த்துத் தந்த திறமைக்கே ஓட்டு, அரசைத் தேடி மக்கள் எனும் காலத்தை மாற்றி, மக்களைத் தேடி அரசன் என்னும் பொற்காலம் படைத்த புதுமைக்கே ஓட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆழ்ந்த ஞானத்தால், அயராத போராட்டத்தால், அன்னைத் தமிழகத்தை வாழ்வித்து வழிகாட்டும் வல்லமைக்கே ஓட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) மிக்சி, கிரைண்டர், ஃபேன் தந்த மேன்மைக்கே ஓட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தாலிக்குத் தங்கம் தந்த தாய்மைக்கே ஓட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பாமரருக்கும் பசுமை வீடு தரும் பரிவுக்கே ஓட்டு, பன்னாட்டு முதலீடுகளைப் பன்மடங்காக்கி, ஆலைகள் பெருக்குகின்ற ஆற்றலுக்கே ஓட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

மாணவர்க்கு மடிக்கணினி, மிதிவண்டி வழங்குகின்ற மகராசிக்கே வாக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்னும் மனதாலே வாழுகின்ற மாதரசிக்கே வாக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) மின்வெட்டு இருட்டிலிருந்து தமிழகத்தை மீட்டு வந்த மேன்மைக்கே வாக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி, முல்லையாற்றை காத்துத் தந்த காவியத் தாய்க்கே வாக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) கனிம வளத்தைக் காத்திட்ட கரங்களுக்கே எங்கள் வாக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) கலையுலக சுதந்திரத்தை மீட்டுத் தந்த கம்பீரத்திற்கே எங்கள் வாக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்குத் தம்மையே தந்தவருக்கும், தமிழனுக்குத் தண்ணீரைத் தந்தவருக்கும், மணிமண்டப நினைவுச் சின்னம் அமைத்து, தூய தியாகத்தைப் போற்றுகின்ற தொண்டுக்கே எங்கள் வாக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வ சன்னதிக்கும் திருப்பணிகள் நடத்துகின்ற திருவுளத்துக்கே எங்கள் வாக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) தேமதுர தமிழோசை உலகெல்லாம் பரவிடவே தினம் உழைக்கும் தியாகத்திற்கே எங்கள் வாக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) வீர விளையாட்டாம் ஜல்லிக்கட்டு தடைநீக்கப் போராடும் விவேகத்துக்கே எங்கள் வாக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) தவறிழைப்பது யாராகினும் தாட்சண்யம் பாராது தண்டிக்கும் கண்டிப்புக்கே எங்கள் வாக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என

உரைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுக்கே மீண்டும் அரியணை என மே திங்கள் 19 ஆம் தேதி தீர்ப்பளித்தனர் தமிழக மக்கள்.

பூமி குளிர்வதற்காக மேகம் மழை பொழிவதைப் போல, காடு, கழனிகள் செழிப்பதற்காக நதிகள் பாய்ந்தோடிச் செல்வதைப் போல, தமிழகத்தில் உள்ள ஏழையெளிய மக்கள் நலமோடு தொடர்ந்து வாழ்வதற்காக இப்பூமியில் அவதரித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வியத்தகு நன்மைகள் தமிழகத்தில் விளைந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) தொட்டன அனைத்தையும் துலங்க வைக்கும், நினைத்தன அனைத்தையும் நடத்திக் காட்டும் வல்லமை மிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆற்றலால் திரும்பும் திசையெல்லாம் தமிழர்களுக்கு நம்பிக்கை வெளிச்சம் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்த எண்ணம், செயலில் எளிமை, சொல்லில் சத்தியம், செய்கையில் தூய்மை உடைய நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், இளைய தலைமுறையினர் உலகத் தரத்திற்குச் செல்லும் ஆற்றல் பெற்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சிக் கடலில் திளைத்த மக்கள், மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் முதல்வராக அரியணையில் அமர்த்தினர். மே திங்கள் 19 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுவதற்கு முன்னர் மழை பொழிந்தது, பூமி குளிர்ந்தது, இயற்கையே ஆதவனை மறைத்து, மழையாகப் பெய்து, பூமியைக் குளிர்வித்து, நல்லது நடக்கப் போவதை முன்னரே உரைத்தது இயற்கையின் தீர்க்கதரிசனம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையே மீண்டும் வேண்டும் என்று எண்ணிய மக்கள், 32 ஆண்டுகளுக்குப் பின்பு, தொடர்ந்து ஆளுங்கட்சிக்கே பெரும்பான்மையைத் தந்து, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் கைகளில் ஆட்சி செங்கோலை வழங்கினர். (மேசையைத் தட்டும் ஒலி) யார் ஆட்சி, எல்லோருக்கும் விமோசனம் கொடுக்கும் என்று மக்களுக்குத் தெரியும். மே திங்கள் 23 ஆம் நாள் மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவியேற்றது.

பிற்பகல் 1-30

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று கையெழுத்திட்ட மை காய்வதற்குள், 5 நலத் திட்டங்களை அறிவித்தார்கள்.

2016 ஆகஸ்ட் 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

விவசாயக் கடன் இரத்து, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயக் கடன் இரத்து; உரக்கச் சொல்வோம் மாண்புமிகு அம்மா அவர்களே, எங்கள் சொத்து என்று! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைப் பெண் திருமணத்திற்கு எட்டு கிராம் தங்கம், ஆர்ப்பரித்து மகிழ்வோம், மாண்புமிகு அம்மா அவர்களே ஏழை மகளிரின் காவல் தெய்வம் என்று! (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் 100 யூனிட் மின்சாரக் கட்டணம் இரத்து, அகமகிழ்ந்து சொல்வோம் மாண்புமிகு அம்மா அவர்களே ஏழைகளின் ஒளி விளக்கு என்று! (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களுக்குக் கட்டணமில்லா மின்சாரம், நெஞ்சம் நிறைந்து சொல்வோம், மாண்புமிகு அம்மா அவர்கள் நெசவாளர்களின் நண்பன் என்று! (மேசையைத் தட்டும் ஒலி) மதுவில்லா தமிழகத்திற்கு ஐந்தாவது கையெழுத்து, மனதாரச் சொல்வோம், மாண்புமிகு அம்மா அவர்களே தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்த தெய்வம் என்று! (மேசையைத் தட்டும் ஒலி) வரியில்லா நிதிநிலை அறிக்கையைத் தந்து, தினந்தோறும் விதி 110-ன்கீழ் அறிவிப்புகளைத் தந்து, அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த நிதியையும் தந்து, சாதனைகளைச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசின் சட்டமுன்வடிவில் சென்னை உயர் நீதிமன்றம் என்பதற்குப் பதிலாக தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று இப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியவர் மாண்புமிகு நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல் மிகு செயல்திறனால் தமிழகத்தினை மின் மிகை மாநிலமாக ஆக்கியதுடன், எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, மின் திறனை மேலும் மேம்படுத்த ரூ.4,126 கோடி மதிப்பீட்டில் புதிய மின் திட்டங்களை அறிவித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, தருமபுரி உட்பட பல்வேறு மாவட்டங்களில் மகத்தான பயனை மக்கள் பெற்றிட ரூ.159.74 கோடி மதிப்பீட்டில் 80 பாலங்கள் கட்ட ஆணையிட்ட அன்னை மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை, கோயம்புத்தூர் உட்பட 7 மாநகராட்சிகளிலும், 4 நகராட்சிகளிலும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளை 3,229 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள ஆணையிட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் 36 நகராட்சிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினை

ரூ.116 கோடி செலவில் செயல்படுத்த உத்தரவிட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிகளில் 60.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஆணையிட்டவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத்தினைச் சேமிக்க அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள தெரு விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்ற ஆணையிட்டு செயல்படுத்தி வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற எண்ணிலடங்கா சாதனைகளைத் தினந்தோறும் நிகழ்த்தி, சரித்திரம் படைத்து வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சி 100 நாட்கள் நடைபெற்றுள்ளது. ஆனால், ஆயிரம் நாட்களில் செய்ய வேண்டிய சாதனைகளை நூறு நாட்களில் சாதித்து, சரித்திரம் படைத்துள்ளவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் ஆட்சி இருக்கிறது, அத்தனைக்கும் தீர்வும் இருக்கிறது என மக்கள் அகம் மகிழ்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் மிதிவண்டி தந்தால், மீதமுள்ள மாநிலமும் அவ்வழியே தருகிறது. மடிக்கணினி தந்தால், மற்ற பிற மாநிலமும் நம் மாதரசி வழியிலேயே மாணவர்களுக்குத் தருகிறது. மகளிர் காவல் நிலையம் அமைத்தால், மழை நீரைச் சேகரித்தால் மற்ற பிற மாநிலங்களும் மனமுவந்து ஏற்கிறது. நற்றமிழ் தாயின் திட்டங்களை நாடே பின்பற்றி நடக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நல்லரசு நாயகமாம், நம் தாயை வல்லரசும் வந்துதான் வாழ்த்தியே செல்கிறது, அம்மாவின் திட்டங்களே அகிலத்தை ஈர்க்கிறது.

தன்னிகரில்லா தலைவியாய், எண்ணி, எண்ணிப் பூரிக்கும் ஏந்தலாய், அன்னைத் தமிழகம் ஆராதிக்கும் அருந்தவப் புதல்வியாய், நன்றென நினைப்பதை நானிலம் போற்றச் செய்யும் நாயகியாய், என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் தாயே, வென்றெடுக்கும் வித்தையிலே விஞ்சுவார் இல்லை. தீமையை வேரெடுக்கும் வேள்வியிலே, யாருக்கும் அஞ்சுவதும் இல்லையென பண்ணெடுத்துப் பாடாதோர் இப்பாரினிலே இல்லை, தாயே! பட்டினிக் கொடுமையைத் துடைத்தெறிந்த பாரதத்துப் பைந்தமிழே, திராவிடத்துக் கொள்கைகளை எட்டுத் திக்கும் கொட்டி முழங்கும் தீந்தமிழே, வறுமை, வன்கொடுமை,

2016 ஆகஸ்ட் 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, இவை அனைத்தையும் விரட்டி, புரட்டி, இருந்த இடம் தெரியாமல் துடைத்தெறிந்திட்ட எங்களின் இதயத் துடிப்பே! (மேசையைத் தட்டும் ஒலி)

இனிக்கும் எண்ணங்களால், மணக்கும் வார்த்தைகளால், மல்லிகைப் பூ உள்ளத்தோடு, மங்காத உறுதியோடு, மறைந்தாலும் மாறாத விசுவாசத்தோடு, மண்டியிட்டு வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த சாதனைச் சரித்திரம் பல நூறாண்டுகள் தொடரும், தொடரும் என்று கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எடுத்த காரியம் யாவிலும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கு நோக்கிலும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணும் எண்ணங்கள் யாவிலும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் வெற்றி. எதிலும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்றும் வெற்றி; (மேசையைத் தட்டும் ஒலி) எதிலும் வெற்றி; எப்பொழுதும் வெற்றி.*

இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான இந்த ஆட்சித் தொடங்கி 100 நாட்கள் நிறைவடைந்துள்ளன.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, காலம் கடத்தாது, விழிப்புடன் செயல்படுதல், நிறைந்த கல்வி, மிகுந்த துணிச்சல் ஆகியவற்றை ஒருங்கே பெற்று, 6 ஆம் முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பேற்று, தொடர்ந்து நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

15-வது சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல் மே திங்கள், 16 ஆம் நாள் நடைபெற்றது. ஆர்ப்பரித்து எழுந்த தமிழகத்து மக்கள், தமிழகத்தை அமைதிப் பூங்காவாக்கிய தாயுருவ இராணுவத்துக்கே மீண்டும் எங்கள் ஓட்டு (மேசையைத் தட்டும் ஒலி) என உரைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுக்கே மீண்டும்

அரியணை என மே திங்கள் 19-ந்தேதி உரைத்தனர். அகமகிழ்ந்து 6-வது முறையாக மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் அரியாசனத்தில் அமர்த்தினார்கள்.

சரித்திர சாதனையாக, 32 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆண்ட கட்சிக்கே மீண்டும் ஆட்சியைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே நல்லாட்சி தொடர்ந்து மலர்ந்தது. மே திங்கள் 23 ஆம் நாள், மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவி ஏற்றது. "அரியணை அனுமன் தாங்க" எனத் தொடங்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பாடலில் இராமர் மகுடம் சூடியபோது, அயோத்தியில் இருந்த அத்தனை மக்களும் தத்தம் தலையில் மகுடம் ஏறியது போன்று மகிழ்ந்தார்களாம். அதைப்போல அம்மா அவர்கள் மீண்டும் 6-வது முறையாக முதலமைச்சராகப் பதவி ஏற்ற நாளில் அனைத்து மக்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்து மக்கள் வளம் பெறுவதற்காக சொன்னதைச் சொன்னபடி செய்து, செய்வதை மட்டுமே சொல்கிற, சொல்லாததையும் தமிழக மக்களின் உயர்வுக்காக செய்து, தமிழக மக்கள் நினைத்திட முடியாத அளப்பரிய திட்டங்களைச் செயல்படுத்தி, சத்தியத் தாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் இந்த ஆட்சி அமைந்து, 100 நாட்களில் (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணற்ற அறிவிப்புகள். ஒவ்வொன்றும் மணிமகுடத்தில் பதிக்கப்படுகிற முத்துக்கள்போல், வைரம்போல், ஒன்றை மற்றொன்று விஞ்சும் அளவிற்கு, தமிழர்கள் நெஞ்சத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிற அறிவிப்புகள். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அன்றே 5 அறிவிப்புகள். (மேசையைத் தட்டும் ஒலி)

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

இது வள்ளுவர் வாக்கு. ஏரோட்டும் உழவினர் ஏகமாய் வாழ்ந்திடவே விவசாயக் கடன்கள் அனைத்தும் இரத்து என சீரிய முதல் கையெழுத்து.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைத் தாயாகப் பாவித்து, நேரிலே பார்க்காமல் இருப்பினும், தாயாக நேசித்து வரும் மகளிர் மகிழ்வடைய, ஏழையெளிய பெண்டிர் ஏற்கும் இனிய இல்லத்திற்கு, தாய் வீட்டுச் சீதனமாய், தாலிக்குத்

2016 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

தங்கம் 8 கிராம் என (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத்தாரகையின் இன்னுமோர் கையெழுத்து.

வாழ்க்கையில் ஒளி பெற, வெளிச்சம் வந்திடவே, இல்லங்கள்தோறும் இன்புற்று மகிழ்ந்திடவே முதல் நூறு யூனிட் மின்சாரக் கட்டணம் இரத்து (மேசையைத் தட்டும் ஒலி) என இன்னொரு கையெழுத்து. மின் உற்பத்தியையும் பெருக்கி, அதன் பயன் முழுவதும் தமிழக மக்களைச் சென்றடையும் வித்தையையும் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் என நெசவாளர்களின் துயர் போக்கிடவே, கருணைத் தாயின் மற்றுமோர் கையெழுத்து. மதுவில்லா தமிழகம் வந்திடவே மற்றுமோர் கையெழுத்து.

பிற்பகல் 1-40

இமயத்தையும் இமையில் தாங்கும் வல்லமை சக்தி கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் கையிலே உள்ள பேனா தலை கவிழும்போதெல்லாம், தமிழ்ச் சமுதாயமன்றோ தலை நிமிர்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றப் பேரவையும் கூடியது. மே திங்கள் 25 ஆம் நாளன்று உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம். ஜூன் திங்கள் 3 ஆம் நாளன்று பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல். "யார் தருவார் இந்த அரியாசனம்?" என மகாகவி பாடினானே, (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்றதொரு அரியாசனத்தை இந்த எளியவனுக்கு மீண்டும் தந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் என் நன்றிகளைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை என விவாதங்கள் தொடர்ந்தன. தமிழ் மக்கள் தரணியில் உயர்ந்திட, ஏழையெளிய மக்களுக்காக, வளர்ச்சித் திட்டங்களுக்கான அறிவிப்புகளை சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்களும் பயன்பெறும்வண்ணம், ஒவ்வொரு நாளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்கள். அறிவிப்பு வெளிவந்த அரை நாளிலேயே, இங்கே நம்முடைய

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி அரசாணைகள் வெளிவருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலப் பணிகளைச் செய்கிறபோது, உண்மையிலேயே அரசு ஜெட் வேகத்திலே இயங்குகிறது என்பதற்கு நிறைய உதாரணங்களைச் சொல்லலாம்.

உழவுத் தொழில் காத்திட்ட உயிரோவியம்; சோழ நாடு காத்திட்ட சொல்லோவியம்; சோறுடைத்த வரலாற்றை மீட்டெடுத்த காவியம்; ஏர் உழுபவன் இன்னல் தீர்த்த ஏந்தல்; வறட்சி தீர்த்து வாழவைக்கும் வள்ளல்; வேளாண்மை காத்திட்ட பேராண்மை; உழவர் பெருமக்கள் ஏற்றம் பெறும்வகையிலே சிறந்த அறிவிப்புகளை இன்றைக்கு அம்மா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

விவசாயிகளின் கண் கண்ட கடவுளாக, காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், கால்நடைகளின் துயருக்கும் விடைபோட்டு, எளிய நெஞ்சங்களுக்கு வேண்டியதை எடைபோட்டு, குடை தரும் நிழலாய் இன்றைக்கு கால்நடைத் துறைக்கு கனிவான அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள்.

நேர்த்திமிகு பார்வையாலும், சீரிய செயல்பாட்டினாலும், தூய்மையான நிருவாகத்தாலும், தன்னலம் துறந்து மக்கள் நலன் காக்கும் தியாக உணர்வோடு செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்கள், வருவாய் ஈட்டித் தரும் வணிக வரித் துறை மற்றும் பதிவுத் துறைக்கு சிறப்பான அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள்.

புனித தமிழகத்தை ஜப்பான் ஆக்க புதிய வேலைவாய்ப்புகளை பன்மடங்காகப் பெருக்கி, கின்னஸ் சாதனையில் இடம் பெறும்வகையில் தொழில் துறை சார்ந்த அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இன்றைக்கு தொழில் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை ஆகிய 4 துறைகளுக்கும் சிறப்பான அறிவிப்புகள்.

மன்னர் அசோகர் திறமையாக அரசாண்டதாகவும், அவருடைய ஆட்சிக் காலத்திலே மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடும், வளமாகவும் வாழ்ந்ததாகவும் சொல்வார்கள். அசோகர் சிறப்பாக அரசாண்டார் என்பார்கள். நானும் ஒப்புநோக்கிப் பார்த்து, ஓராய்வு செய்ததிலே

2016 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

அசோகரின் சாதனைகளை விஞ்சியது அம்மாவின் சாதனைகள்தான் என்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரரசின் நிலப்பரப்பு பெருமளவு இருந்தபோதும், அசோகரின் சாதனைகள் அம்மாபோல் அதிகமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கல்விக்கும், மாணவர்க்கும் காட்டிவரும் கருணையை அம்மாபோல் அசோகர் காட்டவில்லை. வறியவர்களின் நிலை உயர வருமானம் வரும் வழிக்கு ஆடு மாடுகளை விலையின்றி அளிக்கவில்லை. இயலாத குடும்பத்தில் இளமங்கை மணம்காண தாலிக்குத் தங்கத்தைத் தரவில்லை. அம்மிக்கல், ஆட்டுக்கல் கொடுத்தாரில்லை. நல்நோக்கு சிந்தனையால் பல்நோக்குத் திட்டங்கள் படைத்துவரும் அம்மாபோல், திட்டங்களைப் படைக்கவில்லை, அசோகர். (மேசையைத் தட்டும் ஒலி) பெரும் படையை அசோகர் பின்வைத்துக் கொண்டார் எனினும், தொண்டர் படையைத் தாண்டி, தமிழ் மக்கள் என்னும் பெரும்படையை பின்புலமாகக் கொண்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிழல்தரவே மரம், செடிகளை அசோகர் நட்டாரெனினும், அரிய பல துணிவு செயல் நம் மாண்புமிகு அம்மாபோல் செய்தாரில்லை. பல்லுயிர் பலி கொடுத்தே, அசோகர் கலிங்கத்தை வென்றார் எனினும், பல்வீரச் செயல்களால் அம்மா என்றும் நெஞ்சினை வென்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றும் நின்றார். நால்வகைப் படைவீரர், அசோகரால் போர் முறை கண்டார் அன்று; பத்து கோடி குடிமக்கள், மாண்புமிகு அம்மாவால் ஏற்றமிகு வாழ்வு கண்டார் இன்று. (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளும் திறமைதனில், நன்மை தரும் சாதனையில் அசோகரை விஞ்சியது, நம் அம்மாவின் சாதனைகளே! (மேசையைத் தட்டும் ஒலி) இதனை மறுப்போர் உண்டோ இன்று! இருக்க முடியாது. அசோகர் சிறப்பான அரசர், குப்தர்களின் காலம் பொற்காலம் என்றெல்லாம் சரித்திரம் சொல்கிறது. இனி வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவார்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலே நடைபெறும் இந்த ஆட்சிக் காலத்திற்கு ஈடாக எந்த ஆட்சியும் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி) இனி வருங்காலத்திலும் அமையாது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்யும் காலமே பொற்காலம் என்று வரலாறு பேசும், (மேசையைத்

தட்டும் ஒலி) வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவார்கள். அன்பை அறமாக்கி, ஆற்றலை ஆயுதமாக்கி, அரசாட்சிக்கே இலக்கணம் படைக்கும் அரிமா பார்வை, அறிவுக் கோர்வை, நம் அம்மா அவர்களின் சீரிய சிந்தனையால் மட்டுமே சாத்தியம், அது என்றும். எங்கும் புதுமை; எதிலும் புதுமை; புதுமையிலும் புதுமை எனத் தொலைநோக்குப் பார்வையோடு (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் நலனை மட்டுமே மனதிலே கொண்டு, தமிழக மக்களின் வளத்தினை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு புதுமைத் திட்டங்கள் தந்துள்ள, பூமிக்கு வந்த புண்ணியம், புரட்சியிலே விளைந்த பொன்மனம், (மேசையைத் தட்டும் ஒலி) மக்களைக் காத்திடும் மாதரசி, 10 கோடி தமிழர்களின் இதயம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உழைப்பால் தமிழகம் வளர்ச்சியின் உச்சத்தை, உயர் சிகரத்தை நிச்சயம் எட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களே,

"நீங்க நல்லா இருக்கோணும், நாடு முன்னேற (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற" (மேசையைத் தட்டும் ஒலி)

எனத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்னும் நூறாண்டு, நூறாண்டுக் காலம் நலமாக வாழ்ந்து, மக்கள் மகிழ்ச்சியோடு வாழ அரசாட்சியைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி)

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த உறுதியோடு முயற்சி செய்யும் ஒருவருக்கு, தெய்வமே வரிந்து கட்டிக்கொண்டு, உதவி செய்வதற்காக அவர் முன்வந்து நிற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சிகளுக்கு என்றும் இறைவன் துணை உண்டு என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க வயதில்லை. அவை உறுப்பினர்கள் அனைவரின்

சார்பாக வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) வளர்க, மக்கள் நலப் பணிகள்! தொடர்க, மக்கள் தொண்டு! எனக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017
விவாதமும், வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஈ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் கைகள் மறைத்தாலும், அம்மாவை வெல்ல முடியாது. ஆயிரம் சுடர்கள் ஒளிர்ந்தாலும் அம்மாவின் நிழலினைத் தொடுவதில்லை. ஆண்டுகள் வரலாறு ஆயிரம், ஆயிரம் இத்திருநாட்டில். ஆனால், இன்றைய நாளின் வரலாறு அம்மாவின் பெயருக்கு மட்டுமே. இது என்றைக்கும், இனி யாருக்கும் கிடைக்காத தனிப்பேறு. அமைதி, வளம், வளர்ச்சியில் ஆளும் அம்மாவின் ஆட்சி, இன்று 100 ஆம் நாளின் எழுச்சியின் புரட்சி. இது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பேசும் மாபெரும் மாட்சி. மக்கள் இயக்கமாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தியாவின் வரலாற்றில் ஒரு மாபெரும் இயக்கமாக வளர்த்தெடுத்த தமிழகத்தின் வாழும் வரலாறாம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்*

பணிந்து வணங்குகிறேன்.

பிற்பகல் 1-50

பழம் பெருமைமிக்க இச்சட்டமன்றப் பேரவையில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய வரலாறு படைத்து நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இவ்வாண்டு, அதிலும் குறிப்பாக, வரலாற்று சிறப்புமிக்க நாளான இன்று, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கைகளை இப்பேரவையில் சமர்ப்பிக்கும் நல் வாய்ப்பளித்த எங்கள் வீட்டு குல தெய்வம், ஏழையெளியோரின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 174,

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3612, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3644, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3678, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3834, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4289, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4273, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1282, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1344, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செம்மொழி தமிழாய்வு மையம் மேம்பாடு செய்யவும், கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலை பராமரிப்பு செய்யவும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா காப்புகாட்டில் தொல்காப்பியருக்கு மணிமண்டபம் அமைக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2349, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாநகரில் தமிழன்னை சிலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2742, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரம்பக் கல்வியில் தமிழை கட்டாயப் பாடமாக்குவதுடன் தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் அரசு முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2841, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து வட்டாரங்களிலும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2947, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதியில் தமிழ் அறிஞர்கள்/தமிழ் மொழிப்போர் தியாகிகளின் சிலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2987, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அலுவலகங்களில் தமிழ் மொழி பயன்பாட்டினைக் கண்காணிக்க தமிழ் வளர்ச்சித் துறையினரால் வருடாந்திர ஆய்வு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3513, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில் தாய் தமிழக இணைப்பு எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 10,000/- ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3689, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாற்றில் ஆண்டுதோறும் தமிழிசை விழா நடத்த தமிழக அரசு ரூ.5 இலட்சம் வழங்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4166, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரியை தமிழகத்துடன் இணைக்கப் போராடிய தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 47- இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள்

முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3879, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ். ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண்4279,

மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4272, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, மடவாளம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு அங்கநாதீஸ்வரர் திருக்கோயிலை புதுப்பித்து மீண்டும் குடமுழுக்கு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 723, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அருள்மிகு ஸ்ரீ பழனியாண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி மற்றும் அருள்மிகு ஸ்ரீ பழனியாண்டவர் ஆடவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி ஆகிய இரண்டையும் இணைத்து பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 844, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு ஒன்றியம், காசாநாடு கோவிலூர் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலயத்திற்கு குடமுழக்கு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1014, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில் பழமையான போளூர் ஸ்ரீலெட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், பெரணமல்லூர் ஒன்றிய நெடுங்குணம் ஊராட்சி, ஸ்ரீராமசந்திர பெருமாள் கோயில்,

அருள்மிகு தீர்காசல சிவன் கோயில் ஆகியவற்றின் குடமுழுக்கு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2154, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட கோவிந்தவாடி கிராமத்தில் அமைந்துள்ள குரு தட்சிணாமூர்த்தி கோயிலில் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக தங்கும் விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2241, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேல்மலையனூர் ஸ்ரீ அங்காளம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2330, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அருள்மிகு சத்யகிரீஸ்வரர், அருள்மிகு திருமெய்யர், அருள்மிகு சத்யமூர்த்தி ஆலயங்களுக்கு திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2532, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட சோழன்மாதேவியில் ராசராச சோழனால் கட்டப்பட்ட சிவன் கோயிலுக்கும், மலைக்கோயிலுக்கும் கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2545, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த அயர்மலை ரெத்தினகிரீஸ்வரர் கோயிலில் ரோப்கார் திட்டத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2696, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2715, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் உள்ள கோயில்களை புனரமைப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2762, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சியில் சுளேபுரம் நரசிம்ம சுவாமி கோயில் தேரோட்டம் நடைபெற அந்த கோயிலின் சுற்றுப்புறச் சாலையை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2975, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதி, நெமிலிச்சேரியிலுள்ள சிவன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2982, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோயில்களில் ஒருகால பூஜை திட்டத்தின்கீழ் செய்யூர் தொகுதியிலுள்ள கோயில்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2994, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3026, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடநாதபுரம் திருக்கோவில் தேர் வலம்வர நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3046, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை (கிழக்கு) தொகுதி, சத்திரப்பட்டி அருள்மிகு குருநாதன் அங்காளபரமேஸ்வரி திருக்கோயிலில் மண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3073, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதி, புளியம்பட்டி ஊராட்சி, புளியம்பட்டியில் மதுரைவீரன் திருக்கோவில் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3119, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3132, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் பெரியமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் நடத்தவும் அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான இடங்களை கையகப்படுத்தவும், குத்தகை தொகை செலுத்தாதவர்கள்மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3151, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி தொகுதி, காட்டுக்கூடலூர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் உள்ள அய்யனார் கோயில் இடத்தில் கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3381, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3470, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியம் ஆவூரில் ஈஸ்வரன் திருக்கோயில் பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3522, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக கோயில்களில் சிலைகள் மற்றும் கோபுர கலசங்கள் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3686, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, செந்தலை கிராமத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரரேஸ்வரர் கோயில் திருப்பணி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3757, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3824, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றிய மேல்புதுப்பாக்கம் ஸ்ரீ கல்யாண வரதராச பெருமாள் ஆலயத்திற்கு புதிய ரதம் கட்டுவதுடன் மீண்டும் தேரோட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3899, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் இந்து சமய அறநிலைய துறைக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு அரசு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4014, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி, இராஜகோபாலசுவாமி கோவிலை சுற்றி தங்கும் விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4037, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சின்ன சேலம் வட்டம், கல்லாநத்தம் கிராமத்தின் அருகே கல்வராயன் மலை ஓரம் உள்ள அடிபெருமாள் கோயிலுக்கு சாலை வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4063, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4187, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் சாமி தரிசனம் செய்வதற்கு

கட்டணம் வசூலிப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4231, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வந்தவாசி தொகுதியில் வெண்குன்றம் தவளகிரி பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மற்றும் தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில்

தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அரளிக்கோட்டை எனும் ஒரு சின்னஞ்சிறிய கிராமத்தில் பிறந்த எனக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கத்தில் ஏறத்தாழ 17 ஆண்டுக் காலம் மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராகவும், தொடர்ந்து மூன்றாவது முறையாக திருப்பத்தூர் தொகுதியில் போட்டியிடுகின்ற வாய்ப்பினையும் தந்தார்கள். ஒருமுறை, 2006-2011 இல் தலைவர் கலைஞர் அவர்கள், தன்னுடைய தலைமையிலான அமைச்சரவையில், இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பையும் தந்து, அழகு பார்க்கின்ற உலகத் தமிழர்களுடைய பாதுகாவலர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய குடும்பத் தலைவர், இந்திய அரசியல் தலைவர்களில் முதுபெரும் தலைவராகப் போற்றப்படுகின்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், ‘கல்லாய் இருந்த என்னை, சிலையாய் வடித்தெடுத்து சிற்பியாக’ என்னை அரசியலில் அறிமுகப்படுத்தி, என்னுடைய ஏற்றத்திற்கு பேருதவியாக விளங்கிவரக்கூடிய நாளைய தமிழகத்தின் நம்பிக்கை

@ 265 முதல் 401 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

நட்சத்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களின் எழில் ஞாயிறு, 'நமக்கு நாமே நாயகன்' திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளர், தமிழக எதிர்க்கட்சியினுடைய தலைவர் அன்பிற்கினிய அண்ணன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவது முறையாக திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட எனக்கு, என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர்களைவிட 42 ஆயிரத்து 4 வாக்குகளை கூடுதலாகத் தந்து, என்னை வெற்றிபெறச் செய்த திருப்பத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய நன்றியை அவர்களுடைய பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உரையாற்றுகின்ற நல்ல வாய்ப்பினை நல்கிய உங்களுக்கும் என்னுடைய வணக்கங்களை உரித்தாக்குகிறேன். முதலில் என்னுடைய தொகுதி சம்பந்தமான ஒரு சில தேவைகளை நான் உங்கள் முன்வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மற்றும் சிவகங்கை மாவட்டம் குடிதண்ணீர்ப் பிரச்சினைகள் நிரம்பிய மாவட்டம் என்பதை நீங்கள் எல்லோரும் நன்கு உணர்வீர்கள். அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தால், 2006-2011 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், திருச்சி-காவேரிக் கரையிலிருந்து, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தயாரித்து, அதன் முதல் பகுதி, இரண்டாவது பகுதி, மூன்றாவது பகுதி என்று, மூன்று பிரிவுகளாகத் திட்டமிட்டு, முதல் பகுதியை கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றி, பல்வேறு பகுதிகளில் அதன்மூலமாக குடிநீர்ப் பஞ்சம் தீர்க்கப்பட்டு, இன்றைக்கும் சிறப்பாக அந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. அதைப்போல, தொடர்ந்து தொடங்கப்பட வேண்டிய பகுதி-II, பகுதி-III ஆகிய திட்டங்கள் இன்றளவும் செயல் வடிவத்தில் இருக்கின்றன. அதை விரைந்து நடத்தினால், அந்தப் பகுதி மக்கள் மட்டுமல்ல, மாவட்டம் முழுவதும் குடிதண்ணீர்ப் பிரச்சினை இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தண்ணீர்ப்

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மாவட்டத் தலைநகரங்களுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் இந்தப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, அறிவிக்கப்பட்டது. அன்றைக்கு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் பொறுப்பினை ஏற்றிருந்த, இன்றைய எதிர்க்கட்சியினுடைய தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், திருப்பத்தூர் ஒரு பேரூராட்சியாக இருந்தாலும்கூட, அங்கு அந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு இன்றுவரை இங்கே செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து திருப்பத்தூருக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தையும் நிறைவேற்றித் தருமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: அதைப்போல, திருப்பத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்து, சிங்கம்புணரியை தனி தாலுகாவாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் அவருடைய காலத்தில்தான் கொண்டுவரப்பட்டது என்றெல்லாம் பேசினார்கள். 11-8-2010 அன்று நீங்கள் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கினீர்கள். அதைப்பற்றிதானே பேசினீர்கள்? அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் 784 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) டெண்டர் விடப்பட்டு இன்றைக்கு சிங்கம்புணரி பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் 15 இலட்சத்து 92 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றி 28-12-2015 அன்று திறந்து வைத்தார்கள்.

அதேபோல திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட சிங்கம்புணரி பேரூராட்சியில் 20 ஆயிரம் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 1.29 மில்லி லிட்டர் அளவுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, திருமயம், அரிமளம், குன்றாண்டார்கோவில் புதுக்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்தது. சிவகங்கை மாவட்டம் எஸ். புதூர், சாக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 125 குடியிருப்புகளைச் சார்ந்த 6 இலட்சத்து 65 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் திருப்பராய்த்துறை அருகே காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு 23.12 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 10-1-2013 இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 301 கோடியே 50 இலட்சம் ரூபாய்க்கு உத்தரவு வழங்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, 88 விழுக்காடு பணிகள் இன்றைக்கு முடித்திருக்கிறோம். உங்கள் ஆட்சியில் நீங்கள் அறிவித்தீர்கள்; விட்டுவிட்டீர்கள். மாண்புமிகு அம்மா வந்து முடித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் அறிவிக்கப்பட்டு 88 விழுக்காடு பணி முடிவடைந்திருக்கிறது.

அதேபோல, நீங்கள் பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி பேசினீர்கள். பாதாள சாக்கடை திட்டத்தைப்பற்றி நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். 55 திட்டங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிவித்தீர்கள். 35 திட்டங்களை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டீர்கள். 20 திட்டங்களை எடுத்தீர்கள், ஒரே ஒரு திட்டத்தைமட்டும்தான் முடித்திருக்கிறீர்கள். நீங்கள் அறிவித்த 19 திட்டங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நிறைவேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரூராட்சிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தை 5 இடங்களில் அறிவித்தார்கள். அதைப்போல, 21 நகராட்சிகள், 1 மாநகராட்சிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டம் அறிவித்தார்கள். அவையெல்லாம் செயலாக்கத்தில் இருக்கின்றன. நீங்கள் அறிவித்த திட்டங்களை அப்படியே விட்டுவிட்டீர்கள். அந்தத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் அறிவித்த எல்லா திட்டங்களும் இன்றைக்கு நடவடிக்கையில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன Point of order கேட்கிறீர்கள்? உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்கள் கட்சி உறுப்பினர் திரு. பெரியகருப்பன் அவர்கள் பேசுவார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன Point of order கேட்கிறீர்கள்? உட்காருங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் நான் சொன்ன திட்டம் வேறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்த திட்டம் வேறு. மதுரை மாவட்டத்திற்கென்று பிரத்யேகமாக அந்தத் திட்டம் தீட்டப்பட்டது. அதில் சிங்கம்புணரி பேரூராட்சியில் ஒரு பகுதியும் சேர்க்கப்பட்டது. கடந்த காலத்தில், அதாவது காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பகுதி-1-ல் சிங்கம்புணரி விடுபட்டுப்போயிருந்ததன் காரணமாக, முழுமையாக மதுரை மாவட்டத்திற்குத் தீட்டப்பட்ட அந்தத் திட்டத்தில் சிங்கம்புணரியும் சேர்க்கப்பட்டது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும், மேலூரில் சமீபத்தில் விழா நடைபெற்றது. நான் ஏற்றுக்கொள்கிறேன். அது வேறு. நான் சொல்வது, அந்தத் திட்டத்தின் பெயர் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகும். திருச்சிராப்பள்ளியிலிருந்து வருவதை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அது கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்டு தேர்தலுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே திறப்பு விழாவும் நடைபெற்றுவிட்டது. பரமக்குடியில் நடைபெற்ற அந்தத் திறப்பு விழா அர்ப்பணிப்பு நிகழ்ச்சியில் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நீங்கள் அறிவித்து, செய்தீர்கள், பரவாயில்லை. நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர்கள். இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2001-2006 ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டம். இதுகுறித்து, நானும் பல தடவை இதே அவையில் தெரிவித்திருக்கிறேன்.*

நான் குறிப்பிட்டது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட, காவேரி நீரை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம். அப்போது எட்டு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அந்த எட்டு திட்டங்களில் இந்தத் திட்டமும் ஒன்று. நீங்கள் அறிவித்ததோடு விட்டுவிட்டீர்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, பணி எப்போது முடிக்கப்பட்டது என்ற விவரத்தை நான் இப்போது சொன்னேன், அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *ஆக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தத் திட்டத்தின் பகுதி-1 முடிக்கப்பட்டது. பகுதி 2 மற்றும் 3 திட்டங்களின் நிலை என்ன? அதை விரைவுபடுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.*

அதைப்போல, பாதாள சாக்கடைத் திட்டத்தை நாங்கள் அறிவித்தோம். ஆனால், அதற்கான பணிகளைத் தொடங்கவில்லை. தொடர்ந்து ஆட்சியில் இருக்கின்ற உங்களிடம் அந்தப் பணிகளைச் செய்யுங்கள் என்று கேட்பதை, நீங்கள் தவறு என்று சொல்லக்கூடாது. நான் அதை வலியுறுத்திக் கேட்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், என்னுடைய தொகுதியினுடைய தேவையை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதை குற்றமாகக் கருதக்கூடாது.

திருப்பத்தூரிலிருந்து, சிங்கம்புணரியை தனித் தாலுகாவாகப் பிரித்துத் தர வேண்டுமென்ற ஒரு நீண்டநாள் தாக்கம் அங்குள்ள மக்களிடத்தில் இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலேகூட அமைச்சர் இல்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்தான் கடந்த காலத்திலே, அந்தப் பணிகளையெல்லாம் மேற்பார்வையிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சிங்கம்புணரி தாலுகாவின் தேவை, நிலவரங்கள் நன்றாகத் தெரியும். தேவையான எல்லா தகுதிகளும் இருக்கின்றன. (குறுக்கீடு) இருங்கள், நான் முடித்துவிடுகிறேன். தயவு செய்து நான் முடித்த பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள். அதாவது பூகோள அடிப்படையிலும், மக்கள்தொகை அடிப்படையிலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிங்கம்புணரியை தாலுகாவாக உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில்தான், சிவகங்கை மாவட்டத்திலே, திருப்புவனம் மற்றும் காளையார்கோவில் பகுதிகளை புதிய வட்டங்களாக தாயுள்ளத்தோடு உருவாக்கித் தந்த முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சிங்கம்புணரி தாலுகா உருவாக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து, நான் ஏற்கெனவே பல முறை இங்கே சொன்னதைப்போன்று, பரப்பளவு, மக்கள்தொகை, வருவாய் கிராமங்கள் போன்றவை பூர்த்தியாகும் பட்சத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: நன்றி. அடுத்தபடியாக, நான் ஏற்கெனவே இதே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. இருந்தாலும், இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிங்கம்புணரிக்கு தனியாக ஒரு பணிமனை அறிவிக்கப்பட்டது. ஏனென்றால், சிங்கம்புணரி 4, 5 மாவட்டங்களை இணைக்கக்கூடிய ஒரு மையப் பகுதி. திண்டுக்கல் மாவட்டம், மதுரை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், சிவகங்கை மாவட்டம், திருச்சி மாவட்டம் இவற்றையெல்லாம் இணைக்கக்கூடிய அந்த மையப் பகுதியில் குக்கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, அங்கு ஒரு பணிமனையை அமைத்தால்தான் அந்த கிராமங்களுக்கு அரசின் சேவைகள் பரவலாகக் கிடைக்கும் என்ற காரணத்தால், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் நினைவு சமத்துவபுரம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் அந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. கோட்டைவேங்கைப்பட்டி என்ற சிங்கம்புணரிக்கு அருகிலே இருக்கக்கூடிய கிராமத்தில் ஒரு சமத்துவபுரம் அமைக்கப்பட்டது. நீங்கள் புதிதாகக் கட்ட வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கவில்லை. சமத்துவபுரம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. 100 சதவீதப் பணிகளும் முடிந்திருக்கின்றன. ஆனால், பயனாளிகள் யாருக்கும் அது வழங்கப்படவில்லை. தேர்தல் வந்தது, நீங்கள் அந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறீர்கள்.

அரசு நிலம் கையகப்படுத்தப்பட்டு, அரசின் நிதியும் அதற்காக செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால், 100 பயனாளிகளுக்கென கட்டப்பட்ட வீடுகள் இதுவரை யாருக்கும் வழங்கப்படவில்லை. அரசு நிதியும், அரசினுடைய இடமும் அங்கே வீணாக இருக்கிறது. அது சமூகவிரோதிகளுடைய புகலிடமாக மாறிக்கொண்டிருக்கிறது. போவோர், வருவோருக்கு பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு, யாராவது பயனாளிகளுக்கு அந்த வீடுகளை வழங்கினால், அரசு நிதி காப்பாற்றப்படும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திருப்பத்தூர் என்பது போக்குவரத்திற்கான மையப் பகுதியாக இருக்கிறது. குறிப்பாக, மதுரை-தஞ்சாவூர், மதுரை-புதுக்கோட்டை,

காரைக்குடி, தேவகோட்டை, அறந்தாங்கி, மானாமதுரை, திருச்சி மற்றும் இராமேஸ்வரம் செல்லக்கூடிய பேருந்துகளெல்லாம் வந்து செல்லக்கூடிய பகுதி திருப்பத்தூர். போக்குவரத்து அடர்த்தி மிகுந்த அந்தப் பகுதியில், அவ்வப்போது விபத்துகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூருக்கு அருகிலே இருக்கக்கூடியவர்கள்தான். ஆகவே, அவர்களும் அந்த நிலைமையை நன்கு உணர்வார்கள். அங்கு விபத்து ஏற்படுகின்ற நேரத்தில், அவர்களுக்கு முறையாக அவசர சிகிச்சை செய்வதற்கான வசதிகள் குறைவாக இருக்கின்றன. ஆகவே, விபத்துப் பிரிவு-CEmONC Centre ஒன்றை திருப்பத்தூர், அரசு பொது மருத்துவமனையில் துவக்கிட வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, CEmONC Centre என்பது மகப்பேறுக்காக, 24 X 7 இயங்கக்கூடிய வகையில் மகப்பேறு மருத்துவமனைகளில் உருவாக்கப்படுவது. அது சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நான் ஏற்கெனவே இந்த அவையில் குறிப்பிட்டிருக்கின்றேன். பொதுவாக விபத்து ஏற்பட்டால், அது தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும், மாநில நெடுஞ்சாலையாக இருந்தாலும், Golden Hour, Platinum Ten Minutes என்று சொல்லக்கூடிய, அந்த விபத்து ஏற்பட்ட குறித்த காலத்திற்குள், விபத்து நடந்த இடத்திற்குச் சென்று அவர்களைக் காப்பாற்றக்கூடிய அளவிற்கு தமிழ்நாடு முழுவதும் 280 சிறப்பு Ambulance வாகனங்கள் இருக்கின்றன. அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை சிறப்பாகச் செய்து கொடுங்கள், அவ்வளவுதான். முதியோர் உதவித் தொகை குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். **இங்கே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆண் பிள்ளை இருந்தாலும், பெண் பிள்ளை இருந்தாலும் எல்லோருக்கும் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியான தகவல் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் இப்படி உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள்?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: சத்தமாகப் பேசிவிட்டால், உண்மையை மறைத்துவிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதியோர் ஓய்வூதியம் குறித்து கேள்வி கேட்டிருக்கிறார். அதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசினால் எப்படி?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்பதுபோல... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி, பேரவைத் தலைவரின் உத்தரவை மீறி இம்மாதிரி எழுந்து நின்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது நல்லதல்ல என்று நான் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இனி இப்படியெல்லாம் பேசாதீர்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வூதியம் பெறுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழுமையாகத் தெரிந்துகொள்ளவேண்டும். (குறுக்கீடுகள்) சமுதாயத்திலே ஆதரவற்றவர்கள், நலிவுற்றவர்கள், ஏழையெளியோர்களின் வாழ்வாதாரத்திற்காகத்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான வரையறைகளெல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நான் ஒரே ஒரு தகவலை மட்டும் இங்கு சொல்ல விரும்புகிறேன். 1962 ஆம் ஆண்டில் 20 ரூபாயில் தொடங்கப்பட்டது இந்த முதியோர் ஓய்வூதியம். கடந்த 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு மேலாக, அந்த ஓய்வூதியம் பெறுவதற்கான விதிமுறைகளை யாருமே திருத்தவில்லை. எந்த ஒரு முதலமைச்சரும் அந்த விதிமுறைகளைத் திருத்த முன்வரவில்லை. (குறுக்கீடுகள்) அந்த விதிமுறைகளைத் திருத்தி, அனைத்து நலிவுற்றவர்களுக்கும், அனைத்து ஆதரவற்றவர்களுக்கும் முதியோர் ஓய்வூதியம் கிடைக்க வேண்டுமென்று, வரலாற்றிலே விதிமுறைகளைத் தளர்த்தித் தந்த முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தவகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசின் நோக்கம், எண்ணமெல்லாம் தகுதியுள்ளவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் கிடைக்க வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையிலேதான், முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தி.மு.க. ஆட்சியிலே வழங்கப்பட்ட ரூபாய் 1,200 கோடியைத் தாண்டி, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக உயர்ந்த ஒதுக்கீடாக 4,200 கோடி ரூபாய் வரை வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள விண்ணப்பங்களைத் தொடர்ந்து ஆய்வு செய்து, தொடர்ந்து துறையின்மூலம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 100 நாட்களிலே 47,000 புதிய ஓய்வூதிய ஆணைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பெரியகருப்பன் பேசுவார், அமைதியாக இருங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டால் முதியோர் ஓய்வூதியம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விளக்கத்தினை அளிப்பார்கள் என்று எனக்குத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முதியோர் ஓய்வூதியம் குறித்து 50 தடவை விளக்கம் அளித்திருக்கிறார்கள். நானும் அதைக் கேட்டுவிட்டேன். கடந்த ஆட்சியிலும் சொன்னீர்கள், இப்போதும் சொல்கிறீர்கள். **

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் மட்டுமே பேச வேண்டும் என்று நினைக்காதீர்கள். (குறுக்கீடு) நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள், கேட்பதற்கு அங்கே வந்திருக்கின்றீர்கள். உங்களுக்கு பதில் சொல்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களை இங்கே அமர்த்தி வைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஆகவே சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் குரலை உயர்த்திப் பேசிவிட்டால், உண்மையை மறைக்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அம்மா அவர்கள் ஆட்சியில் காலையில் கொடுத்த மனுவிற்கு, மாலையில் தீர்வு காணுகின்ற ஒரே திட்டம், அம்மா திட்டம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொல்கின்றார்கள். அதற்கு ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும், இல்லையென்றால் அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள், இல்லையென்றால் அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீக்கப்படுகிறது. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. சக்கரபாணி. (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் பேசியதற்கு, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். இருங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ரவிச்சந்திரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: திரு. சக்கரபாணி, ஏன் நீங்கள் இவ்வளவு கோபமாக இருக்கின்றீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் ஓய்வூதியம் பற்றி... (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சக்கரபாணி, ஏன் நீங்கள் இவ்வளவு வேகமாக பேசுகின்றீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு வேகமாகப் பேசினாலும், அது* record *ஆகாது. நான் உங்களுக்கு மைக் தரவில்லை. நீங்கள் எதற்கு இவ்வளவு வேகமாகப் பேசுகின்றீர்கள்? (குறுக்கீடுகள்) எதற்கு இவ்வளவு வேகம்? உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல, உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றார், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் ஓய்வூதியம்பற்றி இங்கு ஏற்கெனவே பல முறை கேள்வி கேட்கப்பட்டு, அதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உரிய பதிலை, தக்க பதிலை பலமுறை அளித்திருக்கின்றார்கள். திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். அவர் பேச ஆரம்பித்து அரை மணி நேரம் ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்திருக்கின்றார். நீங்கள் எல்லோரும் சேர்ந்து, அதைப் பற்றி அவரை பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் விட்டுவிட்டு, தேவையில்லாததையெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். இந்த* O.A.P. *குறித்து பல முறை சரியான விளக்கங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்றார்கள். திரும்பத் திரும்ப அதைப்பற்றி ஏன் பேசுகின்றீர்கள்? நீங்கள் மானியக் கோரிக்கையின் மீது பேசுங்கள்.*

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அறநிலையத் துறையில் பொறுப்புள்ள மந்திரியாக இருந்திருக்கிறீர்கள். இன்றைக்கு அத்துறையின்மீதான மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெறுகிறது. நீங்கள் ஏற்கெனவே வருவாய்த் துறையின்மீது அதிகம் பேசிவிட்டீர்கள். நீங்கள் மறுபடியும் தேவையில்லாதவற்றைப் பேசி, உங்களுக்கான மானியக் கோரிக்கையின்மீது பேசும் நேரத்தை வீணடிக்காதீர்கள். நேரமாகிவிட்டால், பிறகு நான் வேறு உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். ஆகவே, நீங்கள் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒரு O.A.P. குறித்து கேட்டதற்கு 15 நிமிடங்கள் எடுத்துக்கொண்டார்கள். பிறகு, நாங்கள் எப்படிப் பேசுவது? ஒரு O.A.P. குறித்து கேட்கிறேன், ** (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்றெல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. ஆதாரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அதைப் பார்த்துவிட்டு, சரி, இதன்மீது நீங்கள் பேசலாம் என்று பேசச் சொன்னால்தான் நீங்கள் பேச முடியும். நீங்கள் அனைத்தையும் பேசிவிட்டு, அவையும் பதிவாகிய பின்பு, அதன் பிறகு ஆதாரத்தைக் கொண்டுவந்து காண்பிக்கிறேன் என்று சொன்னால் அவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இத்துறையில் மந்திரியாக இருந்தவர். ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுத்தான் பேசவேண்டும் என்று அவருக்குத் தெரியாதா? (குறுக்கீடு) பிறகு எதற்கு தேவையில்லாதவற்றையெல்லாம் பேசுகிறீர்கள்?*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவை முன்னவர் அவர்கள் ஏற்கெனவே ஒரு... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்கார்ந்துகொண்டு பேசுவது ஏதும் அவைக் குறிப்பில் வராது. அவையனைத்தும் தேவையில்லாதது. (குறுக்கீடு) நான் உறுப்பினருக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன், நீங்கள் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவை முன்னவர் அவர்கள் கடந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில். . .*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரே ஒரு* O.A.P. *என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது மாவட்டத்தைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். சிவகங்கை மாவட்டத்தில் 74,894 பேர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது புனித அரசில் ஒய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவாய்த் துறையின்மீது பேசுவதற்குப் பதிலாக, இன்றைக்கு நடக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்மீது பேசக்கூடாது என்பதற்காகத்தான் இவர்கள் எல்லாம் எழுந்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பெரியகருப்பன், நீங்கள் 1-55 மணிக்கு பேச ஆரம்பித்தீர்கள். தற்போது மணி 2-22 ஆகிறது. நீங்கள் இன்னும் மானியக் கோரிக்கையின்மீதே பேசவில்லை. (குறுக்கீடுகள்) பிறகு, நீங்கள் ஒரு மணிநேரம் பேசுவீர்கள், (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டதாக நான் உங்களுக்கு சொல்லுவேன். (குறுக்கீடு) பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்? (குறுக்கீடு) அவைக்கு வெளியே சென்று பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுக்கு பேச வாய்ப்பே தருவதில்லை என்று சொல்வீர்கள். (குறுக்கீடு) உங்கள் தொகுதி சம்பந்தமான கோரிக்கையைப் பேசினால்கூட பரவாயில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் வேறு ஏதேதோ பொருள் குறித்தெல்லாம் பேசுகிறார். (குறுக்கீடு) மானியக் கோரிக்கையின்மீது பேசமாட்டேன் என்கிறார். (குறுக்கீடு) பிறகு நேரமாகிவிட்டால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) தற்போது மணி 2-22. இன்னும் ஐந்து நிமிடங்கள் உங்களுக்கு நேரம் ஒதுக்குகிறேன். மானியக் கோரிக்கையின்மீது பேசி உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் 2-22 என்கிறீர்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ½ மணி நேரமாக பேசுகிறேன் என்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, தாங்கள் பேசிய 27 நிமிடங்களைத்தான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ½ மணி நேரம் என்று சொன்னார்கள். வேறு ஒன்றும் இல்லை. பேசி உரையை முடியுங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: இது பொதுவான விஷயம். தமிழ்நாட்டிற்கே பொதுவான விஷயம். அதுவும், துறை சம்பந்தமானது. மஞ்சுவிரட்டு, ஜல்லிக்கட்டு பற்றி மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், நான் இங்கு துறையைப் பற்றிப் பேசவேண்டுமானால், இதுவும் இந்து சமய அறநிலையத் துறை தொடர்புடையதுதான். ஜல்லிக்கட்டுப் பிரச்சினை, எவ்வளவு serious matter. அது குறித்து இதே அவையில் பேசியிருக்கிறேன், நீங்களும் கேட்டீர்கள், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் பதில் சொன்னார்கள். நிச்சயமாக எந்தத் தடையும் இல்லாமல் தை மாதம் மஞ்சுவிரட்டு நடத்துவோம் என்று சொன்னீர்கள். ஆனால் இதுவரை அதற்கான எந்த signal-ம் வரவில்லை. பார்த்து அதை விரைவுபடுத்துங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டுப் பிரச்சினை தொடர்பாக தற்போது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் நல்ல தீர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் முயற்சி செய்யாமல் இருக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்குரிய சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து, அதுகுறித்து வாதாடுவதற்கு சட்ட வல்லுநர்களை நியமித்திருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: இன்னும் ஒரே ஒரு கோரிக்கை, தொகுதி சம்பந்தமானது. பிறகு நான் துறையைப் பற்றி பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2.30-க்கு நீங்கள் பேசிமுடித்துவிட வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லையென்றால் அதன்பிறகு ஒரு நிமிடம்கூட நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, TNRRIS. அது உள்ளாட்சித் துறையில்தான் வருகிறதென்று நினைக்கிறேன். சாலை போடும் பணிக்காக கணக்கெடுத்தார்கள். அளவுகளை எல்லாம் அளந்துகொண்டு சென்றார்கள். கல்லல் ஒன்றியம், அந்த ஒன்றியத்தில் ** சீரமைப்பிற்காக அதனை 3 தொகுதிகளாக பிரித்துவிட்டார்கள். திருப்பத்தூர் தொகுதியில் 22 ஊராட்சிகள், சிவகங்கையிலே 19 ஊராட்சிகள்; காரைக்குடி சட்டமன்றத் தொகுதியிலே 3 ஊராட்சிகள்; ஆக 44 ஊராட்சிகள் பிரிக்கப்பட்டு 3 தொகுதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 6 பணிகளை எடுக்கிறார்கள். **

பிற்பகல் 2-25

அடுத்து, திருப்பத்தூர்-திண்டுக்கல் மற்றும் மதுரை-திருப்பத்தூரை இணைக்கக்கூடிய இரண்டு சாலைகள் இருக்கின்றன. அதற்கு புதுத் தெரு என்று பெயர். அதையும் இதேமாதிரி கணக்கெடுத்துக்கொண்டு போனார்கள். அதேமாதிரி காரையூர் மற்றும் திருவிடையார்பட்டி சாலைகளைப் போடாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். சாலைகளின் நிலையைப் பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கச் சொல்லுங்கள்.

இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், மிக முக்கியத்துவம் வாய்ந்த துறை. இது நம்முடைய முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வின் அடையாளமாக, வழிபாட்டுத் தலங்களாக மட்டும் திருக்கோயில்கள் அமைந்திடாமல் நம்முடைய முன்னோர்களுடைய கலைநயத்தை வெளிப்படுத்துகின்ற வகையிலும், நம்முடைய கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் பெருமை சேர்க்கின்ற வகையிலே திருக்கோயில்கள் அமைந்திருக்கின்றன. ஏறத்தாழ 38,630

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திருக்கோயில்கள் கொண்ட இந்தத் துறையில் 4,78,000 ஏக்கர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அதைப்போல கட்டடங்கள், திருக்குளங்கள், மரத்தேர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், தவறான ஒரு தகவலைச் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்புச் சாலைகள் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, ** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 234 தொகுதிகளுக்கும் தேவையான அனைத்தையும் செய்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது சிறப்புச் சாலைகள் திட்டம். இதுபோல் பல திட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு திட்டத்தின்கீழும் ஒரு சாலையை அமைப்பார்கள். ஒவ்வொரு திட்டத்திற்கென்று விதிமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு மாதிரி சொல்லியிருக்கிறார், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்தாண்டு காலத்தில் மட்டும் அனைத்துத் தொகுதிகளுக்கும் உள்ளாட்சித் துறையின்மூலம் கிட்டத்தட்ட 17,954 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இன்றைக்கு 64,488 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைத்திருக்கிறார்கள். ஆனால், (குறுக்கீடு) கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 6,823 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கியிருந்தீர்கள். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியது 14,954 கோடி ரூபாய். உங்களைவிட அதிக தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல் எல்லா தொகுதிகளுக்கும் நிதி ஒதுக்குகிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குற்றச்சாட்டு மாதிரி சொல்லியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தச் சாலை இந்தமாதிரி பழுதடைந்திருக்கிறது என்பதை குறிப்பிட்டுச் சொன்னால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன் அவர்கள் பேசுகிறபோது ஆதாரமில்லாமல், ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மற்ற விஷயங்களை நீங்கள் பேசி முடியுங்கள். திரு. ஆஸ்டின், உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின், நீங்கள் சம்பந்தமில்லாமல் எழுந்து நின்று பேசாதீர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு என்ன வேண்டும்? (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, உங்களுக்கு நான் அனுமதி தரவில்லை. பின்னர் பேசலாம், உட்காருங்கள். திரு. பெரியகருப்பன், பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, என்ன விஷயம்? சொல்லுங்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நீங்கள் பேசிக்கொண்டிருக்கக்கூடிய பொருள் குறித்த விவாதத்தில் என்னுடைய தொகுதியின் 3 பஞ்சாயத்துக்களையும் சேர்த்துக்கொண்டு சாலைகள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், இன்னும் ஒரே நிமிடத்தில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: நான் முதலிலே உங்களுக்கு நன்றி சொல்லிவிட்டேனே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எவ்வளவு எதிர்ப்புத் தெரிவித்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. நான் சொல்ல வருவது, நீங்கள் 1-55 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது மணி 2-30 ஆகிறது. (குறுக்கீடுகள்) அமைச்சர்களின் குறுக்கீடுகள் இல்லை. நீங்கள் வேறு துறையைப் பற்றியெல்லாம் பேசி முடித்துவிட்டு, எனக்குப் பேசுவதற்கு நேரம் கொடுங்கள் என்றால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நான் என்ன செய்ய முடியும்? ஒரே நிமிடத்தில் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லையென்றால், நான் வேறு உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அதற்கென்ன செய்வது? நீங்கள் எடுக்கின்ற முடிவிற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்? 35 நிமிடங்கள் உங்கள் உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதற்கு மேல் எப்படி வாய்ப்புக் கொடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) வெளியில் போய் பேரவைத் தலைவர் எங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) 35 நிமிடங்கள் அவர் வேறு விஷயங்களை மானியத்திற்கு சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறார். அப்புறம் எப்படி நேரம் தருவது? (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. திரு. பெரியகருப்பன், நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) உங்களைப் பேசவிட்டால், நீங்கள் மானியக் கோரிக்கை மீது பேசாமல் வேறு subject-ல் பேசினால் நான் என்ன செய்ய முடியும்?

பிற்பகல் 2-30

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: பேசியதே ஒன்றிரண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவசுப்பிரமணி, ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள், உட்காருங்கள். உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், நீங்கள் உட்காருங்கள். உங்களை நான் பேசக் கூப்பிடவில்லை. தேவையில்லாமல் எழுந்திருக்காதீர்கள். தி.மு.க. உறுப்பினர்கள் தினமும் இதே பாணியைத்தான் கடைப்பிடிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) பேசுகிற வரையிலும் பேசுகிறீர்கள். கடைசியாக பேச வாய்ப்புக் கொடுங்கள் என்று எல்லோரும் எழுந்து நின்று chorus-ஆக சத்தம் போடுகிறீர்கள். இது முறையல்ல, இது அவை நடத்துவதற்கு நீங்கள் தருகின்ற ஒத்துழைப்பு அல்ல. (குறுக்கீடுகள்) நான் 35 நிமிடங்களுக்கு மேலாக

வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். இதற்கு மேல் அவருக்கு நான் என்ன வாய்ப்பு தர முடியும்? அவர் சம்பந்தா சம்பந்தமில்லாமல் வேறு துறையில் பேசுகிறார். அதையெல்லாம் உங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் அவையை நடத்த வேண்டும். இன்னும் 5 உறுப்பினர்கள் பேசிய பின்னர் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை இருக்கிறது. மணி 2-30 ஆகிறது. (குறுக்கீடுகள்) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் கேட்கக்கூடாது, அதற்கெல்லாம் உங்களுக்கு உரிமை கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதென்றால் பேசுங்கள். நீங்கள் மானியக் கோரிக்கையில்தான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. பெரியகருப்பன், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அதை நீங்கள் பயன்படுத்தவில்லை. நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கையில் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) என்னவென்று சொல்லுங்கள் திரு. சக்கரபாணி. முதலில் உங்கள் உறுப்பினர்களையெல்லாம் அமைதியாக உட்காரச் சொல்லிவிட்டு, அதன் பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன நியாயம் சொல்லப் போகிறீர்கள்?

திரு. அர. சக்கரபாணி: ஏற்கெனவே, உங்கள் தலைமையிலே அலுவல் ஆய்வு குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே நீங்கள் என்ன முடிவெடுத்தீர்கள் என்பது அவை முன்னவர் அவர்களுக்கும் தெரியும். அன்றைக்கு பேசுகின்ற சமயத்திலே, 3 பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேச வேண்டுமென்று கேட்டோம். நீங்கள் 4 பேர் பேசிக்கொள்ளுங்கள் என்று கூறினோம். நீங்கள் என்ன கூறினீர்கள், நீங்கள் 2 பேர் பேசுங்கள், நாங்கள் 3 பேர், காங்கிரசில் ஒருவர் என்று சபையை தினந்தோறும் 2 மணிக்கு முடிக்க வேண்டும், அதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று சொன்னீர்கள். இன்றைக்கு மானியக் கோரிக்கை ஆரம்பித்ததே 1-55-க்குத்தான். (குறுக்கீடுகள்) நான் பேசி விடுகிறேன். பிறகு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதேமாதிரி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மாலை 5-30 மணியாக இருந்தாலும், இந்தச் சபை நடப்பதற்கு நாங்கள் ஒத்துழைப்புக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். தினந்தோறும்

எதிர்க்கட்சித் தலைவர் இருந்துவிட்டுத்தான் செல்கிறார். எனவே, நாங்கள் புறக்கணிக்கவில்லை. மக்கள் பிரச்சினையை, தொகுதிப் பிரச்சினையைப் பேசுவதற்காகத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதி பிரச்சினையாக இரண்டு, மூன்று கோரிக்கைகள் வைத்து விட்டு மானியக் கோரிக்கையில் பேசுகிறார். இரண்டு நிமிடங்கள் அல்லது மூன்று நிமிடங்கள் கொடுப்பதற்கு நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்? அருள்கூர்ந்து அந்த மானியக் கோரிக்கையின்மீது அவர் சில நிமிடங்கள் பேசுவதற்கு அவை முன்னவர் அனுமதி பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவை சுமுகமாக நடைபெற வேண்டும். அதற்கு நாங்கள் ஒத்துழைப்புத் தருகிறோம். நீங்கள் கொஞ்சம் அனுமதி கொடுங்கள். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன் அவர்கள் கோரிக்கையாக வைக்கவில்லை. அவர் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காக (குறுக்கீடுகள்) பேச விடுங்கள். நீங்களாக பேசினால் எப்படி? இது முதலில் நியாயமா? முதலில் என்ன பேசுகிறேன் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) கேட்ட பிறகு உங்களில் யாராவது ஒருவர் எழுந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் ** என்று சொல்கிறார். அது தவறு. மாண்புமிகு கொறடா அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அவர் Highways-ல் நீண்ட நாட்களாக காண்ட்ராக்டராக இருந்தவர். அந்தந்த மாவட்ட அலுவலர்கள் road chart ஒன்றை பராமரித்து வருகிறார்கள். பஞ்சாயத்து சாலை, பஞ்சாயத்து யூனியன் சாலை, டவுன் பஞ்சாயத்து சாலை, முனிசிபாலிட்டி சாலை, நெடுஞ்சாலை இவர்கள் எல்லோரும் road chart-ஐ பராமரித்து வருகிறார்கள். அந்த road chart-ஐ பராமரிக்கும்போது, ஒரு சாலை போடப்பட்டால், அதனுடைய கால அளவு, மறுபடியும் எப்போது சாலை போடப்படவேண்டும் என்று விதியிருக்கிறது. மூன்று ஆண்டு, ஐந்து ஆண்டு, ஏழு ஆண்டு என விதி இருக்கிறது. ஆக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒரு திட்டம் பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து யூனியனுக்கோ, பேரூராட்சிக்கோ, நகராட்சிக்கோ, நெடுஞ்சாலைக்கோ, அந்த நிதி மாவட்ட அளவில் கொடுக்கின்றபோது, அந்த road chart-ஐ எடுத்து, அந்தக் கால அளவு, நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்கு மேல் கடந்த சாலைகள் போடப்படாமல் இருக்கிறதா என்பதைப் பார்த்து, அந்த மாதிரி வகைப்படுத்தப்பட்ட சாலைகளுக்குத்தான் முன்னுரிமை கொடுத்து எடுக்கிறார்கள். இதில் எந்தப் பாகுபாடும் கிடையாது. தொகுதி அளவில் யாருக்கும் எந்தப் பாகுபாடும் கிடையாது. யாருக்கும் முன்னுரிமை கொடுப்பதில்லை. சாலைகள் பழுதுபட்டிருந்தால், அதற்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும், கடுமையான வெள்ளம் ஏற்பட்டு, சாலைகள் மோசமான நிலையில் இருந்தால், அதை எடுத்துக்கொள்ளலாம் என்ற விதியும் இருக்கிறது. இதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். என் தொகுதியில் இந்தச் சாலை மிக மோசமாக இருக்கிறது, அதனை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமோ அல்லது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடமோ அந்தச் சாலையை போட்டுத் தர கேட்டுக்கொள்கிறேன் என்று கோரிக்கையாக வைத்தால், பிரச்சினையே கிடையாது. நீங்கள் ஒரு மாதிரி கொண்டு போகிறீர்கள். எடக்கு மடக்காகவே பேசிக்கொண்டு போனால், எப்படி? அது நன்றாகவா இருக்கிறது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா இவ்வளவு விளக்கமாக சொன்னீர்கள். நாங்கள் கேட்டுக்கொண்டோம். ஆனால், உங்கள் உறுப்பினர் இன்று ஆரம்பித்ததிலிருந்து மானியக் கோரிக்கைக்கு அவர் எப்போது வந்தார்? (குறுக்கீடுகள்) அப்புறம், நான் எங்கிருந்து அவருக்கு நேரம் தருவது? (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களும் இதே முறையைப் பின்பற்றினால், மற்ற உறுப்பினர்களுக்கு நான் நேரத்தை எப்படி தருவது? (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்களுக்கு நான் எப்படி வாய்ப்பு கொடுப்பது? (குறுக்கீடுகள்) நீங்கள் மட்டும்தான் சபையில் இருக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் 35 நிமிடங்கள் பேசிவிட்டு, 35 நிமிடங்கள் சம்பந்தமில்லாமல் பேசிவிட்டு, எங்களுக்கு வாய்ப்பு கொடுத்துதான் ஆகவேண்டும் என்று, அத்தனை பேர்களும் chorus-ஆக கேட்டால், எப்படி பேரவைத் தலைவர் குறிப்பிட்ட நேரத்திற்குள் அவை நடவடிக்கைகளை நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் வாய்ப்பு கேட்பது என்பது வேறு. ஆனால், என்னை இப்படி

நிர்பந்தப்படுத்துவது என்பது வேறு. நிர்பந்தப்படுத்துவதற்கு இந்தப் பேரவைத் தலைவர் பயப்படமாட்டார். (குறுக்கீடுகள்) நிர்பந்தப்படுத்தினால், இந்தப் பேரவைத் தலைவர் நிச்சயமாக பயப்படமாட்டார். ஆனால், நீங்கள் கோரிக்கையாக வைத்தால், நான் அதைப் பரிசீலிக்க முடியும். ஆனால், அவர் இன்றைக்கு கேட்டது நியாயமில்லை. 35 நிமிடங்கள் வேறு பொருள் பற்றி பேசிவிட்டு, என்னை வற்புறுத்தி கேட்பது எப்படி? இதுபோன்று எல்லா உறுப்பினர்களும் கேட்டால், நான் எப்படி அவர்களுக்கு வாய்ப்புத் தர முடியும்? (குறுக்கீடுகள்) கொறடா, நீங்கள் எனக்கு உத்தரவாதம் தருகிறீர்களா? எங்கள் உறுப்பினர் மானியக் கோரிக்கையின்மீதுதான் பேசுவார் என்ற உத்தரவாதத்தை எனக்கு தருகிறீர்களா? (குறுக்கீடு) சரி. அப்படி என்றால், உங்கள் உறுப்பினரை ஐந்து நிமிடங்களில் பேசி முடிக்கச் சொல்லுங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) குறுக்கீட்டில் பத்து நிமிடங்கள் போய்விட்டன. (குறுக்கீடுகள்) நான் அவரிடம்தான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன், நீங்கள் நேரடியாக உறுப்பினர்களிடம் பேச வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எனக்கு அறிவுரையும் சொல்ல வேண்டாம். நீங்கள் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *நான் எங்கு ஆரம்பித்து, எங்கு முடிப்பது என்பது தெரியவில்லை. (குறுக்கீடுகள்) நான் வைத்திருந்த குறிப்பைத் தேடிக் கொண்டிருக்கிறேன். சுருக்கமாகப் பேச வேண்டும் என்று சொல்கிறார். (குறுக்கீடு)*

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்ன பிரச்சினை? (குறுக்கீடு) திரு. பெரியகருப்பன், சீக்கிரம் பேசி உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் தெரிவித்துள்ளபடி, பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்கள், பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள், புலங்கள், மரத் தேர், வெள்ளித் தேர், தங்கத் தேர், கல்வி*

நிறுவனங்கள், கல்லூரிகள், “கோ”சாலைகள் போன்றவற்றை நிருவகிக்கும், பன்முகத் தன்மைகொண்ட ஒரு துறை இந்து சமய அறநிலையத் துறை. இந்த இந்து சமய அறநிலையத் துறையில் நான் கேட்க விரும்புவது, இதுவரை எந்தக் காலத்திலும் ** இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த துறை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியகருப்பன் அவர்கள் ** குறித்து பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் ** குறித்தெல்லாம் பேச முடியாது. நீங்கள் துறை சம்பந்தமாக வேறு ஏதாவது பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ** குறித்து பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேவையில்லாத பிரச்சினை. ** என்பதை அவருக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) ** நானும் அதைத்தான் சொன்னேன்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த துறைக்கு, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர் கோயிலுக்குப் போகாதவராக இருக்கலாம்; கோயிலுக்குப் போகாதவராக இருந்தாலும்கூட, இந்தத் துறை ஒரு கண்ணியமான துறை, ஒரு கவனமான துறை, ஒரு sensitive ஆன துறை என்ற காரணத்தினாலே, எந்தவிதமான சிறு தவறுகளும் அதிலே நடந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தது மட்டுமல்ல, எங்களுக்குக் கடுமையான உத்தரவுகளையும் அன்றைக்கு அவர் பிறப்பித்திருந்தார். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. பெரியகருப்பன், நீங்கள் கொடுத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தமாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் நன்றி சொல்லி உட்காருங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: நான் நன்றியை முதலிலேயே சொல்லிவிட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

***திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நித்தம், நித்தம் அனுதினமும் வணங்கும் எங்கள் குடும்ப. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணி, நன்றாக, மைக்குக்கு அருகில் நின்று பேசுங்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: நாங்கள் நித்தம், நித்தம் அனுதினமும் வணங்கும் எங்கள் குடும்ப தெய்வம், எங்கள் சிந்தையெல்லாம் நிறைந்திருக்கும் அன்னை பராசக்தியின் வடிவம், நம்மை வழிநடத்தும் காவல் தெய்வம், வாழும் மனித தெய்வம், எங்கள் இதய தெய்வம், வணக்கத்திற்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, இந்தியத் திருநாட்டிலே, தமிழகத்தை தலைநிமிரச் செய்து, 6-வது முறையாகப் பொறுப்பேற்று, இந்த 100-வது நாளில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்றும் விசுவாசமாக இருக்கும், கொங்கு மண்டலம், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள 51 வேலம்பாளையம் கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தில் பொன்னுசாமி கவுண்டர்-சரஸ்வதி தம்பதியரின் மகனாகப் பிறந்த என்னை, கழகத்தில் 1984 ஆம் ஆண்டு முதல் 51 வேலம்பாளையம் கிளைக் கழகச் செயலாளராகவும், ஈரோடு மாநகர் மாவட்ட அம்மா பேரவையின் இணைச் செயலாளராகவும், ஈரோடு மாநகர் மாவட்ட கழகச் செயலாளராகவும், 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஈரோடு மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும் பணியாற்றிட வாய்ப்பு அளித்து, 2016 சட்டமன்ற தேர்தலிலே இந்த எளியவனை மொடக்குறிச்சி தொகுதியிலே கழகத்தின் வேட்பாளராக அறிவித்து வெற்றி பெற வைத்த அம்மா அவர்களுக்கும், இரட்டை இலைச் சின்னத்திற்கு வாக்களித்த மொடக்குறிச்சி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்கி, ஆன்றோர்களும், சான்றோர்களும் அமரும் அவையிலே அமரச் செய்த, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத

தனிப்பெரும் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) 8 திசைகளிலும் வாழ்கின்ற தமிழர்களின் ஒரே நம்பிக்கை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதலிலே அவர்களுடைய பொற்கமல பாதங்களில் என் சிரம் தாழ்ந்த நன்றியை இதயத்தின் அடித்தளத்திலிருந்து பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 2-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறையருளும், திருவருளும் நிரம்பப் பெற்று இறைவனே ஆட்சி செய்வதுபோல தர்மதேவதையாய் ஆட்சி நடத்தும் அம்மா அவர்களின் வழிகாட்டுதல்படியும், அறிவுரையின்படியும், தயாரிக்கப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது நான் உரையாற்றும் நல்வாய்ப்பு வழங்கிய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைக் கூறி என் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகப் பொதுமறையாம் திருக்குறளில் முதலிலே இடம்பெற்றிருப்பது கடவுள் வாழ்த்து. அதிலே சிறப்பாக இடம்பெற்றது ஏழாவது திருக்குறள்.

"தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது."

அதாவது, தனக்கு ஒப்புமை இல்லாத தலைவருடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக் கவலையை மாற்ற முடியாது என்பது இதற்கு பொருள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனக்கு ஒப்புவமை இல்லாத தலைவராக, இறைவனாக விளங்கிக்கொண்டிருக்கின்ற அம்மா அவர்களுடைய திருவடிகளை நான் வணங்குகிறேன். நல்லவர்கள் அத்தனை பேரும் வணங்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலெல்லாம்

எல்லா துறைகளும் செழித்தோங்குகின்றன என்றால், ஆன்மீகத் துறையில் சமயமும், தமிழும் தழைத்தோங்குவதைக் காண்கின்றோம். எல்லா சமயங்களைச் சார்ந்தவர்களும் தங்களுடைய நம்பிக்கைப்படி இறைவழிபாட்டை மேற்கொள்கின்ற சுதந்திரம் யாருக்கும் எந்தக் குறுக்கீடும் இல்லாதவகையில் முழு பாதுகாப்பு அளிக்கப்பட்டு, உண்மையான மதச்சார்பற்ற தன்மை பின்பற்றப்படும் மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம்தான் என்ற பெருமையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 724 திருக்கோயில்களுக்கு நாள்தோறும் பக்தர்களுக்கு அன்னதான திட்டத்தைச் செயல்படுத்தும் அன்னபூரணியாக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட ஒரு சிறப்பான திட்டம் எந்த மாநிலத்திலும் இல்லை. தரமான, சுவையான உணவை நாள்தோறும் வழங்குகின்ற அம்மா அவர்களை திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் மனதார வாழ்த்துகிறார்கள்; மனதார நன்றி கூறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எத்தனை நாள் தொடர முடியும் என்று கேலி பேசியவர்களெல்லாம் இன்றைக்கு வாயடைத்துப் போயிருக்கிறார்கள். இது முடியுமா என்று மலைத்துப்போய் திணறுகின்ற பணியைக்கூட தன் மதிநுட்பத்தால், ஆற்றலால் முடித்துக்காட்டுகின்ற வல்லமைபடைத்த ஒரே முதலமைச்சர் நம் அம்மா அவர்கள்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிதிலமடைந்த நிலையில் காணப்பட்ட திருக்கோயில்கள் எல்லாம் இன்றைக்கு திருப்பணிகள் செய்யப்பட்டு, தினமும் ஒருகால பூஜையாவது நடைபெற உறுதிசெய்யப்பட்டதென்றால் நம்முடைய வாழும் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியின்போதுதான் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் இங்கு பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

2016 ஆகஸ்ட் 31][திரு. வே.பொ. சிவசுப்பிரமணி]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அம்மா அவர்கள் எல்லா மதத்திற்கும் பொதுவானவராக இருந்து கடமையாற்றுகிறார்கள். ரம்ஜானுக்கு வாழ்த்து சொல்வது மட்டுமல்ல. தனது சொந்த செலவிலே இப்தார் விருந்தளிக்கின்றார். அதேபோலதான் கிருஷ்ண ஜெயந்தியின்போதும், தீபாவளி பண்டிகையின்போதும் மக்களுக்கு வாழ்த்து சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில தலைவர்கள் போலியானவர்கள். தீபாவளியைப் பற்றியும், விநாயகர் சதுர்த்தியைப் பற்றியும் பேசமாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்துக்களின் உணர்வுகளையும், பக்தர்களின் உணர்வுகளையும் கொச்சைப்படுத்துவார்கள். தீக்குண்டத்தில் இறங்கி நேர்த்திக் கடன் செலுத்தும் பல இலட்சக்கணக்கான பக்தர்களைப் புண்படுத்தி பேசிய தலைவர்களையும், நெற்றியில் குங்குமம் வைத்துக்கொண்டதை, என்ன, இரத்தமா வடிகிறது என்றுகூட கேலி பேசிய தலைவர்களையும். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அவர் உங்களைப் பற்றிச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறார். திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, நீங்கள் பேசுங்கள்.*

பிற்பகல் 2-50

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *கேலி பேசிய தலைவர்களையும் மக்கள் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள். தெய்வம் அதற்கு உரிய தண்டனையைத் தந்திருக்கிறது. இனியும் தரும், ஆனால் அவர்கள் நேரத்திற்குத் தகுந்தாற்போல் நிறம் மாறுகிறார்கள். வீட்டிலே இருப்பவர்களை கோயிலுக்கு அனுப்பி . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள் என்ன பேசுகிறார் என்பதை பொறுமையாகக் கேளுங்கள்.*

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்றும் இல்லாத அளவிற்கு 8,840 கோயில்களில் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, குடமுழுக்குகள் சிறப்பாக நடைபெற்றன. (மேசையைத் தட்டும்*

ஒலி) 2006 முதல் 2011 வரை செய்யப்பட்டதைவிட இது இரண்டு மடங்கு அதிகம் என்பதை மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறை நம்பிக்கையுள்ள கோடிக்கணக்கான பக்தர்கள் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பாராட்டி வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையிலே கோயில்கள் நிறைந்த நகரமாம் கும்பகோணத்தில் மகாமகம் திருவிழா நடைபெற்றது. இந்தியா முழுவதிலுமிருந்து பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மகாமகம் குளத்தில் நீராடி, அங்கே உள்ள திருத்தலத்தில் வழிபட்டு ஊர் திரும்பினார்கள். இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்த வைபவத்தில் ஒரு சிறு அசம்பாவிதம்கூட நடைபெறவில்லை என்ற சாதனையை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே வந்த பக்தர்கள் எல்லாம் அரசு செய்த ஏற்பாடுகளைப் பார்த்து மனமாரப் பாராட்டினார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில் சொத்துகளை எல்லாம் பாதுகாக்கின்ற காவல் தெய்வமாக தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் விழிப்பான நடவடிக்கைகளின் காரணமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படியும், அம்மா அவர்கள் வழங்கிய உத்தரவை ஏற்று கடந்த ஐந்தாண்டுகளில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான 1,940 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலத்தின் மதிப்பு மட்டும் சுமார் 2,445 கோடி ரூபாய் என்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் எந்த அளவிற்கு அறநிலையத் துறை அலுவலர்கள் அக்கறை செலுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 31][திரு. வே.பொ. சிவசுப்பிரமணி]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதேபோலத்தான், வக்ஃபு வாரியத்திற்கு பல நூறு கோடி ரூபாய் சொத்துகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இந்து மத பக்தர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மானசரோவருக்கும், முக்திநாத்துக்கும் சென்று வழிபட வேண்டுமென்று விரும்புவார்கள். எல்லோருக்கும் அந்த வசதி இருக்காது. இதுபோன்ற தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மானசரோவர் செல்வதற்கு 40 ஆயிரம் ரூபாயும், முக்திநாத் செல்வதற்கு 10 ஆயிரம் ரூபாயும் மானியமாக அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பது பக்தர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு வரவேற்று, மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆன்மீகமும், பக்தியும், சமயமும், தமிழும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் தழைத்தோங்கும், செழித்து சிறக்கும் என்பதால்தான் இறைவனே அம்மா அவர்களின் நல்லாட்சி வர வேண்டுமென்று அம்மா அவர்களுக்கு முழு ஆசியை வழங்கியிருக்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன். எனது தொகுதி சம்பந்தமான ஒரு கோரிக்கையை மட்டும் எடுத்துச் சொல்லி, எனது உரையை முடிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு வெங்கடேச பெருமாள் திருக்கோயில், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று தெய்வங்களின் சன்னதி கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில் முன்பாக அமைந்துள்ள காவேரி ஆற்றுப் படித்துறையில் அண்டை மாவட்டத்திலிருந்தும், மாநிலத்திலிருந்தும் பக்தர்கள் வந்து நீராடி தீர்த்தம் எடுத்துச் செல்வதை புண்ணியமாகக் கருதுகிறார்கள். மேலும், பல கோயில்களுக்கு இங்கிருந்து தீர்த்தம் எடுத்துச் செல்லும் சம்பிரதாயமும் உண்டு. இந்த பிரசித்திபெற்ற தலத்தில் அமைந்துள்ள காவேரி படித்துறையை விரிவுபடுத்தி, அங்கு பக்தர்கள் தங்கும் விடுதியும், உடை மாற்றும் வசதி மற்றும் சாலை மேம்பாடு ஆகியவற்றை செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டி பிற கோரிக்கைகளை அவையிலே பேசியதாக

அவைக் குறிப்பில் பதிவு செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண, மொடக்குறிச்சி ஒன்றியத்திற்கு காவேரியை ஆதாரமாகக் கொண்டு பாசூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், கொடுமுடி ஒன்றியத்திற்கு காரணாம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு, கோவை மாவட்டங்களில் அதிகமான அளவில் உள்ள தென்னை விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யப்படுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வேண்டுகிறேன். அதேபோல் இளநீர், தேங்காய் நார் போன்ற உபபொருட்களை மகளிர் சுய உதவிக் குழுமூலம் விற்பனை செய்து, விவசாயிகள் வாழ்க்கை வளம் பெற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மஞ்சளுக்கு வாரியம் அமைக்க நடவடிக்கை எடுப்பதோடு, விரலி மஞ்சளை அரைத்து பிளாஸ்டிக் டிரம்களில் அடைத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது பற்றி பரிசீலித்து ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை நான் பணிவோடு வேண்டுகிறேன்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்க, சர்க்கரையின் சந்தை விலை குறைந்த காலங்களில், எத்தனால் உற்பத்தியை அதிகப்படுத்தினால், ஆலைகள் இலாபத்தில் இயங்க வழி ஏற்படும் என்று இத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் கூறுகிறார்கள். இது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பரிசீலிக்குமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

ஈரோடு, கரூர், திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களை இணைக்கும் வகையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே ஈரோடு

மாவட்டம், அஞ்சூர் கிராமம், பொரசப்பாளையத்தில் இருந்து கரூர் மாவட்டம், ரங்கசாமி கோயில் இடையே உயர்மட்டப் பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வேண்டுகிறேன்.

தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு, பல நூறு ஆண்டுகள் பூரண நலத்துடன் (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த எங்கள் இதய தெய்வம், நான் நித்தம் நித்தம் வணங்கும் என் குடும்ப தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

***திரு. வி. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேமதுரத் தமிழாக, தெய்வீக அமுதாக, உச்சரிக்கும்போதே உள்ளமெல்லாம் இனிக்கின்ற அம்மா எனும் ஆண்டவனின் வடிவாக, (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கென வாழா துறவியாக, தமிழினம் செழிக்கவே தன்னையே தந்திட்ட தாயெனும் அருவியாக, தேன் தமிழ் பூமியாள, தெய்வாம்சமாகி வந்த திராவிடத்தின் இறைவியாக, அளவில்லா கருணையோடு, அன்பு உள்ளத்துக் கனிவோடு அவதரித்த அமுதசுரபியாக, ஓடி, ஓடி உழைப்பவரைத் தேடித் தேடி உயர்த்துகிற ஒப்பில்லா வள்ளலாக, இதுதான் அளவு என இலக்கணம் வரையறுக்காத இமயத்துப் பொறுமையாக, இல்லார்க்கு, இயலார்க்கு ஏற்றங்கள் தருவதற்கே ஒப்பில்லா தம் பிறப்பை ஒப்படைத்து வாழுகின்ற தியாகத்தின் பெருமையாக வாழுகின்ற கலைமகளே! வாரித் தரும் மலைமகளே! வாகையின் வசிப்பிடமே! வல்லமையின் பிறப்பிடமே! வரலாறும் வாழ்த்திசைக்கும் வசந்தத்தின் இருப்பிடமே! மூவேந்தர் நாட்டுக்கு வாய்த்திட்ட மூன்றெழுத்துக் கவசமே! முத்தமிழின் சுவாசமே! அகம் நிறைய கனவோடு, முகம் நிறைய கவலையோடு, புலராதோ விடியல் எனப் போராடும் ஏழையர்க்கு புதுப் பாதை வகுத்து, புது கீதை உரைத்து, புனர்

வாழ்வு தருகின்ற புரட்சிகளின் விலாசமே! கசிகின்ற விழிநீரை கனிவால், கருணையால் துடைக்க வந்த அன்னை தெரசாவின் அச்சுப் பிசகா பாசமே! அன்னைத் தமிழ் பூமிக்கு ஆண்டவன் அருளிய அள்ள, அள்ளக் குறையா நேசமே! (மேசையைத் தட்டும் ஒலி) புகழ் மணக்கும் பூமிக்கு பொன்மனத் தாயாகி வந்த எங்கள் பொக்கிஷமே!

படர்கின்ற கொடிக்குத் தேர் தந்த பாரியாக, என் போன்ற பாமரத் தொண்டனுக்கும் பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியம் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு கழக வேட்பாளராக என்னை அறிவித்து, ஒளி வீசும் முழுமதியாம் அம்மா, தங்கள் திருமுகத்தால் பல்லாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறும் வாய்ப்பினை வழங்கி, புனிதமிக்க இந்தப் பேரவைக்குள் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினராகப் பாதம் பதிக்கின்ற அரிய, பெரிய வாய்ப்பை இந்தக் கடைக்கோடித் தொண்டனுக்கும் கருணையோடு வழங்கி, என்னை வாழ்வித்து, வழி நடத்தும் என் வழித்துணை தெய்வமே! தங்களின் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலசங்கள் கோபுரங்களின் அம்சங்கள். கோபுரங்கள் கொண்டிருக்கும் கோயில்கள் மனித வாழ்வை நெறிப்படுத்தி, வழிநடத்தும் நிகரில்லா கவசங்கள். அந்தக் கலசங்களின் பெருமையை இந்த கண்ணியம் மிக்க பேரவையில் எடுத்துரைக்கும் வாய்ப்பை கலசப்பாக்கத்தின் சட்டமன்ற உறுப்பினராகிய எனக்கு வழங்கிய, நான் கண்ணால் காணும் கடவுளாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதலில் என் நன்றியையும், உளமார்ந்த வணக்கத்தையும் உரித்தாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறம் போற்றும் ஆலயங்கள் நம் வாழ்விற்கு வரம் தந்து வழிநடத்தும் ஆச்சரியங்கள். இறை உறையும் இடம் கோயில். அது ஆன்மாவின் அழுக்கை சுத்திகரிப்புச் செய்யும் தெய்வீகத் தொழிற்சாலை. அது, அமைதி தவழும் வாழ்வை மக்களுக்குத் தருகின்ற அன்பு கலாசாலை. அறுபடை வீடுகளும், அரங்கன் உறங்கும் பூலோக சொர்க்கமும், 108 திவ்ய திருத்தலங்களும், சேதுக்கரை இராமேஸ்வரமும், திருவண்ணாமலை தொடங்கி தில்லை நடராசரின் தெய்வீகச் சிதம்பரம் வரையிலான பஞ்சபூதத்

தலங்களும், பார் வியக்கும் தஞ்சை பெருவுடையார் கோயிலும், அன்னை மீனாட்சி அருளாட்சி புரிகின்ற மாமதுரை மீனாட்சி சொக்கநாதர் ஆலயமும், காஞ்சி காமாட்சி திருத்தலமும் என்றெல்லாம் புவி போற்றும் புண்ணியத் திருத்தலங்களை, பழமைமிகு புராதனச் சிற்பங்களை பண்டைத் தமிழர் கட்டடக் கலைக்குக் கட்டியங்கூறும் கண்கொள்ளாக் கலைநயமிக்க திருக்கோயில்களைப் போற்றிப் பாதுகாப்பது நம் பொன்மனத் தாயின் பொற்கால அரசு.

பள்ளியிலும் பந்தியிட்ட நம் பாசத் தாயின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) 724 ஆலயங்களிலும் அன்னமிட்டு, 64,075 அடியார்கள் பசி போக்கும் அட்சயமாகத் திகழ்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவனை தரிசித்துப் போகின்ற மக்கள் தங்கள் புனிதப் பயணத்தை அமைதியோடு மேற்கொள்ள பக்தர்கள் தங்குவதற்குத் தங்கும் அறைகள், துயில் கூடங்கள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் போன்ற சகல வசதிகளையும் ஆலயங்களில் செய்து கொடுத்தும், அங்கே அன்னதானத் திட்டங்களை நடத்திப் பசியைப் போக்கியும், உலக ஆன்மீகத்திற்கே வழிகாட்டும் ஒப்பில்லா அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு திகழ்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் 12,504 திருக்கோயில்களில் ஒருகால பூஜை திட்டம் நடைபெற்று வருகிறது. 8,843 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து, குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது.

பிற்பகல் 3-00

நடப்பாண்டில் 1,000 திருக்கோயில்களை பழுதுநீக்கி, புதுப்பிக்க ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பெருமைப்படத்தக்கது ஆகும். 135 திருக்கோயில்களில் உள்ள 158 திருத்தேர்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். கடந்த ஐந்தாண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறையில் பணிபுரியும் 767 அலுவலர்களுக்கு ரூபாய் 2.12 கோடி மதிப்பீட்டில் மடிக்கணினி வழங்கி மாபெரும் சாதனை படைத்தவர்

மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், இசைக் கலைஞர்கள், அரையர்கள் இவர்களின் ஓய்வூதியத்தை 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலங்களில் அபகரிப்பு, ஆக்கிரமிப்பு கைவரிசையை ஆலய சொத்துகளிலும் காட்டிய வளைப்புக் கும்பல்களிடமிருந்து, ஆலய சொத்துகளை அதிரடியாய் நம் அம்மா அரசு மீட்டு வருவது, இதுவரை தமிழகம் காணாத புரட்சியென்றால், அது மிகையல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெய்வீகத் திருப்பணியையும், தேன் தமிழ் அறப் பணிகளையும் இரு கண்களாகக் கொண்டிருக்கும் நம் இணையில்லா தாயின் அரசு, தமிழ் வளர்ச்சியிலும், தமிழுக்கு தனி மகுடம் சூட்டுகிற தன்னிகரில்லா பெருமையிலும் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கே சான்றாகத் திகழ்கிறது. உலகமே மதிக்கும் மொழியாம், உலகையே மயக்கும் மொழியாம் அன்னைத் தமிழ் மொழிக்கும், நெஞ்சையள்ளும் தஞ்சையில் உலகத் தமிழ் மாநாடு கண்டு, நான்காம் தமிழுக்கு நடை கூட்டியது நம் நற்றமிழ்த் தாயின் அரசு. தொன்மைத் தமிழுக்குத் தொண்டாற்றும் தெள்ளுதமிழ் அறிஞர்களை, தினம் பாடிக் களிக்கும் கவிஞர்களைக் கொண்டாடி மகிழ்கிறது. ஈரடியில் உலகளந்த இறை காவியம் வள்ளுவத்தை, சிந்து கவித் திறத்தால் விந்தைமிகு இந்தியத்தில் விதையாக முளைத்து, முத்தமிழில் திளைத்த முண்டாசுக் கவிஞன் பாரதியின் பாடல்களை சீன, அரபு மொழிகளில் மொழிப்பெயர்த்தது, ஒப்பில்லா தமிழ் மொழிக்கு உலகளாவிய பெருமை சேர்க்கிறது.

அரச குலத்தில் அவதரித்து அதிகாரம் பாடிய சிலம்புக் கவி இளங்கோவடிகள், உடலை வருத்தி, உடைமையை விற்று, ஊரெங்கும் தேடி, கரையானுக்கு இரையாகாது காப்பியங்களைக் காத்துத் தந்த உ.வே.சா., மணம் வீசும் மங்காத்தமிழ், மதங்களைக் கடந்து பொங்கும் தமிழ் என்பதை உலகுக்கே உணர்த்திய உமறுப் புலவர், ஜி.யு. போப் என ஆயக் கலைகளை அறிவூட்டும் மருந்தாக்கிய அறிஞர்கள் பெயராலேயே விருதுகள் வழங்கி, அன்னைத் தமிழ் பெருமையை நம் அம்மாவின் அரசு கண்ணாகக் காத்து நிற்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கப் பல் கட்டிக்கொண்டால் ஒருவன் உதிர்ப்பதெல்லாம் பொன்மொழி ஆகிவிடாது. செஞ்சிக்கோட்டை மலைக்கு சுள்ளி பொறுக்கப் போகிறவனெல்லாம் தேசிங்கு ராஜா ஆகிவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, அட்டைக் கத்தியை வைத்துக் கொண்டிருப்பவனெல்லாம் அலெக்சாண்டர் ஆகிவிட முடியாது. பொல்லாதோர் சுமக்கிற பல்லக்கில் அமர்ந்து வருகிற பக்தர்களெல்லாம் ஒரு நாளும் ஏணிகளின் தயவின்றி வான் தொட்ட வல்லமையின் வடிவமாம் எங்கள் அம்மா எனும் ஒற்றைச் சொல் மந்திரத்திற்கு நிகராக முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லி, மகாவிஷ்ணு கரத்துச் சக்கரமாக, மகாசிவன் கைகளின் சூலாயுதமாக, கந்தன் கரத்து வேலாக, காவியத்து ராமன் வில்லாக, கருணைத் தாய் விரல் காட்டும் இரட்டை இலை, அது கழகத்திற்கு எவரும் நிகரில்லை என்பதை உணர்த்தும் அலை. (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சியிலும் நம் நல்லாட்சியே என்பதை நாளைய கல்வெட்டு சரித்திரமாய் உரைக்கும் நிலை என்பதைச் சொல்லி, வலிமை மிக்க வாய்ப்புகளை என் போன்ற எளியோருக்கும் வழங்கி, வாழ்விக்கும் பிரம்மமே, வாகைகள் குவிப்பதற்கே வடிவெடுத்த சிம்மமே, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் வாய்ப்பினை இந்தச் சாமானியனுக்கு வழங்கிய, நான் கண்ணால் காணும் கடவுளாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜமுனாமரத்தூர் பகுதியில் சுமார் 50,000 மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் 50 கி.மீ. பேருந்தில் பயணம் செய்து போளூர் அல்லது கலசப்பாக்கம், செங்கம் தாலுகா அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. ஆதலால், மலைவாழ் மக்களின் வாழ்வு மேம்பட பல்வேறு திட்டங்களை வாரி வழங்கி, மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பாடுபட்டு வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்துடன்

போளூர், கலசப்பாக்கம் மற்றும் செங்கம் பகுதியிலிருந்து உள் வட்டங்களைப் பிரித்து ஜமுனாமரத்தூரை தலைமையாகக் கொண்டு ஒரு புதிய வட்டத்தை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னையே, தமிழகத்தின் தவப்பயனே! கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் பள்ளிப் படிப்பை முடித்து பெண் குழந்தைகள் கல்வி கற்க, இருபாலர் இணைந்து பயிலும் திருவண்ணாமலை அல்லது செய்யாறு அரசு கலைக் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். ஜவ்வாது மலையிலிருந்தும், மிகவும் உள்ளடங்கிய குக்கிராமங்களிலிருந்தும் பெண் குழந்தைகள் தங்கள் இல்லங்களிலிருந்து பேருந்து பிடித்து நகரத்திற்குச் சென்று கல்லூரியில் கல்வி பயின்றுவர 6 மணி நேரம் செலவாகிறது. ஆதலால், எங்கள் தொகுதியில் உள்ள ஏழையெளிய விவசாய கூலித் தொழிலாளி மக்களின் பெண் குழந்தைகளுக்கு உயர் கல்வி பயில்வது என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் அருள்கூர்ந்து, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற அந்தப் பகுதியில், பெண்களின் கனவை நனவாக்கும்விதத்தில், மகளிர் மாண்பு மேம்பட ஒரு நாளில் 24 மணி நேரத்தில், 20 மணி நேரம் மக்களுக்காகப் பாடுபடுகின்ற மாதரசி மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரியை தங்கும் உணவு விடுதியுடன் வழங்க தங்கள் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதியில் 90 சதவிகிதம் மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் கரும்பும், நெல்லும் விவசாயிகளின் முக்கியமான விளைபொருள்களாகும். எனவே, ஒரு அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையையும், தமிழ்நாடு அரசு சார்பாக மிகப் பெரிய உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கினையும் ஏற்படுத்தித் தர ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், போளூர், செங்கம்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கலசப்பாக்கம் உள்ளடக்கிய சட்டமன்றத் தொகுதிகளில் ஓர் அரசு பொறியியல் கல்லூரிகூட இல்லை. மிகப் பெரிய தனவந்தர்களால் திருவண்ணாமலையில் தனியார் பொறியியல் கல்லூரிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அங்கு சாதாரண ஏழையெளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு இலட்சக்கணக்கில் பணம் செலவழித்து, பொறியியல் படிப்பில் சேர்ப்பது என்பது பகல் கனவாகவே உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் அருள்கூர்ந்து, தாயுள்ளத்தோடு கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், ஓர் அரசு பொறியியல் கல்லூரியை நிறுவ வேண்டுமாய் தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியின் வளர்ச்சிக்கான மீதமுள்ள கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்தச் சட்டப் பேரவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கலசப்பாக்கம் தொகுதி, போளூர் ஊராட்சி ஒன்றியம், படவேடு பகுதியிலுள்ள செண்பகத்தோப்பு அணையில் மதகுகளை சீரமைத்துத் தருமாறும், ஜமுனாமரத்தூர் மலைப் பகுதியில் சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருமாறும், மேலாரணி அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து, பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி தொடங்கிடுமாறும், கலசப்பாக்கம் கிராம ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தருமாறும், புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியை முதல் நிலைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தருமாறும், கலசப்பாக்கத்தில் பேருந்து நிலையம் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, படவேடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அருள்மிகு படவேடு ரேணுகாம்பாள் திருக்கோயிலுக்கு வெள்ளித் தேர் செய்து தருமாறும், மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குமாறும், போளூரிலிருந்து வீரளூர் வரை செல்லும் என்.சி. வீரளூர் சாலையை விரிவுபடுத்தித் தருமாறும், மிருகண்டா நதி நீர்த்தேக்கத்தைத் தூர்வார ஆவன செய்யுமாறும்,

தென்மகாதேவமங்கலம் ஊராட்சி பர்வதமலை மல்லிகார்ஜுன சுவாமி திருக்கோயிலைத் தரிசிக்கவரும் பக்தர்கள் வசதிக்காக இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் தங்கும் விடுதிகள் கட்டித் தரப்பட வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட எலத்தூர் மேட்டூர் ஊராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அமைந்துள்ள இரண்டு குளங்கள் பழுதடைந்துள்ளதால், பக்தர்களின் வசதிக்காக அந்தக் குளங்களைச் சீரமைக்கவும், அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வெள்ளித் தேர் செய்து தருமாறும், மேல்சோழங்குப்பம் ஊராட்சி, மிருகண்டா நதி அணையின் அருகில் சுற்றுலாத் துறைமூலம் சுற்றுலா வந்து செல்லும் பயணிகளின் வசதிக்காக பூங்காக்கள் அமைத்துத் தருமாறும், கோவில்மாதிமங்கலம் ஊராட்சியிலிருந்து துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மேப்பத்துரை ஊராட்சியிலுள்ள கிழக்குமேடு கிராமத்திற்கு செய்யாற்றின் குறுக்கே செல்லும் சாலையில் தரைப் பாலம் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட பூண்டி ஊராட்சியிலிருந்து பழங்கோயில் ஊராட்சிக்கு செய்யாற்றின் குறுக்கே செல்லும் சாலையில் தரைப்பாலம் அமைத்துத் தரவும், மிருகண்டா நதியின் குறுக்கே மேல்வில்வராயநல்லூர் ஊராட்சியிலிருந்து எர்ணாமங்கலம் ஊராட்சிக்குக் குறுக்கே செல்லும் சாலையில் தரைப்பாலம் அமைத்துத் தரவும், ஆணைவாடி ஊராட்சிக்குச் செல்லும் செய்யாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நடைப்பாலம் முழுப் பயனடையாமல், கடந்த 10 ஆண்டுகளாக குறையாகவே உள்ளது. ஏதாவது திட்டத்தில் சிறப்பு நிதியை ஒதுக்கி, அந்தப் பாலத்தை விரைவில் கட்டி முடித்துத் தர வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிராயம்பட்டு முதல் பழங்கோயில் வரை செல்லும் பாதைக்கு மேம்பாலம், மேல்சோழங்குப்பம் மிருகண்டா நதி செல்லும் சாலைக்கு மேம்பாலம் அமைத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்சோழங்குப்பம் உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டடம் அமைத்துத் தருமாறும், மட்டவெட்டு ஏரிக்குச் செல்லும் நீர்வரத்துக் கால்வாய் மேம்பாலம் அமைத்துத் தருமாறும்,

கலசப்பாக்கத்தில் அமைந்துள்ள திருமாமுடீஸ்வரர் திருக்கோயிலுக்கு மரத்தேர் செய்து தருவதற்கும் அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அல்லியந்தல் முதல் ஐப்திகாரியந்தல் வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம், அன்னநந்தல் முதல் அல்லியந்தல் வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தருமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலையிலிருந்து காஞ்சிபுரத்திற்குப் பிரிந்து செல்லும் இடுகாத்தூர் சாலையில் செய்யாற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தருமாறும், காரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் கூடுதல் கட்டடம் கட்டித் தருமாறும், மேல்சோழங்குப்பம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நரசிங்கநல்லூர் ஊராட்சியில், நரசிங்கநல்லூர் காலனி வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தருமாறும், காரப்பட்டு ஊராட்சியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தருமாறும், காரப்பட்டு ஊராட்சியில், மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டித் தருமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

படிஅக்ரஹாரம் ஊராட்சியில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறும், காரப்பட்டு ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தருமாறும், படிஅக்ரஹாரம் முதல் தேவனந்தல் ஊராட்சி வழியாக புதுப்பாளையம் வரை தார்ச் சாலை அமைத்துத் தருமாறும், படிஅக்ரஹாரம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறும், படிஅக்ரஹாரம் ஆற்றங்கரையில் செக் டேம் (தடுப்பணை) அமைத்துத் தருமாறும், படிஅக்ரஹாரம் ஊராட்சியில் கிணறு மற்றும் O.H.T. 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு டேங்க் மற்றும் வேடியப்பன் நகரில் 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்க் அமைத்துத் தருமாறும், வேடியப்பன் நகரில் 1.5 கிலோ மீட்டர் தார்ச் சாலை புதியதாக அமைத்துத் தருமாறும், படிஅக்ரஹாரம் ஊராட்சி மற்றும் வேடியப்பன் நகருக்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் 5 நெற்களம் அமைத்துத் தருமாறும், படிஅக்ரஹாரம் ஊராட்சியில் கல்வெர்ட்

5 அமைத்துத் தருமாறும், ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் அமைத்துத் தருமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

படிஅக்ரஹாரம் ஊராட்சியில் நடுநிலைப் பள்ளிக்கு புதியக் கட்டடம் கட்டித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் பயணியர் தங்கும் விடுதி கட்டித் தர வேண்டும். மேல்சோழங்குப்பம் பகுதியில் உள்ள மிருகண்டா நதி அணை மற்றும் படவேடு பகுதியில் உள்ள செண்பகத்தோப்பு அணைகளைத் தூர் வாரி சீர்செய்து தர வேண்டும். கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கம் பகுதியில் சிப்காட் அல்லது சிட்கோ தொழிற்பேட்டை துவங்க வேண்டும். புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியில் பத்திரப் பதிவு அலுவலம் அமைக்க வேண்டும். ஜமுனாமரத்தூரில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து பணிமனை அமைக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் அரசு சார்பில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும்.

கோயில்மாதிமங்கலம்-கீழ்தாமரைப்பாக்கம் வரை செல்லும் பாதை, சோழவரம்-கீழ்பொத்தரை வரை செல்லும் பாதை மற்றும் காரப்பட்டு-மட்டவெட்டு வரை செல்லும் பாதைக்கு மேம்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள். உங்களுக்கு முன்னர் பேசிய 2 ஆளுங்கட்சி உறுப்பினர்களும் ஒவ்வொருவரும் 10 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறார்கள்.

திரு. எச். வசந்தகுமார்: 10 நிமிடங்கள் எனக்குப் பேசுவதற்குப் போதாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதே முறையை நீங்களும் பின்பற்றுங்கள். (குறுக்கீடு) அதே முறையை நீங்களும் பின்பற்றுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூதறிஞர் இராஜாஜி அவர்களால் எழுதப்பட்ட, 'குறை ஒன்றும் இல்லை, மறை மூர்த்தி கண்ணா' என்ற பாடலை ஜவஹர்லால் நேரு அவர்களின் ஆதரவோடு, இசைப் பேரரசி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இனிய குரலில் ஐக்கிய நாடுகள் சபையில் பாட வைத்த பெருமைக்கு காங்கிரஸ்காரர்கள்தான் காரணமாக இருந்தார்கள் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஐக்கிய நாடுகள் சபையின் முகப்பிலே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கணியன் பூங்குன்றனார் அவர்களின் புனித வரிகள், தமிழ் வரிகள், உலகமெல்லாம் கோலோச்சுகின்ற தமிழ் வரிகளை ஐ.நா. சபையிலே பொறித்தது காங்கிரஸ் கட்சி என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்தியப் பிரதிநிதியாக அன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருந்த நேரத்திலே, பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களை ஐ.நா. சபையில் பேச வைத்ததற்கு காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்பதை உங்களுக்கு நான் அறிவுறுத்த விரும்புகிறேன்.

தமிழ் மொழிக்கு செம்மொழி கிரீடம் சூட்டி, அழகு பார்த்த பெருமை எங்கள் அன்னை சோனியா காந்திக்கு உண்டு. அவர்தான் அந்தப் பெருமைக்குரியவர். எல்லாவற்றிற்கும் மேலாக கம்ப இராமாயணத்தையும், திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, உலகமறியச் செய்த பெருமைக்குரியவர் விடுதலைப் போராட்ட வீரர் வராகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர், ஒரு காங்கிரஸ் தியாகி. அவரால் உலகமெல்லாம் தமிழ் பரப்பப்பட்டது. (குறுக்கீடுகள்) இடையிடையில் பேசிக் கொண்டிருந்தால் தமிழ்மொழி போய்விடும், உங்களுக்கு தமிழ்மொழி கிடைக்காது. ஏற்கெனவே நிறைய தமிழ் வார்த்தைகளை இழந்துவிட்டீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. எச். வசந்தகுமார்: ஒரே ஒரு நிமிடம் இருங்கள் சார். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த காங்கிரசைப் பற்றிச் சொல்கிறார். சோனியா காந்தி

காங்கிரசா, அன்னை இந்திரா காங்கிரசா? எந்த காங்கிரஸ் பற்றிச் சொல்கிறார். அது ஒன்றுபட்ட தேசிய காங்கிரஸ். இப்போது இருக்கும் காங்கிரஸ் அல்ல. நீங்கள் பழையவற்றை அப்படியே சொல்லிக் கொண்டிருந்தால், அதற்கு என்ன அர்த்தம்? (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-10

திரு. எச். வசந்தகுமார்: அமைச்சர் அவர்களின் வாதம் சரியாக இருக்க வேண்டும். அதாவது நான் காங்கிரஸ் என்று சொன்னால், இந்திய தேசிய. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் தமிழை காங்கிரஸ்காரர்கள்தான் வளர்த்தார்கள் என்று கூறினார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டில்லி மாநகரில் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கு தமிழ் இருக்கை ஒதுக்குவதற்காக 10 இலட்சம் ரூபாயைக்கூட, ரூ.5 இலட்சம், ரூ.5 இலட்சமாகக் பகுதி பகுதியாகத் தருவோம் என்று சொன்னவர்கள், மையத்தில் ஏற்கெனவே ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரே தடவையில் 50 இலட்சம் ரூபாயை வைப்பு நிதியாக வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் இருக்கை பெற்ற தலைவி. ஆக இந்தியாவின் தலைநகர் டில்லியில் தமிழ் மொழியை இடம்பெறச் செய்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நினைவுகூர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், பேசுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: தமிழை உலகமெல்லாம் பரப்புகின்ற செய்தியைச் சொல்லுகிறேன் நான். சாதாரண 10 இலட்சம் ரூபாயைப் பற்றிப் பேசவில்லை. உலகமெல்லாம் தமிழ், (குறுக்கிடு) எவ்வளவாக இருந்தாலும், பணம் பெரிதல்ல. தமிழ் மணம் பெரிது என்றுதான் காங்கிரஸ்காரன் ஐ.நா. சபையிலே

எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களை வைத்துப் பாட வைத்தான். அதுதான் முக்கியம். பணம் பெரிதல்ல. (குறுக்கீடுகள்) தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் உரை எழுதி தமிழுக்குப் பெருமை சேர்த்தவர் நம் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார். இராமாயணத்தையும், மஹாபாரதத்தையும் மிகச் சிறிய வடிவில் தமிழில் வடிவமைத்துக் கொடுத்தவர் சக்கரவர்த்தித் திருமகன் இராஜாஜி அவர்கள். சிலப்பதிகாரத்தின் சிறப்பையும், இந்திய விடுதலைப் போரில் தமிழர்களின் பெருமையையும் பறைசாற்றிய பெருமை, சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களைச் சாரும். எல்லாவற்றிற்கும் மேலாக 1956 ஆம் ஆண்டில் தமிழை ஆட்சி மொழியாக்க சட்டம் கொண்டு வந்த பெருமை எனது இதய தெய்வம் கர்மவீரர் காமராஜரைத்தான் சாரும். அவர்தான் தமிழை முதலில் வளர்த்தார். அதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழாய் வாழ்பவர்கள் மத்தியில், தமிழுக்காக வாழ்பவர்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம் அம்மா அவர்களின் தமிழ் வளர்ச்சிச் சாதனைகள் வரிசையில், அகத்தியனின் பன்னிரு சீடர்களில் ஒருவராம், தொல்காப்பியர் தந்த ஒப்பற்ற இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் தொடர்ச்சியாக பல்வேறு பரிணாமங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நோக்கில், இந்தியாவிலேயே முதல் முறையாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பிய ஆய்விருக்கையை ஏற்படுத்தி தொல்காப்பியம் நூலை உலகெங்கும் பரவச் செய்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், பேசுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல காரியத்தைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். யாரையும் குறை சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியென்றால் அதையும் சேர்த்துச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அப்படியென்றால் இதையும் சேர்த்துச் சொல்லுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: 1956 ஆம் ஆண்டு நடந்ததை நான் சொல்கிறேன். தமிழ்நாட்டில் முதன்முதலாக . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள். நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடப்பது 2016 ஆம் ஆண்டைய ஆட்சி என்பதை மாண்புமிகு உறுப்பினர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், பேசுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: தமிழ்நாட்டில் 1957-1958 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவையில் தமிழில் சமர்ப்பித்த பெருமையும் எங்கள் பெருந்தலைவர் காமராஜரைத்தான் சேரும் என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1960-ல் தமிழில் கலைச்சொல்லகராதி வெளியிடப்பட்டதே எங்கள் காமராஜ் ஆட்சியில்தான். தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்கு மாத ஊக்கத் தொகையும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டது பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலம் என்பதை எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால், இப்போது கிராமப்புறங்களிலே இருக்கின்ற அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாகச் சேரவில்லை என்ற குறை இருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், தமிழில், கிராமங்களில் அரசுப் பள்ளிகளில் படித்தவர்களுக்கு நமது அரசில் முன்னுரிமை

கொடுத்தால் அதிகமாக குழந்தைகள் அங்கே சேருவார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். மொழிவாரி மாநிலம் அமைக்கப்பட்ட பிறகு சென்னை மாகாணத்தை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் எங்கோ செல்கிறார். அமைச்சர் பேசுகிறார், பேசட்டும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3-15

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் வளர்த்த அந்த வரலாற்றை இங்கே சொன்னார்கள். அவர்கள் தமிழ் மொழியைக் காத்த வரலாற்றையும் உலகெல்லாம் தமிழ் மொழியை எடுத்துச் சென்ற வரலாற்றையும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், தமிழ் மொழியைக் காக்கத் தவறியதால்தான் அவர்களுடைய ஆட்சியே அழிந்து போனது என்பதையும் அவர் இங்கே எடுத்துச்சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மொழியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இந்தி மொழியைத் திணித்ததால்தான், இன்றைக்குக்கூட தேக்குமரத் தேகங்களில் தீயை வைத்துக் கொண்டு, தமிழைக் காப்பதற்காக உயிர் நீத்த அந்த மொழிப்போர் தியாகிகளுக்கு இன்றைக்கும் 'வீர வணக்க நாள், கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழ் மொழியைக் காப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து, நம்முடைய மன்னாதி மன்னன், மக்கள் திலகம், பொன்மனத் தலைவன், புரட்சித் தலைவரைத் தொடர்ந்து தஞ்சை தரணியிலே எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டியவர் என்பதையும், அந்த வரலாற்றை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழைக் காக்கத் தவறியதால்தான் இன்றுவரை காங்கிரஸ் கட்சி தமிழகத்திலே

அடையாளம் இல்லாமல் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் சேர்க்கை விகிதம் குறைவாக இருக்கிறது என்ற ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே பதிவு செய்திருக்கின்றார். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் வரலாறு காணாத நிதியை ஒதுக்கீடு செய்து, தனியார் பள்ளிகளுக்கு நிகராக, அரசுப் பள்ளிகளில் சேர்க்கை விகிதமும், தேர்ச்சி விகிதமும் அதிகமாகக் கூடியிருக்கிறது என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பள்ளிக் கல்வித் துறைக்காக செய்திருக்கக்கூடிய எண்ணற்ற ஏற்றமிகு திட்டங்களால்தான் சேர்க்கை விகிதம், தேர்ச்சி விகிதம் கூடியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுப் பள்ளிகளில் மாணவர்களுடைய சேர்க்கை விகிதம் குறைந்துகொண்டே வந்துகொண்டிருக்கிறது என்ற கருத்தை இந்த அவையில் பதிவு செய்திருக்கிறார். இதற்குமுன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும் இதே கருத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், ** மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆக்கப்பூர்வமான 14 வகையான திட்டங்களைச் செயல்படுத்தி, இதற்குமுன் எப்போதும் இல்லாத வகையில், காமராஜர் காலத்தில்கூட சிந்தித்திருக்கமுடியாத திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறைக்குக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இன்றைக்கு கல்விக்கூடங்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களைப்போல காட்சியளிக்கக்கூடிய கட்டடங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு கல்வித் துறையைச் சேர்ந்த பள்ளிகளுக்கு எல்லா வசதி வாய்ப்புகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அத்தகைய வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தந்ததோடு மட்டுமல்லாமல், புதிய ஆசிரியர் நியமனம் உள்ளிட்ட தேவையான அடிப்படை வசதிகளையெல்லாம் உருவாக்கிக் கொடுத்திருக்கக்கூடிய இந்தக் காலத்திலே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றும் பல்வேறு தரப்பட்ட மக்களெல்லாம், ** எந்தக் குறைபாடுகளும் இல்லாத வகையில் ஆசிரியர் நியமனம், கட்டட வசதிகள், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அரசுப் பள்ளியிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இன்றைக்கு சீராக இருந்துகொண்டிருக்கின்றது. ஆசிரியர்-மாணவர் ratio, இன்றைக்கு 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் இருக்கிறது. அதேபோன்று, உயர் கல்வியிலே 45, 40, 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் கல்வித் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கல்வித் துறைக்காக எல்லா வாய்ப்பு வசதிகளையும் கொடுத்துக்கொண்டிருக்கிற வேளையிலே, ** என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. எச். வசந்தகுமார், இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் தேவையில்லாத விஷயத்திற்குள் போகிறீர்கள். (குறுக்கீடு) இரண்டு நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். காமராஜர் யார்? தாழ்ந்த நிலையில் கிடந்த இந்த மக்களையெல்லாம் இன்று உலக அரங்கில் முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் காமராஜர் தன்னையே அர்ப்பணித்து கல்வியை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்ம வீரர் காமராஜர் அவர்கள் பட்டிதொட்டியெங்கும் கல்விக்கூடங்களை உருவாக்கவேண்டும் என்று சொன்னார். அவருடைய காலத்திலே கல்வியறிவைப் பெற்றால் போதும் என்ற நிலை இருந்தது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மாணவர்கள் உயர் கல்வியைப் பெறவேண்டும்; மாணவர்கள் உயர் கல்வியை மேலை நாடுகளில் சென்று கற்று வரவேண்டும் என்ற நிலையிலே இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. எச். வசந்தகுமார், இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3-20

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்று மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடு) திரு. எச். வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒன்றும் அதுபற்றி வருத்தப்பட வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) பெருந்தலைவர் காமராஜரைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதுவும் பேசவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் புதிதாக அர்த்தம் கண்டுபிடிக்க வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் முதன்முதலாக நாங்குநேரியில் துவக்கப்பட்ட Hi-tech Industrial Park சம்பந்தமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன, அதைச் சரிசெய்ய வேண்டுமென்று நான் ஆளுநர் உரைமீதான விவாதத்திலே சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், (குறுக்கீடு) நீங்கள் நிறைய விஷயங்களைச் சொல்லிவிட்டீர்கள். இன்னும் இரண்டு நிமிடங்களில் தங்கள் உரையை முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிக்கொண்டே இருந்தால்தான் என்னுடைய கருத்துகளைச் சொல்லமுடியும். அடிக்கடி மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிட்டால், நான் எப்படிப் பேச முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தங்களுடைய உரையில் மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிடாத மாதிரி நீங்கள்தான் பேச வேண்டும்.

திரு. எச். வசந்தகுமார்: நான் எந்தத் தவறான கருத்தையும் இந்த அவையில் பதிய வைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசியதை அவைக் குறிப்பை எடுத்து படித்து பாருங்கள். இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்காக, ரூ.863 கோடி ஒதுக்கியதற்காக நான் பாராட்டுகிறேன்.

உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

நாங்குநேரி தொகுதி, கீழநத்தம் ஊராட்சியில் ஐந்தாண்டுகளுக்கு முன்பு, ரூ.5 கோடி செலவில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டு நகரம்-Sports City திட்டம் கிடப்பில் உள்ளது. அதை தமிழக அரசும், மத்திய அரசும் இணைந்து செய்தால், தங்கப்பதக்கத்தைப் பெறுகின்ற வாய்ப்பு நமது தமிழக மக்களுக்குக் கிடைக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் ஏராளமான பிரச்சினைகள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தங்களுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவற்றையெல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். உரையை முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: நாங்குநேரி தொகுதியில் உள்ள 37 கிராமங்களுக்குப் பேருந்து வசதியும், 21 கிராமங்களுக்கு குடிநீர் வசதியும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தங்களுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவற்றையெல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். உரையை முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: நாங்குநேரி தொகுதியில் உள்ள 18 கிராமங்களில் உள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரேயொரு நிமிடம் தருகிறேன். தங்கள் உரையை மகிழ்ச்சியாக முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: நாங்குநேரி தொகுதியில், 15 கிராமங்களில் சமுதாய நலக்கூடம், 11 கலையரங்கங்கள் தேவைப்படுகின்றன. நாங்குநேரியில் பெரிய மருத்துவமனை இருக்கின்றது. அந்த மருத்துவமனையில் 9 டாக்டர்கள் இருக்க வேண்டும். ஆனால், 6 டாக்டர்கள்தான் அந்த மருத்துமனையில் இருக்கின்றார்கள். அங்கு இரவு நேரங்களில் டாக்டர்கள் இல்லை. அந்த மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் ** அந்த நேரத்தில் டாக்டர்கள் இல்லை.

அதனால் மூன்று டாக்டர்களை நியமனம் செய்ய வேண்டும்.

நாங்குநேரி தொகுதியில் வடக்கு பச்சையாறு பாலம் உட்பட 10 பாலங்கள் கட்ட வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு உச்சகட்டமான கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், உரையை முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: திருநெல்வேலி மாவட்டத்தில், குற்றாலம்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், உரையை முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: திருநெல்வேலி மாவட்டத்தில், குற்றாலம், காரையாறு, சேர்வலாறு, பாபநாசம், மணிமுத்தாறு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்குநேரியில் உள்ள பெரிய மருத்துவமனையில் 11 மருத்துவர்கள் இருக்க வேண்டும். தற்போது, அங்கே 10 மருத்துவர்கள் பணிபுரிகின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வாரம் அங்கே சென்று பார்த்துவிட்டு, உறுதி செய்ய வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் பேசுகின்றபோது, நோயாளிகள் என்று சொல்லி தொடர்ந்து சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எச். வசந்தகுமார்: திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம், காரையாறு, சேர்வலாறு, பாபநாசம், மணிமுத்தாறு, முண்டந்துறை, மாஞ்சோலை எஸ்டேட், களக்காடு புலிகள் சரணாலயம், திருக்கருங்குடி பெருமாள் கோயில், நாங்குநேரி வானமாமலைக் கோயில், கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், நெல்லையப்பர் கோயில், நந்தி கோயில், கிரேக்க, எகிப்திய நாகரிகத்திற்கு முந்தைய சிந்து சமவெளி நாகரீகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஆதிச்சநல்லூர் போன்ற சுற்றுலா தலங்கள் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், தங்கள் உரையை முடியுங்கள். முதலில் நீங்கள் ஊருக்குச் சென்று, மருத்துவர்களெல்லாம் இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு வந்து பேசுங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: தமிழ் பண்பாட்டைக் காட்டுகின்ற ஆதிச்சநல்லூர் பிரசித்தி பெறவேண்டுமென்றால் நாம் அந்தப் பகுதிக்குச் சுற்றுலா செல்லவேண்டும். அதோடு மட்டுமல்ல. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், அதோடு நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். இன்னொரு முறை பேசிக்கொள்ளலாம்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் நல்ல கருத்தைத்தான் சொல்லுவோம். எதையும் நாங்கள் தவறாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாங்குநேரி பெரிய மருத்துவமனையில் மருத்துவர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்று நீங்கள் ஊருக்குச் சென்று பாருங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: காங்கிரஸ் கட்சி செய்த சாதனையைச் சொன்னோம். என்னுடைய தொகுதிக்குத் தேவையானவற்றையும் கேட்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அனைத்து உறுப்பினர்களும் பேசியதைப் பார்த்தீர்கள் அல்லவா?

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நாங்குநேரி தொகுதி மிகவும் மோசமான நிலையில் உள்ள தொகுதியாகும். (குறுக்கீடு) கிட்டத்தட்ட 600, 700 கிராமங்களைக் கொண்டது. பேருந்து வசதிகளும் இல்லை, குடிக்கத் தண்ணீரும் இல்லை, சாலை வசதிகளும் இல்லை.

பிற்பகல் 3-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் பேசும்போதெல்லாம் எங்கள் தொகுதிக்கு பேருந்து இல்லை, பேருந்து இல்லையென்று சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள். தன்னுடைய நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட நாச்சங்குளம் ஊர் மக்கள் சுதந்திரம் அடைந்து, இவ்வளவு காலம் ஆகியும் இன்னும் பேருந்துகளையே பார்க்கவில்லை என்ற ஒரு தவறான தகவலை நேற்று இந்த மாமன்றத்தில் பதிவு செய்தார்கள். அப்பொழுது அதனுடைய விளக்கம் என்னிடத்தில் இல்லை. அருகிலுள்ள கிராமங்களுக்குப் பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைச் சொன்னேன். இப்பொழுது அதைப் புள்ளிவிவரமாகச் சொல்கிறேன். திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட நாங்குநேரி-மூலக்கரைப்பட்டி பிரதான சாலையிலிருந்து 2.8 கிலோ மீட்டர் தொலைவில் செண்பகராமநல்லூர் உள்ளது. இக்கிராமத்திற்கு 7 நடை அரசுப் பேருந்துகள் இயங்குகின்றன. இந்த செண்பகராமநல்லூரிலிருந்து 1.6 கிலோ மீட்டர் தொலைவில் நாச்சங்குளம் கிராமம் அமைந்துள்ளது. இங்கு 75 குடும்பங்கள் மட்டுமே இருக்கின்றன. சுமார் 300 மக்கள் மட்டுமே வசிக்கிறார்கள். ஆயிரம் மக்கள் இருக்கின்ற ஒரு கிலோ மீட்டருக்கு மேற்பட்ட பகுதிகளாக இருந்தால் மட்டுமே பேருந்துகள் இயக்கமுடியும் என்பது அரசினுடைய கொள்கை.

இவர் 2006-2011 இல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். உங்களுடைய தயவினால்தான் அந்த ஐந்து ஆண்டுக்காலம் மைனாரிட்டி தி.மு.க. அரசு ஆட்சியில் இருந்தது. அப்பொழுதெல்லாம் இவர் பேருந்துகளை கேட்டு இயக்கியிருக்கலாம். ஐந்து ஆண்டுக்காலம் மைனாரிட்டி தி.மு.க. அரசு உங்களுடைய ஆதரவில்தான் ஆட்சி நடத்தியது. அப்பொழுது நீங்கள் பேருந்துகளைக் கேட்டுப்பெற்றிருக்கலாம். சுதந்திரம் அடைந்தபிறகு இன்றுவரை பேருந்துகளையே பார்க்கவில்லை என்று சொல்கிறவர், அந்த ஐந்து ஆண்டுக்காலம் சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்திலே என்ன செய்துகொண்டிருந்தார் என்பது அவருக்குத்தான் தெரியும். சுதந்திரம் அடைந்ததிலிருந்து பேருந்தையே பார்க்கவில்லை என்று சொல்கிறாரே, அந்த ஐந்து ஆண்டுக்காலம் இவர் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். அப்பொழுது நீங்கள் சொல்லியிருந்தால் உடனே பேருந்துகளை இயக்கியிருக்க முடியும். ஏன் அதைச் செய்யவில்லை. 1,525 புதிய வழித்தடங்களை ஏற்படுத்தி, பஸ் வசதியே இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை இன்று தமிழகத்திலே உருவாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; ஆளுநர் உரையின்மீதான விவாதத்தின்போதும் அவர் ஊர்களைக் குறிப்பிட்டு 42 பேருந்துகள் இயக்கப்பட்டன, ஆனால், இப்பொழுது பேருந்துகளையே காணவில்லை, 20 பேருந்துகள்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார். ஆனால் இப்பொழுது 56 பேருந்துகள் அவர் சொன்ன வழித்தடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அவர் பேசும்போது சரியான தகவலை இந்த அவைக்குச் சொல்லவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

மேலும், நான் அவையிலே இல்லாதபொழுது திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் பணிமனை துவக்கத்தைப்பற்றி ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார். ஒரு பணிமனை துவக்குவதற்கு குறைந்தபட்சம் 50 பேருந்துகளாவது இருக்கவேண்டும். (குறுக்கீடு) அவர் அவையில் இல்லையென்றால், நான் அதைப் பதிவுசெய்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் இருக்கிறீர்கள் அல்லவா? 50 பேருந்துகளாவது இருக்கவேண்டும். அவர் சொல்லிய சிங்கம்புணரி பகுதி மதுரை மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும்

சிவகங்கைக்கும் மத்தியிலே அமைந்திருக்கக்கூடிய பகுதி. சிவகங்கையிலே ஒரு பணிமனை இருக்கிறது. திருப்பத்தூர் பகுதியில் 46 பேருந்துகள் மட்டுமே இருக்கின்றன. மதுரையில் மேலூரிலே 72 பேருந்துகள் மட்டுமே அந்தப் பணிமனையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே, பொன்னமராவதியிலே உள்ள பணிமனையில் 56 பேருந்துகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன. பேருந்துகளை இயக்குவதற்கும், பணிமனைகளை இயக்குவதற்கும் சம்பந்தமில்லை. பணிமனை என்பது பேருந்துகளைப் பழுதுபார்க்கும் இடம். அந்த இடத்தில் பணிமனை இருந்தால்தான் பேருந்துகளைச் சிறப்பாக இயக்கமுடியும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார், அப்படியல்ல. ஒரு பணிமனை என்பது பேருந்துகளைப் பராமரிக்க மட்டும்தான் என்பதைச் சொல்லவிரும்புகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே, என்னுடைய போக்குவரத்து மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசும்போது கூறியிருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 74 பணிமனைகள் திறக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி 36 பணிமனைகளைத் திறந்து, அதை மக்களுடைய பயன்பாட்டிற்கு அளித்தவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். மீதமுள்ள 38 பணிமனைகளுக்குண்டான வேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன் திருக்கரங்களால் திறந்து, மக்களின் பயன்பாட்டிற்கு அளிக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற தி.மு.க.வின் ஐந்து ஆண்டுக்கால ஆட்சியிலே திறக்கப்பட்ட பணிமனைகள் வெறும் 10 தான் என்பதையும் இந்த மாமன்றத்திலே பதிவுசெய்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உன்னதமான சபையில் ஒரு அமைச்சராகப் பொறுப்பேற்க வாய்ப்பு கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபொழுது இரண்டு கருத்துகளை முன்வைத்தார்கள். ஒன்று, Sports City என்ற திட்டம் கிடப்பில் போடப்பட்டதாகச் சொன்னார்கள். அதனால், தமிழ்நாட்டில் ஒலிம்பிக் வீரர்கள் உருவாக முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்தியாவிலேயே முதல் முறையாக நீங்கள் குறிப்பிடுகிற Sports City-ஐவிட பன்மடங்கு உட்கட்டமைப்பு வசதிகளைக்கொண்ட Tamil Nadu Physical Education and Sports University-ஐ உருவாக்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே இருக்கிற தமிழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, குறிப்பாக, ஒலிம்பிக் வீரர்களை உருவாக்குவதற்காக மிக ஏழ்மையான சூழ்நிலையில் இருக்கக்கூடிய ஐந்து இளைஞர்களையும், யுவதிகளையும் தேர்ந்தெடுத்து, வருடத்திற்கு 25 இலட்சம் ரூபாய் கொடுக்கக்கூடிய Elite sports persons என்ற திட்டத்தை இந்தியாவிலேயே நடத்திக்கொண்டிருக்கக்கூடிய ஒரே மாநில அரசாங்கம், தமிழக அரசாங்கம்தான் என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஒலிம்பிக்கிலே பங்கேற்பது என்பது ஒன்றும் சாதாரண விஷயம் கிடையாது. You have to get qualified. கடந்த ஒலிம்பிக் போட்டியிலே, international qualification தகுதி பெற்று இந்தியாவிலிருந்து 118 பேர் பங்கேற்றனர். அதில் தமிழகத்திலேயிருந்து இந்த முறை ஆறு பேர் கலந்துகொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை மேம்படுத்துவதற்கு, அடுத்த ஒலிம்பிக் போட்டியில் தமிழகத்திலிருந்து குறைந்தது 24 பேர் பங்கு பெறுவதற்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டு, தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து உட்கட்டமைப்புகளையும் ஒருங்கிணைத்து வழங்க, இன்றைக்கு SDAT-க்கு ரூ.104 கோடி கொடுத்திருக்கிற ஒரே அரசாங்கம் தமிழக அரசாங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. அரசாங்கத்திலே அவர்கள் கொடுத்த தொகை இதில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே. இன்றைக்கு SDAT-க்கும்சரி, Sports University-க்கும்சரி, ஒவ்வொரு உட்கட்டமைப்பும்

உன்னதமான நிலையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக, அடுத்த ஒலிம்பிக் போட்டியில், அதுவும் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் வரப்போகிறது. இன்னும் நான்கு வருடங்களில் வரவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒலிம்பிக் போட்டியில் medal வாங்குபவர்களுக்கு ரூ.2 கோடி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். Commonwealth games மற்றும் National games-ல் பதக்கம் பெறுபவர்களுக்கு எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியும். இந்த மாதிரி கட்டமைப்புகளை உருவாக்கி வைத்து, அடுத்த ஒலிம்பிக் போட்டியில் கண்டிப்பாக தமிழகத்திலிருந்து இருவராவது medal win பண்ணிக்கொண்டு வரப்போகிறார்கள். அதற்குத் தகுந்த தொலைநோக்குப் பார்வையோடு இன்றைக்கு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள். (குறுக்கீடு)

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் தொகுதிக்கு அடிக்கடி சென்றுவிட்டு வந்து, அடுத்த முறை மற்ற விவரங்களைப் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, நீங்கள் பேசுங்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவரின் புகழ் பாடும் மக்கள் ஆட்சியில் ஆறாவது முறையாக அரியணையில் ஏறி, இம்மண்ணில் ஆட்சி நடத்திவரும் தாயே! கனிவுக்கும், துணிவுக்கும் ஒரே பிறப்பிடம் கொண்ட தாயே! எதிரிகளின் நினைவில் எல்லாம் வெற்றி முத்திரை பதிக்கும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் தாங்கள் கண்ட வெற்றி எதிர்நீச்சல் அதிகம் தாயே! மக்கள் சக்தியே மகத்தான சக்தி என நினைக்கும் மகராசி தாயே! சொன்னதைச் செயல்படுத்தும் புண்ணிய தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நுண்ணியமாய் பல திட்டங்களைத் தீட்டும் புரட்சித் தாயே! ஏழை சந்ததியினர் உயர்ந்திட வழிவகுக்கும் உன்னதத் தாயே! கல்வியில் சம உரிமை அடைய சமச்சீர் தந்த சத்திய தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

வறுமையை ஒழிக்க வளமான திட்டங்கள் தந்த வளர்ச்சி தாயே! அம்மா, நாங்கள் வசிக்க பூமியும், சுவாசிக்க காற்றும், வணங்க சென்னியும், காண கண்களும், கேட்க செவியும், சிந்திக்க மனமும், வாழ்த்த வாயும், கூப்பித் தொழ கரங்களும், திருக்கோயில் செல்ல கால்களும் அருளிய பரம்பொருளே! கற்ற கல்வியும், பெற்ற செல்வமும் பிறருக்குப் பயன்படாவிட்டால் அதனால் என்ன பயன் என்பதற்கேற்ப, யாராலும் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தை கடைக்கோடி மக்களும் பெறும் வகையில் தமிழக மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களது ஈடு, இணை இல்லாத கருணைக்கு எனது நன்றியறிதலான திருமுறை வழிபாட்டை வணக்கத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

அம்மா, நான் பிறந்தது ஆசிரியர் குடும்பம். எனது திருமணத்திற்கு பிறகு வாழ்க்கையைத் தொடங்கியதும் ஆசிரியர் குடும்பம். நானும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியராக 13 ஆண்டுகள் சென்னையில் தனியார் பள்ளியில் பணியாற்றி வந்துள்ளேன்.

பிற்பகல் 3-35

எளிமையான ஆசிரியர் குடும்பத்தைச் சேர்ந்த என்னை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கரூர் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினராகவும், கரூர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவராகவும், கொங்கு மண்டலத்தின் கீழ்ப்பகுதியாம் ஜவுளி ஏற்றுமதித் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும், ‘புகழ் சோழன் கால் வைத்த புண்ணிய பூமி’யாம், கரூர் மாவட்டத்தில் உள்ளடங்கியுள்ள கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வெற்றிச் சின்னமாம், இரட்டை இலை சின்னத்தில் 35,301 வாக்குகள் வித்தியாசத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சுட்டிக்காட்டிய என்னை, வெற்றி பெறச் செய்த கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னை இந்த அவையில் அமர வைத்தமைக்கு அண்டங்கள்

அனைத்தும் அசைந்து நிற்க, விண்ணுலகம் அனைத்தும் வியந்து நிற்க, (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணுலகம் அனைத்தும் மகிழ்ந்து நிற்கின்றது. தமிழினத் தாயின் தடையில்லா வெற்றியைக் கண்டு, தமிழ்நாடு முதலமைச்சராக ஆறாவது முறையாகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, (மேசையைத் தட்டும் ஒலி) எனது கன்னிப் பேச்சினை இந்த அவையில் பதிவு செய்ய வாய்ப்புத் தந்தமைக்கும் எனது நன்றியினைத் தெரிவித்து, தொடருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'வல்லரசைத் தேடிச் சென்ற காலம் மாறி, இந்த நல்லரசைத் தேடி வரும் காலம் இது'. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் எல்லா நாடுகளும் வல்லரசைத்தான் தேடிச் சென்றுள்ளன. ஆனால், அமெரிக்காவின் ஹிலாரி கிளிண்டன் அவர்களே, நம் அம்மாவைத் தேடி வந்து, தமிழ்நாட்டில் அம்மா அவர்களின் தலைமையில் 'உலகத்தில் எங்கும் நடைபெறாத சிறப்பான நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; நல் அரசுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று கூறினார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தினம் தினம் வணங்கும் நெரூர் ஸ்ரீ அக்னீஸ்வரரைப் போல, காசி விஸ்வநாதரைப் போல, கைலாசநாதரைப் போல, மதுரை மீனாட்சி போல, காஞ்சி காமாட்சி போல, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

அம்மா, தங்களின் தொலைநோக்குச் சிந்தனையும், அறிவார்ந்த செயலுமே எதிரிகளை வென்று, சிம்மாசனம் சிம்மத்துக்கே என்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) 'அவசியமானதை செயலில் செய், பின்னர் எது முடிகிறதோ அதைச் செய்' என்பதைப்போல, இருப்பதைவிட அதிகம் செய், வாழ்வதற்கு; தொடுவதைவிட அதிகம் செய், உணர்வதற்கு; பார்ப்பதைவிட அதிகம் செய், கூர்ந்து கவனிப்பதற்கு; வாசிப்பதைவிட அதிகம் செய், ஆழ்ந்து கேட்பதற்கு; ஆழ்ந்து கேட்பதைவிட அதிகம் செய், புரிந்துகொள்வதற்கு ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழும் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி, மனிதர் குல மாணிக்கம், தங்கத்தாரகை அம்மா அவர்கள் தமிழக

முதல்வராக இருந்து மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை வழங்குவதில் இந்தியாவிலேயே முதன்மையாகத் திகழ்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அன்றும், இன்றும், இனி என்றும் தொடரும் எங்கள் அம்மாவின் பொற்கால ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

தாகம் தீர்க்க அம்மா குடிநீர், ஏழைப் பசி தீர அம்மா உணவகம், ஏழைகள் குடியிருக்க பசுமை வீடுகள், அனைவரும் ஆனந்தமாகச் செல்ல அனைத்து கிராமங்களையும் இணைக்கும் சாலை வசதி, தூய்மையான காற்று, மழை நீர் பெற மரம் வளர்க்காத கிராமங்களே இல்லா பசுமைப் புரட்சி ஏற்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

சுதந்திர இந்தியாவின் எந்த ஒரு மாநில அரசும் செய்திடாத வகையில், என்னைப் போன்ற மகளிருக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு உள்ளாட்சி அமைப்புகளில் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மகாகவி பாரதி மற்றும் தந்தை பெரியார் ஆகியோரின் கனவை நிறைவேற்றிய தங்கத்தாரகை எங்கள் மாதர் குல மாணிக்கம் அம்மா அவர்கள்.

காரிருள் அகத்தில் நல்ல கதிரொளியாய், பாரிடை துயில்வோர் கண்களில் பாய்ந்திடும் எழுச்சியாய், ஒட்டுமொத்த தமிழக மக்களின் இதயத் துடிப்பாய், இளைஞர்களின் எழுச்சிமிக்க தலைவியாய், மாதர் குலம் போற்றும் மாணிக்கமாய் விளங்கும், உலகின் ஒப்பற்ற தலைவியாய் விளங்குபவர் நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் குறித்து சிலவற்றினைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கோயில்களுக்குச் சென்று வருவதையும், இறைவழிபாட்டில் ஈடுபட்டு வருவதையும், மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஆன்மீகப் பயிற்சியாக நமது முன்னோர்கள் கருதி வந்தார்கள்.

பாரம்பரியச் சிறப்புமிக்க, சீரிய தமிழ் கலாச்சாரமும், பண்பாடும், இங்கு ஓங்குசீர் புகழோடு விளங்குவதற்கு ஆலயங்கள் ஆற்றிய பங்கை நிச்சயமாகக் குறைத்து மதிப்பிட முடியாது என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்கள் அமுத மொழிகளில் ஆலயத்தைப் பற்றிக் கூறியுள்ளார்கள்.

பிற்பகல் 3-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னதானத் திட்டம் தற்போது 724 திருக்கோயில்களில் விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. பழநி மற்றும் ஸ்ரீரங்கம் திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் 8,843 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது. 250 தொன்மையான திருக்கோயில்களில் பழமை மாறாது புதுப்பிக்க ஆண்டொன்றுக்கு ரூ.22.50 கோடிவீதம் ரூ.90 கோடி வழங்கப்பட்டது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.25,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்வு செய்யப்பட்டு, 3,640 திருக்கோயில்களுக்கு ரூ.18.02 கோடி நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.750/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தப்பட்டு, 364 நபர்கள் பயனடைந்து வருகிறார்கள். பணியில் இருக்கும்போது இறந்த பணியாளர்களின் 332 வாரிசுதாரர்களுக்கு ரூ.3.27 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. திருக்கோயில்களில் கருணை அடிப்படையில் திருக்கோயில் பணியாளர்களின் 107 வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அன்னதானத் திட்டத்தில் பணியாற்றும் 820 தற்காலிக பணியாளர்களை பணிவரன்முறை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணைகள் வழங்கப்பட்டன. கிராம திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்குக் "கிராம பூசாரிகள் நல வாரியம்" உருவாக்கப்பட்டு, அதன்மூலம் 606 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பிலான நலத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்து சமய அறநிலையத் துறை மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அருளாட்சியில் பல முன்னேற்றத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித்தன்மை இருப்பது உண்டு. நம் தமிழுக்கு இருக்கும் தனித்தன்மை வேறு மொழிகளுக்கு நிச்சயமாக இருக்காது. தான் சிதையாமல் மற்ற மொழிகளை வளர்க்கும் தனித்தன்மையும் ஆற்றலும் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு

என்று எடுத்துரைத்த இதய தெய்வம் அம்மா அவர்களின் அமுத மொழிகளுக்கு ஏற்ப, சித்திரைத் திங்கள் முதல் நாள் என அறிவிக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு முதல் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் கபிலர், உ.வே.சா., கம்பர், சொல்லின் செல்வர், ஜி.யு. போப், உமறுப்புலவர், இளங்கோவடிகள் ஆகியோரின் பெயர்களில் விருதுகள் தோற்றுவிக்கப்பட்டு, விருதுத் தொகையாக ரூ.1 இலட்சம், தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுவரும் ஆர்வலர்களைக் கண்டறிந்து, அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி ஊக்கப்படுத்தும்வகையில் 'தமிழ்ச் செம்மல் விருது' உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விருது பெறுபவர்களுக்கு ரூ.25,000 பரிசுத் தொகையும், தகுதியுரையும் வழங்கப்படும். மாவட்டத்திற்கு ஒருவர் என இவ்விருது 32 தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக விருது பெற்ற தமிழறிஞர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும்வகையில், தமிழ்நாடு முழுவதும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணச் சலுகை வழங்கப்படுகிறது. தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டிற்காகப் பெருந்தொண்டாற்றிய தமிழறிஞர், எல்லைக் காவலர் மற்றும் மரபுரிமையர்கள் மொத்தம் 623 பேர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித் தொகை வழங்கி, உலகெங்கும் தமிழ் முழக்கம் ஒலிக்கச் செய்ய உன்னத சாதனைகளை படைத்தவர் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குத் தேவையான பணிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியம், P. உடையாபட்டி முதல் கோவில்பட்டி செல்லும் வழியில் உள்ள காட்டாற்றின் குறுக்கே பாலம் மற்றும் உடையாபட்டி-கோவில்பட்டி வரை தார்ச்சாலை அமைத்துத்தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாயனூரில் துவங்கும் பழைய கட்டளைக் கால்வாய் மற்றும் புதிய கட்டளைக் கால்வாய் செல்லும் கிராமங்களில் 1958 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள பொதுமக்கள் விவசாய நிலங்களுக்குச் செல்லும் பாலங்கள் பழுது ஏற்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை அப்புறப்படுத்திவிட்டு புதிய பாலங்கள் கட்டித்தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

பிற்பகல் 3-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதியுள்ள தொகுதிக் கோரிக்கைகளை நான் அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியத்திலுள்ள பால விடுதியில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளியணை, வீரராக்கியம் ஆகிய குளங்களுக்கு குடகனாறு அணையிலிருந்து வரும் தண்ணீர்க் கால்வாய்களைத் தூர்வாரி சீரமைத்துத் தர வேண்டும். வெள்ளியணை, ஜெகதாபி, வீரராக்கியம், வளையல்காரன்புதூர், கோவக்குளம், கடவூர், வரவணை, பன்னப்பட்டி, மாவத்தூர் கிராமக் குளங்களைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டுமென்றும்; கடவூர் ஒன்றியப் பகுதி காணியாளம்பட்டியில் அரசு இருபாலர் அல்லது மகளிர் கலை அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்றும்; கடவூர் ஒன்றியம், தரகம்பட்டியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்றும் கோருகிறேன்.

கடவூர் ஒன்றியம், மாவத்தூர் ஊராட்சி, மாமசாலூர் காட்டாற்று வாய்க்கால் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும். தாந்தோணி ஒன்றியம், ஆயக்கட்டு பாசன வாய்க்காலை ஆழப்படுத்தி அகலப்படுத்தித் தூர்வாரித் தரக் கோருகிறேன்.

தரகம்பட்டியில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க வேண்டுகிறேன்.

கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சிறப்புத் திட்ட தனி வட்டாட்சியர் பணியிடம் தோற்றுவிக்க வேண்டுமெனவும், கடவூர் வட்டம், தரகம்பட்டியில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறை-கரூர், அரவக்குறிச்சி-திருச்சி, தரகம்பட்டி-முசிறி செல்லும் பேருந்துகள் நிறுத்துவதற்கு பேருந்து நிலையம் அமைக்கக் கோருகிறேன்.

பாலவிடுதியில் கிளை சிறைச்சாலை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எழுத்துகள் எல்லாம் அகரத்தை மூலமாக உடையன, உலகம் ஆதி பகவனை மூலமாக உடையது, உலகத் தமிழர்களுக்கும் ஏழை மக்களுக்கும் மூலமாக உடையவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்-நீவீர் பல்லாண்டு வாழ்க! வாழ்க! வாழ்க! என்று தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது உரையை நன்றியுடன் நிறைவு செய்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கிராமக் கோயிலுக்கும், ஆதி திராவிடப் பகுதி கோயிலுக்கும் திருப்பணிக்கான நிதியுதவி ரூ.50,000/- என்று கூறினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை ரூ.1.00 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

***திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதன், சாமானிய குடும்பத்தைச் சேர்ந்தவன், இந்த அவையில் நின்று பேசுவதற்கான அடித்தளம் அமைத்துத் தந்திட்ட அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களை முதலில் வணங்குகிறேன். அதேபோல்,

விழுப்புரம் மாவட்டத்தின் கடைசி கிராமமான களஞ்சிக்குப்பம் கிராமத்தில் நினைவில் வாழும் எனது தாய் தந்தை மீனாட்சி குப்புசாமி அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 முதல் 33 ஆண்டு காலம் கண்டமங்கலம் ஒன்றியச் செயலாளராகவும் மாவட்டத்தில் பல்வேறு கழகப் பொறுப்புகளும், கழகம் ஆட்சியிலிருந்த காலத்தில், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர், மாவட்ட வேளாண் விற்பனைக் குழுத் தலைவர், அது மட்டுமல்லாமல், விக்கிரவாண்டி தொகுதியில் இரண்டு முறை கழகத்தின் சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, ஒரு முறை வெற்றி வாய்ப்பினை இழந்து, மறு முறை எனக்கு வாய்ப்பளித்து, என்னை வெற்றிபெறச் செய்ய வைத்திட்ட தமிழ்கூறும் நல்லுலகம் உள்ள இடமெல்லாம் அவர்கள் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து வாழந்து கொண்டிருக்கும் எங்கள் கழகத்தின் தலைவர், தமிழ் இனத்தின் முதல்வர், எங்கள் உயிரினும் மேலான தலைவர், அய்யா கலைஞர் அவர்களை வணங்குகிறேன். அதுபோலவே, நம்மைத் தேடி மக்களல்ல, மக்களைத் தேடி நாம், என்று ‘நமக்கு நாமே’ திட்டத்தின்மூலம் இன்றைக்கு இந்தியாவில் வளர்ந்து கொண்டுவருகிற இளம் அரசியல் தலைவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகத் திகழும் எங்கள் வருங்காலம், கழகத்தின் பொருளாளர், சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர், அண்ணன் ஆற்றல் மிக்க தளபதியார் அவர்களை வணங்குகிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சு, கன்னிப் பேச்சு. எனது பேச்சில் நான் மானியக் கோரிக்கையின்மீது பல கோரிக்கைகளை சொல்லுகின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் குறுக்கிட்டு, ஆதாரம் எங்கே, விளக்கம் எங்கே என்று கேட்டு எனது உரையை சேதாரம் ஆக்கிடாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அருள் பாலிக்கிற அறநிலையத் துறையின் சார்பில் தாங்கள் என்னை அருள்பாலித்து காக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1952-ல் நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில்தான் பனகல் அரசர் முதன்முதலாக இந்த இந்து சமய அறநிலையத் துறை என்பதைத் தொடங்கி

வைத்தார். அதுகூட எதற்காக என்றால், அன்றைக்கு இருந்த அரசர்களாலும், செல்வந்தவர்களாலும், சொத்துகளையும், பணம் மற்றும் நகைகளைக் கொடுத்து, இவையெல்லாம் கோயில்களின் புனரமைப்பிற்கு செயல்படுத்தப்பட வேண்டும் என்று எழுதிவைத்ததன் அடிப்படையில், அன்று இந்து சமய அறநிலையத் துறை தொடங்கப்பட்டது. அதன் நோக்கம் என்னவென்றால், வருகின்ற வருவாய், வழியில் கசிந்து, கசிந்து, காய்ந்துவிடாமல் முறையாக கோயில் நிருவாகத்திற்கும், கோயில்களைப் புனரமைப்பதற்காகவும் அதற்கென்று ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் மூலமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான். எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் 1952 ஆம் ஆண்டில் பராசக்தி படத்தில் ஒரு வசனம் எழுதினார். "கோயில்களே கூடாது என்பதல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக் கூடாது என்பதுதான் நோக்கம்" என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி சொன்ன காரணத்திற்காகவே, ஆட்சிக்கு வந்தவுடனேயே, ஆன்மீகவாதிகளெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள், ஆட்சிக்கு வந்துவிட்டார்கள், ஆலயங்கள் பூட்டப்பட்டுவிடும், குடமுழுக்கு நடைபெறாது, பூஜைகள் நின்றுவிடும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும்விதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் திருவாரூரில் ஓடாத தேரை ஓடவைத்து ஆன்மீகவாதிகளை மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைத்தார். அதேபோல் 2-1-2007 ஆம் ஆண்டில், சாதி வேறுபாடின்றி அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதனையடுத்து அவர்களுக்கு அர்ச்சகர் பயிற்சி அளிப்பதற்காக பழனி, திருச்செந்தூர், மதுரை, திருவண்ணாமலை ஆகிய 4 இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டு, மாணவர்களுக்கு ஊக்கத் தொகை ரூ.500/- வழங்கப்பட்டு, அவர்களுக்கு ஓராண்டு கால இளநிலை அர்ச்சகர் சான்றிதழ் வழங்கப்பட்டது. அதுபோலவே, அந்தக் காலத்தில் கோயிலுக்குச் சென்றால், 'இங்கு தமிழிலும் வழிபாடு செய்யப்படும்' என்ற நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு 'இங்கு தமிழ் வழிபாடு செய்யப்படும்' என்று அந்த 'லும்' என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, தமிழ் மட்டுமே வழிபாடு செய்யப்படும் என்று தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-50

அதேபோல் கோயில்களில் எல்லாம் பல தெய்வங்களின் பெயரில் முருகா போற்றி; கணபதி போற்றி, விநாயகா போற்றி; ஆஞ்சநேயா போற்றி; அனுமான் போற்றி என்று பக்திப் புத்தகங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் இலவசமாக அச்சிட்டு அவை கோயில்களுக்கும், பக்தர்களுக்கும் கொடுக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகம விதிகளுக்கு மாறுபடாமல் தமிழில் வேள்விகளை நடத்த முடியுமென்று கோவை மாவட்டத்தில் சாந்தலிங்க அடிகள் வேள்விகள் நடத்தியதை சுட்டிக்காட்டி, அதன்படி பல ஆலயங்களில் சேவைகள் நடைபெற்றன. இதை சிவாச்சாரியார்களே முன்னின்று நடத்தியிருக்கிறார்கள். சமஸ்கிருத மொழியில் இருந்த திருக்கோயில் தொடர்பான ஆகம விதிகளெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூசாரிகள் நல வாரியம் பற்றி சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தக் குற்றச்சாட்டும் சொல்லவில்லை. நடந்ததைத்தான் சொன்னேன். நான் அமைச்சரைக் குற்றம் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தைப்பற்றி பேசினார்கள். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள் கொண்டு வந்த (குறுக்கீடு) அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டம் செயல்படுத்த முடியாமல் தள்ளாடியது. இந்துக்களில், உரிய பயிற்சி பெற்ற அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று 23-5-2006-ல் அரசாணை வெளியிடப்பட்டது. இதற்கென பயிற்சி முகாம்களும் தொடங்கப்பட்டன. இதற்கிடையில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு 14-7-2006-ல் அவசர சட்டம் ஒன்றை பிறப்பித்து, அதில்

சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதற்கெதிராக 24-7-2006-ல் ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நலச் சங்கம் மற்றும் சிலர் உச்ச நீதிமன்றத்தில் நேரடியாக நீதிப் பிரேரணை மனு தாக்கல் செய்தனர். இம்மனுவை விசாரித்த நீதிமன்றம் தி.மு.க-வின் ஆணையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், இவர்கள் கொண்டு வந்த அவசர சட்டத்திற்கு மேதகு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்தும்கூட அந்த அவசர சட்டத் திருத்தத்தை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட முடியவில்லை. மேலும், சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக்க 6 இடங்களில் தொடங்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் குறித்து எதிர் மனுதாரர்கள் வாதிட்டபோது, 8-5-2007-ல் தமிழக அரசு தாங்கள் பிறப்பித்த 23-5-2006 நாளிட்ட அரசாணையின்படி, எவரையும் அர்ச்சகராக நியமனம் செய்ய உத்தேசம் இல்லை என்று பதில் மனு தாக்கல் செய்தது. இதனால் இவர்கள் தொடங்கிய பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு எவ்வித பணியிடமும் வழங்க முடியாமல் தடுமாறினார்கள். முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள் அரசாணையையும், சட்டத் திருத்தத்தையும் அக்கறையுடன் பிறப்பிக்கவில்லை. வழக்கையும் சரியாகக் கையாளவில்லை. இதுதான் அவர்கள் கொண்டு வந்த அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் இலட்சணம். (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் முடித்து, அர்ச்சகர்கள் சரியான ஆகம விதிகளைப் பின்பற்ற வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எங்களுடைய தலைவர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதைத்தான் சொன்னேன். கிராம பூசாரிகள் நல வாரியம் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் துவக்கி வைக்கப்பட்டது. அதன்மூலம் கிராமங்களுக்குச் சென்று பூஜைகள் செய்வதற்காக பூசாரிகளுக்கும் மற்றும் அர்ச்சகர்களுக்கும் 10,000 மிதிவண்டிகள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் வழங்கப்பட்டன. அதுபோல, வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களை எல்லாம்

புனரமைப்பதற்காக 13-வது நிதி ஆணையத்திலிருந்து 100 கோடி ரூபாயை மத்திய அரசின் மானியத்திலிருந்து பெற்றுத் தந்து, சாதனை படைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்த மானியம் இன்றைக்கும் தொடர்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களைத் தவிர்த்து, அரசு உதவி பெறாத சாதாரண 1,000 கோயில்களுக்கு one light service என்ற ஒரு விளக்கு மின்சாரத் திட்டத்தை கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மனிதனுடைய பக்தி என்பது, ஒரு மனிதன் தனக்கு ஏற்படும் இன்ப, துன்பங்களுக்கு ஏற்றவாறு, பங்கு சந்தைபோலதான் பக்தியினுடைய range ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கிறது. ஒரு மனிதனுக்கு அதிகமான துன்பம் ஏற்பட்டால் அதிகமாக கடவுளை நாடிச் செல்வான். ஒரு காலத்தில் 'பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்; பாயும் மீன்களைக் கண்டான் படகினைப் படைத்தான்; எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்; எதனைக் கண்டான் மதங்களைப் படைத்தான்' என்று கேட்ட கண்ணதாசன், 10 ஆண்டுகளுக்குப் பிறகு 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா' என்று அர்த்தமுள்ள இந்து மதத்தைத் தேடிச் சென்றான். (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் மனிதனுடைய பக்திக்கு தகுந்தவாறு, மனிதனுக்கு ஏற்படுகின்ற இன்ப, துன்பங்களுக்கு ஏற்றவாறு கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனைச் செலுத்துகிறார்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 3-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறொன்றுமில்லை, இவர்களுடைய தலைவர் வீட்டில் கோயில், கோயிலாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரின் வீட்டுக்கார அம்மா. (குறுக்கீடுகள்) அவர்கள் எதற்காகப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . . (குறுக்கீடுகள்) அவர் சொன்னார் இல்லையா? அவர் சொன்னதைத்தான் சொல்கிறேன். நான் என்ன தவறாகச் சொல்லிவிட்டேன்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எதற்காகச் செல்கிறார்களோ அதற்காகத்தான் மக்கள் செல்கிறார்கள். அதைக் கொச்சைப்படுத்த வேண்டாம்.

இது அனைவராலும் போற்றப்படக்கூடிய ஒரு சபை. (குறுக்கீடுகள்) எனவே, எந்த மதத்தையும், சாமி கும்பிடுபவர்களையும் தவறாகச் சித்தரிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். ஏற்கெனவே பலமுறை இதையெல்லாம் இந்த சபையில் பேசியிருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் நிற்கிறேன். உட்காருங்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். சரி உட்காருங்கள். முதலில் நீங்கள் உட்காருங்கள். திரு. சக்கரபாணி என்னவென்று சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் திரு. இராதாமணி அவர்கள் பேசியதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார். சம்பந்தமில்லாத, சபைக்கு வராத, வெளியில் இருக்கக்கூடியவர்களைப்பற்றி ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார். எனவே, அதை ஆதாரமிருந்தால் நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன பதில்? சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் பெயரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அதாவது, என்னவென்றால், கோயிலுக்குப் போகிறவர்களெல்லாம் எதற்காகக் கோயிலுக்கு போகிறார்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும்தானே கோயிலுக்குப் போகிறோம். எல்லோரும் கோயிலுக்குப் போகிறோம். கோயிலுக்குச் செல்வதைக் கொச்சைப்படுத்தக் கூடாது. (குறுக்கீடுகள்) கோயிலுக்குச் செல்வது தவறா? கோயிலுக்குச் செல்வதைப் பற்றி தவறாகப் பேசக்கூடாது. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கும். (குறுக்கீடுகள்) ஒருத்தர் வருத்தமிருந்தால் கோயிலுக்குச் செல்கிறார்கள். சம்பந்தமிருந்தால் கோயிலுக்குச் செல்கிறார்கள் என்றால் அது தவறு. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 4-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். அவர் அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். தேவையில்லாததை ஏன் பேசுகிறீர்கள்? உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களை அதற்கு விளக்கம் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் explain செய்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) கோயிலுக்கு எல்லோரும் போகிறார்கள். அவர்களும் போகிறார்கள். எல்லோரும் கோயிலுக்குச் செல்வதனால் தவறு ஒன்றுமில்லையே? (குறுக்கீடுகள்) கோயிலுக்குச் செல்வதில் தவறு ஒன்றுமில்லை. நாங்களும் விபூதி பூசியிருக்கிறோம். தவறில்லை. (குறுக்கீடுகள்) நாங்கள் மாறவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள், என்னைப் பேச விடுகிறீர்களா? (குறுக்கீடுகள்) இதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) கோயிலுக்குப் போவதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) கோயிலுக்குப் போவதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது திரு. கண்ணதாசன் அவர்கள் குறித்துப் பேசினார். சில பேர் கோயிலுக்குப் போகிறார்கள். கோயிலுக்குச் செல்லாதவர்கள்கூட, திரும்பவும் மாற்றிக்கொள்கிறார்கள். கோயிலுக்குப் போகாத கண்ணதாசன், திரும்ப மாற்றிக் கொண்டார் என்று சொன்னார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எல்லோரும் இப்போதுகூட கோயிலுக்குச் செல்கிறார்கள் என்றார். (குறுக்கீடுகள்) நீங்களும்

போகிறீர்கள் என்றுதான் சொன்னார். அதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) நீங்கள் கோயிலுக்கு போகிறீர்கள் என்றுதானே சொல்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் என்ன சொன்னீர்கள்? அதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்கார்ந்தால்தானே சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவரே, நான் திரும்பவும் சொல்கிறேன். எல்லோரும் கோயிலுக்குத்தான் போகிறோம். அவர்களும் கோயிலுக்குத்தான் போகிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் துணைவியார் அவர்களும் கோயிலுக்குத்தான் போகிறார்கள் என்று சொன்னேன். இதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) இதில் தவறு ஏதுமில்லையே? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் என்ன சொன்னீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் யார் பெயரையாவது குறிப்பிட்டிருக்கிறீர்களா? குறிப்பிட்டுச் சொன்னீர்களா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, நான் திருத்தம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 4-05

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொன்னார் என்றால், கண்ணதாசன் அவர்கள், ஏற்கெனவே*

திருத்திக்கொண்டுவிட்டார். அவர்களின் தலைவரைப் பற்றி சொன்னார். கோயில் கூடாரமாக இருக்கக்கூடாது என்று சொன்னார். சொல்லிவிட்டு என்ன சொன்னார், இப்போது பக்தியில்கூட ஏறுகிறது, இறங்குகிறது என்று சொன்னார். சாதாரணமாக சாமி கும்பிடுபவர்களை, ஒருவருடைய குடும்பத்தில் சோகம் வருகிறது என்றாலும், அதேநேரத்தில் சந்தோஷம் வருகிறது என்றாலும் கும்பிடுகிறார்கள் என்று அவர் சொன்னார். அதற்காகத்தான் நான் சொன்னேன். நாங்களெல்லாம் சாமி கும்பிடத்தான் செய்கிறோம். அப்படியென்றால், அவர்களுடைய வீட்டில் இருப்பவர்களெல்லாம் போகிறார்கள் என்றால், என்ன காரணத்திற்காகப் போகிறார்கள்? அவர்தானே சொன்னார். அவருடைய தலைவரைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டே வருகிறார். அப்படிச் சொல்லும்போது, இதைச் சொன்னதில் தவறு என்ன இருக்கிறது? (குறுக்கீடு) அப்படியென்றால், எதற்காகக் கோயிலுக்குப் போனார்கள்? ஒவ்வொருவரும் சந்தோஷத்திலும் கோயிலுக்குப் போகிறார்கள்; (குறுக்கீடு) உறுப்பினர் சொன்னார். நீங்கள் ஏன் இவ்வளவு கோபப்படுகிறீர்கள்? சந்தோஷத்திலும் கோயிலுக்குப் போகிறார்கள்; வருத்தத்திலும் கோயிலுக்குப் போகிறார்கள் என்று அவர் சொன்னார். சோகம் இல்லையென்றாலும், போகிறார்கள் என்று சொன்னார். அப்படியென்றால் அவர்கள் எதற்காகப் போகிறார்கள் என்று கேட்டதில் என்ன தவறு வந்துவிட்டது? நான் என்ன தவறாகப் பேசினேன்? (குறுக்கீடு) இந்த அவையை நான் ஒன்றும் கொச்சைப்படுத்தவில்லை. அவர் பேசியதற்குத்தான், நான் பேசினேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்து நின்று சத்தம் போட்டால் சரியாகிவிடுமா? தவறு. (குறுக்கீடுகள்) அவர் பேசிய வார்த்தைகளை, (குறுக்கீடுகள்) அவர் என்ன பேசினார் என்பதை அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்ன பேசினார் என்பதை நீங்கள் அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) ‘சோகம் வந்தால், கோயிலுக்குப் போகிறார்கள்; மகிழ்ச்சி வந்தால் கோயிலுக்குப் போகிறார்கள்; பக்தி ஏறி, இறங்குகிறது’ என்று உறுப்பினர் சொன்னார். (குறுக்கீடுகள்) அதற்குத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) ‘அவர்கள் சந்தோஷத்தில் கோயிலுக்குப் போகிறார்களா மகிழ்ச்சியில் போகிறார்களா’ என்று கேட்டேன்.

இதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்) என்ன இது? இதற்குப்போய் அவர்களும் சத்தம் போடுகிறார்கள் என்றால், நீங்களும் விவரம் இல்லாமல் கேட்கிறீர்களே? (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, நீங்கள் ஆறாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் அவர் சொன்னதை வைத்துத்தானே சொன்னேன்? (குறுக்கீடு) நான் தவறாகச் சொல்லவில்லையே? இதைத்தான் சொன்னேன். அவர்கள் சந்தோஷத்திலும் போகிறார்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினரைச் சொல்லச் சொல்லுங்கள். அவர் என்ன பேசினார் என்று அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைத்தான் சொன்னேன். 'சந்தோஷத்திலும் கோயிலுக்குப் போகிறார்கள்; வருத்தத்திலும் கோயிலுக்குப் போகிறார்கள்; பக்தி குறைகிறது, கூடுகிறது' என்று கூறினார். 'அப்படியென்றால் அவர்கள் எதற்காகப் போகிறார்கள்?' என்றுதான் நான் கேட்டேன். இதில் என்ன தவறு? இதில் ஒன்றும் தவறே இல்லையே? நான் ஒன்றும் குறையே சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் சொல்லிவிட்டேனே, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன்; எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சபையை நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) சபையை நடத்த ஒத்துழையுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தேவையில்லாததையெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. ரவிச்சந்திரன், நீங்கள் தேவையில்லாமல் பேசாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதுசம்பந்தமாகத்தான் அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல வருகிறார். (குறுக்கீடுகள்) சரி. அதுசம்பந்தமாகத்தான் அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல வருகிறார். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் நடந்ததைத்தான் சொல்லப்போகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், என்ன? சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பொதுவான நம்பிக்கை குறித்து ஒரு கருத்தை எடுத்து வைத்தார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொறுங்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மதம்மீது இருக்கக்கூடிய நம்பிக்கை, தெய்வத்தின்மீது இருக்கக்கூடிய நம்பிக்கைகளைப் பற்றி அவர் கருத்துகளைச் சொல்கிறபோது, பங்குச் சந்தையுடன் ஒப்பிட்டு, 'ஏறுகிறது, இறங்குகிறது' என்று கூறினார். பொதுவான நம்பிக்கையைப் பற்றி கருத்துகளைச் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்போடு கருத்துகளைச் சொல்ல வேண்டும்.*

பிற்பகல் 4-10

அவர் சொன்னபோது, துன்பம் வந்தால் திடீரென்று எண்ணிக்கை கூடுகிறது, இன்பம் வந்தால் கூடுகிறது. ஏறுகிறது, இறங்குகிறது என்று சொன்னார். (குறுக்கீடுகள்) அப்படியானால், கோயிலுக்குப் போகிறவர்களெல்லாம், துன்பம் வருகிறது, மகிழ்ச்சி வருகிறது என்பதற்காகப் போகிறார்களா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிக்கையைப் பற்றி பேசுகின்றபோது, இந்த நாட்டிலே எல்லோரும்தான் கோயிலுக்குப் போகிறார்கள், அவர்கள் வீட்டிலேகூட கோயிலுக்குப் போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இதிலே அவர்களுக்கு இன்பமா, மகிழ்ச்சியா என்ற விளக்கத்தைதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த உறுப்பினர் வாயிலாக கேட்க விரும்பினாரேயொழிய, யாரையும் குற்றச்சாட்டு சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. ஆகவே, இன்றைக்கு அவர்கள் திட்டமிட்டு 100 நாள் சாதனையை, நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதித்த சாதனையை இன்றைக்கு உலகத்திற்கு எடுத்துச் சொல்வதை, அதை மறைப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைகளை அவர்கள் எத்தனை முயற்சி செய்தாலும் மறுக்க முடியாது. மறைக்க முடியாது. இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். அவரவர்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போகாமல் நான் ஒன்றும் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டு இப்படியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உங்கள் கொறடாவிற்கு வாய்ப்பு கொடுத்து அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக அமைச்சர் யாரையும் புண்படுத்துவது மாதிரி அவர் சொல்லவில்லை என்று

விளக்கம் சொல்லிவிட்டார். அவர் விளக்கத்திற்கு மேலே, வருவாய்த் துறை அமைச்சரும் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். இதில் மேற்கொண்டு யாரையும் புண்படுத்துவது மாதிரி விஷயம் இல்லை. (குறுக்கீடுகள்) மேற்கொண்டு அது பற்றி பேச வேண்டியதில்லை. மாண்புமிகு உறுப்பினர் இராதாமணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும், அப்புறம் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) விளக்கம் சொல்லிவிட்டார்கள். அது பதிவாகிவிட்டது அல்லவா? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் பேசியதற்கு விளக்கம் சொன்னார். விளக்கம் சொன்னதிலே யாரையும் புண்படுத்துகின்ற நோக்கத்தில் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். அதிலே என்ன இருக்கிறது. முதலில் சொன்னதும் இருக்கட்டும், அவர் இரண்டாவது சொன்ன விளக்கமும் இருக்கிறது. அவ்வளவுதான். தீர்ந்துபோய்விட்டது. மேற்கொண்டு அதையெல்லாம் நீக்க முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நீக்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். திரு. இராதாமணி நீங்கள் பேசுகிறீர்களா? இல்லையா? (குறுக்கீடுகள்) பேசுங்கள். இல்லையென்றால் அமைச்சரை பதிலுரைக்கு அழைப்பேன். (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்பை தெளிவாகச் சொல்லிவிட்டேன். அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். விளக்கம் ஏற்கப்பட்டது. முதலில் சொன்னதும் இருக்கும். அமைச்சர் சொன்ன விளக்கமும் இருக்கும். அவ்வளவுதான். இதுதான் என் தீர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடுகள்) பேச விருப்பமில்லை என்றால் அமைச்சர் பேசுவார்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் கோயிலுக்குப் போகிறவன். அதனால்தான் ஏற்ற இறக்கம் இருக்கும் என்பதால்தான் நான் சொன்னேன். வேறு யாரையும் புண்படுத்தும் நோக்கத்தில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்க புத்தகத்தை நான் முழுவதும் படித்துப் பார்த்தேன். அதில் ஸ்ரீரங்கத்திலே 'யாத்ரி நிவாஸ்' கட்டப்பட்டதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைப்போலவே திருவண்ணாமலையிலும், இராமேஸ்வரத்திலும் பொதுப் பணித் துறை மூலம் கட்டுவதாக அறிவித்திருக்கிறீர்கள். உள்ளபடியே ஸ்ரீரங்கத்திலே கட்டியிருக்கின்ற 'யாத்ரி நிவாஸ்' நன்றாக இருக்கிறது. நான் பார்த்திருக்கிறேன். ஆனால்,

அதை திருவண்ணாமலையோடும், இராமேஸ்வரத்தோடும் நிறுத்திவிடக்கூடாது. ரங்கநாத ஸ்வாமியுடனும், அருணாசலேஸ்வரருடனும் நிறுத்திவிடக்கூடாது. அதற்கு அப்பால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் இருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கின்றவர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டில் இருந்து வருகின்றவர்கள்கூட மதுரையில் தங்கி சுற்றுலா பயணிகள் யாராக இருந்தாலும், மதுரை மீனாட்சி அம்மனை தரிசிக்காமல், மதுரை திருமலை நாயக்கர் மஹாலை பார்க்காமல் செல்வதில்லை.

பிற்பகல் 4-15

ஆகையால் அடுத்த நிதியாண்டிலாவது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மதுரையிலும், அதேபோல் சிதம்பரத்திலும் யாத்ரி நிவாஸ் நீங்கள் அடுத்த நிதியாண்டில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தேர்கள் அதிகப்படியாக செப்பனிடப்பட்டது என்று ஒரு பொய்யான குற்றச்சாட்டைப் பதிவு செய்தார். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அதாவது 2006-2011 முடிய 16 திருத்தேர்கள் மட்டும் 83.85 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், கடந்த ஐந்தாண்டுகளில் 143 திருத்தேர்கள் ரூபாய் 15.90 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரையில் யாத்ரி நிவாஸ் கட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தில் மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு சென்னையிலிருந்தும் மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாதத்தில் இரண்டு நாட்கள் பௌர்ணமி, அமாவாசை தினத்தன்று இலட்சக்கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். அப்படிக் கூடுகிற நேரத்தில் போதுமான வசதிகள், கழிப்பிட வசதிகள், சுகாதார வசதிகள், அதேபோல் அன்றைக்கு சாமி தரிசனம் செய்துவிட்டு திரும்புகிற நேரத்தில் காரில் செல்பவர்கள் எல்லாம் மிதமிஞ்சிய வேகத்திலும், நெருக்கடியினாலும் அதிக விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகையால் அந்தக் கோயிலுக்குச் செல்பவர்கள் தங்குவதற்கு ஒரு பயணியர் விடுதி ஒன்று கட்டித் தருமாறு இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மரக்காணம் வட்டம், கீழ்புத்துப்பட்டு, மஞ்சள் ஈஸ்வரர் ஆலயத்தில் கிட்டத்தட்ட 120 ஏக்கர் நிலம், காடு, மூலிகைச் செடிகள் எல்லாம் இருந்த இடத்தில் நடுவில் அந்த மஞ்சள் ஈஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அவையெல்லாம் பல ஆண்டுக் காலமாக ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, அவையெல்லாம் நிலங்களாக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி அதில் மூலிகைச் செடிகளை வளர்க்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு காலத்தில் சைவமும், வைணவமும் போட்டிப் போட்டுக்கொண்டு பக்தி இயக்கத்தை நடத்திய காலத்தில் கூன்பாண்டியன், 700 சமணர்களை தூக்கிலிட்ட காலத்தில் சைவம் பெரியதா, வைணவம் பெரியதா, சமணம் பெரியதா என்று போட்டி பக்தி இயக்கங்கள் நடத்திய காலத்தில் துவைதம், அத்வைதம் என்ற இரண்டு பிரிவுக்கும் ஒரு compromise settlement ஆக ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த இராமானுஜர் அவர்கள் அந்த பக்தி மார்க்கத்திற்குள் ஏற்பட்ட மோதலைத் தடுப்பதற்காக வசிஸ்டாத்வைதம் என்ற ஒரு பக்தி மார்க்கத்தை ஏற்படுத்தி, மதத்தில் புரட்சி செய்த மகான் இராமானுஜர் அவர்கள் பிறந்த ஆயிரமாவது ஆண்டில் ஒரு வைணவ திருக்கோயில் ஸ்ரீபெரும்புதூரில் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன்

என்றால், ஆந்திராவில் 130 அடி உயரத்தில் 1000 கோடி ரூபாய் செலவில் ஒரு சிலையை அமைக்க இருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த இராமானுஜர் அவர்களுக்கு அந்த மரியாதையைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், எங்கள் மாவட்டத்தில் பல ஆயிரம் ஆண்டுக் கால பழமைவாய்ந்த கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. ரிஷிவந்தியத்தில் ஆதி திருவரங்கம் என்ற கோயில் இருக்கிறது. ஜம்பையில் ஒரு கோயில் இருக்கிறது. பல்வேறு கோயில்கள் குடமுழுக்கு செய்யப்பட்டு 12 ஆண்டுகள் ஆனபிறகு கூட எங்கள் மாவட்டத்தில் சில கோயில்கள் குடமுழுக்கு செய்யப்படாமல் இருக்கிறது. அவற்றிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடமுழுக்கு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், திருவாரூர், திருவண்ணாமலை, ஸ்ரீவில்லிப்புத்தூர், மதுரை, திருவரங்கம் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள முக்கிய கோயில்களில் உள்ள தேரோடும் வீதிகளை எல்லாம் கான்கிரீட் சாலையாக அமைத்துத் தரும்படி நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் கொள்கை விளக்கப் புத்தகத்தைப் பார்த்தேன். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சேக்கிழார் போன்றவர்களுக்கெல்லாம் விழா எடுப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். கம்பராமாயணத்தை இயற்றிய சடையப்பவள்ளல் பிறந்த திருவெண்ணெய்நல்லூரில் அவருக்கு நினைவு மண்டபம் ஏற்படுத்தி, அவருக்கும் விழா எடுக்கவேண்டுமென்று இந்த அரசை உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

கழக அரசு 1989-ல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் அமைத்த இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு கொள்கையின்படி கோயில்களின் நிருவாகம் மேலும் சிறப்புடன் நடைபெறுவதற்கு தகுந்த அதிகாரிகளுடன் கூடிய சட்ட ரீதியான உயர்நிலை ஆலோசனைக் குழு High Level Statutory Advisory Committee அமைத்து செயல்படும் என்று தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தாங்கள் தொடர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். திருக்கோயில் சொத்தைப் பொறுத்தவரையில், இதிலே நான்

சொல்வதற்குக் காரணம், 'சிவன் சொத்து குல நாசம்' என்று சொல்பவர்களும் உண்டு. 'ஆண்டவன் சொத்து ஆளுக்குப் பத்து' என்று எடுத்துக்கொள்பவர்களும் உண்டு. இரண்டும் உண்டு. ஆகையால் அப்படி இருக்கிற காரணத்தால்தான் ஆண்டாண்டு காலமாக ஆயிரம் காலத்துப் பழமையான ஐம்பொன் சிலைகளை எல்லாம் ஒரு network அமைத்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு அனுப்புவதை நமது காவல் துறையினர் கண்டுபிடித்து திருப்பி எடுத்து வருகிறார்கள். இன்னும் தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகிறார்கள். சில சிலைகள் எடுத்துவரப்படாத சூழ்நிலையும் இருக்கிறது. ஆகையால், இதுபோன்ற சிலை திருடர்களைக் கண்டுபிடித்து, அவர்களைக் கடுமையான சட்டத்தின்மூலம் தண்டிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல். . .

பிற்பகல் 4-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கட்டுப்பாட்டின்கீழ் 38,630 திருக்கோயில்கள் உள்ளன. தற்போது இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் உள்ள விலைமதிப்பற்ற உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் கற்சிலைகள் ஆகியவற்றைப் பாதுகாத்திட திருக்கோயில்களில் தேவையான எண்ணிக்கையில் களவு எச்சரிக்கை மணி, கோள் சொல் கடிகாரம், தொட்டிப் பூட்டு, இரும்பு வாயிற்கதவுகள், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் பொருத்துதல், இரவுக் காவலர்கள் நியமனம், பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது சிலை திருட்டு தடுப்புப் பிரிவினரால் தீனதயாளன் என்பவர் சென்னை ஆழ்வார்பேட்டையில் சுவாமி சிலைகளை மறைத்து வைத்திருந்த 3 இடங்களில் சோதனை செய்து, 54 பஞ்சலோக சிலைகள், 254 கற்சிலைகள், 28 மரத்தினாலான சிற்பங்கள், தங்கத்தினாலான சிற்பம் ஒன்று மற்றும் 151 ஓவியங்கள் என மொத்தம் 488 இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேற்படி

கண்டுபிடிக்கப்பட்ட சிலைகளில் கற்சிலைகளே அதிகமாக உள்ளன. இவற்றில் சில பின்னப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட சிலைகளாக இருக்கலாம் எனத் தெரிகிறது. ஓரிரு சிலைகள் அண்மைக் காலத்தில் செய்யப்பட்ட புதிய சிலைகளாக உள்ளன. இச்சிலைத் திருட்டு தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்திய அளவில் செயல்பட்டுவருவதாகத் தெரிகிறது. பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த மேற்படி களவு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கண்டுபிடிக்கப்பட்டு, முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பெரிய திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணியும், கண்காணிப்பு ஒளிப் படக் கருவி அமைப்புகளும் பொருத்தப்பட்டுள்ளன. உலோகத் திருமேனிகள் பாதுகாப்பின் அவசியத்தை முன்னிட்டு 19 இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் பாதுகாப்பற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகள் வைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக 15 இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்களின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் கட்டப்பட்ட உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 18-7-2016 அன்று திறந்துவைக்கப்பட்டது. இன்னும் 14 இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்களின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி, பேசுங்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை நான் முழுவதுமாகப் படித்துப் பார்த்தேன். அதில், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று சொன்ன வள்ளலார், 'சாதியும், மதமும், சமயமும் பொய்' என ஆதியில் உரைத்த

அருட்பெருஞ்சோதி என்று சொன்ன வள்ளலார், அணையா விளக்கை ஏற்றிய வள்ளலாரின் சன்மார்க்க சபையைப் பற்றியோ, அந்த சபைக்கு ஏதேனும் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதைப் பற்றியோ ஒரு குறிப்பும் இல்லை. நான் அந்த இடங்களுக்கெல்லாம் செல்லக்கூடியவன் என்ற முறையில் எனக்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகின்றேன்.

தைப்பூசத் திருநாளன்று வடலூர் வள்ளலார் கோயிலில் இலட்சக்கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். அப்படிக் கூடுகின்ற நேரத்தில் நேர்த்திக் கடன் செலுத்துவதற்காக உணவுப் பொட்டலங்களை வழங்குகிறார்கள். அதற்கு ஒரு வரன்முறையே இல்லை. அந்த சன்மார்க்க மண்டபத்தைச் சுற்றிலும் உணவுப் பொட்டலங்களை வழங்கி, மிகவும் அசுத்தமாக்கிவிடுகிறார்கள். வெளிநாட்டிலிருந்து ஜோதி தரிசனத்திற்காக வருபவர்களெல்லாம் சங்கடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அவர்கள் 3 நாட்கள் அங்கு தங்குகிறார்கள். அவர்கள் தங்குவதற்காக அந்த இடத்தில் மண்டபமோ, தங்கும் விடுதியோ எதுவும் கிடையாது. ஆகையால், இந்த அரசு அந்த இடத்தில் ஓர் தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நான் கோயிலுக்குச் செல்பவன். இன்னும் சொல்லப்போனால், இந்த அவையில் இருக்கின்ற ஆளும்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், இந்த அவையில் இடம்பெற்றிருக்கக்கூடிய உறுப்பினர்களெல்லாம் சபரி மலைக்குச் சென்றுவருவதாகக் கூறினார். அவர் சொல்லும்போது, நான்கூட ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அதாவது, நான் சொல்ல விரும்புவது, முன்பெல்லாம் மகர ஜோதிக்கும், ஆண்டுப் பிறப்பன்றும் சபரி மலைக்குச் செல்வார்கள். ஆனால், இப்போதெல்லாம், மாதந்தோறும் 5 நாட்கள் சபரி மலைக்குச் செல்கிறார்கள். அப்படிச் செல்கின்ற நேரத்தில், இரவு முழுவதும் மலைப் பயணங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, விபத்து ஏற்படுகிறது. ஆகையால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தொகுதியில் உள்ள குமுளியில், காரில் செல்பவர்கள் இரவில் தங்கி, பகலில் தங்கள் பயணத்தைத் தொடருவதற்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அந்த இடத்தில் ஓர் விடுதியைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஏற்கெனவே ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதுபோல, அங்கு ஒரு பேருந்து நிலையமும் அமைக்க வேண்டும். ஏனென்றால், கேரள மாநிலத்திலிருந்து வருகின்ற பேருந்துகளும் தமிழ்நாட்டிலிருந்து செல்கின்ற பேருந்துகளும் நிறுத்த இடமில்லாமல், ஒன்றையொன்று முட்டிக்கொண்டு நிறுத்தப்பட்டிருப்பதால் கார்கள் செல்ல இடமில்லாமல், அந்த இடத்தைக் கடக்க ஒரு மணி நேரத்திற்கும் மேல் ஆகும். ஆகவே, அந்த உறுப்பினர் சொன்னது நியாயமான கோரிக்கை. ஆகையால் அதற்கு தனியாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நமது எல்லையில், ஒரு தனி பேருந்து நிலையத்தை அமைத்துத் தர வேண்டும். அதே மாதிரி, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அங்கு ஒரு தங்கும் விடுதியும் அமைத்துத் தரும்படி கோரிக்கை வைக்கிறேன்.

பிற்பகல் 4-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் பல்வேறு கோயில்களில் குடமுழுக்கு செய்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், கிராமங்களில் ஆயிரம் ஆண்டு காலத்து கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தக் கோயில்களை நீங்கள் தக்க அதிகாரிகளை வைத்து, கண்டறிந்து அவற்றிற்கு எல்லாம் குடமுழுக்கு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், சில கோயில்களில் குளங்கள் எல்லாம் சீரமைக்கப்படாமல் அப்படியே கிடக்கின்றன. நகர்ப்புறங்களில், சென்னை போன்ற பகுதியில், குறிப்பாக, புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயில், புரசைவாக்கம் அங்காளம்மன் கோயில் ஆகிய பகுதிகளில் நகரத்து மக்கள் அதிகமாக வாழுகின்ற காரணத்தால் குளங்களைச் சீரமைப்பதற்கு சங்கடங்கள் ஏற்படும். இருந்தாலும், திருவிழாக் காலங்களில் மக்கள் முழுமையாக இறையாண்மையில் தங்கள் பக்தியைச் செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால் அந்தக் குளங்களையும் இந்த அரசு சீர் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கையின்மீது இன்னும் கூட விரிவாகப் பேசலாம். இருந்தாலும், உங்கள் கண்டிப்பின் காரணமாக இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

தொகுதி சார்ந்த சில கோரிக்கைகளை வைக்கிறேன். இவை கோரிக்கைகள் தான். குற்றம் என்று மாண்புமிகு அமைச்சர் கருதிவிடக் கூடாது. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்று

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், அதை நினைவுபடுத்தி கோரிக்கையை சீக்கிரம் படித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். நான் பதிவு செய்து விடுகிறேன்.

திரு. கு. இராதாமணி: என் தொகுதியில் இருப்பவர்கள் நீங்கள் சட்டமன்றத்தில் பேசினீர்களா என்று கேட்பார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இவ்வளவு நேரம் அனுமதித்தீர்கள், இன்னும் 5 நிமிடம் அனுமதியுங்கள். சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். சொல்வதோடு நிறுத்தி விடவேண்டும். பின்னர், மீதம் உள்ளவற்றை பதிவு செய்யச் சொல்லி கொடுக்கக்கூடாது. சரி சொல்லுங்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று உள்ளது. விக்கிரவாண்டி வட்டமாக உருவாகி இருப்பதால், வட்டத்திற்கு ஒரு மருத்துவமனையாக, அந்த சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம் phase II-ன்கீழ், விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், கக்கன் காலனியில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும் அமைத்துத் தரவேண்டி, அதற்கான ஆய்வுப் பணிக்காக பேரூராட்சி சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பை-பாஸ் ரோட்டில் செல்கின்ற பேருந்துகள் விக்கிரவாண்டி பேருந்து நிலையத்திற்கு வருவதில்லை. இருட்டில் இறக்கி விட்டுவிட்டு சென்று விடுகிறார்கள். ஆகையால், தயவு செய்து அந்தப் பேருந்துகள் நகரத்திற்குள் வரும்படி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாள் கோரிக்கையான நந்தன் கால்வாய் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்தி, பம்பை-வாதனூரான் வாய்க்காலைச் சீரமைத்து, விக்கிரவாண்டி வட்டத்திலுள்ள அனைத்து ஏரிகளிலும்

தண்ணீரின் கொள்ளளவை அதிகப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்ட அமைச்சர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். விழுப்புரம் புறவழிச் சாலையில் எனது தொகுதியான காணை-மாம்பழப்பட்டு வழியாக திருக்கோவிலூர் செல்லும் சாலையில் பை-பாஸ் வழியாகச் செல்ல வேண்டுமென்றால் 3 கி.மீ. சுற்றி வந்து, பிறகு காணை, திருக்கோவிலூர் செல்ல வேண்டும். ஆகையால், NHAI திட்டத்தின் மூலமாக சர்வீஸ் ரோடு அமைத்துத் தருமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி ஒன்றியத்தில் எண்ணாயிரம் என்ற கிராமம் கவி காளமேகம் பிறந்த ஊர். நாலடியாரைப் பற்றிக் கூட இந்த அவை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது. நாலடியார்கள் வாழ்ந்த ஊர். அந்த ஊரில் இராஜேந்திர சோழன் காலத்தில் ஆகம கல்லூரி ஒன்று நடத்தப்பட்டது. எனவே, அங்கு ஒரு கலைக் கல்லூரியை அரசின் சார்பில் நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் தீயணைப்பு நிலையமே இல்லை. விக்கிரவாண்டி, காணை அல்லது கேதார் ஆகிய இரண்டு ஊர்களில் தீயணைப்பு நிலையங்களை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏற்கெனவே எங்களுடைய திருக்கோவிலூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பண்ருட்டி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் பேசியிருக்கிறார்கள். நான் இப்பொழுது விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. என்றாலும்கூட, முண்டியம்பாக்கம் தொகுதியில் இருக்கிறவர்கள் தங்கள் தொகுதியைப் பற்றி பேசவில்லையே என்று கேட்பார்கள். அதற்காக இரண்டே இரண்டு வரி.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிடமாட்டார்கள். முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலையில் 23 கோடி ரூபாய் நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டியிருக்கிறது. தொடர்ந்து 2012-2013, 2013-2014 ஆகிய இரண்டு

ஆண்டுகளிலும் இந்த நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. சர்க்கரை ஆலை நிருவாகம் ஒரு வருடம் நஷ்டத்தைப் பார்த்தாலும், ஒரு வருடம் இலாபத்தை பார்க்கக்கூடிய நிருவாகம். ஆனால், விவசாயத்தைப் பொறுத்தவரையில், உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது. விவசாயிகளின், அதுவும் கரும்பு விவசாயிகளின் கஷ்டத்தைச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகை தொடர்ந்து ஆண்டாண்டு காலமாக நிறுத்தப்பட்டு வருகிறது. அவற்றை எல்லாம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நான் கண்டமங்கலம் ஒன்றியத்தில் வசிக்கின்ற காரணத்தினால், கண்டமங்கலம் ஒன்றியத்தின் எல்லையில், கண்டமங்கலத்தைச் சேர்ந்த 4,000 விவசாயிகள், புதுவை மாநிலத்தைச் சேர்ந்த 2,000 விவசாயிகள், ஆக மொத்தம் 6,000 விவசாயிகள், அரியூர் Horizon Sugar Factory-க்காக கரும்பு பயிர் செய்தார்கள். அந்த தொழிற்சாலையை நெல்லிக்குப்பத்தில் உள்ள EID Parry Company இப்பொழுது வாங்கிவிட்டார்கள். அதை வாங்கி ஒரு வருடம் அரைவை அரைத்து, பிறகு நிறுத்தி விட்டார்கள். அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் பல்வேறு போராட்டங்களைச் செய்தாலும்கூட, புதுவை மாநில சர்க்கார் பேச்சு வார்த்தை நடத்தியும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

தமிழ்நாடு பெரிய மாநிலமாக இருப்பதால், தமிழ்நாட்டில்தான் அந்த தொழிற்சாலையின் முதலாளியும், நிருவாக அதிகாரிகளும் இருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், அதிகாரிகளை அழைத்துப் பேசி அந்த ஆலையைத் திறப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-30

முண்டியம்பாக்கத்தில் உள்ள விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி, தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட கல்லூரி. அந்தக் கல்லூரி சிறப்பாக இயங்கி வருகிறது. திருச்சிக்கும், சென்னைக்கும் இடையில் உள்ள நான்கு வழிச் சாலையில் வாகனப் போக்குவரத்து மிதமிஞ்சிய வேகத்தில் செல்கின்ற காரணத்தினால் விபத்துகள் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. அப்படி ஆகிவிடுகின்ற நேரத்தில், அவர்களுக்கு உயிர் காக்கும் மருத்துவமனையாக விழுப்புரம் மருத்துவமனை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த

மருத்துவமனையை மேலும் நவீனப்படுத்திட வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், Mortuary-ல் Postmortem செய்கின்ற இடத்தில் புதிய உபகரணங்களை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஒரு மருத்துவமனை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனை பிரசவகால பேறு மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்குள் பெண்கள் செல்லும்போது தரை வழுக்குகிறது. தரையை நல்ல costly தரையாகப் போட்டிருப்பதால், அங்கு பெண்கள் சென்று ஏறும்போது தரை வழுக்குகிறது. ஆகவே, அந்தத் தரைகளை மாற்றி, நல்ல சொர சொரப்பான தரைகளை அமைத்துத் தர வேண்டும். அதற்கு ஒரு ramp அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விக்கிரவாண்டி வட்டத்தில் ஆவுடையார்பட்டு ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி, நீங்கள் பேசியதுபோதும், உரையை முடியுங்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிட்டேன், ஒரே ஒரு நிமிடம். ஆதி திராவிட மக்களுக்கு பஞ்சமி நிலத்தில் மனைப் பட்டா வழங்க அரசின் அனுமதிக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காணை ஒன்றியத்தில், கல்பட்டு ஏரிக்கரை வழியாக நத்தமேடு கிராமத்திலிருந்து மாம்பழப்பட்டு வரை செல்லும் சாலை வழி பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாமல் உள்ளது. அதையும் சீர்செய்து தர வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். காணை ஒன்றியம், தெளிமேடு கிராமத்திலிருந்து கல்பட்டு கிராமத்திற்கு தென்பெண்ணை ஆற்றுக் குடிநீர் 1985 முதல் கிடைத்து வந்தது. தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாக வரவில்லை. அதையும் தொடர்ந்து கிடைத்திட வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எல்லிச்சத்திரத்திலிருந்து மாம்பழப்பட்டு வரை செல்லும் சாலை சிறுவாக்கூர் டவர் ரோடு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பராமரிப்பின்றி மிகவும் மோசமாக உள்ளது. அதையும் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரத்திலிருந்து செம்மேடு செல்வதற்கு பஸ் வசதி இல்லை. அதை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்டாச்சிபுரம் முதல் அனந்தபுரம் வரை செல்லும் சாலையில், நல்லாப்பாளையம் முதல் கடையம் வரை உள்ள சாலை வனத் துறைக்கு சம்பந்தப்பட்ட சாலையாகும். ஆகவே, வனத் துறையின் அனுமதி பெற்று அதைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கீதமங்கலம் முதல் நங்காத்தூர் வரை செல்லும் சாலையும், அனுமந்தபுரம் முதல் சித்தேரி வரை செல்லும் சாலையும், நல்லாப்பாளையம் முதல் அடுக்கம் வரை செல்லும் சாலையும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், அதைச் சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசிற்குச் சொந்தமான கஸ்தூரிபாய் மருத்துவமனை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி, நீங்கள் பேசியது போதும். நீங்கள் நிறைய கோரிக்கைகளை வைத்துவிட்டீர்கள். நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள்.*

திரு. கு. இராதாமணி: *ஒரே ஒரு point. உங்களுக்கு நன்றி சொல்லிவிட்டு உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கு. இராதாமணி: *பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில், சாலையோரங்களில் தட்டுகளிலும், சைக்கிளிலும் வியாபாரம் செய்கின்ற மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள ஏழை வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கி, தொழில் பாதுகாப்பு வழங்கி, அவர்களையும், அவர்களது குடும்பத்தாரின் எதிர்காலத்தையும் காப்பாற்ற இந்த அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

இந்த உரையை முடிப்பதற்கு முன்பாக என்னுடைய விக்கிரவாண்டி தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி. வறண்ட பிரதேசமாக உள்ள தொகுதி. அந்தத் தொகுதியில் ஏதேனும் ஓர்

இடத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு முக்கியமான கோரிக்கை. கடலூர்-விழுப்புரம் மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றங்கரையோரத்தில் பெரும்பாலும் விவசாயிகள் இருக்கிறார்கள். தென்பெண்ணை ஆற்றில் 60 அடியிலிருந்த நிலத்தடி நீர் இப்போது 120 அடியளவிற்குச் சென்றுவிட்டது. எல்லிச்சத்திரம் அணைக்கட்டிலிருந்து மஞ்சக்குப்பம் அணை வரையில் 35 கிலோ மீட்டருக்கு இடையில் எந்த check dam-மும் கிடையாது. இது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அவருடைய ஊருக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. ஆகையால், தென்பெண்ணை ஆற்றில் 2 இடங்களில் check dam அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவ்வளவுதான். கடைசியாக 15 நிமிடங்கள் கோரிக்கைகளைத்தான் பேசியிருக்கிறீர்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையை முடித்துக்கொள்கிறேன். நீங்கள், எனக்குப் பேசுவதற்கு எவ்வளவோ அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். உங்களுக்கும் நன்றி. இந்த அவையில் பேசுவதற்கு அனுமதித்து, என்னை இந்த அளவிற்கு ஆளாக்கிய எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், ஆற்றல்மிக்க அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், இந்தப் பேரவைக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கண்டமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராதாமணி அவர்கள், கரும்பு சர்க்கரை ஆலைக்கு நிலுவைத் தொகை பற்றி கேள்வி எழுப்பினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளினுடைய கரும்பு நிலுவைத் தொகையை

உடனடியாக வழங்கிட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்கள். முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலை என்பது தனியார் சர்க்கரை ஆலை. கரும்பு விவசாயிகளினுடைய நலன் கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொடர்ச்சியாக 13-6-2016, 5-7-2016, 20-7-2016 ஆகிய நாட்களில் தனியார் சர்க்கரை ஆலை நிருவாகத்தை அழைத்துப் பேசி, உடனடியாக கரும்பு நிலுவைத் தொகைகளை வழங்கிட வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. F.R.P.-யைப் பொறுத்தவரை பிரச்சினை இல்லை. F.R.P. முழுமையாக வழங்கப்பட்டுவிட்டது. S.A.P.-ல் அவர்கள் சுணக்கம் காட்டுகிறார்கள். 3 பருவங்களுக்கு உண்டான காலக்கட்டத்தில் அவர்கள் நிலுவைத் தொகையை வைத்திருக்கிறார்கள். 917 கோடி ரூபாய் நிலுவைத் தொகை இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கரும்பு விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். மீண்டும், இதற்குண்டான முழு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, நிலுவைத் தொகையை உடனடியாக வழங்குவதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், புதுவை மாநிலம், அரியூர் Sugar Factory-ல் இருக்கக்கூடிய 6,000 ஏக்கர் Register செய்த கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதையும் உடனடியாக நிவர்த்தி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பிற்பகல் 4-35

SISMA தலைவரை அழைத்துப் பேசி, அந்த 6,000 ஏக்கர் registration-க்குண்டான பதிவுக் கரும்பையும் எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வலியுறுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையிலே 5 சர்க்கரை ஆலைகளிலே நிலுவை எதுவும் இல்லை. 12 சர்க்கரை ஆலைகளிலே நிலுவைத்

தொகை இருக்கிறது. அரசு வழிவகைக் கடன் 349 கோடி ரூபாய் கேட்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை வந்தவுடன் அதுவும் படிப்படியாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது இந்திய தேசிய நெடுஞ்சாலையில் சர்வீஸ் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை மைய அரசிடம் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வலியுறுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தென்பெண்ணை ஆற்றிலே தடுப்பணை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கோலியனூர் என்ற பகுதியிலே 12.50 கோடி ரூபாய் செலவிலே தடுப்பணைத் திட்டம் அறிவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது சபரிமலைக்குச் செல்லுகிற சபரிமலை பக்தர்கள் பயனடைகின்ற வகையிலே அவர்களுக்கு விடுதிகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென இங்கே ஒரு கோரிக்கை வைத்தார்கள். தமிழகத்திலே இதுவரையில் இல்லாத அளவில் 8,843 திருக்கோயில்களுக்கு திருப்பணியைச் செய்த தலைவர் மாண்புமிகு தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்களுக்குச் செல்கிற பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கிற வகையில், தமிழ்நாட்டிலிருந்து சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்கென 6-1-2016 அன்று கேரள முதலமைச்சர் தலைமையில் சபரிமலையில் "பம்பா சங்கமம் விழா" நடைபெற்றபோது, தமிழக

அரசின் சார்பில் மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களும், நானும் கலந்துகொள்வதற்கான வாய்ப்பை அன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள். தமிழக அரசின் சார்பில் சபரிமலையில் நிலக்கல் பகுதியில் விடுதியுடன் இணைந்த தகவல் நிலையம் கட்டுவதற்கு தமிழக அரசுக்கு 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும் என கேரள அரசால் அன்றைக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக மாண்புமிகு அம்மா அவர்கள் பழனி திருக்கோயிலுக்குச் சொந்தமான 4.35 ஏக்கர் நிலம் கேரள அரசுக்குத் தரப்படும் என அறிவித்து ஒப்பந்தம் செய்யப்படவிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சித் துறை பற்றிய பதிலுரை.

பிற்பகல் 4-40

சீரார்ந்த தமிழறிஞரைச் சிறப்பிக்கும் சிலப்பதிகாரமாய், மணிமணியாய்த் திட்டங்கள் தந்து, மணித்தமிழ் வளர்க்கும் மணிமேகலையாய், சீவகசிந்தாமணியாய், (மேசையைத் தட்டும் ஒலி) கடலாடும் வளநாடும் முகில்சூழும் நெடுவானும் வாழ்த்திசைக்க கோடிகள் கொடை கொடுத்துத் தமிழ் வளர்க்கும் குண்டலகேசியாய், வாய்க்காலில் நீர்போல வாயெல்லாம் தமிழாகி, வாய்த்த கொள்கையில் வளைந்து கொடுக்காத வளையாபதியாய், அருந்தமிழர் நெஞ்சில் நிலைத்த ஐம்பெருங்காப்பியமே! வள்ளுவன் குறளுக்குப் பொருளான அறமே! ஔவையின் அமிழ்தான மொழியே! தேனாடும் பூசேர்ந்த பூவாரமே! அந்தத் தேவார மூவரின் பாவாரமே! முத்தமிழர் நெஞ்சத்து முற்றத்தில் பதியமிட்ட பத்துப்பாட்டே! எட்டு எட்டுத் திசைவாழ்ந்த எங்கள் சித்தத்தில் எழுந்திட்ட எட்டுத்தொகையே! குவலயம் ஆளும் அன்னைத்தமிழே! குழந்தைச் சிரிப்புப் பிள்ளைத் தமிழே! பள்ளுத் தமிழே! வெல்லும் தமிழே! நாங்கள் உள்ளும் புறமும் சொல்லும் தமிழே! எங்கும் பொங்கும் கொங்குத் தமிழே! பூந்தமிழே!

பூவைத்தமிழே! நற்றமிழே! நறுந்தமிழே! நவிலும் தமிழே! திகட்டாத தமிழே! தீந்தமிழே! பாசத் தமிழே! பாவைத் தமிழே! அமுதத் தமிழே! அன்புத் தமிழே! அழகுத் தமிழே! அறிவுத் தமிழே! புன்னகைத் தமிழே! புரட்சித் தமிழே! பூபாளத் தமிழே! (மேசையைத் தட்டும் ஒலி) பொதிகைத் தமிழே! ஆளும் தமிழே! ஆட்சித் தமிழே! வாழும் தமிழே! வாகைத் தமிழே! வையம் கரம் கூப்பி வணங்கும் தமிழே, புகழ் தமிழே, புலரும் தமிழே, கன்னித் தமிழே, கவிதைத் தமிழே, காப்பியத் தமிழே, கம்பன் பாடிய காவியத் தமிழே, வண்டமிழே, ஒண்டமிழே, செந்தமிழே, செந்தேன் தமிழே, சிந்து தமிழே, சிந்தா மணித் தமிழே, புலவர் சிந்தையில் மகிழும் தமிழே, முந்தும் தமிழே, முத்துத் தமிழே, முத்தமிழே, வித்தகத் தமிழே, அகரத் தமிழே, சிகரத் தமிழே, சீர்மிகு தமிழே, பார்போற்றும் தமிழே, அருந்தமிழே, பெருந்தமிழே, வாழ்வாகிப் பின்தொடர்ந்து வரும் தமிழே, மதுரத் தமிழே, மதுரைத் தமிழே, மங்களத் தமிழே, மங்கைத் தமிழே, தேவாரத் தமிழே, பூவாரத் தமிழே, குமரி கண்ட குமரித் தமிழே, அனலில் வென்ற அக்கினித் தமிழே, புனலில் அமிழாத அமிழ்தத் தமிழே, நாதத் தமிழே, வாதத் தமிழே, வள்ளுவர் தமிழே, வள்ளலார் தமிழே, வள்ளல்கள் வளர்த்த வடிவுடைத் தமிழே, நேசத் தமிழே, வீசும் தென்றல் தமிழே, பாடும் தெம்மாங்குத் தமிழே, தென்பாண்டித் தமிழே, வெற்றித் தமிழே, வெண்பா தமிழே, நாவரசர் நாவினில் வேலான தமிழே, வேதாந்தத் தமிழே, வெற்றித் தமிழே, சந்தியா தாய் தந்த வீரத் தமிழே, (மேசையைத் தட்டும் ஒலி) பாமர மக்களின் சொந்தத் தமிழே, பாடும் புலவர் பந்தத் தமிழே, இயல் தமிழே, இசைத் தமிழே, நாடகத் தமிழே, எல்லாம் இணைந்து அறிவியல் தமிழோடு எட்டாம் உலகத் தமிழ் மாநாடு கண்ட எங்கள் அன்புத் தமிழாம் கண்கண்ட தமிழ்த் தாயாம், தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருப்பாதங்கள் வணங்கி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப மாமலையாம் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஒன்றியம், சேவூர் கிராமத்தில் நேசம் வைத்து நெசவு செய்யும் அம்மாவின் பாசக்கார நெசவாளர் குடும்பத்தில் திரு. பி.எம். சோமசுந்தரம்-திருமதி மரகதம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்தவனான நான், சிறு வயதிலேயே தந்தையை இழந்து, வருந்தி சொந்த முயற்சியில் மேற்படிப்பு வரை பயின்றேன். அக்காலங்களில் மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கைகளின்மீது ஏற்பட்ட ஈர்ப்பின் காரணமாக கழகத்தில் என்னை இணைத்துக்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மை விசுவாசியாக பணியாற்றத் தொடங்கினேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தனிப்பெரும் கருணையினால் முதன்முறை 1996 முதல் 2001 வரை கழக ஒன்றிய குழு உறுப்பினராகவும், 2001 முதல் 2006 வரை இரண்டாவது முறையாக கழக ஒன்றிய குழு உறுப்பினராகவும், 2006 முதல் 2011 வரை சேவூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1997 ஆம் ஆண்டு ஆரணி ஒன்றிய மாவட்டப் பிரதிநிதியாகவும், 1998 ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி மாவட்ட இணைச் செயலாளராகவும், 2000 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 16 ஆண்டு காலமாக திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் புரட்சித் தலைவி அம்மா பேரவை மாவட்டச் செயலாளராகவும், ஆரணி சட்டமன்றத் தொகுதி செயலாளராகவும் நியமிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையை ஏற்று கழகப் பணியாற்றி வந்தேன். மேலும், திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டேன்.

அம்மாவே தெய்வம் எனும் சிந்தனையில் கட்சிப் பணியாற்றி வந்த கடைக்கோடி தொண்டர்களின் கடையேன் நான்; ஆரணி தொகுதியில் சட்டப் பேரவை உறுப்பினராகப் போட்டியிட அனுமதியும் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னை வெற்றிபெறவும் வைத்து, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராக நியமனம் செய்து, எனக்கு வாழ்நாள் முகவரியும் தந்த எங்கள் குடும்ப குல தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் நம்பிக்கைக்குரிய என்னை, ஆரணி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த ஆரணி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணை ஏற்று, அல்லும், பகலும் வெற்றிக்காக உழைத்த கழகத் தொண்டர்களுக்கும், கழகப்

பொறுப்பாளர்களுக்கும், நன்றியைக் காணிக்கையாக்கி, தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான உரையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான அனுமதியோடு தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு திட்டங்கள் தந்து, தமிழ் வாழ, தமிழர் வாழ, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று தவ வாழ்க்கை வாழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, மீண்டும் ஒரு முறை அவர்தம் திருப்பாதங்களை, வணங்கி மானியக் கோரிக்கை மீதான என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 4-45

தமிழ் வளர்த்து தமிழர் நலனைக் காத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நிகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் வளர்ச்சி சாதனைகள் நிலவுலகம் இன்று வியந்து நோக்கிக் கொண்டிருக்கிறது.

‘தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்’ என்ற பாரதியின் கனவு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நனவாகிக் கொண்டிருக்கிறது.

‘சீனம் மற்றும் அரபு மொழிகளில், திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள், ஔவையின் ஆத்திசூடி’ என வண்ணத் தமிழ் வளர்க்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொடர்ச்சியான தமிழ் வளர்ச்சித் திட்டங்கள் கட்டற்ற வானமாய் விரிந்து, விசாலப்பட்டுக்கொண்டே செல்கின்றன.

தங்கள் வாழ்நாளை தமிழுக்கே அர்ப்பணித்த, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகையான 1,000 ரூபாயை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கி, அவர்களின் இதயத் தடாகங்களில் மகிழ்ச்சி மலர்களை மலரச் செய்து, சாரல் காற்றின் திசையில் சாய்ந்திருக்கும் மலர்களைப்போல், மக்கள் மனங்கள் என்றென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கமே சாய்ந்திருக்கும் என்பதே காலம் சொல்லும் உண்மை.

எண்ணிலா தமிழ் மக்களின் ஏக்கக் கனவாக இருந்த 'சித்திரைத் திருநாளை' மீண்டும் 'தமிழ்ப் புத்தாண்டாக' மீட்டுத் தந்த வீரத்தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வெற்றிச் சிறப்பைத் தமிழ்ப் பாவலர் உலகம் நன்றி பாராட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத் தலைமுறையினரிடையே மொழியுணர்வை ஏற்படுத்திட, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சு போட்டிகளுக்கான முதல் பரிசு ரூ.1,000, இரண்டாம் பரிசு ரூ.500 என இருந்த பரிசுத் தொகையை பத்து மடங்கு உயர்த்தி, முதல் பரிசு ரூ.10,000-மும், இரண்டாம் பரிசு ரூ.7,000-மும் வழங்கியுள்ளார்கள்.

அதேபோல், மாநில அளவில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு, முதல் பரிசாக இருந்த 5,000 ரூபாயை 15,000 ரூபாயாகவும், இரண்டாம் பரிசாக இருந்த 3,000 ரூபாயை 12,000 ரூபாயாகவும், மூன்றாம் பரிசாக இருந்த 2,000 ரூபாயை 10,000 ரூபாயாகவும் உயர்த்தி, இளைஞர்களிடையே தமிழ் எழுச்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால், மாணவர்களிடையே மொழி உணர்ச்சி உயர்ந்துள்ளது. இத்திட்டத்தால், தமிழ் புலத்தில் கல்வி பயிலாத பிற துறை மாணவர்களும் ஆர்வமுடன் தமிழ் பணியாற்ற முன்னணியில் நிற்கின்றார்கள்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு, தொடங்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைப் புதிதாக புனரமைப்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த திட்டங்கள் பற்பல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி மாநகரில் ஜவஹர்லால் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை தொடங்குவதற்கு, 10 இலட்சம் ரூபாயைக்கூட பகுதி, பகுதியாகத்தான் தருவோம் என்று சொன்னவர்கள் மத்தியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள், ஒரே தடவையில் 50 இலட்சம் ரூபாய் வைப்பாக வைத்து, தமிழ் இருக்கையைத் தொடங்கி, இந்தியாவின் தலைநகர் டெல்லியில் தமிழை உயர் ஆய்வில் இடம்பெறச் செய்தவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆவார்கள்.

தமிழால் வாழ்பவர்கள் மத்தியில், தமிழுக்காக வாழ்பவர்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆவார்கள். தங்கத்தாரகை நம் அம்மாவின் தமிழ் வளர்ச்சி சாதனைகளின் வரிசையில், அகத்தியரின் பன்னிரு சீடருள் ஒருவராம் தொல்காப்பியர் தந்த ஒப்பற்ற இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில், தொடர்ச்சியாக பல்வேறு பரிமாணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கில், இந்தியாவிலேயே முதல்முறையாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பியர் ஆய்விருக்கை ஏற்படுத்தி, தொல்காப்பியர் புகழை உலகெங்கும் பரவச் செய்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிக்காக உழைக்கின்ற தமிழறிஞர்களுக்கு அன்று விருதுகளும், சான்றுகளும், தங்கப்பதக்கங்களும் தந்து, அவர்களுக்கு சிறப்பு செய்து, முதன்முதலில் திருவள்ளுவர் விருதைத் தொடங்கி, திருவள்ளுவர் நாளைக் கொண்டாடச் செய்தவரும், இன்னும் சொல்லப்போனால், கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலைக்கு அடித்தளமிட்டவரும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். இவர் தன்னை தமிழினக் காவலர் என்று சொல்லிக்கொள்ளவில்லை. தமிழர்களின் தொண்டன் என்றார். அதனால்தான் அரசு ஊழியர்கள் தமிழில் ஒப்பமிட வேண்டும் என 21-6-1978 இல் அரசாணையிட்டார். இவர் அலங்கார வார்த்தைகளால் தமிழ் வளர்க்கவில்லை. அரசாணையின்மூலம் தமிழ் வளர்த்தவர்.

அதன்பிறகு, தமிழுக்காக வழங்கப்பட்ட விருதுகள் ஐந்து மட்டுமே. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான பொற்கால ஆட்சியில் ஒன்றா, இரண்டா, மூன்றா, நான்கா, ஐந்தா, 55 விருதுகள் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் வரலாற்றில் இனிவரும் காலங்களிலும் தமிழ் வளர்ச்சிக்காக இத்தனை விருதுகள், இனி

யாரும் தரப்போவதில்லை. மொழிக்காக உழைக்கின்ற தமிழறிஞர்களுக்கு சித்திரைத் தமிழ் புத்தாண்டு விழாவில் தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, ஜி.யூ.போப் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது.

பிற்பகல் 4-50

மேலும், மாவட்டந்தோறும் அமைப்பு வைத்து தமிழ் வளர்க்கும் 32 அறிஞர்களுக்கு தமிழ்ச் செம்மல் விருது. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள், தமிழ்ச் செம்மல் விருதுபற்றி நேற்று விவாதத்தில் கலந்துகொண்டபோது குறிப்பிட்டார்கள். தமிழ்ச் செம்மல் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று விரைவில் வழங்கப்பெறும்.

உலக அற நூல்கள், தமிழ் அற நூல்கள் ஆகியவற்றை சிறந்த முறையில் மொழிபெயர்க்கும் 10 அறிஞர்களுக்கு மொழி பெயர்ப்பாளர் விருது.

உலக அளவில் சிறந்த தமிழ்ப் படைப்புகளைப் படைக்கும் அயல்நாட்டு தமிழ்ப் படைப்பாளர்களுக்கு 3 உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்.

சிறந்த மகளிர் இலக்கியம் படைக்கும் மகளிருக்கு ஆண்டுதோறும் அம்மா இலக்கிய விருது என பல்வேறு விருதுகளை வழங்கி, தமிழ் வளர்ச்சி வரலாற்றில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருபவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தமிழ் வளர்ச்சி சாதனைகளைக் கூறத் தொடங்கினால், ஒரு நாள் போதாது. இருப்பினும், இம்மாமன்றத்தில் சுருக்கமாக உரைக்கின்றேன்.

தமிழின் சிறந்த கலைச் சொற்களை உருவாக்க சொல் வங்கித் திட்டம், சிறந்த நூல் வெளியிட 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு எனும் வடிவக்

கட்டடம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உயர் ஆய்வுத் திட்டங்களுக்கு 20 கோடி ரூபாய் நிதியுதவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அரிய நூல்களின் 2.24 இலட்சம் பக்கங்கள் வலைதளத்தில் பதிவேற்றம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த 24-2-2015 அன்று ஒரே நாளில் 181 நூல்கள் வெளியீடு. மேலும், கடந்த 5 ஆண்டுகளில் 400 நூல்கள் வெளியீடு.

குப்பம் திராவிட பல்கலைக்கழகம், ஆசியவியல் நிறுவனம், பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளி, தமிழ் இணைய கல்விக் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கு நல்கை, விருது பெற்ற தமிழ் அறிஞர்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணச் சலுகை, சிறந்த நூல் வகைப்பாட்டின் மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் சேர்ப்பு, இளந்தமிழர் இலக்கிய பட்டறைகளுக்கு 40 இலட்சம் ரூபாய், மாவட்டந்தோறும் உயர்த்தப்பட்ட நிதியில் ஆட்சி மொழிக் கருத்தரங்கம், தமிழ் வளர்ச்சித் துறையில் அரிய தமிழ் நூல்கள் மின் எண்மம், பிற நாட்டு அறிஞர்கள் பார்வையில் தமிழ் நூல் வெளியீடு, அறநெறி கருவூலம் நூல் வெளியீடு, மின்மொழிக் களஞ்சியம் நூல் வெளியீடு, சிறந்த நூல்களுக்குப் பரிசு 24.35 இலட்சம் ரூபாய், உலகத் தமிழ்ச் சங்கத்தில் 28 கோடி ரூபாயில் பெருந்திட்ட கட்டட வளாகம், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் பணியிடங்களை துணை இயக்குநர் பணியிடங்களாக மேம்படுத்தியது, பிப்ரவரி 21 ஆம் நாள் உலகத் தாய்மொழி நாள் அரசு சார்பாகக் கொண்டாடுதல், சென்னை, எழும்பூர் ஆல்ஸ் சாலைக்கு தமிழ்ச் சாலை எனப் பெயர் சூட்டுதல், மதுரையில் சங்கத் தமிழ் காட்சிக்கூடம் அமைக்க 75 இலட்சம் ரூபாய், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக்கு 3 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள், தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு தோரண வாயில் அமைக்க 25 இலட்சம் ரூபாய், தமிழறிஞர் டாக்டர் கால்டு வெல் அவர்களுக்கு இருநூற்றாண்டு விழா ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளன்று அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செய்தல், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் அயல்நாடுகளில் தமிழ் கற்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் கருத்தரங்குகள், சென்னையில் உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் பன்னாட்டு திருக்குறள் மாநாடு, 1470 நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் தமிழ் வளர்ச்சித் துறை வலைதளத்தில் பதிவேற்றம், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125-வது பிறந்த நாளையொட்டி 125 கவிஞர்களைக் கொண்டு,

5 இலட்சம் ரூபாய் செலவில் 2 நாள் கவியரங்கம், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை இனி ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் நாள் என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடுதல், திருக்குறளை கொரிய மொழியில் மொழிபெயர்த்தல், அறநெறிக் கருவூலமான ஆத்திச்சூடியை சீன மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்த்தல் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தமிழ் வளர்ச்சி சாதனைகளை சிறு துளிகளாகத்தான் இந்த மாமன்றத்தில் எடுத்தியம்பினேன். மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிற சாதனைகள் இம்மாமன்றம் இதுவரை காணாத வரலாற்றுச் சாதனையாக தமிழ் வளர்ச்சிக்காக 185.62 கோடி ரூபாய் ஒதுக்கி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற ஒரே தலைவியாக தமிழினத்தின் காவல் தெய்வமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

பிற்பகல் 4-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அ' என்னும் உயிரும், 'ம்' என்னும் மெய்யும், 'மா' என்னும் உயிர் மெய்யும் இணைந்த 'அம்மா' எனும் அற்புதமே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் திருப்பெயரைச் சொல்லும்போதே தித்திக்கும் தீந்தமிழே!

"என் தமிழ், என் வளர்ச்சி" என்று உண்மையைச் சொல்லி, ஊருக்கு உழைத்தவர்; "தீந்தமிழ் நாட்டின் தீய சக்தி இது" என்று நாட்டுக்குக் காட்டியவர்; ஏழைக் குழந்தைகளின் வாட்டம் போக்க சத்துணவு தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு கண்டார்; உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து ஆய்வுகள் நிகழ்த்த வேண்டும், கூடி விவாதிக்க வேண்டும்; அது உலகத் தமிழின வளர்ச்சிக்கு உதவிட வேண்டும் என்பதற்காக உலகத் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கினார். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகமும் உருவானது. இதில்கூட, சிலர் எம்.ஜி.ஆர். புகழை மறைப்பதற்கு தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் சங்கம் என்றனர். இன்று அவர்கள் தொலைந்தே போனார்கள். மீண்டும், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் பல கோடி ரூபாய் மதிப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களால் கட்டடம் கட்டப்பட்டு உலகத் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"உரைத்தால் அது உண்மை, உழைத்தால் அது ஊருக்கு, உயர்ந்தால் அது மக்களுக்கு" என வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சங்கத் தமிழை வளர்த்தெடுக்க, தமிழ்மொழி பழமையின் சிறப்பும், புதுமையின் ஆற்றலும் ஒருங்கே பெற்று விளங்கிட வழிவகை செய்ய வேண்டும் என்ற உன்னத கருதுகோளுடன் தஞ்சையில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்.

எழிலார்ந்த தமிழுக்கு எண்ணற்ற ஆய்வுகள்; தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் எழிலார்ந்த கட்டடங்கள்; கருத்தரங்கக் கூடங்கள்; நகரெங்கும் கவிஞர்கள் பெயரில் அலங்கார வளைவுகள், இதனால் கிடைக்கப்பெற்றன. இவற்றுக்கெல்லாம் மேலாக, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என முத்தமிழாய் இருந்த அன்னைத் தமிழ், தமிழ்த் தாய் ஈன்றெடுத்த தங்கத்தாரகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவியல் தமிழோடு இணைந்து நற்றமிழ் நான்கானது.

அனைத்தும் தமிழ், அறிவியலும் தமிழ், இன்றும் தமிழ், என்றும் தமிழ் என்ற முழக்கங்கள் விண்ணதிர முழங்கப்பட்டது. இன்பத் தமிழ் அறிவியல் உலகில் எழிலார்ந்து பயணிக்கத் தொடங்கியது. அதன் பிறகு, "மாநாடு தமிழுக்கு" என்று பெயருக்குப் பெயரை மாற்றிக் கூடினர் கோவையில்! கும்மாளமிட்டனர்! உடன் குலவையும் இட்டனர்! குடும்பம் குடும்பமாய். கொங்கு மண்டலம் வேதனையில் ஆழ்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்த் தாய் வெதும்பினாள். தென் திசை நோக்கி சிந்தையெல்லாம் துடித்து தேம்பித் தேம்பி அழுதாள். ஆனால், கோவையில் "பொம்மலாட்டம், மானாட்டம், மயிலாட்டம்" அருந்தமிழ்த் தாய் வெறுமையில் தவித்தாள். வேதனையில் உலகத் தமிழர்கள் வெறுப்புற்றார்கள். இவர்கள் மாநாட்டில் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் கிடைத்தது என்ன? அவர்களுக்கே இன்றுவரை வெளிச்சம்! ஆய்வு செய்து கண்டுபிடிப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசளிக்க அறிஞர்கள் இன்றும் அணியணியாக இருக்கின்றார்கள்.

'மொழி' என்பது ஊடகம், கருவி, தகவல், புரிதல், தெளிதல் என்ற வரையறைகள் பல இருக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு மைய அரசின் பராமரிப்புக்கு உட்பட்ட நம் நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள மைல் கற்களில் அன்னைத் தமிழ் விடுத்து, இந்தியும், ஆங்கிலமும் எழுதியபோது, எழுந்தார் சிங்கமாக! அன்றைய ஆளுங்கட்சியைப் பார்த்து எச்சரிக்கை விடுத்தார். எம்மண்ணில் தமிழ் மொழியல்ல; ஊடகம் அல்ல, கருவி அல்ல, எங்களின் இதயத் துடிப்பு, எங்களின் உயிர். மைய அரசே, வேண்டாம் விபரீத விளையாட்டு என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) உடனே நெடுஞ்சாலை போக்குவரத்து மைல் கற்களில் அன்னைத் தமிழ் அரங்கேறியது! தமிழ்நாடே அகமகிழ்ந்தது!

எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருந்தமிழ் பணி அரசியல் நோக்கமற்றது, அப்பழுக்கற்றது, தலைமுறை கடந்த வளர்ச்சியை நோக்கியது, அகிலம் போற்றும் உன்னதமானது, உண்மையைச் சொல்லி தமிழை வளர்க்கும் உயர்தரமான செயற்பாடுகளைக் கொண்டது.

"எதுகை மோனை தமிழுக்கு அணியென்றால், என்றும் தமிழ் வளர்ச்சிக்கென திட்டம் தீட்டுவது எங்கள் அம்மாவின் பணி; இதனால், நாட்டில் விலகியது தமிழைப் பிடித்த பிணி; நம் தமிழ்நாட்டில், நம் அம்மாவின் ஆட்சியே இனி" என்பதைப் பெருமையோடு இம்மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை. நற்றமிழ்த் தாயின் அவதாரமே! எங்கள் நல்வாழ்வின் ஆதாரமே! அருளென்ற சொல்லுக்குப் பொருளான தலைவியே! அன்பென்ற சொல்லுக்குப் பொருள்கூறும் அகராதியே! கடையேழு வள்ளல்தம் குணம்பெற்று எல்லோர்க்கும் கடல்போலக் கொடுக்கின்ற திருமகளே! தமிழ்நாட்டைக் கடைபோட்டு விற்க நின்ற கூட்டத்தைக் கடைவாசல் வழிஒட்டும் மலைமகளே, கமலத்தில் அமராமல் தமிழ்மக்கள் இதயத்தில் அமர்ந்தாளும் கலைமகளே, தொட்ட இடம் வளம் காணத் துள்ளிவரும் காவேரியே, அன்பாகிப் பண்பாகித் தூறலிடும் பூமழையே, கழகத்துத் தொண்டர்க்குக் கண்கண்ட தெய்வமே, அமைதியின் சின்னமே, அன்பின் ஊற்றே, மாசறு பொன்னே,

வலம்புரி முத்தே, வார்கடல் அலையே, வான்தரும் மழையே, மார்கழிப் பனியே, மாலை நல்பொழுதே, ஏழை மக்களின் இதயத் துடிப்பே, இருள்நீக்கும் நிலவே, உதயத்தின் ஒளியே, உலகத்தின் விடிவே, வள்ளுவன் குறளே, வள்ளலார் அருளே, ஆகாயத்தை அளந்து பார்க்க மட்டுமல்ல, தமிழர்கள்மேல் நீங்கள் கொண்டிருக்கும் அன்பை அளக்கவும் அளவுகோல் கிடையாதம்மா.

பிற்பகல் 5-00

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்றீர்கள். இதுவல்லவோ இந்த நூற்றாண்டின் இணையில்லா பொது நலத் தத்துவம். சிலர் மக்களுக்காகவே நான் என்பர். இலட்சக்கணக்கான மக்களை கொத்துக்கொத்தாய் குண்டுக்கு இரையாக்கி தன் மக்களை கொண்டாடி மகிழ்ந்தனர். ஏழேழு ஜென்மங்கள் ஆனாலும் இப்பாதகம் போகுமோ? இன்னமும் நாங்கள்தான் என்கின்றனரே. ஏன் மிச்சம் மீதி வாழும் இனத்தையும் அழித்துவிட நினைக்கின்றனர் போலும். ஓநாய்கள் வேதம் ஓதுகின்றன. ஆகாயம், பூலோகம் தலைகீழாக மாறித் தடுமாறும்போதும், தடம் மாறாத அன்பு மக்கள்மேல் கொண்ட உங்கள் அன்புதான் தாயே. (குறுக்கீடுகள்) உங்கள் திருவடியை வணங்கி வாழ்வதே, என் வாழ்நாள் பேறு அம்மா.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பாதங்களை முதற்கண் தொழுது வணங்கி, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையைத் தொடங்குகிறேன்.

இந்துக்களின் வாழ்வில் சடங்குகளும், நம்பிக்கைகளும் சரிவிகிதமாகக் கலந்திருக்கின்றன. இந்த நம்பிக்கைகள், இந்தச் சடங்குமுறைகள், எல்லாம் மக்களை நேர்த்தியான ஒரு வாழ்க்கை வாழவும், குற்றங்களில்லா நெறிமுறைகளில் மனதைச் செலுத்தவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இத்தகு சீர்த்திகள் கொண்ட இந்து சமய அறநிலையத் துறையைச் செப்பனிட்டுக் காப்பதில் செந்தமிழர் வாழ்வு துலங்க தமிழர் அகத்தில் வாழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஒரு மதத்தின்மீது இருக்கிற மரியாதையைப் பன்மடங்கு உயர்த்த வல்லவை ஆலயங்கள். இந்துக்கள் கோயில் என்கிறார்கள்; கிறித்தவர்கள் தேவாலயம் என்கிறார்கள்; இஸ்லாமியர்கள் மசூதி என்கிறார்கள்; இறைச் சிந்தனை மேலிடுகிற போதெல்லாம் ஆலயங்களுக்குச் செல்கிறார்கள். தெய்வம் உறைவதால் கோயில் மேல் பக்தர்களுக்கு இருக்கிற அதே நம்பிக்கை, சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தெய்வமாய் நின்று திருவருள் பாலிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீதும் மக்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பரந்துபட்ட மக்கள் கூட்டம் வணங்குகிற தெய்வங்கள் உறைகின்ற திருக்கோயில்களை இந்து மதத்தின் அர்த்தம் பொதிந்த உட்கருத்துகளைக் காக்க வேண்டும் என்ற முனைப்போடு முன்நின்று இந்து சமய அறநிலையத் துறையின் வழியாகச் சட்டம் இயற்றுகின்ற, நாங்கள் முப்பொழுதும் வணங்குகின்ற, தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மக்கள் வணங்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னமிடுவதைப்போல உயரிய தானம் உலகில் ஏதும் இல்லை. ‘தானத்தில் சிறந்த தானம் அன்னதானமே’ என்கிறது செந்தமிழ்ப் பழமொழி. அம்மா உணவகம்மூலம் ஏற்கெனவே அகிலம் வியக்கும் சாதனைத் திட்டத்தை அரங்கேற்றிய கருணையுள்ளம் மிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மகத்தான திட்டங்களுள் ஆலயங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டமும் ஒன்று.

‘வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்’ என்றுரைத்த பாரதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதுபோல் இருக்கின்றது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்கள். ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்ற பேரறிஞர் அண்ணாவும், ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்’ வாடிய வள்ளலாரின் உள்ளமும் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த உன்னதத் திட்டத்தால், பாற்கடலைக் கடைந்து எடுத்த அமுதத்துக்கு நிகரான அன்னத்தைத் தந்துள்ளீர்கள், தாயே. உங்கள்

கூர்ந்த மதியையும், மக்கள் மீதான அன்பையும் இதுபோன்ற திட்டங்கள் சொல்கின்றன, தாயே.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் தொடங்கப்பட்ட இத்திட்டம், தமிழ்நாட்டில் 724 திருக்கோயில்களில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் நாள்தோறும் 64,000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவேரி துள்ளும் கொள்ளிடமாம் ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயிலும், திருவாவினன்குடி என்ற பழம் பெயர் கொண்ட பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலும் நாள்தோறும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டு முதல் இத்திட்டத்தை மேலும் 30 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தால் எளிய மக்கள் வயிறார உண்டு, அன்னதானமிட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா வாழ்கவென்று மனதார வாழ்த்துகிறார்கள்.

பிற்பகல் 5-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் கோயில்களையெல்லாம் தத்தெடுத்துப் புனரமைத்துக் கட்டமைத்துப் புதிதாக்கி, அவற்றின் வரலாறுகளையும் மீட்டெடுத்து அந்தத் தெய்வங்களின் அருளோடு அரசாள வந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தெய்வங்கள் காக்குமென்று வணங்குபவர்கள் உண்டு. பழங்காலக் கோயில்களை மீட்டெடுத்து தெய்வீகங்களைக் காக்கும் தெய்வாதீனமான பணியைச் செய்து வருகிறார்கள்.

பாரம்பரியமிக்க திருக்கோயில்களைப் புதுப்பித்து, அவற்றின் புனிதத் தன்மையைக் காப்பதற்காக, 2011-2016 வரை கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் 8,843 திருக்கோயில்களுக்கு 391.03 கோடி ரூபாயில் திருப்பணியும் குடமுழுக்கும் நடைபெற்றுள்ளது. பழங்கால மன்னர்கள் செய்த திருக்கோயில் பணிகளை மிஞ்சும்

அளவுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில் திருப்பணிகளைச் செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் உள்ளுணர்வை அறிந்து அவற்றின் வழி செயல்படுகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொன்மையும் தனித்துவமும் மிக்க திருக்கோயில்களுக்கு 13-வது நிதி ஆணைய நிதி உதவிமூலம் 2011-2016 வரை கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் 250 திருக்கோயில்கள் 90 கோடி ரூபாய் மதிப்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில், சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற பேதமில்லாமல் அனைத்து திருக்கோயில்களிலும் திருப்பணிகளும் பூஜைகளும் செவ்வனே நடைபெற வேண்டுமென்ற உன்னதமான ஆணையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். அதனடிப்படையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் 3,640 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக 18.20 கோடி ரூபாய் செலவில் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில் 1,004 திருக்கோயில்களுக்கு 5.02 கோடி ரூபாய் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. மேலும், கிராமப்புறங்களில் உள்ள 3,272 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் சீரும் சிறப்புமாக நடைபெற்றுள்ளன.

இந்து சமய அறநிலையத் துறையின் பொது நல நிதியிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2011-2016 வரை கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் 794 திருக்கோயில்களுக்கு 60.39 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் திருப்பணிகள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு மக்கள் மனம் மகிழ்கின்றார்கள், தெய்வங்களும் மனம் குளிர்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

எனும் குறளுக்கேற்ப தமிழ்நாட்டு மக்களின் காவல் தெய்வமாகவும், கலங்கரை விளக்கமாகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள்.

இறைவழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கும் அன்பர்களின் நெஞ்சத்து உணர்வுகளை அறிந்து, 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற நாவுக்கரசரின் வாய்மொழிக்கேற்ப

திங்கள் மும்மாரி பொழிய
வறுமை இல்லாமல் ஒழிய
அறங்கள் மண்மீது செழிக்க
அமைதி கால் கொண்டு தழைக்க
அகிலம் இன்புற்று நிலைக்க

இறைத் திருப்பணிகளால் தமிழகத்தை மேன்மையுறச் செய்த வரலாற்றுப் பெருமையெல்லாம் வாழும் மனித தெய்வம், உலகத் தமிழர்களின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்து கோயில்களில் ஒருகால பூஜையாவது நடத்திட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில், பொன்மனத்தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த உன்னதத் திட்டம்தான் ஒரு கால பூஜை வைப்பு நிதித் திட்டம். இந்தத் திட்டத்தின் வாயிலாக நிதி வசதியற்ற திருக்கோயில்களில் ஒரு கால பூஜை நடத்திட வைப்பு நிதியை ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டி பணத்திலிருந்து பூஜைகள் நடத்திட இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில், ரூபாய் 25,000 வைப்புநிதி ஏற்படுத்தப்பட்டது.

2011 ஆம் ஆண்டு முதல் இவ்வைப்பு நிதியை 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தி, 12,504 திருக்கோயில்கள் பயன்பெறும்வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார்கள்.

பிற்பகல் 5-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத் திருக்கோயில்களில் மன்னர்கள் காலம் முதலே, வேண்டுதல்களை நிறைவேற்றும்பொருட்டு, தங்கள் சொத்துகளை திருக்கோயிலுக்கு எழுதிவைப்பது வழக்கம். பழங்கால கோயில்களுக்குச் சொந்தமான இடங்களின் முறையான பத்திரப் பதிவுகளை மறைத்துச் சென்ற காலங்களில் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதைக் கண்டறிந்து, திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை மீட்டெடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில் கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 719 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 4,440 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியில்தான் அறநிலையங்களின் சொத்து அறத்திற்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் தெய்வங்களுக்கு திருவிழா நடக்கும் காலங்களில் முக்கிய நிகழ்வு தேரோட்டம். தேரேறி தெய்வங்கள் ஊர்கோலம் போவதால் ஊர் வளம் பெருகும் என்பதும், மழை பெய்யும் என்பதும், மக்களுக்கு நல்வாழ்வு கிட்டும் என்பதும் தமிழர்கள் கொண்ட நம்பிக்கைகள் ஆகும். அத்தகைய தமிழர் நம்பிக்கையை நன்கறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில்களில் கடந்த ஐந்தாண்டுகளில் சிதிலமடைந்த 143 தேர்களை 15.91 கோடி ரூபாய் செலவில் செப்பனிட்டு தேரோட்டங்களை நடத்தி வைத்தவர் ஆவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் தெய்வங்கள் தெப்பம் ஏறி நீர் உலாப் போக கோயிலுக்கு அருகிலேயே குளங்கள் அமைப்பதென்பது வழிவழி மரபாக இருந்திருக்கின்றது. திருக்கோயிலுக்கென இருக்கும் குளங்கள் புனிதம் மிக்கவை. குளம் இருந்தால் ஊர் வளம் காணும் என்பது, குளம் தொட்டு வளம் பெருக்கிய கரிகால் பெருவளத்தானின்

செயல்பாடுகளால் நாம் அறிந்த நிகழ்வாகும். அத்தகைய தனித்துவமும் இறைத்தன்மையும் மிக்க திருக்கோயில் குளங்களைச் சீரமைப்பதற்கும் நீரேற்றம் செய்வதற்கும் குளத்தின் அருகே ஆராட்டு மண்டபங்கள் அமைப்பதற்கும் ரூ.3.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இதுவரை கடந்த ஐந்து ஆண்டுகளில் 611 திருக்கோயில் குளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. மக்களால் நான், மக்களுக்காக நான் என்கிற அர்ப்பணிப்பு உணர்வோடு அருளும் அன்பும் திகழும் செயலோடு அருளாட்சி புரிந்து வருபவர் மக்கள் மனநேசர், மாதர் குல மாணிக்கம், பொன்மனத்தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் இந்து சமய அறநிலையத் துறை பொன்னொளி வீசி மின்னுகிறது. பல முன்னேற்றத் திட்டங்களுக்கு இந்தியாவிலேயே முன்னோடி அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருவதைப் பாரத நாடே பாராட்டுகிறது. ரிக் வேதத்தில் ஒரு பாடல் இந்திரனைப் பற்றிக் கூறும்போது, "உன்னால் வெற்றிக்கொள்ளப்படாதது எதுவுமில்லை, தெய்வங்களில் உனக்கு ஒப்பானவர் யாரும் இல்லை, இதுவரை பிறந்தவர்களிலும் இனி பிறக்கப் போகிறவர்களிலும் எவரும் உன்னை எதிர்க்க முடியாது, பெருந்தெய்வமே, நீ விரும்பியதைச் செய்வாயாக" என்று போற்றுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் கட்டுக்கோப்பாக இயங்கி வரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கோடானுகோடி தொண்டர்களின் வேதம் என்ன சொல்கிறது தெரியுமா, தாயே, உங்களால் வெற்றி கொள்ளப்படாதது எதுவுமில்லை, தலைவர்களில் உங்களுக்கு ஒப்பானவர் யாருமில்லை, இதுவரை பிறந்தவர்களிலும் இனி பிறக்கப்போகிறவர்களிலும் எவரும் அரசியலில் உங்களை எதிர்க்க முடியாது. பெருந்தலைவியே, தாங்கள் விரும்பியதைச் செய்வீர்களாக. நீங்கள் செய்வதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால், மக்கள் விரும்புவதையே நீங்கள் செய்கிறீர்கள். இதுவே கழகத் தொண்டர்களின் வேதம் தாயே! இந்த வேதமே எங்கள் வாழ்க்கையின் உயிர் மூச்சு அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கின்ற அபூர்வ குறிஞ்சிமலர்போல், 12

ஆண்டுகளுக்கொரு முறை நடத்தப்பெறுகிற வரலாற்றுச் சிறப்புமிக்க மாசி மகாமகத் திருவிழா சென்ற ஆண்டு வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. 17 திருக்கோயில்களின் பங்களிப்பு இந்நிகழ்வில் இருக்க, 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாசி மகாமகத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாசி மாதம் மகம் கூடும் நன்னாளில் மலைமேல் ஒளிரும் மகாமகத்துப் பெருஞ்சுடராய், மக்கள் மனம்மீது என்றென்றும் நின்று ஒளிரும் மாசி மகாமகத்துப் பெருஞ்சுடர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழகம் ஒளிபெற்று வளம் காண்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் தமிழகத்திலும் தமிழகம் கடந்தும் பல்வேறு திருக்கோயில்களுக்குப் புனிதப் பயணம் மேற்கொள்ள போதிய வழிவகைகளை ஏற்படுத்தி வரலாறு படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பொருளாதாரப் பற்றாக்குறையால் புனிதப் பயணம் போகமுடியாமல் தவித்துக்கிடந்த ஆன்மீக அன்பர்களின் இதயத் துடிப்பைப் புரிந்துகொண்டு, ஆன்மீக அன்பர்கள் புனிதப் பயணம் தொடர அருள் உள்ளத்தோடு நிதி ஒதுக்கீடு செய்தார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மானசரோவர் புனிதப் பயணத்திற்கு 40,000 ரூபாயும், முக்திநாத் புனிதப் பயணத்திற்கு 10,000 ரூபாயும் மானியம் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதன் பயனாக கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் 902 பேர் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அவ்வகையில் 2.84 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆன்மீக அன்பர்களின் புனிதப் பயணத்திற்கு மானியம் வழங்கும் இறைத்தன்மை மிக்க திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்து ஆன்மீக அன்பர்களின் கனவை நனவாக்கியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழை இத்தமிழ் தரணியில் அம்மா அவர்களது சாதனைகளே எடுத்து இயம்புகின்றன. எங்கள் தங்கத்தாரகையின் புகழைப் பொறுக்க முடியாமல் புலம்பிக் கிடக்கின்றன, புற்றீசல் கூட்டங்கள். தீய சக்திகளை ஓடஓட விரட்டி, சம்ஹாரம் செய்து ஆறாம் முறையாக அகிலமே ஆர்ப்பரிக்க தருமத்தின் துணையோடு ஆட்சிக்கட்டிலை அலங்கரித்து வருபவர் எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 5-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயிர்களின்பால் இரக்கம் மிகக் கொண்டவர். ஐந்தறிவு உயிர்கள்மீதும் நல்லன்பு கொண்டிருக்கும் அம்மா அவர்களின் அன்பு அகிலத்தில் உயர்ந்தது. ‘அம்மா என்றால் அன்பு’ என்னும் வாக்கியம் எத்தனை பெரிய உண்மையென்று என் சித்தமும் ஒரு சித்தனைபோல் யோசித்து வியக்கிறது. ஐந்தறிவு உயிரென்றபோதும் ஆதிகாலம் தொட்டே பழந்தமிழர்களின் வாழ்வில் யானைகள் முக்கியப் பங்கு வகித்துள்ளன. கோயில் யானைகளும், பட்டத்து யானைகளும் பழந்தமிழகத்தில் மிக, மிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. யானைகளைக் காப்பதை பழந்தமிழர்கள் உயரிய அறமாகக் கொண்டிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோயில் யானைகளின் உடல் நலனைக் கருத்தில்கொண்டு, யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாமை 2003 ஆம் ஆண்டில் பண்போடு தொடங்கி வைத்தார்கள். ஆண்டுதோறும் 48 நாட்கள் நடக்கும் இம்முகாமில், திருக்கோயில் மற்றும் திருமடங்களைச் சார்ந்த யானைகள் கலந்து கொண்டு பயன்பெறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள சின்னஞ்சிறு திருக்கோயில்களிலும் பூஜைகள் தவறாது நடைபெற வேண்டுமென்ற இறை நோக்கத்தோடு அத்திருக்கோயில்களுக்குப் பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு, தொங்கும் விளக்கு போன்ற பூஜை

உபகரணங்களை 2.44 கோடி ரூபாய் செலவில் வாங்கி 10,000 திருக்கோயில்களுக்கு வழங்கியுள்ளார்கள். மக்கள் பணியோடு இறை பணியும் ஆற்றி, மக்களின் மனமும், தெய்வங்களின் அருளும் ஒன்றாகக் கூடி நின்றாடும் அன்புடைப் பெருங்கடல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உலகத் தமிழர்கள் இன்றும் போற்றும் சரித்திர சாதனைகள் தொடர்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிதைக்கு முதல்வன் கம்பன்; வில்லுக்கு முதல்வன் ஓரி; வேலுக்கு முதல்வன் முருகன்; யாழுக்கு முதல்வன் பாணன்; வாளுக்கு முதல்வன் கரிகாலன். ஆட்சித் திறத்தில் அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் என்றும் முதல்வர் எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நினைத்ததை செய்து முடிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பேராற்றலை, ஆளுமைத் திறத்தை அகிலமே சொல்லி, சொல்லி வியக்கிறது. பெற்ற தாய்தனை மகன் மறந்தாலும், பிள்ளையைப் பெற்ற தாய் மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உயிரை மேவிய உடல் மறந்தாலும், கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பதை மறந்தாலும், மக்கள் எண்ணத்தை ஏற்றுப் போற்றும் சாதனைகள் புரிந்திட்ட புரட்சித் தலைவியை தமிழகமும், உலகத் தமிழின வரலாறும் ஒருபோதும் மறக்காது. தெய்வங்களும் மகிழ்கின்றன தாயே!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், இந்து சமய அறநிலையத் துறை செய்திட்ட திருப்பணிகள்மூலம் திருக்கோயில்களில் உள்ள தெய்வங்களின் வாழ்த்துகள் கால, காலத்திற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியைத் தொடர செய்யும் என்பது உறுதி.

'அருள் பெற்ற அடியாரை வணங்குதலும் ஆண்டவன் வணக்கமாம்' என்பதற்கேற்ப, அத்தனை தெய்வங்களின் அருள் பெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை பணிந்து வணங்கி, 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறைகளின் அறிவிப்புகளை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஒப்புதலுடன் இம்மாமன்றத்தில் வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் வளர்ச்சி

1. அரசு அலுவலகங்களுக்கு அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் மென்பொருள் வழங்குதல்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, கணினியில் ஆங்கில மொழிக்கென பிழை திருத்தி, சொல் திருத்தி வசதிகள் இருப்பதைப்போல், தமிழில் ஒற்றுப்பிழை, சந்தி, மயங்கொலி உள்ளிட்ட இலக்கணப் பிழைகள் ஏதுமின்றி எழுதத்தக்க வகையிலும், தவறுகளைத் தானே சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ளும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள ரூ.300/- மதிப்புள்ள அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் மென்பொருள் முதற்கட்டமாக 10,000 அரசு அலுவலகங்களுக்குப் பெற்று வழங்கப்படும். இதற்கென ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மின் காட்சியுரைமூலம் அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சி மொழித் திட்டப் பயிற்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறையால் ஆட்சிமொழித் திட்டம் குறித்து அளிக்கப்படும் பயிற்சி வகுப்புகளைக் கணினியுகத்திற்கேற்ப ஒற்றுப்பிழை, மொழிபெயர்ப்பு, கலைச்சொல், மயங்கொலிச் சொல், தொடரமைப்பு போன்ற பல்வேறு பொருண்மைகள் குறித்த விளக்கங்கள் மின்காட்சியுரைமூலம் அரசுப் பணியாளர்களுக்கு விளக்கப்படும். இதற்கென ரூ.22 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 5-20

3. கவுஹாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழை விருப்பப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள கவுஹாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழை விருப்பப் பாடமாகப் பயிலும் 6 மாணவர்களுக்குக் கல்வி உதவித்

தொகையாக ரூ.1 இலட்சத்து 39 ஆயிரம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆண்டுதோறும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

4. மாவட்ட அளவில் கவிதை/கட்டுரை/பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் புதியதாக மூன்றாம் பரிசு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் நடத்தப்பட்டுவரும் கவிதை/ கட்டுரை/பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குத் தற்போது முதல் பரிசு ரூ.10,000/-மும் இரண்டாம் பரிசு ரூ.7,000/-மும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் தற்போது வழங்கப்பட்டுவரும் முதல் இரண்டு பரிசுகளோடு மூன்றாவது பரிசாக ரூ.5,000/- வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் செலவினத் தொகையாக ரூ.9 இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்படும்.

5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகம் சீரமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பன்மொழி அரிய ஆய்வு நூல்கள் மற்றும் கலைக் களஞ்சியங்கள் உட்பட 1.50 இலட்சம் நூல்களுடன், 1972 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகத்தைச் சீராக்கிப் பராமரிக்கும் வகையில் ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழ் இலக்கியம் தடம் பதித்த 116 ஆண்டுகள்—நூல் வெளியிடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழியல் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறத்தக்க வகையில் 'தமிழ் இலக்கியம் தடம் பதித்த 116 ஆண்டுகள்' என்ற தலைப்பின்கீழ் 1900 முதல் 2016 வரை வெளி வந்த இலக்கிய நூல்களின் விவர அட்டவணை தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். இதற்கென ரூ.5 இலட்சம் வழங்கப்படும்.

7. உலகத் தமிழர்களின் படைப்புகளை வெளியிடுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 21 ஆம் நூற்றாண்டில் அயலகத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தும் விதமாக ஆண்டுதோறும் 5 அயலக நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் தகுதி வாய்ந்த 5 தமிழ்ப் படைப்பாளர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை போன்ற தரமான படைப்புகளைப் பெற்று மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நூல்களாக வெளியிட ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.

8. மொரீசியசில் தமிழ் பயிற்றுவித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் ஒன்றான மொரீசியசு வாழ் தமிழர்களுக்குத் தமிழ் மொழியினை எழுதவும், பேசவும் பயிற்சி அளிக்கும் வகையில் ஆண்டுதோறும் தமிழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறும். இதற்கென ரூ.7 இலட்சம் வழங்கப்படும்.

9. அயல்நாட்டு அறிஞர்களின் ஆய்வரங்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் திங்கள்தோறும் அயல் நாட்டறிஞர் ஒருவரை அழைத்து தமிழின் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில் தமிழாய்வு அரங்கம் நடத்தப்பெறும். இத்தமிழாய்வு அரங்கம் நடத்தப் பெறுவதால் திங்கள்தோறும் தமிழுக்கு ஒரு புதிய தமிழாய்வு நூல் கிடைப்பதோடு தமிழாய்வு மேலும் செம்மையுறும். திங்கள் ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

10. பள்ளி மாணவர்களுக்குத் தூய தமிழ் அகராதிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாணவச் செல்வங்களின் மனதில் நல்ல தமிழ்ச் சொற்களைப் பதிய வைத்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காகவும், வழக்கிழந்து வரும் தூய தமிழ்ச் சொற்களைப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்துவதற்கு உதவும் வகையிலும் பட விளக்கத்துடன் கூடிய அகராதியினைத் தொகுத்து வகுப்புவாரியாக எழுதுபொருள் அச்சுத் துறை வாயிலாக அச்சிட்டு, கல்வித் துறை வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்படும்.

11. தமிழ் கலைக்கழகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பழைமை வாய்ந்த மொழியான தமிழ் மொழியைக் காக்கும் நோக்கில் அன்றாடம் பயன்பாட்டிற்கு வரும் பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைத் தரப்படுத்தி ஊடகங்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், மொழியியலாளர்களுக்கும் வழங்கும் நோக்கில் அகர முதலி இயக்ககத்தில் தமிழ் கலைக்கழகம் ஒன்று ஏற்படுத்தப்படும். இதற்கென ஆண்டுதோறும் ரூ.84 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

12. வேர்ச்சொல் சுவடி வெளியிடுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்ச் சொற்களைப் பகுத்தறிந்து அறிவியல் நோக்கில் ஆய்வு செய்து, புதிய கலைச் சொற்களை உருவாக்க விழைவோருக்கு உதவும் வகையிலும், தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளின் தமிழ்ப் பாடத் தேர்வர்களுக்கும், பள்ளி மாணாக்கர்களுக்கும் பயன்படும் வகையில் தமிழ்ச் சொற்களின் சரியான வேர்ச் சொற்களைத் தொகுத்து வேர்ச்சொல் சுவடி எனும் நூல் எழுதுபொருள் அச்சுத் துறை வாயிலாக அச்சிட்டு வெளியிடப்படும்.

13. மொழி பெயர்ப்புப் பிரிவு கணினிமயமாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின்கீழ் இயங்கும் மொழி பெயர்ப்புத் துறையின் பணிகளை விரைவுபடுத்திட 16 உதவிப் பிரிவு அலுவலர்களுக்கு 16 கணினிகள் மற்றும் 4 அச்சு இயந்திரங்களுடன் 1 தொலை நகலி வழங்கப்படும். இதற்கென ரூ.10 இலட்சமும் மற்றும் அறைகலன் வசதிகள் செய்திட ரூ.5 இலட்சத்து 65 ஆயிரமும் என மொத்தம் ரூ.15 இலட்சத்து 65 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 5-25

இந்து சமய அறநிலையத் துறை

1. திருக்கோயில் மேம்பாட்டுப் பணிகள்

சென்னை, தண்டையார்பேட்டை அருள்மிகு முருகன் திருக்கோயில் மற்றும் தண்டையார்பேட்டை அருள்மிகு அகஸ்தீஸ்வரர் மற்றும் சேனியம்மன் திருக்கோயில்களுக்கு முறையே ரூ.29 இலட்சம் மற்றும் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துறை நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொண்டு, இரு திருக்கோயில்களுக்கும் தலா ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் மின் ஆக்கி (Generator) அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. பழனி பக்தர்களுக்கு பஞ்சாமிர்த பிரசாதம்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு இறையருள் பெற நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகைபுரிகின்றனர். இவ்வாறு இறையருள் பெற்று திரும்பும் பக்தர்களுக்கு பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கே உரித்தான உலகப் பிரசித்தி பெற்ற பஞ்சாமிர்த பிரசாதம் வழங்க உத்தேசித்து, இப்பிரசாதம் ஒரு நபருக்கு தொன்னையில் 20 கிராம் என்ற அளவில் நாள்தோறும் மாலை சாயரட்சை பூஜை வழிபாடு முடிந்த பின்னர் 2,000 பக்தர்களுக்கு திருக்கோயில் நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.15 இலட்சம் செலவில் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

3. திருக்கோயில் மராமத்து திருப்பணிகள்

திருவண்ணாமலை மாவட்டம், ஏரிக்குப்பம் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் புதியதாக பிரகார மண்டபம் ரூ.35.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டவும், ஆரணி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டப புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளவும், புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் நார்த்தாமலை அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் மராமத்து திருப்பணிகள் மேற்கொள்ளவும், திருவண்ணாமலை

மாவட்டம், பைங்கினூர் அருள்மிகு ஆதிபராசக்தி திருக்கோயிலில் கட்டப்பட்டு வரும் திருமண மண்டபத்திற்கு மிகுதிப் பணிகள் ரூ.16.70 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.1.164 கோடி செலவில் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

4. பேருந்து நிலையம்

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக தற்காலிக பேருந்து நிலையம் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

5. முடி காணிக்கை

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், மேட்டுப்பாளையம் அருள்மிகு நாட்டராயசுவாமி திருக்கோயிலில் முடி காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு ரூ.18.20 இலட்சம் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், திருமலைவையாவூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயிலில் முடி காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக இரண்டு திருக்கோயில்களில் ரூ.32.20 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து புதிய முடி காணிக்கை மண்டபங்கள் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

6. பூஜை சாமான்கள் விற்பனை செய்யும் கடைகள், வணிகக் கட்டடங்கள்

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், கஞ்சமலை, அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.16.80 இலட்சத்திலும், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தில் ரூ.21 இலட்சத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான

திருமண மண்டப வளாகத்தில் ரூ.23.50 இலட்சத்திலும், ஆக மூன்று திருக்கோயில்களில் பூஜை சாமான்கள் விற்பனை செய்யும் கடைகள், வணிகக் கட்டடங்கள் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.61.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

7. யானை கொட்டகை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உள்ள யானை பராமரிப்பிற்கென அதன் உபகோயிலுக்குச் சொந்தமான இடத்தில் யானை கொட்டகை திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

8. பஞ்சாமிர்த கிடங்குகள்

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பஞ்சாமிர்தம் தயார் செய்யும் வளாகத்தின் மேற்கு பக்கம் இரண்டு கிடங்குகள் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

9. புதியதாக சுற்றுச் சுவர்கள்

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி இடங்களை சுற்றி இரண்டு சுற்றுச் சுவர்கள் ரூ.43 இலட்சத்திலும், மேலூர் வட்டம், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் தெற்கு கோட்டை வாசல் முன்பு அமைந்துள்ள அம்பு போடும் மண்டபத்திலிருந்து ஆராவமுது கண்மாய் உள்ளடக்கி 505 மீட்டர் நீளத்திற்கு ரூ.37.50 இலட்சத்திலும் ஆக இரண்டு திருக்கோயில்களில் ரூ.80.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக மூன்று சுற்றுச் சுவர்கள் திருக்கோயில் நிதியிலிருந்து கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 5-30

10. பணியாளர் குடியிருப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் யானைப்பாகருக்கு உபகோயில் வளாகத்தில் ரூ.20 இலட்சத்திலும், நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் திருக்கோயில் கண்காணிப்பாளருக்கு ரூ.21 இலட்சத்திலும் ஆக, இரண்டு பணியாளர் குடியிருப்புகள் ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் அந்தந்த திருக்கோயில் நிதியிலிருந்து கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

11. திருக்குளங்கள் புனரமைப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு

திருவாரூர் மாவட்டம், அருள்மிகு கோணேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான குளத்தினை ரூ.13.10 இலட்சத்திலும், வேலூர் மாவட்டம், ரங்காபுரம் அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் குளத்தினை ரூ.7.40 இலட்சத்திலும், திருவாலி கிராமம், அருள்மிகு லட்சுமி நரசிங்க பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளத்தினை ரூ.7.70 இலட்சத்திலும், ஆகமொத்தம், ரூ.28.20 இலட்சம் மதிப்பீட்டில் திருக்குளங்களை திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதிமூலம் மழைநீர் சேகரிப்பு வசதி செய்து செப்பனிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

12. புதிய நவீன கழிவறைகள் மற்றும் குளியலறைகள்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.44 இலட்சத்திலும், செட்டியாப்பத்து அருள்மிகு சுவாமி சிதம்பரேஸ்வரர் வகையறா திருக்கோயிலில் ரூ.28 இலட்சத்திலும், சிவகங்கை மாவட்டம் அரியாக்குறிச்சி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.29 இலட்சத்திலும், கோவை மாவட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்திரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.32.70 இலட்சத்திலும், திருநெல்வேலி மாவட்டம், குற்றலாம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி விடுதி அறைகளுக்கு ரூ.12.30 இலட்சத்திலும், ஆக 4 திருக்கோயில்கள் மற்றும் ஒரு கல்லூரியில் ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மற்றும் கல்லூரி மேம்பாட்டு நிதியிலிருந்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு புதிய

நவீன கழிவறைகள் மற்றும் குளியலறைகள் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

13. வாகன பாதுகாப்பு அறை

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தோவாளை அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலில் ரூ.12.60 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து புதியதாக வாகன பாதுகாப்பு அறை கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

14. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

சிவகங்கை மாவட்டம், அரியாக்குறிச்சி, அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலில் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

15. புதியதாக திருத்தேர் கொட்டகைகள்

சென்னை, திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சங்கேந்தி, அருள்மிகு ஹரிஹரபுத்திர சுவாமி வகையறா திருக்கோயிலில் ரூ.3 இலட்சத்திலும் கரியமாணிக்கம், அருள்மிகு அய்யனார் பிடாரி வகையறா திருக்கோயிலில் ரூ.3.40 இலட்சத்திலும், அரியலூர் மாவட்டம், அரியலூர் அருள்மிகு கோதண்டராம சுவாமி திருக்கோயிலில் ரூ.2.60 இலட்சத்திலும் ஆக நான்கு திருக்கோயில்களில் ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து புதியதாக திருத்தேர் கொட்டகைகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

16. திருக்கோயில்களில் நந்தவனங்கள் அமைத்தல்

திருக்கோயில்களில் உள்ள நந்தவனங்களில் இறைவழிபாட்டிற்கு உகந்த தெய்வீக மணம் கமழும் மலர்கள் பூக்கும் செடிகள் மற்றும் மரங்கள் பராமரிக்கப்பட்டு அவற்றிலிருந்து பெறப்படும் மலர்கள் மாலையாகத் தொடுக்கப்பட்டு திருக்கோயில்களில்

எழுந்தருளியிருக்கும் இறைவன் மற்றும் இறைவியர் திருவுருவங்களுக்கு மலர் சாற்றுதல் பண்டைக் காலம் தொட்டே வழக்கத்தில் உள்ளது. பெரும்பாலான திருக்கோயில்களில் தற்போது நந்தவனம் அமைத்து பராமரிக்கும் நிலை குறைந்துவிட்டது. எனவே, இடவசதியுள்ள 51 திருக்கோயில்களில் ரூ.2.55 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து புதிய நந்தவனங்கள் அமைக்கவும், மேலும் திருக்கோயில்களில் ஏற்கெனவே உள்ள நந்தவனங்களைச் சீரமைத்து புத்தாக்கம் செய்யவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறாவது முறையாக நல்லாட்சி; அகிலம் போற்றும் அறத்தின் ஆட்சி. உலகம் போற்றும் உன்னத ஆட்சி. ஊரெங்கும் அம்மாவின் சாதனையே பேச்சு. 100 நாள் கடந்து பேர் விளங்கும் திட்டங்கள். இனி வரலாறு காணப் போவது 100 விழுக்காடு வெற்றிகள் உள்ளாட்சியிலும் தொடரும் (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் இதை உணரும்; அம்மாவின் ஆட்சியே என்றும் தமிழகத்தில் எங்கும், எதிலும் மலைமேல் நிலவாய் இம்மண்மீது ஒளிரும் என உரைத்து, நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறியுடன், மக்களால் நான் மக்களுக்காவே நான் என தமிழ் வாழ, தமிழ்நாடு வாழ தவ வாழ்க்கை வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பாதங்களை பணிந்து, வணங்கி நன்றி பாராட்டி நிறைவு செய்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 5-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? (குறுக்கீடு) அமைச்சர் இன்னும் பதிலுரையை முடிக்கவில்லை, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, நான் இந்த மாமன்றத்தில் வைத்த கருத்துகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மனமகிழ்வையும், நிறைவையும் அளித்திருக்கும் என நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் வழங்கிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, தமிழ் வளர்ச்சி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்

தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, எனது உரையை நன்றியோடு முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர் திரு. கிரி, இன்றைக்கு நீங்கள் பேசினீர்களா? (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், நீங்கள் அறிவிப்பில் என்ன* clarification *கேட்கப்போகிறீர்கள்? (குறுக்கீடு) தற்போது நேரம் 5-35 ஆகிவிட்டது. அறிவிப்பில் என்ன* clarification *கேட்கப்போகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன* doubt? *(குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடு) எல்லோரும் வாய்ப்புக் கேட்டால், எத்தனை மணிக்கு சபையை முடிப்பது? உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன* clarification?

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில், அறிவிப்பு எண் 13-ல் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தோவாளை அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலில் ரூ.12.60 இலட்சம் மதிப்பீட்டில், திருக்கோயில் நிதியிலிருந்து புதியதாக வாகன பாதுகாப்பு அறை கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். சுசீந்திரத்தில் இருப்பது தாணுமாலய சுவாமி திருக்கோயில்; இந்த இரண்டு கோயில்களுக்குமே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா அல்லது ஒரு கோயிலுக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) (குறுக்கீடு) உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள். உங்கள் கருத்துகளை* record *செய்வதற்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். உங்கள் கருத்து* record *ஆகிவிட்டது, அவற்றையெல்லாம் அமைச்சர்கள் பார்த்துக்கொள்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அவர்கள் பார்த்துக்கொள்வார்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் கருத்துகளை சொல்லிவிட்டீர்கள் அல்லவா! அவர்கள் பார்த்துக்கொள்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், உங்களிடம் ஏதாவது பதில் இருக்கிறதா?*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தோவாளை அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலுக்கு மட்டும்தான் புதியதாக வாகன பாதுகாப்பு அறை கட்டும் பணி செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,93,56,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஈ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 47- இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.80,86,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-9-2016) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

53. சிறைத் துறையிலிருந்து மாதம் ஒன்றிற்கு 2,30,000 கட்டுகள் கொண்ட பட்டை வகை சானிடரி நாப்கின்களை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக நிருவாக இயக்குநருக்கு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)*-ன்கீழ், அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 25-1-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 24-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

54. அரசுத் துறைகள், மாநிலத்தின் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் மாநில தன்னாட்சி அமைப்புகள் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக "தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத்தை" விருப்புரிமை சார்ந்த கொள்முதல் முகவராக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)*-ன்கீழ், நியமனம் செய்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 26-5-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 150-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

55. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

135. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

136. மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

137. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறை திட்டம், 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

இணைப்பு I

(134 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017

அறிமுகம்

அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழி, இயற்கையில் தோன்றி, இயற்கையிலே வளர்ந்து, காலத்தின் மாறுதல்களை எல்லாம் எதிர்கொண்டு, எதிர்ப்புகளையும், அறைகூவல்களையும் சந்தித்து உலக மொழிகளில் இன்றும் ஒரு வளமார்ந்த மொழியாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ். எவரும் ஏத்தி வரவேற்கும் இனிய மொழி. எம்மொழியின் கலப்புமின்றி செம்மொழியாய்த் திகழும் சீரிளமை வாய்ந்த பேரிளமொழி. காலங் கடந்தும் ஞாலம் போற்றும் சீலமிகு மொழி தமிழ். இந்திய மொழிகளில் செம்மொழித் தரத்தினையும் உலகச் செம்மொழிகளில் ஒன்று என்ற பெருமையையும் பெற்றமொழி தமிழ் மொழியாகும்.

மனிதன் முதலில் பேசத் தொடங்கிய மொழி தமிழ்மொழி. உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழின் வேர்ச்சொற்கள் விரவி, தற்போதும் அம்மக்களின் மொழியோடு இரண்டறக் கலந்துள்ளன. எந்த மொழிக்குள்ளும் எளிதெனக் கலந்த சந்த மொழி தமிழ். நம் சொந்த மொழி தமிழ்.

தமிழின் வளமையையும், இனிமையையும் எடுத்து இயம்புவனவாகச் சங்கத் தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன. இவை மக்களின் புறவாழ்க்கை நிலையான வீரம், கொடை, கருணை போன்ற செய்திகளையும், அகவாழ்க்கை நிலையான களவையும், கற்பையும் எடுத்துக்கூறுகின்றன. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தமிழுக்குக் கிடைத்தற்கரிய கருவூலமாகும். சேர, சோழ,

பாண்டியர்கள் சங்கம் வைத்து வளர்த்த மொழி தமிழ். பல குறுநில மன்னர்களின் பெருமையையும், கடையேழு வள்ளல்களின் ஈகைத் திறனையும் இவ்விலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன.

மக்களை நல்வழிப்படுத்துவதற்கெனப் பாடப்பட்ட நாலடியார், திருக்குறள் உள்ளிட்ட 18 நூல்களும் அறநெறிக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகள், தற்காலத்திற்கும் பொருந்துவனவாக உள்ளன.

பதினெண்மேல் கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தவிர, சமண, பௌத்த முனிவர்களால் இயற்றப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களும் ஐஞ்சிறுங் காப்பியங்களும் தமிழின் பெருமையையும் சொல்வளமையையும் பறைசாற்றுவனவாகத் திகழ்கின்றன. மக்களின் மனத்தைப் பண்படுத்தி இறைவழியில் செலுத்தி, நாட்டில் அமைதியை ஏற்படுத்த முற்பட்ட ஆன்மீக இலக்கியங்களும் இதிகாசங்களும் புராணங்களும் தமிழுக்குக் கிடைத்த அரிய செல்வங்களாகும்.

ஆழி அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால்நாழி

எனும் வரிகளால் சங்ககாலப் புலவர் ஔவையார் ஆழத்தைப் பொறுத்தே அழுத்தம் அதிகமாகும் என்ற அரிய தத்துவத்தைத் தந்தார்.

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு

எனச் சிலம்பும்

குணகடல் குமரி குடகம் வேங்கடம்

என நன்னூலும் பன்னூறாண்டுகளுக்கு முன்பே எல்லைகளை வகுத்த எழிற்றமிழ் நாடு.

இத்துணைச் சிறப்புப் பெற்ற தமிழின் பெருமையை நிலைநிறுத்திடவும் மேலும் பெருமை சேர்த்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமது தலைமையின்கீழ் செயற்பட்டுவரும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழறிஞர்களுக்கெனப் பல்வேறு புதிய விருதுகள், தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்தல், மாணவர்களுக்கு இலக்கியப் பயிற்சி அளித்தல் என எண்ணற்கரிய திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறார்கள்.

2016 ஆகஸ்ட் 31]

இயல் – 1

தமிழ் வளர்ச்சித் துறை

1.1. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

1.1.1. ஆய்வு

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டதற்கிணங்க, நம் தாய்மொழியாகிய தமிழை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசின் அனைத்து அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அரசுச் செயலாளரால் தலைமைச் செயலகத் துறைகளிலும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங்களிலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. மண்டலத் துணை இயக்குநர்களால், மண்டலநிலை அலுவலகங்களிலும், மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் - உதவி இயக்குநர்களால் மாவட்ட நிலை, சார்நிலை மற்றும் உள்ளாட்சி அலுவலகங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆட்சிமொழித்திட்டம் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1.1.2. ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

அரசுப் பணியாளர்களுக்கென ஆட்சிமொழித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்தும் நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்கின்றனர்.

மாவட்டத்திற்கு ரூ.20,000/- வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.6,40,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) செலவில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

1.1.3. ஆட்சிமொழிப் பயிலரங்குகள்

அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும்

ஆண்டுதோறும் இரண்டு நாள் ஆட்சிமொழிப் பயிலரங்குகள் நடத்தப்பெறுகின்றன. இதில் ஆட்சிமொழி வரலாறும் சட்டமும், ஆட்சிமொழிச் செயலாக்கம், குறிப்புகள், வரைவுகள் எழுதுதல், பிழைநீக்கி எழுதுதல் மற்றும் குறை களைவு நடவடிக்கைகள் ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பெறுகின்றன. ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு ரூ.30,000/- வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.9,60,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) இதற்காகச் செலவிடப்படுகின்றது.

1.1.4. சிறந்த வரைவுகள், குறிப்புகளுக்குப் பரிசுகள்

அரசுப் பணியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் தமிழில் சிறந்த குறிப்புகள், வரைவுகள் எழுதும் அரசுப் பணியாளர்கள் மாவட்ட நிலை, சார்நிலை, உள்ளாட்சித் துறையின் சார்நிலை அலுவலகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்று வருகின்றன.

மாநில அளவில் தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், அரசுப் பொதுத் துறை நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு முதல் பரிசு ரூ.3,000/- இரண்டாம் பரிசு ரூ.2,000/- மூன்றாம் பரிசு ரூ.1,000/- என வழங்கப்படுகிறது. இதேபோன்று இவற்றின் மாவட்ட நிலை, சார்நிலை அலுவலகங்களுக்கும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

1.1.5. அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழித் திட்டத்தினைச் சிறந்த முறையில் செயற்படுத்தும் துறைத் தலைமை அலுவலகம் / மாவட்ட ஆட்சியர் அலுவலகம் / அரசுப் பொதுத் துறை நிறுவனத் தலைமை அலுவலகம் ஆகிய அலுவலகங்களைப் பாராட்டும் வகையில் ஒவ்வொன்றிற்கும் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. அதேபோன்று மாவட்டநிலை அலுவலகங்களில் சிறந்து விளங்கும் அலுவலகம் ஒன்றிற்கும் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

1.2. ஆட்சிச் சொல்லகராதி

அரசுத் துறை அலுவலகங்கள், நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், இணையங்கள் ஆகியவற்றில் தமிழில் குறிப்புகள்

2016 ஆகஸ்ட் 31]
வரைவுகள் நன்கு எழுதப்படுவதற்குத் துணைபுரியும் வகையில், ஆட்சிச் சொல்லகராதி அச்சிடப்பட்டு விலையேதுமின்றி அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. 13 ஆண்டுகளுக்குப் பிறகு 2015 ஆம் ஆண்டில் மேலும் புதிய சொற்களுடன் மொத்தம் 17,161 சொற்கள் அடங்கிய ஆட்சிச் சொல்லகராதி ஏழாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

1.3. சிறப்புச் சொல்லகராதி

அரசின் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் சொற்களைத் தொகுத்து அந்தந்தத் துறைக்குரியனவாக 75 சிறப்புச் சொல்லகராதிகள் வெளியிடப்பட்டிருந்தன. தற்போது இவை ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே தொகுதியாக வெளியிடப்பட உள்ளது.

1.4. சொல் வங்கி

அரசு அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள ஆங்கிலச் சொற்கள் மற்றும் நடைமுறையில் மக்கள் பயன்படுத்தும் தமிழ் மொழியில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள், அன்றாடம் தோன்றும் புதிய ஆங்கிலச் சொற்கள் ஆகியவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்குவதற்காகச் சொல் வங்கித் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

தற்போது, இத்திட்டத்தினை விரிவுபடுத்திடும் வகையில் 2015-2016 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்போது புதியதாக உருவாகிவரும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கி இணையத்தில் பதிவேற்றி, உலகளவில் உள்ள தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் அச்சொற்களைத் தேவைப்படின், தரப்படுத்தியும் உலகளவில் ஒரே வகையில் தமிழ்ச்சொல்லைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர 'சொல் புதிது' என்ற வலைசார் சொல் வங்கி மையம் அமைக்கப்பட ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பெறும் என அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்கத் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.5. விழாக்கள்/விருதுகள்

தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ்ப் பண்பாட்டைப் போற்றும் வகையில் விழாக்களும், தமிழின் பெருமையைத் தரணியெங்கும் தழைத்தோங்கச் செய்யும் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்கும்

[2016 ஆகஸ்ட் 31

விழாக்களும் தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடப்படுகின்றன.

1.5.1. திருவள்ளுவர் திருநாள்

ஆண்டுதோறும் தைத்திங்கள் 2-ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவில், தமிழின் பெருமையை நிலை நிறுத்திடவும், மேலும் பெருமை சேர்த்திடவும் தம் வாழ்நாளெல்லாம் தமிழ்ப்பணி ஆற்றி வரும் தமிழ் அறிஞர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில் பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன:

- *திருவள்ளுவர் விருது (1986)*
- *பாரதியார் விருது (1997)*
- *பாரதிதாசன் விருது (1978)*
- *திரு.வி.க. விருது (1979)*
- *கி.ஆ.பெ. விசுவநாதம் விருது (2000)*
- *பேரறிஞர் அண்ணா விருது (2006 முதல் பொதுத் துறை; 2014 முதல் தமிழ் வளர்ச்சித் துறை)*
- *பெருந்தலைவர் காமராசர் விருது (2006 முதல் பொதுத் துறை; 2014 முதல் தமிழ் வளர்ச்சித் துறை)*

விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கிப் பொன்னாடை அணிவித்து விருதாளர்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

1.5.2. சித்திரை தமிழ்ப் புத்தாண்டு

சித்திரை தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் சிறந்த தமிழ் அமைப்புக்கும் தமிழறிஞர்களுக்கும் பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன:

- *கபிலர் விருது (2012 முதல்)*
- *உ.வே.சா. விருது (2012 முதல்)*

2016 ஆகஸ்ட் 31]

- ❖ கம்பர் விருது (2013 முதல்)
- ❖ சொல்லின் செல்வர் விருது (2013 முதல்)
- ❖ ஜி.யு.போப் விருது (2014 முதல்)
- ❖ உமறுப்புலவர் விருது (2014 முதல்)
- ❖ இளங்கோவடிகள் விருது (2015 முதல்)

விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கிப் பொன்னாடை அணிவித்து விருதாளர்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

1.5.3. தமிழ்த்தாய் விருது (2012 முதல்)

தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழர்களுக்கும் தொண்டாற்றிவரும் தமிழ் அமைப்புகளை ஊக்கப்படுத்தி பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் 'தமிழ்த்தாய் விருது' வழங்கப்படுகிறது. இவ்விருது பெறும் அமைப்பிற்கு ரூ.5 இலட்சம் பரிசுத்தொகையுடன் தகுதியுரை மற்றும் பாராட்டுக் கேடயம் வழங்கப்படுகின்றன.

1.5.4. முதலமைச்சர் கணினித் தமிழ் விருது (2014 முதல்)

வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினிவழி, தமிழ்மொழியைப் பரவிடச் செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காகச் சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது' வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் கணினித் தமிழ் விருது பெறும் வல்லுநருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகை, ஒரு சவரன் தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படுகின்றன.

1.5.5. தமிழ்ச் செம்மல் விருது

தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களைக் கண்டறிந்து அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் இவ்விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விருது பெறுபவருக்கு ரூ. 25,000/- பரிசுத் தொகையும், தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கப்படும். இவ்விருது மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 பேருக்கு வழங்கப்பட உள்ளது.

[2016 ஆகஸ்ட் 31

1.5.6. அம்மா இலக்கிய விருது

மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் தொண்டாற்றி வரும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் 'அம்மா இலக்கிய விருது' என்ற புதிய விருது வழங்கப்படும் என 2015-2016 ஆம் ஆண்டுக்கான சட்டப் பேரவை அறிவிப்புகளில் அறிவிக்கப்பட்டு, இவ்விருது வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. விருதுபெறும் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், தகுதியுரையும் வழங்கப்படும்.

1.5.7. மொழிபெயர்ப்பாளர் விருது

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் தரமான பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது வழங்கப்படும் என 2015-2016 ஆம் ஆண்டுக்கான சட்டப் பேரவை அறிவிப்புகளில் அறிவிக்கப்பட்டது. இதன்படி இவ்விருது வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விருதுபெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாயும், தகுதியுரையும் வழங்கப்படும்.

1.6. சிலைகளுக்கு மாலை அணிவித்தல்

1.6.1. திருவள்ளுவர்

ஆண்டுதோறும் தைத்திங்கள் 2 ஆம் நாளன்று திருவள்ளுவர் திருநாளில் அவரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும், மலர்தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

1.6.2. தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர்

ஒவ்வோர் ஆண்டும் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 19ஆம் நாளன்று சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும், மலர்தூவியும் 1993 ஆம் ஆண்டு முதல் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

1.6.3. ஔவையார்

ஒவ்வோர் ஆண்டும் உலக மகளிர் நாளான மார்ச்சு 8 ஆம் நாளன்று சென்னை காமராசர் சாலையில் (கடற்கரை)

2016 ஆகஸ்ட் 31]

அமைந்துள்ள ஔவையார் சிலைக்கு மாலை அணிவித்தும் மலர்தூவியும் 2004 ஆம் ஆண்டு முதல் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

1.6.4. தமிழறிஞர் கால்டுவெல்

தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் தமிழ்ப்பணியைப் பெருமைப்படுத்தும் வகையில், அவரது இருநூற்றாண்டு நிறைவு ஆண்டு முதல் (7-5-2014) அவரின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்பு செய்ய அரசால் ஆணையிடப்பட்டது. இதன்படி ஒவ்வோராண்டும் தமிழறிஞர் கால்டுவெல் அவர்களின் பிறந்த நாளான மே 7 ஆம் நாளன்று சென்னை காமராசர் சாலையில் (கடற்கரை) அமைந்துள்ள கால்டுவெல் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தும் மலர்தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

1.7. உலகத் தாய்மொழி நாள்

உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரித் திங்கள் 21 ஆம் நாளன்று தாய்மொழிநாள் கொண்டாடப்படும் என 2013-14 ஆம் ஆண்டு மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க 2014 ஆம் ஆண்டு முதல் பிப்ரவரித் திங்கள் 21 ஆம் நாளன்று உலகத் தாய்மொழிநாள் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் கலைநிகழ்ச்சிகள், கவியரங்கம், கருத்தரங்கம் ஆகியவை நடத்தப்பெறுகின்றன.

1.8. தமிழ்க் கவிஞர் நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125 ஆவது பிறந்த நாளையொட்டி 125 கவிஞர்களைக் கொண்டு, ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு நாள்கள் கவியரங்கம் நடத்தப்படும் எனவும் ஆண்டுதோறும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் (ஏப்ரல் 29), ‘தமிழ்க் கவிஞர் நாள்’ என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனவும் 2015-16 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு அதன்படி விழா நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.9. சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

சிறந்த தமிழ் நூல்களைப் படைக்கும் எழுத்தாளர்களுக்கும் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ்

[*2016 ஆகஸ்ட் 31*

பின்வரும் 33 வகைப்பாடுகளில் போட்டிக்கு நூல்கள் பெறப்படுகின்றன. தெரிவு செய்யப்பெற்ற நூலின் நூலாசிரியருக்குப் பரிசுத் தொகையாக ரூ.30,000/-மும், சான்றிதழும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகையாக ரூ.10,000/-மும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

1. சிறுவர் இலக்கியம்

2. மரபுக்கவிதை

3. புதுக்கவிதை

4. புதினம்

5. சிறுகதை

6. நாடகம் (உரைநடை, கவிதை)

7. திறனாய்வு

8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம்

9. பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள்

10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்)

11. அகராதி, கலைக்களஞ்சியம், கலைச்சொல்லாக்கம், ஆட்சித் தமிழ்

12. பயண இலக்கியம்

13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு

14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிகவழிகளும், அகழாய்வு

15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல்

16. பொறியியல், தொழில் நுட்பவியல்

17. மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல்

18. சட்டவியல், அரசியல்

19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல்

20. மருந்தியல், உடலியல், நலவியல்

21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 31]

22. சமயம், ஆன்மிகம், அளவையியல்

23. கல்வியியல், உளவியல்

24. வேளாண்மையியல், கால்நடையியல்

25. சுற்றுப்புறவியல்

26. கணினியியல்

27. நாட்டுப்புறவியல்

28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம்

29. இதழியல், தகவல் தொடர்பு

30. பிறசிறப்பு வெளியீடுகள்

31. விளையாட்டு

32. மகளிர் இலக்கியம்

33. தமிழர் வாழ்வியல்

1.10. தமிழ் நூல்கள் வெளியிட நிதியுதவி

தமிழில் சிறந்த நூல்கள் வெளியிடப்படுவதை ஊக்கப்படுத்தும் நோக்கில் நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. அரசு அச்சக மதிப்பீட்டின்படி, நூலின் அச்சுச் செலவில் 60 விழுக்காடு தொகை அல்லது ரூ.50,000/- இவற்றில் எது குறைவானதோ அத்தொகை நூலாசிரியருக்கு நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்க வேண்டும்.

1.11. குறள் பரிசு

இளம் வயதில் மாணவ மாணவியர் மனத்தில் திருக்குறளின் அறநெறிக் கருத்துக்களைப் பதிக்கும் வகையில் 1330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் குறள் பரிசுத்தொகையாக ரூ.10,000/- சான்றிதழுடன் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் ஆண்டு முதல் பரிசு பெறும் மாணவர்களின்

எண்ணிக்கை 36-லிருந்து 50 ஆக உயர்த்தப்பட்டு, பரிசு வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

1.12. மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களிடையே பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் ஊக்குவிக்கக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 2003-2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பரிசுகளும் பாராட்டுச் சான்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்குப் பரிசு		
வகைப்பாடு	விவரங்கள்	தொகை (ரூபாயில்)
மாவட்ட அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதல் பரிசு	10000
	இரண்டாம் பரிசு	7000
மாநில அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதல் பரிசு	15000
	இரண்டாம் பரிசு	12000
	மூன்றாம் பரிசு	10000

1.13. இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

ஆர்வமுள்ள இளந்தலைமுறையினருக்குத் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு கவிதை, கட்டுரை, பேச்சுப் பயிற்சியும், விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதற்கான பயிற்சியும் ஒருவார காலத்திற்கு அளிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெறும் பள்ளி, கல்லூரி மாணவர்களைக் கொண்டு 2012-13 ஆம் ஆண்டில் நூறு மாணவர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் இப்பயிற்சி அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தினை விரிவுபடுத்திடும் வகையில் மேலும் 100 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என 2013-14 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் மேற்கண்ட வகையில் 200 மாணவர்களுக்கு

2016 ஆகஸ்ட் 31]

ரூ.20 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை நான்கு பயிற்சி அணிகள் நடத்தப்பட்டுள்ளன.

1.14. நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் அனைத்தும் எளிய வகையில் அனைவரையும் சென்றடைய வேண்டும் எனும் நோக்கிலும் அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்படுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டமைக்கு அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படுகிறது.

இதுவரை 146 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு மரபுரிமையர்களுக்கு ரூ.10.92 கோடி பரிவுத்தொகையாக வழங்கிட அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1.14.1. நாட்டுடைமை நூல்களை அச்சிட்டு வெளியிடும் திட்டம்

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்கள் பொதுமக்கள் அனைவரையும் எளிதில் சென்றடைதல் வேண்டும் என்னும் நோக்கில் அவர்கள் எழுதிய நூல் பட்டியலிலிருந்து ஒரு நூல் தெரிவு செய்யப்பட்டு ஆண்டுக்கு ஒன்றாய் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக அச்சிட்டு வெளியிடுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வண்ணம் 110 நூல்களில் 55 நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், 55 நூல்களுக்கான அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.

1.14.2. இணையதளத்தில் நாட்டுடைமை நூல்களை வெளியிடும் திட்டம்

தமிழறிஞர்களின் நூல்கள் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களைச் சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் இணைய தளத்தில் சேர்க்கப்படுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்களிலிருந்து இதுவரை 2188 நூல்கள் உருப்படம் செய்யப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலும் (www.tamilvalarchithurai.org *மற்றும்* www.tamilvalarchithurai.com) *தமிழ் இணையக் கல்விக் கழக வலைத்தளத்திலும்* (www.tamilvu.org) *வெளியிடப்பட்டுள்ளன. இதற்கென ரூ.6,99,015/- செலவிடப்பட்டுள்ளது.*

1.15. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் தமது அகவை முதிர்ந்த காலத்தில் வறுமையில் வாடக்கூடாது என்ற நோக்கில் தொடங்கப்பட்ட இத்திட்டம், 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இவர்களுக்குத் திங்கள் தோறும் ரூ.2000/- ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி ரூ.100/- மற்றும் தமிழ்நாடு முழுவதும் பயணம் மேற்கொள்ள ஏதுவாக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ‘கட்டணமில்லாப் பயண அட்டை’ வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுவதாகும். உதவித்தொகை பெறுபவரின் மறைவிற்குப்பின் அவரின் மரபுரிமையர்க்கும் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை வழங்கப்படும்.

இந்நிதியுதவி பெறும் தமிழறிஞர் 58 வயது நிறைவடைந்தவராய் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.36,000/-த்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 747 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில் 46 தமிழறிஞர்களுக்கு இவ்வுதவித்தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

1.16. தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

தமிழுக்கும், தமிழ்மொழிக்கும் தமது சான்றாண்மையை வெளிப்படுத்தும் வகையில் தொண்டு புரிந்தவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களின் மறைவுக்குப்பின் அவர்தம் மரபுரிமையர்க்கும் இந்நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வந்த மருத்துவப்படி ரூ.15/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

திங்கள்தோறும் உதவித்தொகை வழங்கப்படும் விவரம்

அ) தமிழறிஞர் ரூ.3,000/- + ரூ.100/- மருத்துவப்படி

ஆ) தமிழறிஞரின் மரபுரிமையர் ரூ.1,500/- + ரூ.100/- மருத்துவப்படி

2016 ஆகஸ்ட் 31]

இத்திட்டத்தின்கீழ் இதுவரை உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பெற்ற தமிழறிஞர்கள் / அவர்தம் மரபுரிமையர்:

அ) தமிழறிஞர்கள்		1098 நபர்கள்
ஆ) மரபுரிமையர்		853 நபர்கள்
	மொத்தம்	1951 நபர்கள்

மேலும், இவர்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் பயணம் மேற்கொள்ள ஏதுவாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 'கட்டணமில்லாப் பயண அட்டை' வழங்கப்பட்டு வருகிறது.

1.17. எல்லைக் காவலர்களுக்கு நிதியுதவி

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டபோது தமிழ்நாட்டின் எல்லையைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்களுக்கு இத்திட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1983) கீழ், நிதியுதவி வழங்கப்படுகிறது. இவர்களின் மறைவுக்குப்பின் இவர்களின் மரபுரிமையர்க்கு நிதியுதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வந்த மருத்துவப்படி ரூ.15/-இலிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

திங்கள்தோறும் உதவித்தொகை வழங்கப்படும் விவரம்

அ) எல்லைக்காவலர் ரூ.4,000/- + ரூ.100/- மருத்துவப்படி

ஆ) மரபுரிமையர் ரூ.2,000/- + ரூ.100/- மருத்துவப்படி

இத்திட்டத்தின்கீழ் இதுவரை உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பெற்ற எல்லைக் காவலர்கள் / அவர்தம் மரபுரிமையர்:

அ) எல்லைக் காவலர்கள்		399 நபர்கள்
ஆ) மரபுரிமையர்		224 நபர்கள்
	மொத்தம்	623 நபர்கள்

மேலும், இவர்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் பயணம் மேற்கொள்ள ஏதுவாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 'கட்டணமில்லாப் பயண அட்டை' வழங்கப்பட்டு வருகிறது.

[*2016 ஆகஸ்ட் 31*

1.18. தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்படும் நல்கைகள் விவரம்

1.18.1. தமிழ்நாட்டிற்குள் வழங்கப்படும் நல்கைகள்

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச்சங்கம்-மதுரை, அறிவியல் தமிழ் மன்றம் ஆகியவற்றிற்குப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிற செலவினங்களுக்கு ஆண்டுதோறும் நல்கைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆண்டு நல்கை தவிர பிற புதிய திட்டப் பணிகளுக்கும் அவ்வப்போது கூடுதல் நல்கைகள் வழங்கப்படுகின்றன.

1.18.2. பிற மாநிலம்/பிற நாடுகளில் தமிழ்க்கல்வி பரவிட நிதியுதவி

இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தமிழ்க்கல்வி வளர முதல் நடவடிக்கையாகத் தில்லியில் உள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட 2003 ஆம் ஆண்டு 50 இலட்சம் ரூபாய் நிதி அரசால் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஒடிசா, உத்தரபிரதேசம், கருநாடகம், ஆந்திர மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவிட நல்கைகள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளன.

ஆந்திராவில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்த் துறைக்கு 3 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதியுதவியாக ஆண்டுக்கு 15 இலட்சம் ரூபாய் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில், தமிழ்த் துறை ஏற்படுத்திடவும், தமிழில் முதுகலைப் பட்டம் பயிலும் மாணவர்களுக்கும் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கும் மாணவர் சேர்க்கை அடிப்படையில் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப பல்கலைக்கழகம் அறுதியிடும் கல்விக் கட்டணங்கள் அடிப்படையில் அரசால் நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருவனந்தபுரத்தில் உள்ள பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மொரீசியசு நாட்டில் உள்ள மகாத்மா காந்தி நிறுவனத்தில் பேரறிஞர் அண்ணாவின் பெயரில் தமிழ் இருக்கை நிறுவ ரூ.1 கோடி வைப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 31]

1.18.3. பிற மாநிலங்களில் தமிழ் அமைப்புகள்/சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் அம்மாநிலத்தில் தமிழ் அமைப்புகள்/சங்கங்கள் நிறுவி தமிழ்ப் பண்பாடு மற்றும் நாகரிகத்தைப் பரப்பி வருகின்றனர். அவ்வாறு செயற்படும் அமைப்புகள்/சங்கங்களுக்கு அவர்களால் கோரப்படும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் புதுதில்லி தமிழ்ச்சங்கம், நவி மும்பை தமிழ்ச்சங்கம், பெங்களூரு தமிழ்ச்சங்கம், புவனேசுவர் தமிழ்ச்சங்கம், திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் உள்ளிட்ட தமிழ்ச்சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2015-2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அரசு நல்கைகளின் விவரம்

1. உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

பொருண்மை	தொகை ரூபாய்
நல்கைத் தொகை	32,69,462
சங்கத் தமிழ்க் காட்சிக் கூடத்திற்கான ஒப்பந்த ஊதியம், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் உள்ளிட்ட செலவினங்கள்	6,24,000
உலகத் தமிழ்ச் சங்க வாடகைக் கட்டணம்	6,54,080
திருக்குறள் நூல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடத்துதற்கு	3,00,000
ஐந்தாவது நிருவாகக் குழுக் கூட்டத்தில் ஏற்பளிக்கப்பட்ட திட்டப் பணிகளுக்கு	5,75,000
சங்கத்தமிழ்க் காட்சிக் கூடத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்தற்கு	20,96,000
நான்காவது நிருவாகக் குழுவில் ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதியுதவி	11,20,000
பெருந்திட்ட வளாகம் கட்ட கூடுதல் நிதி ஒதுக்கீடு	12,25,00,000
தகவல் மையம் ஏற்படுத்துதற்கு	5,00,000
மின்னிதழ் ஏற்படுத்துதற்கு	5,00,000
வேர்ச்சொல் பற்றிய ஆய்வு நூல் வெளியிடுதற்கு	11,00,000
மொத்தம்	**13,32,38,542**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 31

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

பொருண்மை	தொகை ரூபாய்
நல்கைத் தொகை	1,71,30,000
கணினி இடுபொருள் வாங்குதற்கு	5,000
ஓய்வூதியதாரர்களுக்கான நல்கை வழங்குதற்கு	62,20,000
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்	
தேசிய - பன்னாட்டுக் கருத்தரங்க	
மாநாடுகள் நடத்துதற்கு	10,00,000
திருக்குறள் கொரிய மொழியில்	
மொழிபெயர்த்து நூல் வெளியிடுதற்கு	36,00,000
ஆத்திசூடியை அரபு மொழியில்	
மொழிபெயர்த்து நூல் வெளியிடுதற்கு	7,50,000
மொத்தம்	**2,87,05,000**

3. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பொருண்மை	தொகை ரூபாய்
நல்கைத் தொகை	5,52,52,000
கல்வி நிலைப் பணியாளர்களுக்கு 1.1.96 முதல் 31.3.98 வரைக்குமான நிலுவைத் தொகை	12,62,535
கல்வி நிலைப் பணியாளர்களுக்கு 2010-11க்கான கூடுதல் ஊதியச் செலவினம்	12,15,159
கல்வி நிலைப் பணியாளர்களுக்கு 2011-12க்கான கூடுதல் ஊதியச் செலவினம்	9,04,73,386
கல்வி நிலைப் பணியாளர்களுக்கு 2013-14க்கான கூடுதல் ஊதியச் செலவினம்	4,59,00,000

2016 ஆகஸ்ட் 31]

பொருண்மை	தொகை ரூபாய்
கல்வி நிலைப் பணியாளர்களுக்கு 2014-15க்கான கூடுதல் ஊதியச் செலவினம்	*4,89,24,000*
*2006-07*க்கான பொங்கல் பரிவுத் தொகை	*90,115*
*2007-08*க்கான பொங்கல் பரிவுத் தொகை	*20,953*
*2008-09*க்கான பொங்கல் பரிவுத் தொகை	*1,07,203*
*2009-10*க்கான பொங்கல் பரிவுத் தொகை	*97,953*
*2010-11*க்கான பொங்கல் பரிவுத் தொகை	*81,203*
'த', 'நா' வடிவக் கட்டடம் கட்டுதற்கு	*15,00,00,000*
பாரதிதாசன் பாடல்களை சீனமொழியில் மொழிபெயர்த்து நூல் வெளியிடுதற்கு *(36,00,000-4,01,832)*	*31,98,168*
ஆத்திசூடியை சீன மொழியில் மொழிபெயர்த்து நூல் வெளியிடுதற்கு	*7,50,000*
மொத்தம்	***39,73,72,675***

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 31

இயல் – 2

மொழிபெயர்ப்புத் துறை

2.1. அறிமுகம்

மொழி என்பது மக்களுக்குக் கண்ணும் கருத்துமாகக் காட்சி தருவதாகும். உணர்வும் உயிரும் ஒன்று சேர உயிரோட்டமாக மொழியின் தகுதி போற்றப்படுகிறது.

மொழியாக்கம் தமிழுக்கு வாய்த்த நல்லாக்கம் என்ற ஆட்சித் தமிழின் நன்மொழிக்கேற்ப தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளின்

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

❖ அமைச்சரவைக் குறிப்புகள்

❖ சுற்றோட்டக் குறிப்புகள்

❖ கொள்கை விளக்கக் குறிப்புகள்

❖ அரசாணைகள்

❖ சுற்றறிக்கைகள்

❖ பொதுத் துறையின் அறிவிப்புகள்

❖ விசாரணைக்குழு அறிக்கைகள்

❖ தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்படும் அறிவிக்கைகள்

❖ பொதுக்கணக்குகள் குழு அறிக்கைகள்

❖ பொது நிறுவனங்கள் குழு அறிக்கைகள்

❖ விழிப்பாணையம், தகவல் ஆணைய ஆண்டறிக்கைகள்

❖ பொதுத் துறையின் காபிபோசா ஆவணங்கள்

❖ காவலர் பதக்கத்திற்கான தகுதியுரைகள்

❖ நிருவாகத் திட்ட வரைவுகள்

❖ மனுக்கள்

2016 ஆகஸ்ட் 31]

உள்ளிட்ட பல்வேறு முக்கிய மொழியாக்கப் பணிகளை மொழிபெயர்ப்புத் துறை செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

காலத்தால் பெரும்பழமை பூண்ட மொழிபெயர்ப்புத் துறை அனைத்து வகையிலும் விழுமிய பணிகளை நிறைவேற்றி வருகிறது.

[2016 ஆகஸ்ட் 31

இயல் – 3

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்

அகரமுதலித் திட்ட இயக்ககம்

3.1. அறிமுகம்

மொழி என்பது ஒலியல்ல; உயிர். அந்த மொழி பேசும் மக்களினத்தின் பண்பாடு, பழைமை ஆகியவற்றின் அடையாளம். அதனால் மொழியைப் பாதுகாப்பது மக்களின் முதல்கடமை. மொழி அழிந்தால் இனம் அழிந்துவிடும்.

மொழியை அழியாமல் காப்பது அகராதிகளே. ‘அகராதி’ என்று வழங்கும் சொல்லின் சரியான தமிழ் வடிவமே ‘அகரமுதலி’. எழுத்துவடிவமுள்ள எல்லா மொழிகளுக்கும் அகராதி உண்டு.

3.2. வெளியீடுகள்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில், 13,327 பக்கங்களைக் கொண்ட 31 பகுதிகளும், 944 பக்கங்களைக் கொண்ட சுருக்கப்பதிப்பும், 468 பக்கங்களைக் கொண்ட தமிழ் வினைச்சொல் அகரமுதலியும் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுவாக மொழியில் வழங்கும் சொற்கள் பத்தாண்டுக்கால இடைவெளியில் மாற்றம் அடைவது இயல்பு. அந்த மாற்றங்களைப் பதிவு செய்ய அகரமுதலிகளைப் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை காலமேம்படுத்தம் செய்ய வேண்டும் என்பது அகராதியியல் அறிஞர்களின் கருத்தாகும். அந்தக் கருத்தின் அடிப்படையில் இத்துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள 31 பகுதிகளையும் திருத்திய பதிப்பாக வெளியிடும் பணியை இத்துறை இப்போது மேற்கொண்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 31]

இயல் – 4

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

4.1. தோற்றம்

சென்னையில் 1968 ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றம், நோக்கம், செயல்பாடு ஆகியவற்றின் முன்வரைவு குறித்து விவாதிக்கப்பட்ட பொழுது மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றம் பற்றி,

''அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் அடங்கிய ஒரு நிறுவனத்தினை நீங்கள் அமைக்க விரும்பினால் அதனை வரவேற்போரில் நான் முதல்வனாக இருப்பேன். பிரெஞ்சு அகெதமியினைப் போன்ற (French Academy) அதனைத் தமிழ்நாட்டில் நிறுவுங்கள். இந்தக் கும்பல் அந்தக் கும்பல் என்று எந்தக் கோஷ்டியிடமும் அது சிக்கிக் கொண்டுவிடாமல் பார்த்துக் கொண்டால் ஒரு வளமுள்ள நிறுவனத்தை உருவாக்கியவர்களாவீர்கள். பிரெஞ்சு அகெதமி மாதிரி அஃது ஓர் இந்திய அகெதமியாகவோ தமிழ் அகெதமியாகவோ வளர்ந்து சிறப்பெய்தும். பல்கலைக்கழகமாக மாறிப் பட்டங்கள் கொடுப்பதும் கற்பிப்பதும் வேண்டா. அகெதமியாக அமையட்டும். தமிழ் மண்ணில் நடந்து வந்துள்ள பழைய ஆராய்ச்சிகளும் மதிக்கப்பட்டுப் போற்றப்பட வேண்டும். பொதுமக்களுக்கும் பயன்படுமாறு உதவியாக இருத்தல் வரவேற்புக்குரியது'' என்று கூறினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றின்படி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்டது.

4.2. நோக்கம்

- *தமிழ்க் கல்வியில் உயராய்வினை வளப்படுத்துவது*
- *உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது*

- ❖ ஆய்வுக்குகந்த தரமான நூலகம் பேணுவது
- ❖ தமிழரல்லாதார்க்குத் தமிழ்மொழியினைப் பயிற்றுவிப்பது
- ❖ பல்துறை ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது
- ❖ பிற நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வது
- ❖ பிறநாட்டுத் தமிழறிஞர்களுடன் ஆய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வது
- ❖ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் வளம்பெறும் வகையில் அயலகத் தொடர்புகளை மேம்படுத்துவது

4.3. ஆளுகைக் குழு

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆளுகைக் குழுத் தலைவராகவும் அலுவல்வழி துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட ஆளுகைக் குழுவுடன் தன்னாட்சி அமைப்பாக இந்நிறுவனம் செயல்பட்டு வருகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 49 ஆவது ஆளுகைக் குழுக் கூட்டம் 29-2-2016 அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

4.4. புலங்கள்

இந்நிறுவனத்தில் செயல்படும் கல்விப் புலங்களாவன:

- ❖ தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்
- ❖ தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம்
- ❖ சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம்
- ❖ அயல்நாட்டுத் தமிழர் புலம்

2016 ஆகஸ்ட் 31]

4.5. செயற்பாடுகள்

தமிழ் உயராய்வு நிறுவனமாகத் திகழும் இந்நிறுவனத்தில் இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் ஆகிய பிரிவுகளில் ஆய்வுப் பணிகளும் கல்விசார் அலுவலர்களால் தனித்தனியே திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில்,

- ❖ தமிழ்மொழி இலக்கணம், தமிழ் இலக்கிய இலக்கணம், சமுதாய மொழி இலக்கணம், மொழி கற்பித்தல், கணினி மொழியியல் ஆய்வுகளை நிகழ்த்துதல்
- ❖ கலைச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு போன்ற மொழியியல் களங்களை ஆய்வு செய்தல்
- ❖ நிறுவனத்திலுள்ள பதிப்பிக்கப்படாத சுவடிகளைப் படியெடுத்து ஆய்வுப் பதிப்புகள் கொண்டு வருதல்
- ❖ பிற நிறுவனங்களோடு இணைந்து தமிழியல் ஆய்வை வளப்படுத்துதல்
- ❖ தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- ❖ பழங்குடிகளின் இனவரைவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- ❖ அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் பற்றிய தகவல்கள்/ஆளுமைத் தரவு தளத்தை உருவாக்குதல்
- ❖ உலகெங்கும் வாழும் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கீழே குறிப்பிடப்படும் கற்பித்தல் மற்றும் ஆய்வுத் துணைமைப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

[2016 ஆகஸ்ட் 31

- ❖ ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணவர்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்துதல்
- ❖ ஓலைச்சுவடிகள் மற்றும் திருமந்திரமும் வாழ்வியலும் ஆகிய சான்றிதழ்ப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல்
- ❖ ஆண்டுதோறும் பன்னாட்டு/தேசிய ஆய்வுக் கருத்தரங்குகள் (ம) பயிலரங்குகள், 41 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை நடத்துதல்

4.6. புதிய நிருவாகக் கட்டடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ஆய்வரங்கம், மாணவர்களுக்கான வகுப்பறை, கல்வி மற்றும் நிருவாக அலுவலர்களுக்கான அறைகள், ஆய்வறிஞர் விடுதி, திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம், உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் மற்றும் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் ஆகியவை அடங்கிய புதிய கட்டடம் தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்விக் கோட்டப் பொதுப் பணித் துறையினரால் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 8-2-2016 அன்று காணொலிக் காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

4.7. அயல்நாட்டினருக்குத் தமிழ்மொழிப் பயிற்சி

நிறுவனம், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத பிற மொழியாளர்களுக்குத் தமிழ்மொழியினைக் கற்பிக்கும் பணியினை மொழிப்பயிற்சி ஆய்வுக்கூடம் வழியாக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், இக்கல்வியாண்டில் பிரான்சு, செருமானிய நாடுகளைச் சார்ந்தவர்களும் பிற இந்திய மாநிலத்தவர்களும் தமிழ்மொழியைப் பயின்று வருகின்றனர்.

4.8. திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கல்வி மற்றும் நிருவாகக் கட்டடத்தின்

2016 ஆகஸ்ட் 31]
முதல்தளத்தில் சுமார் 2,500 சதுரஅடி பரப்பளவில் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக் கூடத்தில் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் தொடர்பான அரிய புகைப்படங்கள், ஓவியங்கள், நூல்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

4.9. உலகத் தமிழர்ப் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்

உலகெங்கும் காணப்படும் தமிழர்களையும் தமிழறிஞர்களையும் ஒருங்கிணைத்து அதன்மூலம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் சார்பில் 14 சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

4.10. ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நவீனக் கட்டமைப்புடன் திகழும் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிக் கட்டுகளும் நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகளும் திரட்டப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று ஓலைச்சுவடிகளைத் திரட்டும் பணி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் இதுவரை கிடைக்கப்பெறாத பல அரிய சுவடிகள் திரட்டப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட சுவடிகள், ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

4.11. பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ‘‘பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்’’ ரூ.3.46 கோடியில் அமைத்திட அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து பழந்தமிழர்களின் சிறப்புகளையெல்லாம் நாட்டுக்கு எடுத்துக்காட்டும் வகையில் ஓவியங்கள், புகைப்படங்கள், மரச்சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், சுதைச் (சுண்ணாம்பு) சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள்,

புடைப்புச் சிற்பங்கள், இசைக்கருவிகள், போர்க்கருவிகள் மற்றும் அணிகலன்கள் ஆகிய பொருட்களுடன் இக்காட்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1-3-2016 அன்று காணொலிக் காட்சி வழியாக நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார்கள். இக்காட்சிக் கூடத்தினை நாள்தோறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி, தமிழார்வலர்கள், பொதுமக்கள், ஆய்வாளர்கள் என அனைவரும் கண்டுகளித்து வருகின்றனர்.

4.12. தொல்காப்பியர் ஆய்விருக்கை

தமிழ்நாடு அரசின் வைப்புநிதி உதவியுடன் நிறுவனத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள தொல்காப்பியர் ஆய்விருக்கையின்மூலம் 6 பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன. 6 நூல்கள் வெளியிடப்பட்டன. ஒரு சிறப்புப் பொழிவு, ஐந்து நாட்கள் பயிற்சிப் பட்டறை, ஒரு பயிலரங்கு, ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கு ஆகியன நடத்தப்பட்டன.

4.13. திருமூலர் இருக்கை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முழுவதும் நடைபெற்ற ‘தமிழ்த்தாய்-68’ பெருவிழாவை முன்னிட்டு, நிறுவனத்தில் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் திருமூலர் இருக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4.14. அறக்கட்டளைப் பொழிவுகள்

தமிழ் வளர்ச்சியின் மற்றொரு பரிமாணமாக நிறுவனத்தில் அறக்கட்டளைகளின் தோற்றம் அமைகிறது. இவ்வறக்கட்டளைகள் தனிமனிதக் கொடை அல்லது பலரது முயற்சி என்ற நிலையில் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வோர் அறக்கட்டளையின் சார்பிலும் தக்காரைத் தெரிவு செய்து சொற்பொழிவு நிகழ்த்தச் செய்து கலந்துரையாடலுக்கும் இடமளித்துப் பொழிவின்போதே நிறுவன நூலாக வெளியிடுதல் இந்நிறுவனத்தின் தனிச்சிறப்பாகும்.

தமிழ் ஆர்வலர்களால் இதுவரையில் 41 அறக்கட்டளைகள் நிறுவனத்தில் நிறுவப்பட்டு, சொற்பொழிவுகள் தொடர்ந்து

நடத்தப்பட்டு வருகின்றன. 2015-16 ஆம் ஆண்டில் 41 அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

4.15. புதிய அறக்கட்டளைகள்

தைவான் நாட்டைச் சேர்ந்த தகைசால் அறிஞர் கவிஞர் யூசி அவர்களால் வழங்கப்பட்ட ரூ.6 இலட்சம் நிதியுதவியோடு "அம்மாவின் ஆட்சியில் அருந்தமிழ் வளர்ச்சி" எனும் பெயரில் அறக்கட்டளையும், தினமணி நாளிதழ் சார்பில் ரூ.1 இலட்சம் நிதியுதவியோடு "தினமணி" அறக்கட்டளையும் தொடங்கப்பட்டுள்ளன.

4.16. ஆண்டுதோறும் கருத்தரங்கம் நடத்துதல்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டுவரும் நான்கு கல்விப் புலங்களிலும் வளர்ந்துவரும் துறைசார் ஆய்வுக்கோட்பாடுகளை இளம் ஆய்வாளர்கள் அறிந்து பயன்கொள்ளும் வகையில் ஆண்டுதோறும் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் தேசியக் கருத்தரங்கம் நடத்த புலம் ஒன்றுக்கு ரூ. 2.50 இலட்சம் வீதம் ரூ.10 இலட்சம் நிதி பெறப்பட்டு 2015-16 ஆம் ஆண்டு 4 கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

4.17. ஆத்திசூடியை அரபு மொழியில் பெயர்த்தல்

ஓரடியில் உலக மக்களுக்கேற்ற எளிய அறநெறிக் கருத்துகளைக் கொண்ட தமிழ்மொழியின் அறநெறிக் கருவூலமான ஆத்திசூடியை அரபு மொழியில் மொழிபெயர்த்திட நிறுவனத்திற்கு ரூ.7.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஆத்திசூடி அரபுமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

4.18. நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இதுவரையில் ஏறத்தாழ 925-க்கும் மேற்பட்ட தரமான ஆய்வு நூல்களைக் கீழ்வரும் பிரிவுகளில் வெளியிட்டுள்ளது. இக்கல்வியாண்டில் மட்டும் 75 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- ❖ கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள்
- ❖ நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள்
- ❖ அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்
- ❖ சுவடிப் பதிப்புகள்
- ❖ மொழிபெயர்ப்புகள்
- ❖ அரியநூல் மறுபதிப்புகள்
- ❖ பிற தமிழறிஞர்களின் படைப்புகள்

4.19. தமிழியல் – ஆய்விதழ்

தமிழ்கூறும் நல்லுலக ஆய்வியலாளர்களுக்கிடையே இணைப்புப் பாலமாக அமையும் இருமொழியிலான தமிழியல் ஆய்விதழ் (JOTS) *ஆண்டுக்கு நான்கு முறை வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்விதழில் உள்ள கட்டுரைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வலைதளத்திலிருந்து* (www.ulakaththamizh.org) *பதிவிறக்கம் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 90 தமிழியல் இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.*

4.20. முனைவர் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம்

சென்னைப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் இலக்கியத்தில் முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வும் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தில் 2011 முதல் 2015 வரை 236 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும் 168 முனைவர் ஆய்வாளர்களும் சேர்ந்துள்ளனர். மேலும், 2013 முதல் 2016 வரை சுவடிப் பட்டயத்தில் 95 மாணவர்களும், 2014 முதல் 2016 வரை திருமந்திர பட்டயத்தில் 171 மாணவ மாணவியர்களும் பயின்றுள்ளனர்.

2016 ஆகஸ்ட் 31]

இவ்வாண்டு 28 முனைவர் பட்ட ஆய்வாளர்களும் 50 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

4.21. பட்டய வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓராண்டுகால ஓலைச் சுவடிகள் பயிற்சி வகுப்பு, திருமந்திரமும் வாழ்வியலும் பயிற்சி வகுப்புகள் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன.

4.22. சிறப்பு வகுப்புகள்

நடப்புக் கல்வியாண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் மட்டுமின்றி, பிற கல்லூரி மாணவர்களும் பயன்பெறும் வகையில் பல்கலைக்கழக நல்கைக் குழுவால் நடத்தப்பெறும் விரிவுரையாளர்/ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான தகுதித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் கட்டணமின்றி நடத்தப்பெற்று வருகின்றன.

4.23. நூலகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தில் ஏறத்தாழ 1,05,000 நூல்கள் உள்ளன. குளுமை வசதி செய்யப்பட்டுள்ள இவ்வாய்வு நூலகத்தினைக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் என அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர்.

4.24. நல்கை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செலவினங்கள் அனைத்தையும் மேற்கொள்ள, தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நல்கை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2015-16 ஆம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நல்கை விவரம்:

வாலாய நல்கை	*ரூ.171.30 இலட்சம்*
ஓய்வூதியம் (ம) ஓய்வுகாலப் பணப்பலன்கள்	*ரூ.62.20 இலட்சம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 31

4.25. தமிழ்த்தாய் 68 பெருவிழா

கடந்த நிதியாண்டில், தமிழ் வளர்ச்சித் திங்களாகப் பிப்ரவரித் திங்கள் முழுவதும் தமிழ்த்தாய்-68 பெருவிழா நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது. இதில் 38 அறக்கட்டளைப் பொழிவுகள், 11 சிறப்புச் சொற்பொழிவுகள், ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கு, 5 நாள் பயிற்சிப் பட்டறை, கலை நிகழ்ச்சிகள், திருக்குறள் முற்றோதல், கவியரங்கம், சிறப்புக் கவியரங்கம், நூல்வெளியீடு ஆகியன நடத்தப்பட்டன.

இவ்வாறாக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ் ஆய்வுப் பணிகளைச் செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 31]

இயல் – 5

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

5.1. அறிமுகம்

தமிழ் ஓர் உயிர்த்துடிப்புள்ள மொழி!
படைப்பாற்றலுள்ள மொழி!!
காப்பாற்றுகின்ற ஒரு மொழி!!!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரை
1995- எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

இலக்கிய வளமும் கலை நயமும் ஒருங்கே படைத்த உலக மொழிகளில் தமிழ்மொழி சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. தொன்மை மிக்க மொழிகளில் இன்றும் வழக்கில் இருந்துவரும் பயன்பாட்டு மொழியாகவும் தமிழ் விளங்குவது தனிச்சிறப்பாகும். மூன்று நாடுகளில் தேசிய மொழியாகவும் விளங்கி வருகிறது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளம் குன்றாத தமிழ் மொழியின் கலை, பண்பாடு, இலக்கியத் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் உலகத் தமிழ் மக்களுடன் உறவாடும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனிப்பொலிவுடன் செயலாற்றி வருகிறது.

5.2. தோற்றம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் மேனாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

5.3. நோக்கங்கள்

- இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர் பண்பாட்டின் பங்கு பற்றிய ஆய்வினை மேற்கொள்ளுதல் போன்ற பரந்து விரிந்து பற்பல நோக்கங்களைச் செயற்படுத்தும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 31

- ❖ தமிழ் இனத்தின் பண்டைய அறிவியல் சிந்தனைகள், அறிவுசார் படைப்புகள், தொழில் சிறப்புகள் முதலியவற்றை மீட்டுருவாக்கம் செய்தல், காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு பழமையை வடிவமைத்தல்.

- ❖ தமிழிலக்கணக் கோட்பாடுகளுடன், மொழியியல் கொள்கைகளையும் ஆராய்ந்து தமிழ்மொழியின் அமைப்பினையும் பயன்பாட்டினையும் விளக்குதல். மொழி கற்பித்தலில் நவீன முறைகளை உருவாக்குதல்.

- ❖ அரிய தமிழ் நூல்களைப் பிற மொழிகளிலும், பிறமொழி நூல்களைத் தமிழிலும் மொழிபெயர்த்தல். கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், பழைய கையெழுத்துக் காகிதச் சுவடிகள், முதல் பதிப்பு பெற்ற பழைய அரிய நூல்கள் ஆகியவற்றைப் பேணிக்காத்தல், மறுபதிப்பு செய்தல். இலக்கிய, இலக்கண, அறிவியல் கலைச்சொல், மெய்யியல் முதலான பெருந்தலைப்புகளில் களஞ்சியங்கள் உருவாக்குதல். சிறப்பான முறையில் தமிழை வளப்படுத்தும் வகையில் புதிய செல்நெறிகளை உருவாக்குதல்.

- ❖ அருகிவரும் பண்பாட்டுக் கூறுகளை — வரலாற்றுச் சின்னங்களை ஆய்வின்வழி மீட்டெடுத்து அருஞ் செய்திகளை வெளியிடுதல்.

- ❖ அயல்நாட்டார் தமிழகத்தாருடன் கொண்ட உறவு பற்றியும், புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் தாம் சென்ற இடங்களில் தம் மரபுசார் பண்பாட்டினைப் பின்பற்றுதல் பற்றியும் ஆராய்தல்.

TRUTH ALONE TRIUMPHS

5.4. புலங்கள்—துறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகம் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் எனும் 5 புலங்களில் உள்ளடங்கிய 26 துறைகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

தூய தமிழ்ச் சொல்லாக்க அகரமுதலிகள் திட்டம், கலைக்களஞ்சியத் திட்டம், பெருஞ்சொல்லகராதித் திட்டம் தொடர்பான பிரிவுகளுடன் அச்சகம்-பதிப்புத் துறை, நூலகம், அருங்காட்சியகம் ஆகியவையும் இப்பல்கலைக்கழகத்தில் இயங்குகின்றன.

2016 ஆகஸ்ட் 31]

5.5. கல்விப் பணி

5.5.1. பருவமுறை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முறையான சேர்க்கைப் பிரிவின் வழியாக முதுநிலை / முதுஅறிவியல், ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள் மற்றும் பட்டயம் / சான்றிதழ்ப் படிப்புகளும் நடைபெற்று வருகின்றன. 2015-16 ஆம் கல்வியாண்டில் முனைவர் பட்டப் படிப்பில் 73 மாணவர்களும், ஆய்வியல் நிறைஞர் படிப்பில் 561 மாணவர்களும், இளங்கல்வியியல் படிப்பில் 70 மாணவர்களும், கல்வியியல் நிறைஞர் படிப்பில் 8 மாணவர்களும், முதுநிலைப் படிப்பில் 33 மாணவர்களும் சேர்க்கை பெற்றுள்ளனர்.

5.5.2. தொலைநிலைக் கல்வி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொலைநிலைக் கல்வி இயக்ககம் 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டது.

தமிழ், வரலாறு, தமிழிசை, புவியியல், கணிதம், உளவியல் போன்ற பல்வேறு பாடப்பிரிவுகளில் 14 முதுநிலை பட்டப் படிப்புகளும், 15 இளநிலை பட்டப் படிப்புகளும் நடைபெற்று வருகின்றன.

பரதநாட்டியம், மருத்துவ மூலிகை, அழகுக் கலை, மரபுவழி தமிழ் மருத்துவம், தொடு சிகிச்சை அறிவியல், இணையச் சேவைகள், வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல் போன்றவற்றில் 5 முதுநிலை பட்டயப் படிப்புகளும் 20 பட்டயப் படிப்புகளும் நடத்தப்பெறுகின்றன.

மேலும், இசை ஆசிரியர் பயிற்சி, தமிழ்ப்புலவர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, யோகா ஆசிரியர் பயிற்சி போன்றவற்றில் 10 சான்றிதழ் படிப்புகள் என 84 பாடப்பிரிவுகள் நடைபெற்று வருகின்றன.

2015-16 ஆம் கல்வியாண்டில் மேற்கண்ட படிப்புகளில் 7852 மாணவ, மாணவியர் சேர்ந்துள்ளனர்.

2016 ஆம் நாள்காட்டியாண்டில் 16-6-2016 வரை 1073 பேர் சேர்ந்துள்ளனர். இளங்கல்வியியல் பாடப்பிரிவில் தொலைநிலைக் கல்வி வழியாக 500 மாணவர்கள் பயின்று வருகின்றனர். தற்போது

[2016 ஆகஸ்ட் 31

கூடுதலாக 500 மாணவர்களைச் சேர்க்க தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) அனுமதித்துள்ளது. எனவே, ஆண்டுக்கு 1000 இளங்கல்வியியல் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

தொலைநிலைக் கல்வி இயக்ககம் 5 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு யோகா, தொடுசிகிச்சை, கணினி அறிவியல், இசை மற்றும் ஓவியம் முதலிய பிரிவுகளில் பாடங்களைத் தமிழ் வழியாகக் கற்பித்து வருவது குறிப்பிடத்தக்கது.

2016-17 ஆம் கல்வியாண்டில் 'கணிதவியலில் மனக்கணக்கும் கற்றலில் மூளை ஒருங்கிணைப்பும்' என்னும் பாடப்பிரிவில் பட்டயம்/சான்றிதழ் வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

மேலும், தீ விபத்துத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு - பட்டயம், தாவரவியலில் இளங்கலை, முதுகலை பாடப்பிரிவுகளும் தொடங்கப்படவுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்கீழ் தமிழகம் முழுவதும் 179 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மையங்களையும் மின்னாளுமைவழி இணைத்துப் பணிகளை எளிமைப் படுத்தவும், விரைவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

5.5.3. உதவித் தொகை

மாணவர்களுக்குத் தமிழ்நாடு அரசிடமிருந்து ஆதி திராவிடர் வகுப்பு/பழங்குடி வகுப்பு கல்வி உதவித்தொகை, பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை, விடுதியில் தங்கிப்பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான பின்பதின்மக் (போஸ்ட் மெட்ரிக்) கல்வி உதவித் தொகை போன்றவை பெற்று வழங்கப்பட்டு வருகின்றன.

2015-2016 ஆம் கல்வியாண்டில் பின்பதின்ம (போஸ்ட் மெட்ரிக்) உதவித் தொகையாக ரூ. 5,76,000/- தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதரவகைக் கல்வி உதவித் தொகையை இணையதளத்தின்வழி மாணவர்கள் நேரடியாகப் பெற்று வருகின்றனர்.

2016 ஆகஸ்ட் 31]

5.6. கல்வி ஆய்வுப்பணிகள்

இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளோடு ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். பல்கலைக்கழக நல்கைக்குழு, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை மற்றும் பிற நிறுவனங்களின் நல்கை உதவியுடன் கல்வியாளர்கள் பெருந்திட்ட/ குறுந்திட்ட ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்கலைக்கழக நல்கைக்குழு வழங்கிய நல்கையின்கீழ் மூன்று பெருந்திட்டங்கள் (UGC Major Project) நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுக்க, கல்வி ஆய்வுப் பணிகளுக்குத் தமிழ்நாடு அரசின் 2012-13 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைவழி ரூ.130.85 இலட்சம் பெறப்பட்டு, பல்வேறு துறைகள் சார்ந்த ஆய்வுத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 34 ஆய்வறிக்கைகள் துறைசார்ந்த வெளி வல்லுநர்களால் நுண்ணாய்வு செய்யப்பட்டு நூலாக்கம் செய்வதற்குப் பதிப்புத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை வழி, சிங்கப்பூரின் 30 தமிழாசிரியர்களுக்குத் தமிழ்மொழி இலக்கியம், பண்பாடு குறித்த பயிலரங்குகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பெற்றன. உலகில் வெவ்வேறு இடங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ்க் கல்வி அளிப்பதில் ஆர்வமுடன் இத்துறை செயல்பட்டு வருகிறது.

இந்திய அரசின் தொல்லியல் துறை கட்டுப்பாட்டிலுள்ள மந்திரிப்பட்டினம் மற்றும் மணல்மேல்குடி ஆகிய பகுதிகளில் அகழாய்வு செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை சார்பில் 2014-15 ஆம் ஆண்டில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றன. 2015-16 ஆம் ஆண்டிலும் இதே பகுதிகளில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றன.

கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை சார்பில் இந்திய அரசின் தொல்லியல் துறை நல்கை உதவியுடன் நன்னிலம் பகுதி அம்பல் எனுமிடத்தில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2016 ஆகஸ்ட் 31

5.7. அறக்கட்டளைப் பொழிவுகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 78 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டு முதலீடுகளின் வட்டித் தொகையிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஆய்வு மாணவர்களுக்கு உதவித்தொகை, ஊக்கத்தொகை வழங்குதல் மற்றும் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் நடத்தப்பெற்று வருகின்றன.

2015-2016 ஆம் ஆண்டு 35 அறக்கட்டளைகளில் சொற்பொழிவுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டில் 65 அறக்கட்டளைகளின் சார்பில் கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகள் நடத்தப்படவுள்ளன.

ஆய்வு, பயிற்சி, மேம்பாட்டுப் பணிகள்

❖ பல்கலைக்கழக நல்கைக்குழு உதவியுடன் மாணவர்களுக்கான கலைவிழா, பொங்கல் விழா போன்றவை நடத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பாக, பொதுமக்களும் பல்கலைக்கழகமும் இணைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் 'நூல்கொடை இயக்கம்' சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உடல்நலத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய நோக்கில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

❖ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-இன்கீழ் (த.நா.ச.பே. எண் 013 - நாள். 25-7-2014) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பின் கீழ், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இரண்டு கட்டடங்கள் கட்ட ரூ. 15 கோடி தமிழக அரசால் அளிக்கப்பெற்றது. 'த' வடிவக் கலைப்புலக் கட்டடம் மற்றும் 'நா' வடிவ சுவடிப்புலக் கட்டடம் கட்டும் பணிகள் 85 விழுக்காடு அளவிற்கு நிறைவடைந்துள்ளன. இக்கட்டடங்கள் செப்டம்பர் 2016-இல் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவுள்ளன.

2016 ஆகஸ்ட் 31]

5.8. பல்கலைக்கழக நல்கை ஆணையம் (UGC)

பல்கலைக்கழக நல்கைக்குழு 12 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சி நல்கையாக 2015-2016 இல் ரூ.162.50 இலட்சம் வழங்கியுள்ளது. விதிகளின்படி வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.9. நூல் வெளியீடு மற்றும் விற்பனை

2015-16 ஆம் ஆண்டில் 5 புதிய நூல்களும் 2 மறுபதிப்பு நூல்களும் வெளியிடப் பெற்றுள்ளன. மேலும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள் நாள்தோறும் விற்பனை செய்யப்படுகின்றன.

பல்வேறு ஊர்களில் நடத்தப்பெறும் புத்தகக் கண்காட்சிகளில் பல்கலைக்கழக வெளியீடுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2015-16 ஆம் ஆண்டில் ரூ.7.47 இலட்சம் விலைமதிப்பிலான நூல்கள் விற்பனை செய்யப் பெற்றுள்ளன.

5.10. நூலகம்

1-1-2015 முதல் 7-3-2016 ஆம் நாள் முடிய நூல்சேர்க்கைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நூல்களின் விவரம்.

அ. கல்வியாளர்களின் திட்டம் மற்றும் களஞ்சிய மைய நூல்கள்

தமிழ்	2226
ஆங்கிலம்	567

மொத்தம்	2793

ஆ. அன்பளிப்பு நூல்கள்

தமிழ்	1261
ஆங்கிலம்	354

மொத்தம்	1615

கூடுதல் 2793 + 1615 = 4,408

9-3-2016 முடிய மொத்த நூல்களின் எண்ணிக்கை 1,70,773

[2016 ஆகஸ்ட் 31

5.11. தமிழ்ப் பல்கலைக்கழக நிதி மேம்பாடு

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 1998-1999ஆம் ஆண்டு முதல் ரூ.353.91 இலட்சமாக வழங்கப்பட்ட தொகுப்பு நல்கை ஒவ்வோர் ஆண்டும் உயர்த்தப்பட்டு தற்போது, 2015-16 ஆம் ஆண்டிற்கு ரூ.552.52 இலட்சம் வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் ஊதியச் செலவினங்களுக்கென வழங்கப்படும் வாலாயமான நல்கை நீங்கலாகப் பிற திட்டப் பணிகளுக்கும் நல்கை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், 2015-16ஆம் ஆண்டில் ஊதியச் செலவினங்களுக்கென வழங்கப்பட்ட தொகுப்பு நல்கை ரூ.552.52 இலட்சம் தவிர கல்விநிலைப் பணியாளர்களுக்கான கூடுதல் ஊதியச் செலவினம், நிலுவைத் தொகை, கட்டடம் கட்ட மற்றும் மொழிபெயர்ப்புப் பணி உள்ளிட்ட இனங்களுக்கு ரூ.34,21,20,675/- வழங்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொகுப்பு நல்கையைத் திருத்திடும் பொருட்டு அமைக்கப்பட்ட புதிய அலுவல்வழிக் குழுவின் பரிந்துரையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பது போன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் உள்ளபடியான செலவினங்களை (Actual Expenditure) வரவு செலவு ஒதுக்கீட்டின் (Budget Provision) மூலம் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர் அவர்களாலும் பரிந்துரை செய்யப்பட்ட இழப்பில்லா ஒட்டுமொத்த நல்கை (Non-lapsable lump sum Grant) அரசால் அனுமதிக்கப்பட்டு அரசாணைகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் பல்கலைக்கழகத்தின் நிதிச்சுமையை நிரந்தரமாகத் தீர்க்க வழிவகை செய்யப்படும்.

5.12. எதிர்காலத் திட்டங்கள்

❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 5 புலக் கட்டடங்களில் உள்ள கருத்தரங்க அறைகளை உயர்தொழில்நுட்பக் கருத்தரங்க அறைகளாக மாற்றுவதற்கும், ஒவ்வொரு கட்டடத்திலும் அனைத்து வசதி வகுப்பறை (Smart Class) அமைப்பதற்கும், தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகத்தினை நவீனப்

2016 ஆகஸ்ட் 31]

படுத்துவதற்கும், ஆய்வுக் கூடங்களுக்குத் தேவையான ஆய்வு உபகரணங்கள் வாங்குவதற்கும் பல்கலைக்கழக நல்கைக்குழுவிடமிருந்து (UGC) சிறப்பு நல்கை வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சூரியசக்திமூலம் மின்சாரம் தயாரிப்பதற்குத் தேவையான சூரிய மின்கலன்களை அமைப்பதற்கு நல்கை வேண்டி மத்திய அரசின் எரிசக்தி துறைக்குக் கருத்துரு அனுப்பப்பட உள்ளது.
- ❖ பல்கலைக்கழக வளாகத்தில் மூலிகைப் பண்ணை அமைத்தல், மூலிகைகளைப் பராமரித்தல், மூலிகைகள் தொடர்பான கருத்தரங்குகள் நடத்துதல், மூலிகைகள் வளர்ப்பது தொடர்பான பயிற்சி அளித்தல் மற்றும் ஆய்வேடுகள் வெளியிடுதல் போன்றவற்றிற்கு நல்கை வேண்டி மத்திய அரசின் தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியத்திற்குக் கருத்துரு அனுப்பப்பட உள்ளது.
- ❖ புல விருந்தகத்தில் கண்காணிப்புக் கேமரா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வளர்தமிழ்ப் புலக் கருத்தரங்க அறையினை உயர் தொழில்நுட்பக் கருத்தரங்க அறையாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- ❖ பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆடவர் விடுதி மற்றும் மகளிர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியர்களுக்குத் தரமான உணவு வழங்கும் பொருட்டு, பல்கலைக்கழக வளாகத்தில் நவீன அடுக்களை (Modern Kitchen) அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ❖ பல்கலைக்கழக நல்கைக் குழுவின் “தூய்மை இந்தியா” திட்டத்தின்கீழ், பல்கலைக்கழக வளாகத்தில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. பல்கலைக் கழகத்திற்கும் அருகில் உள்ள கிராமங்களுக்கும் நல்லுறவு மேம்படும் வகையிலும் கிராமத்திற்குத் தேவையான வசதிகளைச் செய்யும் பொருட்டு, அருகில் உள்ள கிராமங்கள் தத்து எடுக்கப்பட்டு, சுகாதார மேம்பாட்டுப் பணிகள், சுற்றுச்சூழல் பாதுகாத்தல் பணிகள், தனிநபர் உடல்நலம் காப்பதற்கு யோகா பயிற்சிகள் போன்றவை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இயல் – 6

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

6.1. தோற்றம்

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை மாண்புமிகு முன்னாள் முதல்வர் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களால் 1981 இல் அறிவிக்கப்பட்டு 1986இல் தொடங்கப்பட்டது.

2012 இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை புதுப்பொலிவோடும் சிறப்போடும் செயல்பட ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மதுரை தல்லாகுளம் பகுதியில் 14.15 ஏக்கர் நிலப்பரப்பில் பெருந்திட்ட வளாகம் கட்டப்பட்டு 1-3-2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேலும் தற்போது கூடுதல் பணிக்காக 12.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2. சங்க அமைப்பு நோக்கம்

- உலக நாடுகளில் இயங்கிவரும் அனைத்துத் தமிழ்ச் சங்கங்கள், அமைப்புகள், நிறுவனங்கள், தமிழ் ஆராய்ச்சி மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவை பற்றிய விவரங்களைத் தொகுத்தல்.
- உலகமெங்கும் இயங்கிவரும் இவ்வமைப்புகளை ஒருகுடையின்கீழ் பதிவுசெய்து ஒருங்கிணைத்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல்.
- தமிழறிஞர்கள், கலை வல்லுநர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பி தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய செய்திகளைப் பரப்புதல்.
- தமிழர் பெரும் எண்ணிக்கையில் வாழும் அயல்நாடுகளுக்கு ஆய்வாளர்களை அனுப்பி அங்குள்ள தமிழர் நிலையினை ஆய்தல், அதைப்போன்று அங்குள்ள ஆய்வாளர்களைத் தமிழகத்திற்கு வரவழைத்து கருத்துப் பரிமாற்றம் செய்தல்.
- பிறநாட்டுத் தமிழர் பற்றிய களஞ்சியம் தயாரித்து வெளியிடல்.

2016 ஆகஸ்ட் 31]

- ❖ *வரலாற்றுக் காரணங்களால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் குடியேறிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, பிஜி, மொரீசியசு, பிரெஞ்சு கயானா மற்றும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குடியேறிய நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ், ஆசுதிரேலியா, நியூசிலாந்து, குவைத் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்.*

- ❖ *தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்கள் மற்றும் பிற நூல்கள் போன்றவற்றை அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.*

- ❖ *உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம் அமைக்க இச்சங்கத்தின் வாயிலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.*

- ❖ *ஒவ்வோர் ஆண்டும் உலக நாடுகளில் தமிழர்கள் வாழும் இரு நாடுகளைத் தேர்வு செய்து அந்நாடுகளில் ஆய்வரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்தல்.*

- ❖ *தமிழகத்தில் உள்ள கலைநுட்பம் வாய்ந்த சிற்பங்கள், நாட்டுப்புறப்பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் துய்ப்பதற்குரிய வாய்ப்புகளைச் சங்கத்தின் வாயிலாக ஏற்படுத்தித் தருதல்.*

- ❖ *உலக நாடுகளின் அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ள தமிழ் தொடர்பான ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துச் சுவடிகள், கலைப்பொருட்கள் முதலிய தரவுகளைத் திரட்டுதல்.*

6.3. சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம்

மதுரையில் ரூ.75 இலட்சம் செலவில் சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம் அமைக்கப்பட்டு 8-2-2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு உலகத் தமிழ்ச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இதில் சங்க இலக்கியக் காட்சிகள் ஓவியங்களாகவும், புடைப்புச் சிற்பங்களாகவும்,

நிழற்படங்களாகவும், கற்சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இதனை மாணவர்களும், பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும், வெளிநாட்டவரும் பார்வையிடுகின்றனர்.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பொலிவுடன் செயல்படத் தொடங்கியது முதல் இதுவரை

- ❖ பன்னாட்டுக் கருத்தரங்கங்கள் - 11
- ❖ தேசியக் கருத்தரங்கங்கள் - 5
- ❖ கருத்தரங்கங்கள் - 10
- ❖ தமிழ் அரங்கங்கள் - 4
- ❖ கலந்துரையாடல்கள் - 4
- ❖ சிறப்புச் சொற்பொழிவுகள் - 8

நடத்தப்பட்டுள்ளன.

6.4. வெளியீடுகள்

6.4.1. அயலகத் தமிழர் களஞ்சியம்

ஆறு பேர் கொண்ட குழு மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், தாய்லாந்து சென்று, நான்கு நாடுகளுக்குரிய தமிழர் களஞ்சியம் தயாரித்து வெளியிட்டது.

மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் சார்பாக மலேசியா சுல்தான் இட்லீஷ் பல்கலைக்கழகத்தில் மலேசியாவில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் கற்பதில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் குறித்த கருத்தரங்கு 25.5.2015, 26.5.2015 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இந்நிகழ்வு நூலாக வெளியிடப்பட்டது.

மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் ஆசுதிரேலியாவில் உள்ள அடிலெய்ட் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து ஆசுதிரேலியாவில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் கற்பதில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் குறித்த கருத்தரங்கினை 30.5.2015, 31.5.2015 ஆகிய நாள்களில் நடத்தியது. இந்நிகழ்வு நூலாகவும் வெளியிடப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 31]

இது தவிர

- ❖ கட்டுரைத் தொகுப்புகள் - 15
- ❖ நூல்கள் - 11

வெளியிடப்பட்டுள்ளன.

6.5. மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள்

- ❖ உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை - மின்னிதழ்.
- ❖ தகவல் மையம்.
- ❖ தமிழ் - சீனம், தமிழ் - கொரியம் ஆகிய மொழிகளுக்கு இடையேயான வேர்ச்சொல் ஒற்றுமைகள் பற்றிய ஆய்வு நூல் வெளியிடல்.
- ❖ இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறையில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்களுக்கு 'உலகத் தமிழ்ச் சங்க விருது' ஆண்டுதோறும் வழங்குதல்.

6.6. உலகத் தமிழ்ச்சங்க விருது

- ❖ இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும், சித்திரை தமிழ்ப் புத்தாண்டில் `உலகத் தமிழ்ச்சங்க விருதுகள்' வழங்கப்படும் என 2015—2016 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

 விருது பெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாயும் தகுதியுரையும் வழங்கப்படும்.

[2016 ஆகஸ்ட் 31

இயல் – 7

ஆசியவியல் நிறுவனம்

7.1. நோக்கம்

ஆசியப் பண்பாட்டுப் பின்னணியில் தமிழர்களின் வரலாறு, பண்பாடு, மொழி, இலக்கியம் ஆகியவற்றை ஒப்பியல் நோக்கில் ஆய்ந்து காணும் நோக்குடன் 1982-ஆம் ஆண்டு ஜப்பானியக் கூட்டுறவோடு ஆசியவியல் நிறுவனம் தொடங்கப்பட்டது.

7.2. நல்கை

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்நிறுவனத்தின் பணிகளுக்குத் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக 1983 ஆம் ஆண்டு முதல் அரசு நல்கை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி தொடர்ந்து தமிழக அரசு இந்நிறுவனத்திற்கு ஆண்டு நல்கை வழங்கி வருகின்றது.

2016 ஆகஸ்ட் 31]

இயல் – 8

பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி, திருவனந்தபுரம்

8.1. நோக்கம்

திராவிட மக்களின் மொழி மற்றும் கலாச்சாரத்தினைக் குறித்து ஆய்வு செய்தல், திராவிட மக்களின் தொன்மங்களை ஆய்தல், திராவிட மொழியியல் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல், அத்துறையில் சிறப்பான கல்வியை அளித்தல் போன்ற நோக்கங்களைக் கருத்திற் கொண்டு பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி 1977-இல் தோற்றுவிக்கப்பட்டு இன்றளவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

8.2. கல்வி வசதிகள்

இங்கு நூலக வசதி, மொழித்தொழில்நுட்பம், பெங்காலி அருங்காட்சியகம், பெங்காலி நூலகம், செர்மன் குண்டர்ட் நினைவுப் பழங்குடி அருங்காட்சியகம் போன்ற கல்வி வசதிகளும், நரம்பியல் மொழியியல், புலம்பெயர் திராவிடர் குறித்த துறை, பேச்சுமொழியியல் மற்றும் உருவாக்க ஆய்வுத் துறை, பெங்காலி மொழியியல் துறை போன்ற கல்வித் துறைகளும் உள்ளன.

8.3. வெளியீடுகள்

இந்நிறுவனம் திராவிட மொழிகளின் கலைக்களஞ்சியம்-1,2,3, திராவிடப் பழங்குடி மொழிகளின் கலைக்களஞ்சியம்-1,2,3, திராவிட மொழிகளில் உருபுத் தொடரனியல், தொல்காப்பியப் பாடவேறுபாடு போன்ற உலக அறிஞர்களால் பாராட்டப்பெற்ற பல நூல்களை வெளியிட்டுள்ளது.

1. புறநானூறு-ஆங்கில மொழிபெயர்ப்பு
2. பதிற்றுப்பத்து-ஆங்கில மொழிபெயர்ப்பும் திறனாய்வும்
3. இலக்கியக் கொள்கை-மறுபதிப்பு
4. வடக்கன் பாட்டுகள்-தமிழ் மொழிபெயர்ப்பும் ஆய்வும்
5. விருத்த மஞ்சரி-தமிழ் மொழிபெயர்ப்பும் ஆய்வும்
6. கணினி மொழிபெயர்ப்பு நோக்கில் நவீனத் தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் பின்னுருபுகளின் ஒற்றுமைகள்-வேற்றுமைகள்

7. இடுக்கி மாவட்டத்தில் மறைந்துவரும் பழங்குடி மொழிகள்

8. தெக்கன் பாட்டுகள்-வரலாறு, பண்பாடு மற்றும் மொழியியல் ஆய்வு

ஆகிய நூற்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை தவிர குறுகிய காலத் தமிழ்ப்பயிற்சி வகுப்புகள், மூன்றுமாதக் காலத் தமிழ்ப்பயிற்சி வகுப்பு ஆகியவையும் நடத்தப்பட்டு வருகின்றன.

நிறைவுரை:

> ''மாறிவரும் உலகின் அதிநவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளின் தன்மைகள் மற்றும் அவற்றினால் நிகழ்கின்ற விளைவுகள் ஆகியவற்றைப்பற்றிய அறிவியல் நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும். தமிழ்மொழி, பழமையின் சிறப்பும், புதுமையின் ஆற்றலும் ஒருங்கே பெற்று விளங்கிட வழிவகை செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.''

எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயரிய சிந்தனைக்கேற்ப தமிழ் வளர்ச்சித் துறை தமிழுக்காகவும் தமிழறிஞர்களின் நலனுக்காகவும் என்றென்றும் செயலாற்றும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 31]

அன்னைத் தமிழ்நாடு போற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

கடந்த ஐந்தாண்டு (2011–2016) ஆட்சியில்

தமிழ் வளர்ச்சிக்காக ரூ.185.62 கோடி தமிழ்நாட்டு வரலாற்றில் புதிய சாதனை

- *சீனம்-அரபு மொழிகளில் திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் மொழிபெயர்ப்புக்கு ரூ. 1.34 கோடி.*
- *அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ. 1,000/- 1-12-2011 முதல் ரூ.2,000/- ஆக உயர்வு. கூடுதலாக மருத்துவப்படி ரூ.100.*
- *சொல்வங்கித் திட்டம்.*
- *பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிக்கான பரிசுகள் ஆண்டுக்கு ரூ.44.36 இலட்சம்.*
- *சிறந்த நூல் வெளியிட நிதியுதவி ரூ.50,000/-.*
- *நலிவுற்றிருந்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை மீட்டெடுக்க ரூ.80.74 கோடி.*
- *தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தமிழ்நாடு எனும் வடிவக் கட்டடம்.*
- *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.17.46 கோடி.*
- *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம், தொல்காப்பியர் ஆய்விருக்கை, திருக்குறள் ஓவியக்காட்சிக் கூடம், உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம், மொழியியல் ஆய்வுக்கூடம், சுவடிகள் பாதுகாப்பு மையம் மற்றும் புதிய நிருவாகக் கட்டடம்.*
- *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உயர்ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி.*
- *உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலக அரிய நூல்களின் 2.24 இலட்சம் பக்கங்கள் வலைத்தளத்தில் பதிவேற்றம்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

24.2.2015 அன்று ஒரே நாளில் 181 நூல்கள் வெளியீடு. ஐந்தாண்டுகளில் 400 நூல்கள் வெளியீடு.

❖ குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம், ஆசியவியல் நிறுவனம், பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளி, தமிழ் இணையக் கல்விக் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கு நல்கை.

❖ சித்திரைத் திங்கள் முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிப்பு.

❖ சித்திரைத் திங்களில் தமிழ் அமைப்புகளை - சங்கங்களை ஊக்கப்படுத்தி ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை கொண்ட 'தமிழ்த்தாய் விருது'.

❖ தமிழறிஞர்களுக்குப் புதியதாக — கபிலர், கம்பர், உ.வே.சா. ஜி.யு.போப், உமறுப் புலவர், இளங்கோவடிகள், சொல்லின் செல்வர் மற்றும் முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுகள் தங்கப்பதக்கத்துடன் ரூ.1 இலட்சம் என ஐந்தாண்டுகளில் மட்டும் 55 விருதுகள்.

❖ விருது பெற்ற தமிழறிஞர்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை.

❖ ஆண்டுதோறும் 32 பேருக்குத் 'தமிழ்ச் செம்மல்' விருது.

❖ சிறந்த மகளிர் இலக்கியம் படைக்கும் மகளிருக்கு ஆண்டுதோறும் 'அம்மா இலக்கிய விருது'.

❖ சிறந்த நூல் பரிசுக்கான வகைப்பாட்டில் மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் சேர்ப்பு.

❖ இளந்தமிழர் இலக்கியப் பட்டறைக்கு ரூ.70 இலட்சம்.

❖ மாவட்டந்தோறும் உயர்த்தப்பட்ட நிதியில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம்.

❖ தமிழ் வளர்ச்சித் துறையில் அரிய தமிழ் நூல்கள் மின்எண்மம்.

❖ தமிழ் வளர்ச்சித் துறைக்கெனத் தனி வலைத்தளம்.

❖ பிற நாட்டு அறிஞர்கள் பார்வையில் தமிழ் - நூல் வெளியீடு.

2016 ஆகஸ்ட் 31]

- ❖ அறநெறிக் கருவூலம் நூல் வெளியீடு.
- ❖ பொன்மொழிக் களஞ்சியம் நூல் வெளியீடு.
- ❖ சிறந்த நூல்களுக்குப் பரிசு ரூ.45.81 இலட்சம்.
- ❖ மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் புதுப் பொலிவுடன் தொடக்கம்.
- ❖ உலகத் தமிழ்ச்சங்கத்திற்கு ரூ.37.42 கோடியில் பெருந்திட்டக் கட்டட வளாகம்.
- ❖ உலகத் தமிழ்ச்சங்கம் சார்பாக ஆண்டுதோறும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டில் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்.
- ❖ எட்டு தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் பணியிடங்களை துணை இயக்குநர் பணியிடங்களாக மேம்படுத்தியது.
- ❖ உலகத் தாய்மொழி நாள் பிப்ரவரி 21 ஆம் நாள் கொண்டாடப்படுதல்.
- ❖ ஆல்சு சாலைக்குத் 'தமிழ்ச் சாலை' எனப் பெயர் சூட்டப்பட்டது.
- ❖ மதுரையில் சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம் அமைக்க ரூ.75 இலட்சம்.
- ❖ திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக்கு 3 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள்.
- ❖ தில்லித் தமிழ்ச் சங்கத்திற்குத் தோரண வாயில் அமைக்க ரூ.25 இலட்சம்.
- ❖ தமிழறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களுக்கு இருநூற்றாண்டு விழா. ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளன்று அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தல்.
- ❖ மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் சார்பில் அயல்நாடுகளில் தமிழ் கற்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் கருத்தரங்குகள்.

[2016 ஆகஸ்ட் 31

- *சென்னையில் உலகத் தமிழ்ச்சங்கம் சார்பில் பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு.*
- *1,470 நாட்டுடைமை செய்யப்பட்ட நூல்கள் தமிழ் வளர்ச்சித் துறை வலைத்தளத்தில் பதிவேற்றம்.*
- *பிற மொழிகளில் உள்ள சிறந்த படைப்புகளைத் தமிழாக்கம் செய்யும் 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது வழங்கப்படுதல்.*
- *பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125 ஆவது பிறந்த நாளையொட்டி 125 கவிஞர்களைக் கொண்டு ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் இருநாள் கவியரங்கம்.*
- *பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை இனி ஆண்டுதோறும் 'தமிழ்க்கவிஞர் நாள்' என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடுதல்.*
- *திருக்குறளைக் கொரிய மொழியில் மொழிபெயர்த்தல்.*
- *அறநெறிக் கருவூலமான ஆத்திசூடியைச் சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்த்தமை.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 31]

இணைப்பு – I

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் – 2016-2017

கணக்குத் தலைப்பு	(நிகர செலவு – ரூபாய் ஆயிரத்தில்)			
	2015–16 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	*2015–16 திருத்த மதிப்பீடு*	*2016–17 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு*	*2016–17 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு*
2059 பொதுப் பணிகள்	8,00	7,00	7,00	7,00
2075 பல்வகைப் பொதுவான பணிகள்	–	–	5,75,01	5,75,01
2202 பொதுக் கல்வி	41,13,49	60,30,12	20,80,52	20,97,72
2251 தலைமைச் செயலகம் சமூகப் பணிகள்	5,55,19	5,55,14	6,11,40	6,13,89
7610 அரசுப் பணியாளர்களுக்குக் கடன்கள்	1	48,40	1	1
மொத்தம்	46,76,69	66,40,66	32,73,94	32,93,63

இணைப்பு II

(134. ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 47 – இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017

முகவுரை

தமிழ் கூறு நல்லுலகத்தின் பெருமை, எண்ணற்ற திருக்கோயில்கள், வான்முட்டும் கோபுரங்கள், கலைகள், அரிய சிற்பங்கள் எனத் திருக்கோயில்களைச் சார்ந்தே அமையப் பெற்றுள்ளன.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு."

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப மானுட சமூகத்தைப் பண்பட்ட சமுதாயமாக மாற்றுவது, அரசின் இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும். ஆகவே தமிழகத் திருக்கோயில்களை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி, மனிதவள மேம்பாட்டு மையங்களாகவும் கருத வேண்டியுள்ளது. அந்த வகையில் வாழ்வியலின் கூறுகளான கலைகளின் கருவூலங்களாகவும், மனதைப் பண்படுத்தும் மையங்களாகவும் திருக்கோயில்கள் அமையப் பெற்றுள்ளன. எனவே, இத்திருக்கோயில்கள் நன்கு பராமரிக்கப்படுவது, அவற்றின் சொத்துகள் நன்முறையில் பாதுகாக்கப்படுவது, அதிலிருந்து வருவாய் ஈட்டி திருக்கோயில் பூசைகள் முறையாக நடத்தப்படுவது ஆகியவற்றை உறுதி செய்வது அரசின் கடமைகளில் முக்கியமானதாகும்.

"சேயினும் நல்லன் அணியன் நல்அன்பர்க்குத்
தாயினும் நல்லன்"

2016 ஆகஸ்ட் 31]

எனும் திருமந்திரத்திற்கு இலக்கணமாகத் தாயினும் சாலப் பரிந்து, “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்ற கொள்கை முழக்கத்தோடு நல்லாட்சி புரிந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாட்சியில் பல முன்னேற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

[*2016 ஆகஸ்ட் 31*

I – சட்டமும், நிருவாக அமைப்பும்

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம்

2. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் (சட்டம் 22/1959), இந்து சமய திருக்கோயில்கள், திருமடங்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிருவாக மேலாண்மையை மிகுந்த கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இந்து சமய அறநிலைக் கொடை நிறுவனங்களை நிர்வகிப்பது குறித்தும் முந்தைய சட்டங்களில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு தொகுத்து அரசால் இயற்றப்பட்ட சட்டமாகும்.

3. முதலில் மதராஸ் நிலை கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் எண் VII/1817 உருவாக்கப்பட்டது. இச்சட்டம் 1863-ல் திரும்பப் பெறப்பட்டது (சட்டம் XX/1863). பின்னர் மதராஸ் இந்து சமய அறக்கொடை சட்டம், 1926 (சட்டம் II/1927) இச்சட்டத்திற்கு மாற்றாக நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டது. 1951-ல் சட்டம் XIX-ன்படி வாரியம் ரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகளின் நிருவாகம், ஆணையரைத் தலைவராகவும் பல நிலைகளில் அலுவலர்களுக்கு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 1951 சட்டம் நீக்கறவு செய்யப்பட்டு அதற்கு பதிலாக தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் 1959 (சட்டம் 22/1959) இயற்றப்பட்டு அதில் ஆணையர், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் நிலைகளில் அலுவலர்கள் கொண்ட நிருவாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

4. இந்து சமய நிறுவனங்களை நிருவகித்திட பல்வேறு வழிவகைகளையும் அவற்றைச் செயல்படுத்திட தேவையான அதிகாரங்களையும் கடமைகளையும் இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு

2016 ஆகஸ்ட் 31]

இச்சட்டம் வரையறை செய்துள்ளது. மேலும் இச்சட்டம் இந்து சமய அறநிறுவனங்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளை கொண்டுள்ளது. இச்சட்டத்தை சமண சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கு விரிவுபடுத்தவும் அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

இந்து சமய நிறுவனங்கள்

5. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் 38,630 இந்து சமய மற்றும் சமண சமய நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமா று:

1.	திருக்கோயில்கள்	36,590
2.	திருமடங்கள்	56
3.	திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள்	57
4.	குறிப்பிட்ட அறக்கட்டளைகள்	1,721
5.	அறக்கட்டளைகள்	189
6.	சமணத் திருக்கோயில்கள்	17
	கூடுதல்	38,630

இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு

6. இந்து சமய நிறுவனங்கள் ஆண்டு வருமான அடிப்படையில் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	சமய நிறுவனங்கள் வகைப்பாடு	நிறுவனத்தின் ஆண்டு வருமானம்	நிறுவனங்கள் எண்ணிக்கை
1.	பட்டியலைச் சாராத நிறுவனங்கள் சட்டப்பிரிவு–49(1)	ரூ.10,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	34,077
2.	பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் சட்டப்பிரிவு–46(i)	ரூ.10,000/–லிருந்து ரூ.2,00,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	3,571
3.	சட்டப்பிரிவு–46(ii)	ரூ.2,00,000/–லிருந்து ரூ.10,00,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	662
4.	சட்டப்பிரிவு–46(iii)	ரூ.10,00,000/–மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ளவை	320
		கூடுதல்	38,630

நிருவாக அமைப்பு

7. இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறையாகப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், மேற்பார்வையிடவும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின்கீழ் இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக தலைமைப் பொறுப்பில் ஆணையர் செயல்படுகிறார்.

8. இந்து சமய அறநிலையத் துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் மேலாண்மை, திருப்பணி, வழக்குகள், தணிக்கை போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் விவரம் பின்வருமாறு:

2016 ஆகஸ்ட் 31]

வ.எண்	பதவி	பணியிடங்கள்
1.	கூடுதல் ஆணையர் (பொது)	1
2.	கூடுதல் ஆணையர் (விசாரணை)	1
3.	கூடுதல் ஆணையர் (திருப்பணி)	1
4.	இணை ஆணையர் (தலைமையிடம்)	1
5.	இணை ஆணையர் (சட்டச்சேர்மம்)	1
6.	இணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்)	1
7.	இணை ஆணையர் (சரிபார்ப்பு-தலைமையிடம்)	1
8.	உதவி ஆணையர் (சட்டச்சேர்மம்)	1
9.	உதவி ஆணையர் (கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம்)	1
10.	ஆசிரியர் (திருக்கோயில் திங்களிதழ்)	1

இத்துறை தலைமையிடத்தில் பணிபுரியும் மாற்றுத் துறை அலுவலர்கள் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பதவி	பணியிடங்கள்	துறை
1.	தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை)	2	வருவாய்த்துறை
2.	கண்காணிப்புப் பொறியாளர்	1	பொதுப் பணித்துறை
3.	செயற்பொறியாளர்	1	பொதுப் பணித்துறை

வ எண்	பதவி	பணியிடங்கள்	துறை
4.	உதவிக் கோட்டப்பொறியாளர்	1	பொதுப்பணித்துறை
5.	உதவிப்பொறியாளர் / தொழில்நுட்ப உதவியாளர்	1	பொதுப்பணித்துறை
6.	உதவிப்பொறியாளர் (சிவில்)	1	பொதுப்பணித்துறை
7.	உதவிப் பொறியாளர் (மின்)	1	மின் துறை
8.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	1	நெடுஞ்சாலைத்துறை
9.	வரைதொழில் அலுவலர்	2	பொதுப்பணித்துறை
10	இளநிலை வரைதொழில் அலுவலர்	2	பொதுப்பணித்துறை
11.	முதுநிலை கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத்துறை
12.	உதவி கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத்துறை
13.	தலைமைத் தணிக்கை அலுவலர் (அரசு துணைச் செயலாளர் நிலை)	1	நிதித்துறை
14.	துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்	1	செய்தி – மக்கள் தொடர்புத் துறை

மண்டல மற்றும் மாவட்ட நிருவாகம்

9. மாநில அளவில் 11 மண்டலங்களையும் மாவட்ட அளவில் 28 கோட்டங்களையும் உள்ளடக்கி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் இணை ஆணையரும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு இந்து சமய நிறுவனங்களின்

2016 ஆகஸ்ட் 31]

நிருவாகம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
1.	இணை ஆணையர், சென்னை	1. உதவி ஆணையர், சென்னை	சென்னை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் மாதவரம், அம்பத்தூர், திருவொற்றியூர் வட்டங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் வட்டங்கள்
2.	இணை ஆணையர், வேலூர்	2. உதவி ஆணையர், திருவள்ளூர்	திருவள்ளூர் மாவட்டம் (மாதவரம், அம்பத்தூர், திருவொற்றியூர் வட்டங்கள் நீங்கலாக)
		3. உதவி ஆணையர், காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் மாவட்டம் (தாம்பரம் , ஆலந்தூர், சோழிங்கநல்லூர் வட்டங்கள் நீங்கலாக)
		4. உதவி ஆணையர், வேலூர்	வேலூர் மாவட்டம்
3.	இணை ஆணையர், சேலம்	5. உதவி ஆணையர் தருமபுரி	தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்
		6. உதவி ஆணையர், சேலம்	சேலம் மாவட்டம்
		7. உதவி ஆணையர், நாமக்கல்	நாமக்கல் மாவட்டம்
4.	இணை ஆணையர், கோயம்புத்தூர்	8. உதவி ஆணையர், கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள்

		9. உதவி ஆணையர், ஈரோடு	ஈரோடு மாவட்டம்
		10. உதவி ஆணையர், திருப்பூர்	திருப்பூர் மாவட்டம்
5.	இணை ஆணையர், தஞ்சாவூர்	11. உதவி ஆணையர், தஞ்சாவூர்	தஞ்சாவூர் மாவட்டம் (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் நீங்கலாக)
		12. உதவி ஆணையர், நாகப்பட்டினம்	நாகப்பட்டினம் மாவட்டம் (சீர்காழி, மயிலாடுதுறை, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் நீங்கலாக)
		13. உதவி ஆணையர், திருவாரூர்	திருவாரூர் மாவட்டம்
6.	இணை ஆணையர், மயிலாடுதுறை	14. உதவி ஆணையர், கும்பகோணம்	தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள்
7.	இணை ஆணையர், விழுப்புரம்	15. உதவி ஆணையர், கடலூர்	கடலூர் மாவட்டம்
		16. உதவி ஆணையர், விழுப்புரம்	விழுப்புரம் மாவட்டம்

2016 ஆகஸ்ட் 31]

		17. உதவி ஆணையர், திருவண்ணாமலை	திருவண்ணாமலை மாவட்டம்
8.	இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி	18. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி மாவட்டம்
		19. உதவி ஆணையர், அரியலூர்	பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள்
		20. உதவி ஆணையர், புதுக்கோட்டை	புதுக்கோட்டை மாவட்டம்
		21. உதவி ஆணையர், கரூர்	கரூர் மாவட்டம்
9.	இணை ஆணையர், மதுரை	22. உதவி ஆணையர், மதுரை	மதுரை மாவட்டம்
		23. உதவி ஆணையர், திண்டுக்கல்	திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்
10.	இணை ஆணையர், சிவகங்கை	24. உதவி ஆணையர், விருதுநகர்	விருதுநகர் மாவட்டம்
		25. உதவி ஆணையர், பரமக்குடி	சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்
11.	இணை ஆணையர், திருநெல்வேலி	26. உதவி ஆணையர், திருநெல்வேலி	திருநெல்வேலி மாவட்டம்
		27. உதவி ஆணையர், தூத்துக்குடி	தூத்துக்குடி மாவட்டம்
		28. உதவி ஆணையர், நாகர்கோவில்	கன்னியாகுமரி மாவட்டம்

[2016 ஆகஸ்ட் 31

ஆய்வாளர்கள்

10. இந்து சமய அறநிலையத் துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள், கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவியாக, களப்பணியில் வருவாய்த் துறை வட்ட அடிப்படையில் 224 ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

நேர்முக உதவியாளர்கள்

11. பழனி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், திருத்தணி ஆகிய இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் உதவி ஆணையர் நிலையில் நேர்முக உதவியாளர் பணியிடங்கள் உள்ளன.

துணை ஆணையர், பழனி

12. பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவியாக துணை ஆணையர் பணியிடம் ஒன்று உள்ளது.

சரிபார்ப்பு அலுவலர்கள்

13. திருக்கோயில்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக தலைமையிடத்தில் இணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலரும், ஏழு இணை ஆணையர் மண்டலங்களுக்கு துணை ஆணையர் நிலையில் ஆறு சரிபார்ப்பு அலுவலர்களும், நான்கு இணை ஆணையர் மண்டலங்களுக்கு உதவி ஆணையர் நிலையில் நான்கு சரிபார்ப்பு அலுவலர்களும் பணிபுரிகின்றனர். தலைமையிடத்திலும், மண்டலங்களிலும் உள்ள ஒவ்வொரு சரிபார்ப்பு அலுவலருக்கும் உதவியாக ஒரு நகை மதிப்பீட்டு வல்லுநர் வீதம் 11 பணியிடங்களும் ஒரு இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் வீதம் 11 பணியிடங்களும் உள்ளன. தற்போது நகை மதிப்பீட்டு வல்லுநர் பதவிக்கும், இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி பெண்களையும் நியமனம் செய்யும் வகையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 31]

முதுநிலை கணக்கு அலுவலர்கள்

14. இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் உள்ள எட்டு திருக்கோயில்களில் இவர்களுக்கு உதவியாக எட்டு மண்டலத் தணிக்கை அலுவலர்கள் முதுநிலை கணக்கு அலுவலர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பொறியாளர்கள்

15. திருக்கோயில்களின் திருப்பணிகளான, புதுப்பித்தல் / பழமை மாறாமல் புனரமைத்தல், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளல், மதிப்பீடு தயாரித்தல், கூர்ந்தாய்வு செய்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள பொறியாளர்கள் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் தலைமையிடத்தில் பணிபுரிகின்றனர்.

16. ஒவ்வொரு இணை ஆணையர் அலுவலகத்திலும் (விழுப்புரம் மண்டலம் தவிர) ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும், ஒரு இளநிலை வரைதொழில் அலுவலரும் பணியாற்றுகின்றனர். 25 உதவி ஆணையர் அலுவலகங்களில் 25 உதவிப் பொறியாளர்கள் பணிபுரிகின்றனர். திருச்சி, சேலம், மதுரை ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் ஒரு செயற்பொறியாளர் வீதம் மூன்று செயற்பொறியாளர்கள் மற்றும் ஒரு மின்உதவிப் பொறியாளர் வீதம் மூன்று மின்உதவிப் பொறியாளர்கள் உள்ளனர்.

17. பழனி, சமயபுரம், மதுரை, திருத்தணி, பண்ணாரி, மருதமலை, ஆனைமலை, அழகர்கோவில், திருவேற்காடு மற்றும் சுவாமிமலை ஆகிய திருக்கோயில்களை பாதுகாத்து புதுப்பிக்கவும் புதிய பணிகளை மேற்கொள்ளவும் திருக்கோயில்களைச் சார்ந்த பொறியாளர்கள் பணிபுரிகின்றனர்.

மேலும் ஸ்ரீரங்கம், பழனி, திருச்செந்தூர், திருத்தணி, திருவண்ணாமலை, சுசீந்திரம் மற்றும் திருவாரூர் ஆகிய திருக்கோயில்களில் பொதுப்பணித்துறை மூலம் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் அயற்பணியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

18. திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் ஆகிய

[2016 ஆகஸ்ட் 31

திருக்கோயில்களில் ஒரு முதுநிலை வரைதொழில் அலுவலர் பணியிடம் வீதம் நான்கு பணியிடங்களும், சோளிங்கர் அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயில், திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவசுவாமி திருக்கோயில், அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், நாமக்கல் அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நான்கு வரைதொழில் அலுவலர்கள் பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டு சென்னை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு இணை ஆணையர் மண்டலங்களில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிகின்றனர்.

துறை ஸ்தபதி

19. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் (பாதுகாத்து புதுப்பித்தல், புனரமைத்தல்), சிற்ப சாத்திரம், பழங்கால திருக்கோயில் கட்டுமான முறைகள், வடிவமைப்புகள், வர்ணலேபனங்கள், அளவுகள், கட்டுமானப்பொருட்கள் அதன் தரம் குறித்து தகுந்த ஆலோசனைகள் வழங்கவும் சிற்ப சாத்திர அடிப்படையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், வரைபடங்களை சிற்ப சாத்திர அடிப்படையில் சரிபார்த்து வழங்கவும் கல்வித்தகுதி மற்றும் அனுபவத்தகுதி வாய்ந்த ஸ்தபதி ஒருவர் இந்து சமய அறநிலையத்துறையில் கண்காணிப்பு பொறியாளர் நிலையில் துறை ஸ்தபதியாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார். இவர் மேற்கண்ட சிற்பசாத்திரம் தொடர்பான ஆலோசனைகளை இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு வழங்கி வருகிறார்.

மண்டல ஸ்தபதிகள்

20. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளையும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகளால் செய்யப்படும் மதிப்பீடுகளையும் மேலாய்வு செய்யவும் வரைபடங்களைச் சரிபார்க்கவும் மாநில அளவில் ஐந்து மண்டல ஸ்தபதிகள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்தனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் திருக்கோயில்களின் திருப்பணிகளில் ஏற்பட்ட தொய்வினைக் கண்ணுற்று திருப்பணிகளை விரைந்து முடித்திட ஏதுவாக 2012-2013 ஆம் நிதியாண்டில் ஆறு மண்டல ஸ்தபதிகள் பணியிடம் புதியதாக ஏற்படுத்த ஆணையிட்டு பணி நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 31]
மேற்கண்ட 11 மண்டல ஸ்தபதிகளுக்கும் மாத தொகுப்பூதியம் ரூ.4000/-லிருந்து ரூ.15,000/- ஆக உயர்வு செய்து திருக்கோயில்களின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

இதன் வாயிலாக ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திற்கும் ஒரு ஸ்தபதி என்ற நிலை ஏற்பட்டு திருக்கோயில் திருப்பணிகள் பழமை மாறாது விரைவாக நடந்தேறி வருகின்றன.

செயல் அலுவலர்கள்

21. திருக்கோயில்களின் வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துகள், அவற்றின் முக்கியத்துவம், பணிச்சுமை மற்றும் இதர பணிகளைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மையுடன் நிர்வகிக்க செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ.எண்	செயல் அலுவலர் நிலை	பணியிடங்கள்
1.	இணை ஆணையர்	11
2.	துணை ஆணையர்	9
3.	உதவி ஆணையர்	27
4.	செயல் அலுவலர் நிலை 1	66
5.	செயல் அலுவலர் நிலை 2	111
6.	செயல் அலுவலர் நிலை 3	250
7.	செயல் அலுவலர் நிலை 4	154
	கூடுதல்	**628**

அலுவலர்களுக்கு மடிக்கணினிகள்

22. கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், அனைத்து நிலை செயல் அலுவலர்கள், களப்பணியாற்றும் சரக ஆய்வர்கள் மற்றும் தணிக்கைப் பிரிவில் பணியாற்றும் பல்வேறு நிலை அலுவலர்கள்

[2016 ஆகஸ்ட் 31

ஆக மொத்தம் 767 அலுவலர்களுக்கு தங்கள் பணிகளை திறம்பட செயல்படுத்துவதற்காக மடிக்கணிணிகள் துறைமூலம் வழங்கப்பட்டுள்ளது.

திருமடங்களின் நிருவாகம்

23. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் 56 திருமடங்கள் உள்ளன. இத்திருமடங்களின் நிருவாகத்தைக் கண்காணிக்க ஒரு மண்டலத் தணிக்கை அலுவலர், ஒரு கண்காணிப்பாளர், இரண்டு ஆய்வாளர்கள், இரண்டு தணிக்கை ஆய்வாளர்கள், இரண்டு உதவியாளர்கள் ஆகியோர் ஆணையருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் பணிபுரிகின்றனர்.

சமய நிறுவனங்களின் தணிக்கைகள்

24. இந்து சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய தலைமைத் தணிக்கை அலுவலர் ஒருவர் பணிபுரிகின்றார். இவருக்கு உதவியாக 2 துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்களும் 18 மண்டலத் தணிக்கை அலுவலர்களும் 28 உதவித் தணிக்கை அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

உயர்நிலை ஆலோசனைக் குழு

25. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்க உயர்நிலை ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த குழு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது தலைமையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுச் செயலாளர் அலுவல்சார் உறுப்பினராகவும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவல்சார் உறுப்பினர்-செயலராகவும் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களையும் உள்ளடக்கியது.

மாவட்டக் குழு நியமனம்

26. ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அறநிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க மூன்றுக்கு குறையாத ஐந்துக்கு

2016 ஆகஸ்ட் 31]

மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட குழு அரசால் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. இக்குழு பத்து இலட்சம் ரூபாயும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களைத் தவிர, பிற அறநிறுவனங்களுக்கு அறங்காவலர் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரித்து அளிக்க வேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

அறங்காவலர்கள் நியமனம்

27. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை மேலாண்மை செய்வதற்காக பரம்பரை நிருவாகத்தில் இல்லாத ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் மூன்று அறங்காவலர்களுக்கு குறையாமலும் ஐந்து அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும். இக்குழுவில் பெண் உறுப்பினர் ஒருவரும் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இடம் பெறவேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும்.

அறங்காவலர் நியமன தகுதிகள்

28. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 25A-ன்கீழ் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் பெறுவதற்கு கீழ்க்காணும் தகுதி வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அ. கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்.

ஆ. சமய நிறுவனம் உள்ள பகுதியில் நன்னடத்தை, நற்பெயர் மற்றும் மரியாதைக்குரியவராக இருத்தல் வேண்டும்.

இ. திருக்கோயில் அறங்காவலர் பணியினைச் செய்வதற்கு தேவையான நேரத்தையும் மற்றும் உரித்தத்தையும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

ஈ. மேலும், இதுபோன்ற குறிப்பிட்ட பிற சிறப்புத் தகுதிகளைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.

அறங்காவலர்களை நியமனம் செய்ய அதிகார வரம்பு:

அரசு

29. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு *46*(iii)-ன்கீழ் உள்ள பத்து இலட்சம் ரூபாய் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு ஐந்து பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அரசால் நேரடியாக நியமிக்கப்படுவர்.

ஆணையர்

30. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு *46*(ii)-ன்கீழ் உள்ள இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து பத்து இலட்சம் ரூபாய்க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் ஆணையரால் நியமிக்கப்படுவர்.

இணை ஆணையர்

31. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு *46*(i)-ன்கீழ் உள்ள பத்தாயிரம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அந்தந்த மண்டல இணை ஆணையரால் நியமிக்கப்படுவர்.

உதவி ஆணையர்

32. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு *49(1)*-ன்கீழ் உள்ள பத்தாயிரம் ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அந்தந்த மாவட்ட உதவி ஆணையரால் நியமிக்கப்படுவர்.

33. ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரால் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமிக்கப்படும் போது இந்து சமய நிறுவனங்களில் கூடுதலாக இரண்டு பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் தேவையெனில் அரசு நியமனம் (Nomination) செய்யலாம்.

2016 ஆகஸ்ட் 31]

தக்கார் நியமனம்

34. அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அடுத்த அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும் வரை, திருக்கோயிலின் அறங்காவலருக்குரிய கடமைகளை செய்திட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

II - நில நிருவாகம்

நிலங்கள் விவரம்

35. மொத்தம், 4,78,282.76 ஏக்கர் பரப்புடைய நிலங்கள் கீழ்க்கண்ட விவரப்படி இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளன.

நிலத்தின் வகைப்பாடு	திருக்கோயில் நிலங்கள்	திருமடம் நிலங்கள்	மொத்த நிலங்கள்
	(ஏக்கர் இலட்சத்தில்)		
நன்செய்	1.83	0.21	2.04
புன்செய்	2.18	0.35	2.53
மானாவாரி	0.21	இல்லை	0.21
கூடுதல்	**4.22**	**0.56**	**4.78**

36. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான 22,600 கட்டடங்களும் 33,665 மனைகளும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. விவசாய நிலங்களை 1,23,729 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். மேற்குறிப்பிட்ட அசையாச் சொத்துகளிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.697 கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது. இதில் 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.275 கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது.

நியாய வாடகை நிர்ணயம்

37. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை

நிர்ணயம் செய்வதற்கு சட்டப்பிரிவு 34A-ன்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி மண்டல இணை ஆணையர், திருக்கோயில் செயல் அலுவலர் அல்லது அறங்காவலர் அல்லது அறங்காவலர் குழுத் தலைவர், பதிவுத் துறையின் மாவட்டப் பதிவாளர் கொண்ட நியாய வாடகை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய வாடகை நிர்ணயக் குழுவின் மூலமாக வணிகம், குடியிருப்பு போன்ற பயன்பாடுகள் உள்ள மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு உரிய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

வருவாய் நீதிமன்றங்கள்

38. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களுக்கு வரவேண்டிய குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யவும், விவசாய நிலங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கவும், குத்தகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தமிழ்நாடு பொது பொறுப்புரிமை அமைப்பு (விவசாய நிலங்கள் ஒழுங்குபடுத்தும் மற்றும் மேலாண்மை) சட்டம், 1961 [Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961]-ன்கீழ் இந்து சமய நிறுவனங்களால் தனித் துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவை தீர்வு செய்யப்படுகின்றன. இவ்வாறான வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட விவரப்படி செயல்படுகின்றன.

வருவாய் நீதிமன்றங்கள்	முகாம் வருவாய் நீதிமன்றங்கள்
1. தஞ்சாவூர்	1. கும்பகோணம்
2. திருச்சிராப்பள்ளி	2. சேலம்
3. மயிலாடுதுறை	3. தென்காசி
4. திருவாரூர்	
5. கடலூர்	
6. மதுரை	
7. லால்குடி	
8. மன்னார்குடி	
9. நாகப்பட்டினம்	
10. திருநெல்வேலி	

2016 ஆகஸ்ட் 31]

39. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி மேற்குறிப்பிட்ட வருவாய் நீதிமன்றங்களில் 2012-2013 ஆம் ஆண்டில் கூடுதலாக லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் வாயிலாக 2015-2016 ஆம் நிதி ஆண்டில் மட்டும் வருவாய் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 15877 வழக்குகளில் 6539 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு ரூ.810.34 இலட்சம் குத்தகை நிலுவைத் தொகை வசூலிக்க உத்தரவு பெறப்பட்டு ரூ.246.37 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ரூ.595.73 இலட்சம் குத்தகை நிலுவை வசூலிக்கப்பட்டுள்ளது. குத்தகை நிலுவையை முழுமையாக வசூலித்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலங்களை மீட்டல்

40. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டச் (Updating Registry Scheme) *செயலாக்கத்தின்போது தனிப்பட்ட நபர்களின் பெயரில் தவறாகப் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையை மாற்றி மீண்டும் அந்தந்த திருக்கோயில்களின் பெயரில் பட்டா பெறுவதற்காக மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இரு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.*

41. கடந்த ஐந்து ஆண்டுகளில் தனியார் பெயரில் தவறாகப் பட்டா மாற்றம் செய்யப்பட்ட 719 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 4439.43 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களை கண்டறிந்து சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டில் மட்டும் 170 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1034.21 ஏக்கர் நிலங்கள் மீண்டும் திருக்கோயில்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

42. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் கடந்த ஐந்து ஆண்டுகளில் 138 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 582.93 ஏக்கர் பரப்பளவை

உள்ளடக்கிய நிலங்களின் பதிவுகள் கணினிச் சிட்டாவில் தவறாக தனியார் பெயரில் இருந்ததை திருக்கோயில் பெயரில் பதிவு மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2015-2016 ஆம் ஆண்டில் மட்டும் 20 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 19.02 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலங்கள் தனியார் பெயரில் இருந்து திருக்கோயில் பெயரில் மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

43. மேலே குறிப்பிட்டவாறு திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டவற்றையும், கணினி சிட்டாவில் தனி நபர் பெயரில் பதிவு செய்யப்பட்டவற்றையும், மாநிலம் முழுவதும் கண்டறிந்து இந்து சமய அறநிறுவனங்களின் பெயருக்கு மாற்றி, அசையாச் சொத்துகளைப் பாதுகாக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் நில அளவையர் நியமனம்

44. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டிருந்ததை கண்டறிந்து மீண்டும் திருக்கோயில் பெயரில் மாற்றி ஆணை பிறப்பிக்க ஏதுவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள தொகுப்பூதிய அடிப்படையில் 9 ஓய்வு பெற்ற துணை ஆட்சியர்கள், 19 ஓய்வு பெற்ற வட்டாட்சியர்கள், 10 ஓய்வு பெற்ற நில அளவையர் ஆகியோர் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

ஆக்கிரமிப்பு அகற்றுதல்

45. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த 1977.37 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களும், 316.0402 கிரவுண்டு பரப்பளவுள்ள மனைகளும், 155.0498 கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்களும் திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளன. இவற்றின் சந்தை மதிப்பு சுமார் ரூ.2420.12 கோடியாகும். இவற்றில் 2015-2016 ஆம் ஆண்டில் மட்டும் 90.58 ஏக்கர் விளைநிலங்கள் 11.2207 கிரவுண்டு மனை மற்றும் 15.0936 கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்கள் சுவாதீனம் பெறப்பட்டன. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.82.57 கோடி ஆகும்.

2016 ஆகஸ்ட் 31]

கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்

46. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான காலிமனைகளை குடியிருப்புக்காக கூட்டாக ஆக்கிரமித்து 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

i. *30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் நிலம் பயன்படுத்தி இருக்க வேண்டும்.*

ii. *அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

iii. *வாடகை நிர்ணயம் 1.7.1998 ஆம் நாள் முதல் செயல்படுத்த வேண்டும்.*

iv. *வாடகை நிலுவைத் தொகை 12 மாதங்களில் சம தவணைகளில் செலுத்திட வேண்டும்.*

v. *பத்து மாத வாடகை நன்கொடையாக வழங்கிட வேண்டும்.*

47. கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு இடங்களில் 298.64 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்த 6066 ஆக்கிரமிப்பாளர்கள் வாடகைதாரர்களாக வரன்முறை செய்யப்பட்டனர். அவர்களது குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, மின் இணைப்பு வசதி போன்றவற்றிற்கு தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டன.

III - சிறப்புத் திட்டங்கள்

அன்னதானத் திட்டம்

48. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது உன்னதத் திட்டமான "அன்னதானத் திட்டம்"

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்ற மணிமேகலைக் காப்பிய வரிகளுக்கு ஏற்ப 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

49. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது முந்தைய ஆட்சிக் காலத்தில் அருள் வேண்டி வரும் இறையன்பர்களுக்கு இறையருளோடு அன்னமும் வழங்கும் உன்னதத் திட்டம் படிப்படியாக 360 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 2006-2011 ஆம் ஆண்டுகளில் இரண்டு திருக்கோயில்களுக்கு மட்டுமே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

50. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 2011-2012-ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும், 2012-2013 ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கும், 2013-2014 ஆம் ஆண்டில் 100 திருக்கோயில்களுக்கும், 2014-2015 ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும் பக்தர்களின் வருகையையும் தேவையையும் கருத்திற்கொண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்மூலம் 722 திருக்கோயில்களில் நாளொன்றுக்கு 56310 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.10.89 இலட்சம் செலவிடப்படுகிறது.

நாள் முழுவதும் அன்னதானம்

51. கடந்த 13.09.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்கரங்களால் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அன்றே பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 7765 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.1.72 இலட்சம் செலவிடப்படுகின்றது. பக்தர்கள் காலை எட்டு மணி முதல் இரவு பத்து மணி வரை எப்பொழுது வேண்டுமானாலும் உணவு

2016 ஆகஸ்ட் 31]

அருந்தலாம். இத்திட்டம் பக்தர்களின் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

52. அன்னதான திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு ரூ.12.61 இலட்சம் செலவில் 724 திருக்கோயில்களில் 64075 பக்தர்கள் பயன் பெறுகின்றனர். இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மேலும் 30 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது.

ஆன்மீக மற்றும் ஒழுக்கநெறி வகுப்பு

53. பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நற்பண்புகள், நீதிநெறி கருத்துக்களைக் கதைகள் வாயிலாகக் குழந்தைகளின் மனதில் ஆழப்பதித்திட, சனிக்கிழமைதோறும் ஆன்மீக மற்றும் நீதிநெறி வகுப்புகளைத் தெரிவுசெய்யப்பட்ட திருக்கோயில்களில் நடத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியருக்கு இனிப்பு, கார வகைகள் வழங்கப்பட்டு வருவதோடு சிறந்த மாணவ மாணவியருக்குப் பரிசுகளும் அளிக்கப்படுகின்றன.

ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகளில் 2015-2016 ஆம் ஆண்டு 485 திருக்கோயில்களில் நடத்தப்பட்டதில் 32396 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

54. ஆண்டுதோறும் முக்கிய திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத் தாழ்வின்றி பங்கு பெறும் வகையில், சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடத்தப்படுகின்றன. சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் 2015-2016 ஆம் ஆண்டு 767 திருக்கோயில்களில் சிறப்புடன் நடத்தப்பட்டன.

யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம்

55. "மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான்'' என்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது உயரிய

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 31

எண்ணத்தின்படி யானைகளின் உடல் நலமும் மன நலமும் பேண அவற்றின் உடல் நலனுக்கேற்ற குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் "யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்" நடத்தப்பட்டு வருகிறது. 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் திருக்கோயில்கள் மற்றும் தனியாரால் பேணப்பட்ட யானைகளுக்கு குளிர்ந்த இயற்கை சூழ்நிலையில் முதுமலை தெப்பக்காடு பகுதியில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை கைவிடப்பட்ட இம்முகாம் 2011-2012 ஆம் நிதியாண்டில் மீண்டும் 14.12.2011 அன்று முதல் 48 நாட்கள் முதுமலை தெப்பக்காடு பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

2012-2013 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகில் பவானி ஆற்றங்கரையில் இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சேர்ந்த 34 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத் திருக்கோயிலைச் சேர்ந்த ஒரு யானையும், பங்கேற்று பயனடைந்தன.

2013-2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 31 யானைகளும், வனத் துறையை சேர்ந்த 18 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும், நாகூர் தர்காவிற்கு சொந்தமான 1 யானையும் ஆக மொத்தம் 52 யானைகள் பங்கேற்று பயனடைந்தன.

2014-2015 ஆம் ஆண்டில் நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 28 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்தன.

2015-2016 ஆம் ஆண்டில் நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 29 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்தன.

2016 ஆகஸ்ட் 31]

இம்முகாமில் பங்கேற்க இயலாத திருக்கோயில் மற்றும் திருமடங்களைச் சேர்ந்த யானைகளுக்கு முகாமில் வழங்கப்பட்டது போலவே ஊட்டச் சத்துணவுகளும், மருந்துகளும் வழங்கி அவற்றின் மன நலமும் உடல் நலமும் பேணப்பட்டன. இம்முகாமில் யானைகளுக்கு மட்டுமின்றி யானைப்பாகர்களுக்கும் அவர்கள் உடல்நலம் பேண மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மேலும், யானைகள் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து அறியவும் யானைப்பாகர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த முகாமிற்கு ஆன முழுச் செலவினத்தையும் அரசே ஏற்றுக்கொண்டது.

ஏழை எளியோருக்குத் திருமணம்

56. 1981 ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில் உபரிநிதியிலிருந்து திருமணம் செய்து வைக்க இத்திருமணத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் ஆதி திராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பயன்பெற்றனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையேற்று 2002 ஆம் ஆண்டு 1008 இணைகளுக்கும், 2003 ஆம் ஆண்டு 1053 இணைகளுக்கும் திருமணங்கள் திருவேற்காட்டில் நடத்தி வைத்தார்கள். மேலும், 489 இணைகளுக்குச் சில திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்பட்டன. 2006-2011 ஆம் ஆண்டுகளில் கைவிடப்பட்ட இந்த உயரிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி சிறப்புடன் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு 2012-2013 ஆம் ஆண்டில் ஒரு இணைக்கு நான்கு கிராம் தங்க திருமாங்கல்யம் மற்றும் ரூபாய் பத்தாயிரம் செலவில் சீர்வரிசைப் பொருட்கள் என்ற விகிதத்தில் 1006 இணைகளுக்குத் திருமணம் 18.06.2012 அன்று திருவேற்காடு திருக்கோயில் அருகில் ரூ.1.51 கோடி செலவில் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 31

கம்பிவட ஊர்திகள்

57. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்காக முதல் முறையாக நான்கு கோடி ரூபாய் செலவில் கம்பி வட ஊர்தி அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் கம்பிவட ஊர்தி சேவை தொடங்கப்பட்டது. இந்தக் கம்பிவட ஊர்தி பக்தர்களின் வரவேற்பு பெற்றதையடுத்து, பழனி திருக்கோயிலுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி சர்வதேசத் தரத்தில் மேலும் ஒரு கம்பிவட ஊர்தி அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் மற்றும் கரூர் மாவட்டம் அய்யர்மலை அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றுக்கு புதிதாக கம்பிவட ஊர்தி அமைத்திட ஒப்பந்தம் ஏற்படுத்தி நடவடிக்கையிலுள்ளது.

மின்கல மகிழுந்து

58. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறு இருக்கைகள் கொண்ட மின்கல மகிழுந்து ஒன்றினை மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி பின்வரும் பத்து திருக்கோயில்களில் மின்கல மகிழுந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பக்தர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

2016 ஆகஸ்ட் 31]

வ. எண்.	திருக்கோயில் பெயர்	மகிழுந்து எண்ணிக்கை
1.	ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்	2
2.	பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்	3
3.	திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்	1
4.	திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்	1
5.	திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்	1
6.	திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில்	1
7.	திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்	1
8.	திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்	1
9.	மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்	1
10.	இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்	3
	கூடுதல்	15

[2016 ஆகஸ்ட் 31

கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம்

59. கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் 490, ஒரு பெண்கள் கல்லூரி, ஒரு மேல்நிலைப் பள்ளி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றைச் செம்மையாக நிருவகிக்க போதுமான நிதிவசதி இல்லை என்பதை அறிந்து, செம்மையான நிருவாகத்தை மேற்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்ததை 2013-2014 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாயாக உயர்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது.

ஒரு கால பூஜைத் திட்டம்

60. நிதி வசதியற்று ஒரு கால பூஜை கூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை செய்திட உதவும் வகையில் இத்திட்டம் 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சிறப்புமிகு திட்டத்தில் பொதுமக்களும் பங்கேற்கும் நோக்கில் 1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருக்கோயில் ஒன்றுக்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ.2,500/- வழங்க முன்வந்தால் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/- மும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/-ம் ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/-ம் ஆக மொத்தம் ரூ.25,000/- அந்தந்த திருக்கோயில் பெயரில் முதலீடு செய்யப்படும் என ஆணையிட்டார்கள்.

61. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் பொறுப்பேற்றபின் ரூ.25,000/- முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகை போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில்கொண்டு, நிரந்தர முதலீட்டுத்தொகையை ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்கீழ், 11,931 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதற்கு ஒருமுறை வழங்கும் அரசு மானியமாக ரூ.59.48 கோடி வழங்கப்பட்டது. எஞ்சிய தொகை ரூ.30 கோடி, நிதிவசதி மிக்க திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் மேலும் 68 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 11,999 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2016 ஆகஸ்ட் 31]

62. 2014-2015 ஆம் ஆண்டு மேலும் 505 திருக்கோயில்களுக்கு இந்த திட்டத்தின்கீழ் ரூ.3.79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் ஒரு திருக்கோயிலுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வைப்பு நிதி வீதம் தற்போது ரூ.125.04 கோடி முதலீட்டில் 12,504 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை சிறந்த முறையில் நடைமுறையில் உள்ளது.

63. ஒரு கால பூஜை கூட நடைபெறாத எந்தவொரு திருக்கோயிலுக்கேனும் ரூ.10,000/- நன்கொடை எவரேனும் அளித்தால், இத்துறைமூலம் ரூ.90,000/- நிதி அளித்து மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் அத்திருக்கோயில் பெயரில் வைப்பு நிதி உருவாக்கி ஒரு கால பூஜை நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம்

64. 10,000 சிறு திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.2.44 கோடி செலவில் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கு நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதிமூலம் பூம்புகார் கைவினை பொருள் நிறுவனத்திற்கு பூஜை உபகரணங்கள் தயார் செய்து வழங்க உத்தரவு வழங்கப்பட்டு பூஜை உபகரணங்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 15.09.2015 அன்று சிறு சிறு திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டது.

பழமையான திருக்கோயில்களின் கால பூஜைகளைப் புத்துயிரூட்டல்

65. பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பழம்பெரும் திருக்கோயில்களில் கால பூஜைகள் செய்வதில் தொய்வு ஏற்பட்டதைக் களைவதற்கு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான கால பூஜைகளைச் செய்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதன் பயனாக 19 நிதிவசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து 50 நலிவுற்ற திருக்கோயில்களுக்கு 2001-2006 ஆம் ஆண்டு நிதியுதவி செய்யப்பட்டது. 2006-2011-ல் செயலற்று இருந்த இத்திட்டத்திற்கு 2011-ல் பொறுப்பேற்றபின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புத்துயிர் அளிக்கப்பட்டு 18 திருக்கோயில்களுக்கு ரூ.4.49 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் பல திருக்கோயில்களைப் பயன்பெறச் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 31

IV - திருப்பணி

திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்)

66. வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த திருக்கோயில்களையும் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் பாடிப் புகழப்பட்ட திருக்கோயில்களையும் பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களையும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள், ஆதி திராவிடர் வாழும் பகுதிகளிலுள்ள சிறு சிறு திருக்கோயில்கள் ஆகியவற்றையும் "திருக்கோயில் பொருத்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார்" - என்ற முதுமொழிக்கேற்ப திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்து பேணிப் பாதுகாத்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருப்பணி நிதி

67. பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவற்றின் விவரம் பின்வருமாறு:

- பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை
- திருக்கோயில்களின் சொந்த நிதி
- நிதிமாற்ற நிதி
- அரசு மானியம்
- பொது நல நிதி
- ஆலய மேம்பாட்டு நிதி
- கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
- உபயத் திருப்பணி
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கான திருப்பணி நிதி
- நிதி ஆணைய மானியம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 31]

68. நன்கொடையாளர்கள் திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு முன்வரும் நிகழ்வுகளில் அவர்களால் வழங்கப்படும் நிதியாதாரம் பற்றாத சூழ்நிலை ஏற்படும்போது இத்துறை மூலமாகவும் கூடுதல் நிதியுதவி வழங்கப்படுகிறது.

நன்கொடை

69. இறை நம்பிக்கை, ஆன்மீகம் மற்றும் சமய ஈடுபாடு கொண்டோர், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோர் மனமுவந்து அளிக்கும் நன்கொடையைக் கொண்டும் திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) நடைபெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 567 திருக்கோயில்களில் ரூ.34.13 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நன்கொடைமூலம் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் 2015-2016 ஆம் நிதியாண்டில் மட்டும் 39 திருக்கோயில்களில் 40 திருப்பணிகளுக்கு ரூ.2.69 கோடி மதிப்பீட்டில் திருப்பணி செய்ய இசைவளிக்கப்பட்டது.

திருக்கோயில் நிதி

70. நிதி மிகுந்த திருக்கோயில்களின் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) அவற்றின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 821 திருக்கோயில்களில் ரூ.249.16 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் திருக்கோயில் நிதிமூலம் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் 2015 - 2016 ஆம் நிதியாண்டில் மட்டும் 142 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.53.04 கோடிக்கு இசைவளிக்கப்பட்டது.

நிதிமாற்றம்

71. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதி தேவையான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளை மேற்கொள்ள இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 36-வது பிரிவின்கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 133 திருக்கோயில்களில் ரூ.16.57 கோடி மதிப்பீட்டில் பிற திருக்கோயில்களிலிருந்து நிதிமாற்றம்மூலம் திருப்பணிகள் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் 2015-2016 ஆம் ஆண்டு

மட்டும் 21 திருக்கோயில்களுக்கு ரூ.2.64 கோடி நிதி மாற்றம் மூலமாக திருப்பணிகளுக்கு இசைவளிக்கப்பட்டது.

அரசு மானியம்

72. அரசு மானியமாக ஆண்டுதோறும் திருக்கோயில்களின் திருப்பணிக்கென (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) மூன்று கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபின், 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் 96 திருக்கோயில்களில் புனரமைப்பு / புத்தாக்கத்திற்கென ஆறு கோடி ரூபாய் வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் வழங்கப்படும் மூன்று கோடி ரூபாய் அரசு மானியத்தை 2013-2014 ஆம் நிதியாண்டு முதல் ஆறு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி மேற்குறிப்பிட்ட நான்காண்டுகளில் 196 திருக்கோயில்களின் சீரமைப்புப் பணிக்கு ரூ.18 கோடி நிதி வழங்கப்பட்டது.

இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி

73. ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த அரசு மானியத்திற்கு பதிலாக, 2014-2015 ஆம் ஆண்டில் மகாமகம் தொடர்புடைய 36 திருக்கோயில்களுக்கு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதியிலிருந்து ரூ.6 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

பொது நல நிதி

74. ஆணையரின் பதவிப்பெயரில் "பொது நல நிதி" என்ற நிதியம் தனி நபர்கள் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடை மற்றும் இந்து சமய நிறுவனங்களின் பங்களிப்பு தொகை ஆகியவற்றைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 794 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.60.39 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் பொது நல நிதிமூலம் செய்ய இசைவளிக்கப்பட்டது.

ஆலய மேம்பாட்டு நிதி

75. நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக எட்டு கோடி ரூபாய் பெற்று

2016 ஆகஸ்ட் 31]

மூல நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூல நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 48 திருக்கோயில்களுக்கு ரூ.5.36 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. இதில் 2015-2016 ஆம் ஆண்டில் மட்டும் 41 திருக்கோயில்களுக்கு ரூ.4.51 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி

76. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிக்கு நிதியுதவி வழங்கிட "கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டம்" என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து இரண்டு கோடி ரூபாய் நிதிமாற்றம் செய்து மூல நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூல நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் வழங்கப்பட்டதை 2012-13 ஆம் ஆண்டில் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/- என உயர்த்தி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி சென்ற நான்கு ஆண்டுகளில் 3272 திருக்கோயில்களுக்கு ரூ.16.36 கோடி வழங்கப்பட்டது. இதில் 2015-2016 ஆம் ஆண்டு மட்டும் 1004 திருக்கோயில்களுக்கு ரூ.5.02 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

நடப்பு நிதி ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புக்கு வழங்கப்படும் நிதியுதவியை திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/-லிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் 2016-2017 ஆம் நிதியாண்டில் 500 கிராமப்புறத் திருக்கோயில்களில் ஐந்து கோடி ரூபாய் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

77. "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியத்தினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஐந்தாம் நாள் உருவாக்கினார். இந்நிதி அமைப்புக்குத்

[*2016 ஆகஸ்ட் 31*

தமது சொந்த பணத்திலிருந்து ரூ.1,00,008/-ஐ நன்கொடையாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்தார்கள். இந்நிதிக்கு தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதியமைப்பு "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என்று தற்போது அழைக்கப்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் 17 திருக்கோயில்களுக்கு ரூ.1.59 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

உபயத் திருப்பணி

78. பக்தர்கள் தாமே முன்வந்து தனது சொந்த செலவிலும், துறை மேற்பார்வையிலும் திருக்கோயில்களுக்குத் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்வது வழக்கத்திலுள்ளது. இவர்களது உபயத் திருப்பணி, துறையின் கண்காணிப்புடன் ஊக்குவிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது 2011-2016 கால ஆட்சியில் 315 திருக்கோயில்களில் ரூ.80.13 கோடி மதிப்பீட்டில் உபயத் திருப்பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் 2015-2016 ஆம் ஆண்டில் 63 திருக்கோயில்களில் 90 உபயத் திருப்பணிகளுக்கு ரூ.28.54 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி

79. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற இத்தொகை போதுமானதாக இல்லை என்பதறிந்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/- என உயர்வு செய்யப்பட்டது. இதன் மூலமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் 3640 திருக்கோயில்களுக்கு ரூ.18.20 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. இதில் 2015-2016 ஆம் ஆண்டு மட்டும் 1004 திருக்கோயில்கள் புனரமைப்புக்கு ரூ.5.02 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

2016 ஆகஸ்ட் 31]

நடப்பு நிதி ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களின் புனரமைப்புக்கு வழங்கப்படும் நிதியுதவியை திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/- லிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் 2016-17 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 500 திருக்கோயில்களில் ஐந்து கோடி ரூபாய் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நிதி ஆணைய மானியம்

80. தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாமல் புதுப்பிக்க மத்திய நிதி ஆணையம் நிதியுதவி வழங்குகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 13-வது நிதி ஆணைய நிதி மூலமாக 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.22.50 கோடி வீதம் நான்கு ஆண்டுகளுக்கு தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் திருப்பணிக்கென ரூ.90 கோடி, 250 திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்டது. இதில் 2014-2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ரூ.22.50 கோடி நிதி மூலம் 67 திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது.

சுற்றுலாத் துறை நிதி

81. தமிழகத் திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்புத்தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறை, குளியலறைகள், குடிநீர்வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள், வாகன நிறுத்துமிடங்கள், புல்வெளி அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத் துறையும், அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 16 திருக்கோயில்களுக்கு ரூ.7.86 கோடி சுற்றுலாத் துறை நிதியுதவி வழங்கப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 31

பழமைவாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி – தொல்லியல் வல்லுநர் குழு

82. தமிழக அரசின் உத்தரவின்படி 13-வது நிதி ஆணையத்தின் நிதி உதவியுடன் திருப்பணி நடைபெற்று வரும் திருக்கோயில்களின் புனரமைப்பு, தொன்மையைப் பாதுகாத்தல் மற்றும் புதுப்பித்தல் பணிக்கு தொன்மை சார்ந்த ஆலோசனை வழங்க மத்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற தொல்லியல் வல்லுநர், திரு. கே.டி. நரசிம்மன் பணியமர்த்தப்பட்டார். மேலும், தொல்லியல் தொடர்பான விஷயங்களில் அறிவுரை வழங்க குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட தொல்லியல் வல்லுநர் குழு அல்லது குழுவின் உறுப்பினர் அறிவுரைப்படி தொன்மைமிக்க திருக்கோயில்களைப் பாதுகாத்தல், மரபுமாறாது புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்குழு அமைக்கப்பட்ட பிறகு குழு உறுப்பினர்களால் ஆய்வு செய்யப்பட்டு 323 ஆய்வறிக்கைகள் பெறப்பட்டன. சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் தொல்லியல் துறை ஆய்வறிக்கைகளின்படி திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதே போல் ஆய்வுக் குறிப்புகள் அடிப்படையில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் உள்ளிட்ட திருக்கோயில்களில் புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

83. குழு வழிகாட்டுதலின்படி துறையினால் எடுக்கப்பட்ட பழமை மாறாத புனரமைப்பு பணிகளை சிறந்த நடைமுறைகள் எனப் பாராட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2015 ஆம் ஆண்டுக்கான அரசு துறைகளில் சிறந்த துறைக்கான நல் ஆளுமை விருது வழங்கப்பட்டது. மேற்படி விருது, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் தொல்லியல் மரபுகளிலிருந்து சற்றும் பிறழாமல் பாதுகாத்து புனரமைக்கப்பட்டதற்காக வழங்கப்பட்டது.

2016 ஆகஸ்ட் 31]

பழமையான ஓவியங்களை பழமை மாறாது புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் – சிறப்பாக சுவரோவியங்கள்

84. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 50 திருக்கோயில்களின் பழமையான ஓவியங்களை சிறப்பாக சுவரோவியங்களை பழமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்க மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவின் அறிவுரையின்படி கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் ரூ.81 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன. இதேபோல் இக்குழுவின் அறிவுரையைப் பெற்று திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர ரூ.64.10 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம், அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலில் சுவரோவியங்கள் பழமை மாறாது புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

85. முதன்முதலாக சிமெண்ட் பூச்சின்கீழ் நாயக்கர் காலத்து சுவரோவியம் சென்னை அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் புனரமைப்புப் பணியின்போது மே 2015-ல் கண்டுபிடிக்கப்பட்டது. சோழர் காலத்து கல்வெட்டு ஒன்றும் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் புதியதாக கண்டுபிடிக்கப்பட்டு அதன் வாசகங்கள் வெளிப்பிரகாரத்தில் புதிய கல்லின்மீது நிகழ்கால தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

திருக்குளங்களை புதுப்பித்து திருப்பணி செய்தலும், மழைநீர் சேகரிப்பும்

86. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில் 1586 திருக்கோயில்களுக்கு 2359 திருக்குளங்கள் உள்ளன. இவைகளில் 1068 திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. 2011 முதல்

[2016 ஆகஸ்ட் 31

2016 வரை 611 திருக்குளங்கள் ரூ.3.31 கோடி செலவில் புனரமைப்பு செய்யப்பட்டன. எஞ்சிய திருக்குளங்களின் சீரமைப்பு விரைந்து முடிக்கப்படும். இதுதவிர, கடந்த இரண்டு ஆண்டுகளில் 11 திருக்குளங்களைச் சீரமைக்க ரூ.3.76 கோடி நிதியுதவி சுற்றுச்சூழல் துறையால் வழங்கப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டில் மட்டும் ஐந்து திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டன. மழை நீர் சேகரிப்புச் செயலாக்கத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2014 ஆம் ஆண்டு மே-ஜுன் மாதங்களில் 5400 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் 1004 திருக்குளங்களில் மழைநீர் சேகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

87. திருக்குளங்களைப் பாதுகாத்துப் பேண இத்திட்டத்தின்படி கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- திருக்குளங்களின் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- திருக்குளங்களைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல்.
- தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்
- திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கு வழி ஏற்படுத்துதல் மற்றும் உபரி நீர் வெளியேற்றுதல்.

திருப்பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க தனி மென்பொருள்

88. திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும் திருப்பணிகள் தொடர்பாக பெறப்படும் மதிப்பீடுகளுக்கு துறைத் தலைவர் மற்றும் சார்நிலை அலுவலர்கள் நிலையில் வழங்கப்படும் நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அங்கீகாரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் விவரங்கள், ஒப்பந்ததாரர் விவரம், பணி ஆணை வழங்கப்பட்ட விவரம், பணி துவங்கப்பட்ட விவரம், பணி நடைபெற்று வரும் விவரம், புகைப்படத்துடன் பணி முன்னேற்ற விவரம் அடங்கிய விவரங்கள் பதிவேற்றம் செய்யத்தக்க வகையில் திருக்கோயில் திருப்பணிகளை கண்காணிக்க கணினி மென்பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

2016 ஆகஸ்ட் 31]

பட்டயப் பொறியாளர்கள்

89. திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப் பணித் துறையிலும் நெடுஞ்சாலைத் துறையிலும் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கடந்த ஐந்து ஆண்டுகளில் 13 பட்டயப் பொறியாளர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் பொறியாளர்கள் மூலமாக திருக்கோயில்களைச் சீரமைப்பதற்குரிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்யவும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஸ்தபதிகள்

90. சிற்ப சாத்திர மற்றும் ஆகம சாத்திர விதிகளில் வரையறுக்கப்பட்டபடி திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர்மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்தோர், சிற்ப சாத்திரக்கலையில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றுள்ளோர் ஆகியோர் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்யப்படுகின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் 539 ஸ்தபதிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

குடமுழுக்கு (கும்பாபிஷேகம்/சம்ப்ரோக்ஷணம்)

91. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் ஆகம விதிப்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் திருக்கோயில்கள் கீழ்க்கண்டவாறு வகை செய்யப்பட்டு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்படுகின்றன.

- *ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடப் பெற்ற பழமை வாய்ந்த திருக்கோயில்கள்.*
- *வரலாற்றுப் புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.*
- *பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.*

[*2016 ஆகஸ்ட் 31*

- *கிராமப்புறங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள்.*

92. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் (31.3.2016 வரை) 8843 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. இவற்றில் 2015-2016 ஆம் ஆண்டு மட்டும் 1516 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டது. இது திருப்பணி வரலாற்றில் ஒரு மைல் கல்.

திருத்தேர் பராமரிப்பு

93. இத்துறையின் கீழுள்ள திருக்கோயில்களில் 809 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 989 மரத் திருத்தேர்கள் உள்ளன. 2006-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதி மூலம் திருத்தேர்கள் திருப்பணிக்காக (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.10.50 கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் 158 திருத்தேர்களின் திருப்பணிக்கு ரூ.9.54 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது. இதில் 2015-2016 ஆம் ஆண்டில் 30 திருத்தேர்களுக்கு ரூ.2.04 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

94. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடன், திருத்தேர் திருப்பணியில் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ஏற்பட்டிருந்த இடர்பாடுகளை அறிந்து மரத்தேர் சிற்பிகளின் ஊதியத்தை உயர்த்தியும், மரங்களுக்கு உரிய விலையை நிர்ணயித்தும் ஆணையிட்டார். இதன் பயனாக 143 திருத்தேர்களுக்கு சீரமைப்பு பணிகள் ரூ.15.91 கோடி மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டு, திருத்தேரோட்டங்கள் நடைபெற்றன. இதில் 2015-16 ஆம் நிதியாண்டில் மட்டும் 8 திருத்தேர்கள் ரூ.3.62 கோடியில் சீரமைக்கப்பட்டுள்ளன.

95. திருத்தேர்களைப் பாதுகாக்கும் பொருட்டு தீப்பிடிக்காத தகடுகளால் ஆன தேர்கொட்டகை, இரும்பு அச்சு, இரும்புச் சக்கரம் ஆகியவற்றைச் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத் தவிர தேரோட்ட விழாவின்போது விபத்துகள் நடைபெறாதிருக்க பின்பற்ற வேண்டிய

2016 ஆகஸ்ட் 31]

வழிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. திருத்தேர்களுக்கும், திருத்தேரோட்டத்தில் தேரை இழுப்பவர்களுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக காப்பீடு செய்யப்படுகிறது.

தங்கரதம் மற்றும் வெள்ளிரதம்

96. திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்கரதத்திலோ, வெள்ளிரதத்திலோ எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது.

97. தற்போது கீழ்க்காணும் 55 திருக்கோயில்களில் தங்கரதமும் 42 திருக்கோயில்களில் வெள்ளிரதமும் பயன்பாட்டில் உள்ளன.

தங்கரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி
2.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை
3.	அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
6.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை
7.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில்
8.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர்
9.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி
10.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
11.	அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில்

TRUTH ALONE TRIUMPHS

12.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
13.	அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி
14.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
15.	அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை
17.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு
19.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
20.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை
22.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி
23.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
24.	அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை
25.	அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு
26.	அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை
27.	அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி
28.	அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை
29.	அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம்

2016 ஆகஸ்ட் 31]

30.	அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
31.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர்
32.	அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர்
33.	அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர்
34.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜெம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல்
35.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல்
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம்
37.	அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி
38.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
39.	அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை
40.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்
41.	அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி
42.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
43.	அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில், சேலம்
44.	அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை
45.	அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர்
46.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்

[2016 ஆகஸ்ட் 31

47.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்
48.	அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம் மாவட்டம்
49.	அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு மாவட்டம்
50.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.
51.	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம்
52.	அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி, திருநெல்வேலி மாவட்டம்
53.	அருள்மிகு ஆண்டாள் (நாச்சியார்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்
54.	அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை மாவட்டம்
55.	அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம் மாவட்டம் (தங்கமுலாம் பூசப்பட்ட தேர்)

வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
3.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை

2016 ஆகஸ்ட் 31]

7.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை
8.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
9.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்
10.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில்
11.	அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி
12.	அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை
13.	அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி
14.	அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை
15.	அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
16.	அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர்
17.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
19.	அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை
20.	அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குன்றக்குடி
22.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்செவல்பட்டி
23.	அருள்மிகு கண்ணுடையநாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை

24.	அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி
25.	அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவக்கோட்டை
26.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம்
27.	அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு
28.	அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி
29.	அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில், பவானி
30.	அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆயக்குடி, திருநெல்வேலி
31.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்
32.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி
33.	அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம் மாவட்டம்
34.	அருள்மிகு சௌந்திரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்
35.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம்
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம் மாவட்டம்.
37.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர் மாவட்டம்
38.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
39.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்கசாலை, சென்னை

2016 ஆகஸ்ட் 31]

40.	*அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்*
41.	*அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோயில், விராலிமலை, புதுக்கோட்டை*
42.	*அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், திருவண்ணாமலை மாவட்டம்*

V - பக்தர்கள் நலன்

அடிப்படை வசதிகள்

குடிநீர் வசதி

98. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 145 திருக்கோயில்களில் சுத்தமான குடிநீர் வழங்க ரூ.3.70 கோடி செலவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நவீனக் கழிப்பிட வசதி

99. திருக்கோயில்களுக்கு வருகை தரும் ஆடவர்க்கும் மகளிர்க்கும் தனித்தனியாக நவீன கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2011-2016-ல் 126 திருக்கோயில்களில் ரூ.16.07 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் 2015-2016 ஆம் ஆண்டு மட்டும் 19 திருக்கோயில்களில் ரூ.5.49 கோடி செலவில் ஆடவர் மற்றும் மகளிர்க்கு தனித்தனி கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

தங்கும் வசதி

100. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக முக்கிய திருக்கோயில்களில் குடில்கள், தங்கும் அறைகள், துயில் கூடங்கள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 15 திருக்கோயில்களில் ரூ.59.41 கோடி மதிப்பீட்டில் நவீன தங்கும் கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு மூன்று திருக்கோயில்களுக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

[*2016 ஆகஸ்ட் 31*

ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிதி பங்களிப்புடன் ரூ.47.09 கோடி மதிப்பீட்டில் ஒரே நேரத்தில் சுமார் 1000 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக குடில்கள், அறைகள், துயில் கூடங்கள், உணவகம் போன்ற வசதிகளுடன் கூடிய "யாத்ரி நிவாஸ்" ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 30.06.2014 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. 500 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக திருவண்ணாமலை திருக்கோயிலில் ரூ.28 கோடி மதிப்பீட்டிலும் இராமேஸ்வரம் திருக்கோயிலில் ரூ.29 கோடி மதிப்பீட்டிலும் 'யாத்ரி நிவாஸ்' பொதுப் பணித் துறை மூலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில் வழிகாட்டி/தகவல் பலகைகள்

101. திருக்கோயில்களை எளிதில் சென்றடைவதற்கு ஏதுவாக முக்கிய சாலைகளில் திருக்கோயில் பெயருடன் கூடிய வழிகாட்டி பலகைகளும், அந்தந்தப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து திருக்கோயில்கள் குறித்த தகவல்களை அறிந்துகொள்ள ஏதுவாக ரயில் மற்றும் பேருந்து நிலையங்களில் தகவல் பலகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பக்தர்களுக்கு தரமான குங்குமம் வழங்குதல்

102. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன இயந்திரங்கள் மூலம் தரமான குங்குமம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.

நன்கொடையாளர் வரவேற்பு மையங்கள்

103. திருக்கோயில்களுக்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் வசதிக்காக நன்கொடையாளர் வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை, இந்து சமய அறநிலையத் துறை, ஆணையர் அலுவலகத்திலும் மற்றும் ஸ்ரீரங்கம் அருள்மிகு

2016 ஆகஸ்ட் 31]

அரங்கநாதசுவாமி திருக்கோயில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருத்தலங்களிலும் நன்கொடையாளர் வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மானசரோவர், முக்திநாத் யாத்திரை

104. தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மானசரோவர் மற்றும் முக்திநாத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதன் அவசியத்தை கருத்தில் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சீனாவில் உள்ள மானசரோவர் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒருமுறை ரூ.40,000/- வீதம் நிதியுதவியும், அது போன்று நேபாளத்திலுள்ள முக்திநாத் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒருமுறை ரூ.10,000/- வீதம் நிதியுதவியும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் வசிக்கும் 250 யாத்ரீகர்களுக்கு வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி 2012-2013 ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த 146 யாத்ரீகர்களுக்கு ரூ.58.40 இலட்சம் நிதியுதவியும், முக்திநாத் பயணம் முடித்து வந்த 10 யாத்ரீகர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டிற்கு யாத்திரையை முடித்து வந்த பக்தர்களுக்கு ரூ.84.70 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2014-2015 ஆம் ஆண்டில் பயணம் முடித்து வந்த யாத்ரீகர்களுக்கு ரூ.112.30 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த 51 யாத்ரீகர்களுக்கு ரூ.20.40 இலட்சம், முக்திநாத் பயணம் முடித்து வந்த 72 யாத்ரீகர்களுக்கு ரூ.7.20 இலட்சம் ஆக மொத்தம் ரூ.27.60 இலட்சம் வழங்கப்பட்டது.

புடவை / வேட்டி வழங்குதல்

105. முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு, சுதந்திர நாளன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும் முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் பருத்திநூல் புடவை மற்றும் வேட்டிகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 59870 பயனாளிகளுக்கு புடவை, வேட்டிகள் வழங்கப்பட்டன.

[2016 ஆகஸ்ட் 31

VI - திருக்கோயில்கள் தூய்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

உழவாரப் பணி

106. பாரம்பரியமிக்க வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கோயில்கள், வானளாவிய கோபுரங்களையும், அழகிய விமானங்களையும், மண்டபங்களையும், பெரிய மதிற்சுவர்களையும் உள்ளடக்கி உள்ளன. இவற்றை பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். இக்கட்டுமானங்களில் செடிகளும், கொடிகளும், மரங்களும் முளைத்து கட்டுமானங்களுக்குப் பெரும் சேதம் விளைவிக்கின்றன.

சமயக் குரவர்களில் ஒருவரான அப்பரடிகள் தொடங்கிச் செய்த உழவாரப் பணிக்கு புத்துயிர் அளித்திடும் வகையில் 2011-2012 ஆம் ஆண்டில் உழவாரப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு தற்போது வரை 2892 திருக்கோயில்களில் உழவாரப் பணி செய்யப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டில் 454 திருக்கோயில்களில் உழவாரப் பணி செய்து செடி, கொடி மற்றும் மரங்கள் அகற்றப்பட்டன. இப்பணி திருக்கோயில்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப்பணி

107. திருக்கோயில்களைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டிய அவசியம் கருதி தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பயனாக 110 பெரிய திருக்கோயில்கள் சிறந்த முறையில் தூய்மையாக பராமரிக்கப்படுகின்றன. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இதர திருக்கோயில்களிலும் இந்தத் திட்டத்தை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருக்கோயில் சுற்றுச்சூழல் காத்திட பிளாஸ்டிக் பயன்பாடு முற்றிலும் தவிர்த்தல்

108. திருக்கோயில்களில் ஆரோக்கியமும் தூய்மையும் மிக்க சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்த்திட திருக்கோயில் வளாகங்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள அங்காடிகளில் அபிஷேக அர்ச்சனைப் பொருள்கள் மற்றும்

2016 ஆகஸ்ட் 31]

பிரசாதப் பொருள்கள் ஆகியவை துணிப்பைகள், காகிதப்பைகள், மூங்கில் தட்டுகள், பாக்குமட்டைத் தட்டுகளில் வழங்கப்படுகின்றன.

மாற்று மின்திட்டம்

109. திருக்கோயில்களில் மின் செலவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், சூரிய சக்தி மூலம் மாற்று மின்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 2012-2013 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், சுசீந்திரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 10 கிலோ வாட் திறன் கொண்ட மாற்று மின் திட்டத்தால், பெறப்படும் மின்கட்டணப் பட்டியலில் ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/- வரை சேமிப்பு ஏற்படுகிறது.

VII - பாதுகாப்பு

உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் பாதுகாப்பு

110. திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாத்திட களவு எச்சரிக்கை மணி, கோள் சொல் கடிகாரம், தொட்டிப் பூட்டு, இரும்பு வாயிற்கதவுகள், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் ஆகியன பொருத்துதல், இரவுக்காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகியன 4132 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம்

111. களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டத்தின்கீழ் ரூ.5 கோடி மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாயிலிருந்து களவு எச்சரிக்கை மணி பொருத்துவதற்கு நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் 75 விழுக்காடு இத்துறையின் மூலம், எஞ்சிய 25 விழுக்காடு நன்கொடையாளர் பங்களிப்பு அல்லது திருக்கோயில் நிதி மூலம் என்ற அடிப்படையில் நிதியுதவி செய்திட இத்திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டது. பெரும்பாலான

[2016 ஆகஸ்ட் 31

திருக்கோயில்கள் கிராமப்புறங்களில் உள்ள நிதிவசதியற்ற திருக்கோயில்கள் என்பதையும் இத்திருக்கோயில்களில் விலை மதிப்புமிக்க உலோக விக்கிரகங்கள், நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் உள்ளதால் அவற்றைப் பாதுகாப்பது தலையாய கடமை என்பதையும் உணர்ந்து நிதிவசதியற்ற திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி பொருத்திட ஆகும் செலவினத் தொகை முழுவதையும் மேற்கண்ட மைய நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 562 திருக்கோயில்களுக்கு ரூ.71 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

112. திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் பொருட்டு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும் மீண்டும் இம்மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் பூஜைகள் செய்யப்படுகின்றன. உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள் விவரம் பின்வருமாறு:

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

1.	திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் வளாகம்)
2.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி
3.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
4.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
5.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர்

2016 ஆகஸ்ட் 31]

6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
7.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்
8.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர்
9.	அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம்
10.	அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர்
11.	அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை
12.	அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை
13.	அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை
14.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்)
15.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
17.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான் கோட்டை, தருமபுரி
18.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம்
19.	அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர்

மேலும் கீழ்க்கண்ட 15 மையங்களில், உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகள் முடிந்துள்ளன.

[2016 ஆகஸ்ட் 31

திருக்கோயில் பெயர் மற்றும் இடம்

1.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர்
2.	அருள்மிகு ஆலந்துறையார் மற்றும் கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர்
3.	அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர்
4.	அருள்மிகு நீலாயதாட்சியம்மன் உடனுறை காயாரோகணசுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம்
5.	இந்து சமய அறநிலையத் துறை, இணை ஆணையர் அலுவலக வளாகம் பின்புறம், தஞ்சாவூர்
6.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்
7.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை
8.	அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கட்ரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை
9.	அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்
10.	அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி
11.	திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணபுரம், பாளையங்கோட்டை
12.	அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோயில்
13.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம் வட்டம்
14.	அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர் கிராமம், மயிலாடுதுறை வட்டம்
15.	அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில், திருவலஞ்சுழி, கும்பகோணம் வட்டம்

2016 ஆகஸ்ட் 31]

திருக்கோயில் பாதுகாப்புப் படை

113. திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், பொன், வெள்ளி ஆபரணங்கள், விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் உண்டியல்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக "திருக்கோயில் பாதுகாப்புப்படை" என்ற ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள், 3000 முன்னாள் படைவீரர்கள் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்தது.

2005-2006 ஆம் ஆண்டுகளில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களும் 2751 முன்னாள் படை வீரர்களும் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்தனர். கடந்த 2006-2011 ஆம் ஆண்டுகளில் திருக்கோயில் பாதுகாப்பில் போதிய ஆர்வம் செலுத்தாததால் இந்த எண்ணிக்கை குறைந்து வருவதைத் தடுக்கும் வகையில் திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் படை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாத தொகுப்பூதியம் 09.01.2012 முதல் ரூ.1,500/-லிருந்து ரூ.5000/- ஆக அரசு உயர்த்தியுள்ளது.

VIII - கல்விப் பணியும், அறப்பணியும்

கல்வி நிறுவனங்கள்

114. இறைப்பணியோடு ஆன்மிக நெறிகளையும் பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு சமயம் மற்றும் பொதுக்கல்வி பயிற்றுவிக்க பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் பேணி வருகின்றன.

வ. எண்	கல்வி நிறுவனங்கள்	எண்ணிக்கை
1.	கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்	5
2.	தொழில்நுட்பக் கல்லூரி	1
3.	மேல்நிலைப் பள்ளிகள்	15
4.	உயர்நிலைப் பள்ளிகள்	8
5.	நடுநிலைப் பள்ளிகள்	2

6.	தொடக்கப் பள்ளிகள்	9
7.	மெட்ரிகுலேஷன் பள்ளி	1
8.	மத்திய அரசுத் திட்ட மேல்நிலைப் பள்ளி	1
9.	நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள்	2
10.	வேத ஆகமப் பாடசாலைகள்	2
11.	ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்	2
12.	தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்	2
13.	காது கேளாதோர் - பேச இயலாதோர் பள்ளி	1
	கூடுதல்	51

கல்வி நிறுவனங்கள் விவரப் பட்டியல்

கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்

1.	அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2.	அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்
3.	ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்
4.	ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்
5.	பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம் மாவட்டம்

தொழில்நுட்பக் கல்லூரி

1.	அருள்மிகு பழனியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்

2016 ஆகஸ்ட் 31]

மேனிலைப் பள்ளிகள்

1.	அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேனிலைப்பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம்
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேனிலைப் பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர் மாவட்டம்
3.	அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேனிலைப்பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர் மாவட்டம்
4.	அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேனிலைப்பள்ளி, பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம்
5.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேனிலைப்பள்ளி, மதுரை
6.	அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேனிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்
7.	அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்
8.	தேவஸ்தான மேனிலைப்பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம்
9.	ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேனிலைப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டம்
10.	டி.வேணுகோபால் செட்டி மேனிலைப்பள்ளி, சென்னை
11.	இந்து மேனிலைப்பள்ளி, சென்னை
12.	அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேனிலைப் பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்
13.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மேனிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம்
14.	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேனிலைப்பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்
15.	அருள்மிகு பராசக்தி வித்யாலயா மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்

[2016 ஆகஸ்ட் 31

உயர்நிலைப் பள்ளிகள்

1.	அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர் மாவட்டம்
2.	அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர் மாவட்டம்
3.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம்
4.	அருள்மிகு சுந்தரராஜ உயர்நிலைப் பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம்
5.	தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம்
6.	ஸ்ரீ திருஞான சம்பந்தர் உயர்நிலைப் பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம்
7.	அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப் பள்ளி, சென்னை
8.	தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்

நடுநிலைப் பள்ளிகள்

1.	திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்
2.	திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்

தொடக்கப் பள்ளிகள்

1.	சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப் பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்
2.	சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப் பள்ளி, சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்

2016 ஆகஸ்ட் 31]

3.	ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம்
4.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உதவி பெறும் தொடக்கப் பள்ளி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்
5.	திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப் பள்ளி, திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம்
6.	திருஞான சம்பந்தர் தொடக்கப் பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம்
7.	அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப் பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம்
8.	அஞ்சுகம் தொடக்கப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை
9.	பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப் பள்ளி, ஓட்டேரி, சென்னை

மெட்ரிகுலேஷன் பள்ளி

1.	பழனி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்

மத்திய அரசுத்திட்ட மேனிலைப் பள்ளி

1.	பராசக்தி வித்யாலயா, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்

நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப்பயிற்சிப் பள்ளிகள்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்

வேத ஆகமப் பாடசாலைகள்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்

[2016 ஆகஸ்ட் 31

ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்

1.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
2.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை

தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்

1.	தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்
2.	மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர் மாவட்டம்

காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்

வேத ஆகம பாடசாலைகள்

115. திருக்கோயில் வழிபாட்டு முறைகள், திருமுறைகள், ஆகமங்கள் மற்றும் வேதங்கள் ஆகியவை குறித்த பயிற்சிகள் வழங்க “மயிலையே கயிலை” எனப் போற்றப்படும் சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் சைவ ஆகம பாடசாலையும், வைணவ ஆகமங்களை பயிற்றுவிக்க “பூலோக வைகுந்தம்” என்று அழைக்கப்படும் திருச்சி, ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் வைணவ ஆகம பாடசாலைகள் புதிதாக தொடங்கப்பட உள்ளன. இப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, தங்கும் வசதி ஆகியவற்றுடன் உதவித் தொகையும் வழங்கப்படும்.

கல்வி நிறுவனங்களுக்கு தரச்சான்று

116. பல்கலைக்கழக மானிய குழுவின் தன்னாட்சி அமைப்பான தேசிய தர மதிப்பீட்டு குழு பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிருவாகத்தால் நடத்தப்படும் அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி ஆகிய

2016 ஆகஸ்ட் 31]

இரண்டு கல்லூரிகளுக்கு சிறந்த செயல்பாடுகளுக்காக 'A' தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

சமூக நல நிறுவனங்கள்

117. திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு அறநிலையங்களாகவும் செயல்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவமனைகள், மனநலக் காப்பகங்கள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியன திருக்கோயில்களால் நிருவகிக்கப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு:

	சமூக நல நிறுவனங்கள்	எண்ணிக்கை
1.	கருணை இல்லங்கள்	33
2.	மனநலக் காப்பகம்	1
3.	முதியோர் இல்லங்கள்	2
4.	சித்த வைத்தியசாலைகள்	6
5.	ஆங்கில முறை மருத்துவமனைகள்	2
	கூடுதல்	**44**

கருணை இல்லங்கள்

118. இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஆதரவற்ற சிறுவர் மற்றும் சிறுமியருக்கு உணவு, இருப்பிடம், கல்வி ஆகிய உதவிகள் அளிக்கும் நோக்கத்துடன் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 30 திருக்கோயில்களில் 33 கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சிறுவர் காப்பகங்கள் 22 மற்றும் சிறுமியர் காப்பகங்கள் 11 உள்ளன. கருணை இல்லங்களில் பயின்று +2 பள்ளிக் கல்வி முடித்து மேற்படிப்பு தொடரும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின்கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் முழுமையான கல்விக் கட்டண விலக்கும், இதர கல்வி நிறுவனங்களில் 50 சதவிகிதம் கல்விக் கட்டணம் திருக்கோயில் நிதியிலிருந்து படிப்பு முடியும் வரை வழங்கவும் அரசால் 2012-2013-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி கடந்த நான்கு

ஆண்டுகளில் 91 மாணவ மாணவிகளுக்கு ரூ.5,11,589/- வழங்கப்பட்டது.

119. கடந்த ஐந்து ஆண்டுகளில் கருணை இல்லங்களில் சிறுவர், சிறுமியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக ரூ.4.12 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2015-16 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.1.68 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

120. கருணை இல்லங்களின் செலவினத்தை ஈடுசெய்ய ஒவ்வொரு வருடமும் அரசு மானியம் வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.1.78 கோடி நிதி அரசு மானியமாக பெறப்பட்டது.

கருணை இல்லங்கள் விவரம்

1.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, திருவள்ளூர் மாவட்டம்.
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்
3.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
4.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்
5.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
6.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்
7.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்
8.	அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை
9.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம்
10.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, ஈரோடு மாவட்டம்

2016 ஆகஸ்ட் 31]

11.	அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை மாவட்டம்
12.	அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர் மாவட்டம்
13.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
14.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம்
15.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
16.	அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில், தேக்கப்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம்
17.	அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில், அய்யம்பாளையம், திருப்பூர் மாவட்டம்
18.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்
19.	அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், தஞ்சாவூர் மாவட்டம்
20.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்
21.	அருள்மிகு மகுடேஸ்வரசுவாமி வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்
22.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி, கோயம்புத்தூர் மாவட்டம்
23.	அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம்
24.	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம்
25.	அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்

26.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர் மாவட்டம்
27.	அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளிம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை மாவட்டம்
28.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
29.	அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம், சென்னை.
30.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், தாயமங்கலம், சிவகங்கை மாவட்டம்

மனநலக் காப்பகம்

1.	அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், குணசீலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

முதியோர் இல்லங்கள்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்.

சித்த மருத்துவமனைகள்

1.	அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை.
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம்
3.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்

2016 ஆகஸ்ட் 31]

5.	*அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்*
6.	*அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்*

ஆங்கிலமுறை மருத்துவமனைகள்

1.	*அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்*
2.	*அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி, சிவகங்கை மாவட்டம்*

பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்

121. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு 5 கோடி ரூபாயும், கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு 5 கோடி ரூபாயும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் மூலம் பெறப்பட்டு இரு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தேவையான கட்டடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்திட நிதி உதவி வழங்கப்படுகிறது.

122. கடந்த ஐந்து ஆண்டுகளில் பள்ளி கல்வி நிறுவனங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு 223 பணிகளுக்கு ரூ.40.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கோசாலைகள்

123. திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழனி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் உள்ளன.

124. திருக்கோயில்களுக்கு உபயமாக பெறப்படும் உபரி கால்நடைகள் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும்

விலையின்றி வழங்கப்படுகிறது. திருக்கோயில்களில் இருக்கும் கோசாலைகளை நல்ல முறையில் பேணுவதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

IX - திருக்கோயிலும், தமிழும்

''போற்றி'' நூல்கள்

125. ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருளார்ந்த துறவிகளும் தாங்கள் சென்ற இடமெல்லாம் இறைவனைச் செந்தமிழால் போற்றிப் பாடி வணங்கியுள்ளனர். அத்தகைய அருளாளர்கள் அருளிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், நாலாயிர திவ்வியபிரபந்தம் ஆகியவை தமிழ் மொழி வளர்ந்து செழித்தோங்கிட துணையாக அமைந்துள்ளன. திருக்கோயில்களில் விரும்புவோருக்கு தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் "போற்றி" (அர்ச்சனை) நூல்கள் திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் புத்தாண்டு விழா

126. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தத்தால் நெடுங்காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை மரபு வழி வந்த முறைகளை மதித்து சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடும் பழக்கத்தை 13.04.2012 அன்று திரும்பக் கொண்டுவரப்பட்டது. இதை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் கொண்டாடினர்.

127. தமிழ்ப் புத்தாண்டு தினத்தையொட்டி 13.04.2012 அன்று முதல் ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் நாள் அன்று அனைத்து முக்கிய திருக்கோயில்களிலும் சிறப்பு பூஜை வழிபாடுகளும், சிறப்பு அன்னதானமும், சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி திருக்கோயில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது. அன்றைய தினம் திருக்கோயில்கள் வாழை, மாவிலைத் தோரணங்களுடன் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. பெருவாரியான பக்தர்கள் இப்புத்தாண்டு தினத்தில் திருக்கோயில்களுக்கு வருகை புரிந்து கொண்டாடி வருகின்றனர்.

2016 ஆகஸ்ட் 31]

பாவை விழா

128. ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி பாவை விழா மாவட்ட அளவில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. 2015-2016-ஆம் ஆண்டு மாவட்ட அளவில் 32 மாவட்டங்களில் 7118 மாணவியர் பங்கேற்புடன், 1668 மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாவை விழா வெகு சிறப்புடன் நடத்தப்பட்டது.

திருக்கோயில்களில் இசைவாணர் நியமனம்

129. திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கள இசை இசைக்கப்படுவது வழக்கம். இவ்வழக்கம் திருக்கோயில்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருக்கோயில்களிலும், நாயன்மார்களால் பாடல்பெற்ற புகழ் வாய்ந்த தொன்மையான திருக்கோயில்களிலும், நாதஸ்வரம், தவில், தாள இசைவாணர்களை நியமனம் செய்து அவர்களுக்கு முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/- வீதம் மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகைமூலம் அவர்களுக்கு இவ்வூதியம் வழங்கப்படுகிறது.

X - அருளாளர்கள் விழா

சேக்கிழார் விழா

130. இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னை, குன்றத்தூரில் சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்ட் திங்கள்தோறும் 12 நாட்களுக்கு பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன. ஆண்டுதோறும் குன்றத்தூரில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூல நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

[*2016 ஆகஸ்ட் 31*

திருஞானசம்பந்தர் இசை விழா

131. சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு ஆணையரின் பொதுநல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

ஔவையார் விழா

132. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூல நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

தாயுமானவர் விழா

133. தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில் இத்துறை சார்பாக தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானவசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

திருவள்ளுவர் திருநாள்

134. ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் கருத்தரங்கங்களும் பட்டிமன்றங்களும் நடத்தப்படுகின்றன.

அருணகிரிநாதர் விழா

135. அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ஆவணி மாதம்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 31]
“கேட்டை” நட்சத்திரத்தன்று “முக்திப்பேறுவிழா” ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கோச்செங்கட்சோழ நாயனார் விழா

136. அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், சதய நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் “கோச்செங்கட்சோழநாயனார் விழா” திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

ஆழ்வார்கள் விழா

137. பன்னிரு ஆழ்வார்களுக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆழ்வார்கள் விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

XI - வெளியீடுகள்

தலவரலாறும் தலபுராணமும்

138. திருக்கோயில்களின் தொன்மை, வரலாறு, கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் தலவரலாறு நூல்களும், திருக்கோயிலையும், திருக்கோயில் அமைந்துள்ள ஊரையும் உள்ளடக்கிய தலபுராண நூல்களும் வெளியிடப்படுகின்றன. மேலும், சிறு திருக்கோயில்களுக்கும் அவற்றின் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்ள ஏதுவாக தகவல் அட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. தலவரலாறு மற்றும் தலபுராண நூல்கள் தேவையடிப்படையில் பதிப்பு செய்தும், புதுப்பித்தும் வெளியிடப்படுகின்றன.

பயணியர் மாவட்ட கையேடுகள்

139. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக, முக்கியமான நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து அனைத்து

[2016 ஆகஸ்ட் 31

மாவட்டங்களுக்கும் தனித்தனியே பயணியர் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய கையேடுகள் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில் கொண்டு இவை இத்துறை வலைதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

‘‘திருக்கோயில்’’– திங்களிதழ்

140. இந்து சமய அறநிலையத் துறையால் 1958-ஆம் ஆண்டு முதல் ‘‘திருக்கோயில்’’ என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்படுகிறது. தற்போது இந்த மாத இதழ் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகளுடனும், எழில்மிகும் வண்ணங்களுடனும் வெளியிடப்படுகிறது. 2013-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு தமிழ்ப் புத்தாண்டிற்கும் சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.

ஆகம நூல்களையும், இதர நூல்களையும் தமிழில் வெளியிடுதல்

141. வடமொழி ஆகம சாத்திர நூல்களும், சிற்ப சாத்திர நூல்களும் தமிழர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த வகையில் உத்ரகாமிக ஆகமம் மற்றும் குமார தந்திரம் ஆகிய நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. மேலும் “இந்து மத இணைப்பு விளக்கம்’’, ‘‘சைவமும் வைணவமும்’’ ‘‘ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்ப நூல்’’ போன்ற தமிழ் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதுபோன்ற நூல்கள் தேவையின்போது மறுபதிப்பு செய்து வெளியிடப்படும்.

XII - பயிற்சித் திட்டங்கள்

புத்தொளிப் பயிற்சித் திட்டம்

142. திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் தங்கள் பணிகளைத் திறம்பட செய்திட ஏதுவாக 1991-ஆம் ஆண்டு “புத்தொளிப் பயிற்சித் திட்டம்” தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. 2002-ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் 488 நபர்கள் பயிற்சி பெற்றனர். 2006-2011-ஆம் ஆண்டில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் பயன்பெறும் வகையில் ஆறு

2016 ஆகஸ்ட் 31]

வார கால புத்தொளிப் பயிற்சி தொடங்கப்பெற்று கடந்த ஐந்து ஆண்டுகளில் 8436 ஊழியர்கள் பயனடைந்தனர். ஆண்டுதோறும் இப்பயிற்சி அளிக்கப்படும்.

பொறியாளர்களுக்கு ''பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு'' என்னும் குறுகிய காலப் பயிற்சி

143. நாட்டில் முதல்முறையாக இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்ற தலைப்பில் 3.12.2014 முதல் 13.01.2015 வரை இந்து சமய அறநிலையத் துறை மற்றும் திருக்கோயில்களைச் சேர்ந்த 22 பொறியாளர்களுக்கு குறுகிய கால ஆறு வார காலப் பயிற்சி ஒன்று தொல்லியல் துறையால் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் தொல்லியல் விதிகளின்படி கோயில்களை பாதுகாப்பது மற்றும் புனரமைப்பது தொடர்பான விவரங்கள் பொறியாளர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் பயிற்றுவிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, மேலும் 22 பொறியாளர்களுக்கான பயிற்சி 19.03.2015 அன்று மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 29.04.2015 அன்று நிறைவடைந்தது. இப்பயிற்சி இந்த ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும். இப்பயிற்சிக்கான பாடத்திட்டம் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின்கீழ் தொல்லியல் வல்லுநர்கள் மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐஐடி) மற்றும் இதர பேராசிரியர்களைக் கொண்ட குழுவால் உருவாக்கப்பட்டது.

திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு ''பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு'' என்னும் குறுகிய காலப் பயிற்சி

144. இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்ற குறுகிய கால நான்கு வார கால பயிற்சி, திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு தொல்லியல் துறையால் நடத்தப்படவுள்ளது. நிருவாகக் கண்ணோட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பொறியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் எளிமையான வடிவமாக இது அமையும்.

[2016 ஆகஸ்ட் 31

மனித நேயப் பயிற்சி

145. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளில் முக்கியத் திருக்கோயில்களின் 16063 ஊழியர்களுக்கு மனித நேயப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும்.

XIII - திருக்கோயில் ஊழியர் நலத் திட்டங்கள்

நலத்திட்ட விவரம்

146. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் ஊழியர்கள் பல்வேறு வகையினத்தில் பணிபுரிகின்றனர். இவர்களது நலன் காத்திட ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:

	நலத்திட்ட விவரம்
1.	பணியாளர்கள் சேம நல நிதித் திட்டம்
2.	துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்
3.	குடும்ப நல நிதித் திட்டம்
4.	சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்
5.	முதலமைச்சரின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்
6.	திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம்
7.	அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்வியபிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர் ஆகியோருக்கு ஓய்வூதியத் திட்டம்
8.	திருமணம், பண்டிகை மற்றும் வாகனம் வாங்குவதற்கு முன்பணம்
9.	கருணை அடிப்படையில் பணிநியமனம்

2016 ஆகஸ்ட் 31]

10.	குடமுழுக்கு ஊக்கத் தொகை
11.	ஆண்டுத் திருவிழாக் காலங்களில் கூடுதல் நேரப் பணி ஊக்கத் தொகை
12.	பொங்கல் கருணைத் தொகை
13.	உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளரின் மகன்/ மகளுக்கு நிதியுதவி
14.	திருக்கோயில் பணியாளர்களுக்கு சீருடைகளும் அடையாள அட்டைகளும் வழங்குதல்
15.	திருக்கோயில் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி அளித்தல்

குடும்ப நல நிதி

147. பணியிலிருக்கும்போது இயற்கை எய்தும் திருக்கோயில் ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்காக "குடும்ப நல நிதித் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து இதற்கென ரூ.*15* கோடியில் மைய நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, பணியிலிருக்கும்போது இயற்கை எய்தும் ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் *329* வாரிசுதாரர்களுக்கு ரூ.*3.25* கோடி வழங்கப்பட்டது.

சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

148. ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் ஊழியர்களின் நலனுக்காக "சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.*50* இலட்சத்தைக் கொண்டு மூல நிதி ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு திருக்கோயில் ஊழியரும் ஓய்வு பெறும்போது அவரது பணி நாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன் இத்திட்டத்தின்மூலம் கிடைக்கும் வட்டி தொகையிலிருந்து பணிக்கொடை ரூ.*5,000*/-மும் சேர்த்து வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் *593* ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ரூ.*26.93* இலட்சம் வழங்கப்பட்டது. *2015-2016*-ஆம் ஆண்டு மட்டும் *145* ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ரூ.*7.01* இலட்சம் வழங்கப்பட்டது.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

149. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் திருக்கோயில் ஊழியர்களில் ரூ.72,000/-க்கும் அதிகமாக ஆண்டு வருமானம் உள்ள, ஊதிய விகிதம் பெறும் திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2012-ன்கீழ் பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்த திட்டத்தின்மூலம் 3412 திருக்கோயில் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

2013-ஆம் ஆண்டில் ரூ.72,000/- மற்றும் அதற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்மூலம் 10391 திருக்கோயில் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெற்றனர்.

திருக்கோயில் ஊழியர் நல நிதித் திட்டம்

150. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் ஊழியர்களில் ரூ.750/-க்கும் குறைவாக மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஐந்து கோடி ரூபாய் மூல நிதியுடன் “திருக்கோயில் ஊழியர் நல நிதித் திட்டம்” செயல்படுகிறது. இந்த மூல நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மேற்கண்ட திருக்கோயில் ஊழியர்களின் சம்பள நிலுவைத் தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 5821 திருக்கோயில்களில் பணிபுரியும் 7282 ஊழியர்களுக்கு ரூ.3.77 கோடி சம்பள நிலுவை வழங்கப்பட்டது. 2015-2016-ஆம் ஆண்டு 2068 திருக்கோயில்களில் 2466 ஊழியர்களுக்கு ரூ.1.38 கோடி சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 31]

கருணை அடிப்படையில் பணி நியமனம்

151. திருக்கோயில்களில் பணியாற்றும்போது காலமான திருக்கோயில் ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு "கருணை அடிப்படையில் பணிநியமனம்" செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 107 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டன. 2015-2016-ஆம் ஆண்டில் மட்டும் 13 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டன.

தற்காலிக பணியாளர்கள் பணிவரன்முறை

152. திருக்கோயில்களில் தற்காலிகமாக தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் 31.7.2014 தேதியில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பணியாற்றி வந்த 2078 பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர் ஓய்வூதிய திட்டங்கள்

அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்வியபிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு ஓய்வூதியம்

153. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு நிதியிலிருந்து இத்துறை மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/- ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

154. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ரூ.750/- மாத ஓய்வூதியத்தை ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 364 ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

[2016 ஆகஸ்ட் 31

இத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

வ. எண்	ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள்	அரசால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை
1.	ஓதுவார்	125	26
2.	வேதம், பிரபந்தம் மற்றும் அரையர்	59	11
3.	இசைக் கலைஞர்கள்	125	50
4.	அர்ச்சகர் (சைவம் மற்றும் வைணவம்)	691	277
	கூடுதல்	**1000**	**364**

திருக்கோயிலில் பணிபுரியும் பிற ஊழியர்கள் ஓய்வூதியத் திட்டம்

155. திருக்கோயில் ஊழியர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(i) பணியாளர் சேமநல நிதித் திட்டம்

156. நிதி வசதிமிக்க திருக்கோயிலில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். திருக்கோயில் ஊழியர்களில், ஓய்வு பெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு, பணியாளர் சேம நல நிதித் திட்டத்தின் (Employees Provident Fund) *மூலம் 1.3.2006 முதல் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

2016 ஆகஸ்ட் 31]

(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்

157. நிதி வசதி குறைவாக உள்ள திருக்கோயில் ஊழியர்களுக்கும், பணியாளர் சேம நல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் (1.3.2006) ஓய்வு பெற பத்து ஆண்டிற்குக் கீழ் பணிக்காலம் உள்ளவர்களுக்கும், பணியாளர் சேம நல நிதித் திட்டத்தில் சேரும் அளவு நிதி வசதியில்லாத கோயில்களில் உள்ளவர்களுக்கும் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

158. இந்த துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் (Departmental Pension Scheme) *கீழ் ஓய்வூதியம் அளிப்பதற்கு ஏதுவாக, நிதிவசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.50 கோடி உபரி நிதியினைப் பெற்று மூல நிதி உருவாக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஓய்வு பெறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.800/-லிருந்து ரூ.1000/-ஆக 2013-2014 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.*

159. 2015-2016-ஆம் நிதியாண்டில் 368 ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு இத்திட்டத்தின்படி ஓய்வூதியம் பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 4338 ஊழியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

160. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 1996-க்கு முன்னர் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் இத்துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 66 ஓய்வு பெற்ற ஊழியர்கள் பயன்பெறுகின்றனர்.

திருக்கோயில் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்

161. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப் படிப்பு (Professional courses) *பயிலும் திருக்கோயில் ஊழியர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை நிதியுதவியாக வழங்க இத்திட்டம் வழிவகை செய்கிறது.*

[2016 ஆகஸ்ட் 31

XIV - கிராமப்புற பூசாரிகள் நலன்

கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

162. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, கிராம திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்குக் "கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்" உருவாக்கப்பட்டு அதன் மூலமாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை 606 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

163. இத்துறையின் நேரடி ஆளுகையின்கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/-லிருந்து ரூ.1000/- ஆக உயர்வு செய்து 22.11.2013 முதல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலமாக 3037 கிராமக் கோயில் பூசாரிகள் பயன்பெறுகின்றனர்.

XV - மகாமகம்

164. மகாமகம் பெருவிழாவானது 22.02.2016 அன்று நடைபெற்றது. இப்பெருவிழாவானது 13.02.2016 அன்று கொடியேற்றத்துடன் துவக்கப்பட்டு, 22.02.2016 அன்று தீர்த்தவாரியுடன் முடிவடைந்தது. கும்பகோணத்தில் உள்ள 12 சைவ திருக்கோயில்களின் சுவாமிகள் மகாமக திருக்குளத்தில் எழுந்தருளி தீர்த்தவாரி நடைபெற்றது. காவேரி நதிக்கரையில் ஐந்து வைணவத் திருக்கோயில்களுக்கு தீர்த்தவாரி நடைபெற்றது. மகாமகத்தை ஒட்டி கும்பகோணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 64 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டது. மகாமகக் குளம் மற்றும் பொற்றாமரைக் குளம் ஆகிய குளங்கள் சீரமைக்கப்பட்டன. மகாமகத்திற்கு வருகை தந்த பக்தர்கள் இடைஞ்சலின்றி மகாமகக் குளத்திலிருந்த 20 கிணறுகளிலும் புனித நீராட வசதியாக தண்ணீர் அளவு குறைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த தண்ணீரும் தொடர்ந்து மறு சுழற்சி செய்து சுத்திகரிக்கப்பட்டது. இந்த மகாமகத்திற்கு அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களின்

2016 ஆகஸ்ட் 31]
சுலபமான தரிசனத்திற்கு சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனைத்து திருக்கோயில்களிலும் கண்காணிப்புக் கேமராக்கள் நிறுவப்பட்டன. மகாமகப் பிரசாதம், மின்னஞ்சலில் முன் பதிவு செய்யும் முறையும், பிரபலமான திருக்கோயில்களில் முன் பதிவு செய்யும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. மகாமகம் 2016-க்கு என துறையினால் வலைதளம் ஏற்படுத்தப்பட்டது. மகாமகத்திற்கென சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. கொடியேற்றிய நாள் முதல் தீர்த்தவாரி நாள் வரையும் அதன் பின்னர் ஒரு மாத காலத்திற்கு பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மகாமக திருக்குளத்திலும், பொற்றாமரைக் குளத்திலும், காவேரி நதிக் கரையிலும் புனித நீராடினார்கள்.

நிறைவுரை

“கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்வில ராகிச் சார்வது சதிரே...”

எனும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கேற்ப ஆன்மீக அன்பர்கள் அனைவரும் திருக்கோயில் வளாகத்தில் புலனொடுங்கி மனம் குவிந்து தலையார வணங்கி, இறைவனின் தாள்சேரும் வகையில், தேவையான அத்தனை நடவடிக்கைகளும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத் திருக்கோயில்கள் சமூக அமைப்பு, இறையாண்மை மற்றும் கலை வளர்ச்சிக்கான அடித்தளங்களாக காலம் காலமாகச் செயல்பட்டு வந்துள்ளன. அறச்சாலைகளாகவும், மன்பதை நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், போர்க்காலங்களில் படைவீடுகளாகவும் விளங்கி வந்த பழஞ்சிறப்புகள் எல்லாம் கால வெள்ளத்தில் சிதறின. நலிவடைந்து வந்த பாரம்பரிய பண்பாட்டுச் சிதறல்களை மீட்டு, அன்னதானம், ஒருகாலபூஜைத் திட்டம், ஆண்டுத் திருப்பணிகள், முறையாக குடமுழுக்குகள் என பல்வேறு இறைபணிகளையும் அறப்பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சியில் செய்யப்பட்டு வருகின்றன. தமிழக மக்கள் கூர்ந்து நோக்கத்தக்க நிலையான வரலாற்றுச் சாதனைகளாக அவை விளங்குகின்றன. அச்சாதனைகள் பின்வரும் பட்டியலாக விரிகிறது.

❖ சமூக நோக்கோடு 724 திருக்கோயில்களில் அன்னதானம்

❖ ஸ்ரீரங்கம் மற்றும் பழனி திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம்

❖ திருக்கோயில் யானைகளின் மனநலமும் உடல்நலமும் பேண புத்துணர்வு முகாம்

❖ வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் முதல் கிராமப்புறத் திருக்கோயில்கள் வரை 8843 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து கும்பாபிஷேகம்/ சம்ப்ரோஷணம் நிகழ்த்தியது

❖ ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் சார்பாக ரூ.47.09 கோடி மதிப்பீட்டில் யாத்ரி நிவாஸ் கட்டடம் கட்டப்பட்டது. திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் மற்றும் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் நிதி மூலம் யாத்ரி நிவாஸ் கட்டுமானத்திட்டம்

❖ திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி பொருத்த நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு முழு நிதியுதவி

❖ திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற நடவடிக்கை

❖ இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமக்கோயில்களில் பணிபுரிந்த பூசாரிகள் மாத ஓய்வூதியம் ரூ.1000/- ஆக உயர்வு

❖ திருக்கோயில் ஊழியர்களுக்குத் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் மாத ஓய்வூதியம் ரூ.1000/- ஆக உயர்வு

❖ தொன்மையான திருக்கோயில்களை திருப்பணி செய்து பாதுகாக்க தொல்லியல் ஆலோசனை பெற தொல்லியல் ஆலோசனை வல்லுநர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

❖ பழமையான ஓவியங்களை பழமை மாறாது தொல்லியல் மரபுப்படி புதுப்பித்துப் பராமரிக்க ஆலோசனைக் குழு நியமனம்

2016 ஆகஸ்ட் 31]

- ❖ கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை நிர்வகிக்க ஒரு கோடி ரூபாய் அரசு மானியம் மூன்று கோடி ரூபாயாக உயர்வு
- ❖ திருக்கோயில்களின் திருப்பணி மேற்கொள்ள ஆண்டுதோறும் வழங்கும் மூன்று கோடி ரூபாய் அரசு மானியம் ஆறு கோடி ரூபாயாக உயர்வு
- ❖ இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் பெற கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும் எனும் சட்டத் திருத்தம்

இத்தகைய ஆக்கப்பூர்வ திட்டங்களால், மனிதன் பொருள் உலகத்திற்கு அப்பால் அமைதியாக தன் மனதைச் செலுத்தி மெய்ப்பொருளைத் தொழ வைத்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களையே சேரும். திக்கெட்டும் புகழ்பெற்ற திருக்கோயில்களை பலவகையிலும் மேம்படுத்தியதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழர்களின் பாரம்பரியத்தை பாதுகாப்பதில் நிலைக்களமாக விளங்குகிறார்.

"குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக்கோட்டமும்"

எனும் மணிமேகலை வரிகளுக்கேற்ப, திருக்கோயில்களில் அமைந்துள்ள மனதிற்கு நிறைவளிக்கும் சிற்பங்களும், அமைதி தரும் ஓவியங்களும், இதயத்திற்கு இதம் தரும் பண் இசையும் முன்னோர்கள் நமக்கு அளித்த கருவூலங்கள். அதன் தொன்மை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மேலான வழிகாட்டுதலின்கீழ் இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றி துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர்.

❖❖❖❖❖

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.